திருக்குறள்

விளக்க உரை



திருவள்ளுவர்

ச. வெள்ளைச்சாமி நாடார்,
விருதுநகர்.

முன்னுரை

திருவள்ளுவர், ஓர் உலக கவி; உலக கவிகளுள்ளும் தலைசிறந்தவர்; தமிழ்த்தாய் பெற்ற தவப் புதல்வர்; தமிழ் மக்கள் செய்த தவப்பயனுய் தமிழ் நாட்டில் தோன்றி, தமிழ் மொழியில் திருக்குறளை இயற்றியிருக்கின்ருர். அவர் இயற்றிய திருக்குறள், அறத்தின அறிய முற்படுவார்க்கு ஓர் பேரற நூல்; அரசியலை விரும்புவார்க்கு ஓர் அரசியல் நூல்; ஞானத்தை விரும்புவார்க்கு ஓர் ஞான நூல்; பேரின்பம் விரும்புவார்க்கு ஓர் பேரின்ப நூல்; வாழ்க்கை நெறியை அறிய விரும்புவார்க்கு ஓர் வாழ்க்கை வழி காட்டும் நூல்; எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய தலை சிறந்த வாழ்க்கைத்துணை நூல். அதனல்தான் குறளை, உலக மக்களுக்கெல்லாம் எக்காலத்திலும் பயன்படும். வாழ்க்கை வழிகாட்டி என்று போற்றுகின்ருேம்.

அணுவில் உலகத்தை அழிக்கவல்ல அபார சக்தி இருக்கின்றதென்று விஞ்ஞானிகள் நிலை நாட்டியிருக்கிருர்கள். ஆனல், உலகத்தைக் காக்கவல்ல தலைசிறந்த உண்மைகள் இரண்டே வரிகள் கொண்ட சிறு குறள் வெண்பாவில் இருக்கிறதென்று எத்தனை பேர் அறிந்திருக்கிருர்கள்.

திருவள்ளுவர் அருளிய தமிழ் மறைச் செல்வமாம் திருக்குறளுக்கு பலர் உரை எழுதியிருக்கிருர்கள். ஆயினும், யாவரும் இன்ப வாழ்க்கை நடத்த பொருட்

செலவில்லாத ஆலோசகராக இந்நூலை ஏற்று, எளிதில் கற்றுப் பயன் அடையச் செய்யவேண்டும் என்ற ஆசை மிகுதியால் தூண்டப்பெற்று திருக்குறள் விளக்க உரை என்னும் இந்நூலை வெளியிட முன்வந்துள்ளேன். மக்கள் என் ஆசையை நிறைவேற்றுவார்களாக. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்."

எளிய முறையில் இவ்வுரையை வெளியிட உதவிய எங்கள் திருக்குறள் வகுப்பு ஆசிரியர் உயர்திரு அ. இராசகோட்டியப்பன் அவர்களுக்கு என் நன்றி மிகவும் உரித்தானது. திருக்குறளுக்கு அன்னர் செய்யும் தொண்டு என்றும் மறக்கற்பாலது அன்று.

விருதுநகர்,
15—7—'54.

ச. வெள்ளைச்சாமி நாடார்.

திருவள்ளுவரின் வேறு பெயர்கள்

(1) நாயனார்—உறுதிப் பொருள் உணர்த்துவதில் தலைசிறந்தவர்
(2) தேவர்—தெய்வத்தன்மை நிறைந்தவர்
(3) முதற்பாவலர்—பாவலர்களுள் முதன்மைவாய்ந்தவர்
(4) தெய்வப் புலவர்—தெய்வத்தன்மை மிக்க அறிவு படைத்தவர்
(5) நான்முகனார்—பிரமனுக்கு ஒப்பானவர்
(6) மாதானுபங்கி—தாய்போல முப்பாலைத் தந்து வளர்ப்பவர்
(7) செந்நாப்போதார்—சிறந்த நாவன்மையுடையவர்.
(8) பெருநாவலர்—நாவன்மைஉடையவர்களுள் சிறந்தவர்
(9) பொய்யில் புலவர்—உண்மையை உணர்த்தியவர்.
(10) திருவள்ளுவர்—இப்பெயர் இவருடைய இயற்பெயர்

திருக்குறளின் வேறு பெயர்கள்

(1) முப்பால்—அறம் பொருள் இன்பம் என்ற முப்பகுதியை உடையது
(2) உத்தரவேதம்—வேதத்திற்குப் பின் தோன்றியது
(3) தெய்வநூல்—தெய்வ அருளால் தோன்றியது
(4) பொய்யா மொழி—மெய்யே கூறுவது
(5) வாயுறை வாழ்த்து—இம்மை மறுமைக்கு உறுதிகளைக் கூறுவது
(6) தமிழ் மறை—தமிழ் மொழியால் அமைந்த வேதம்
(7) பொது மறை—அனைவருக்கும் பொதுவான வேதம்
(8) திருவள்ளுவர்—இயற்றிய ஆசிரியர்பெயரால் வந்தது
(9) அறம்—அறத்தை முதலில் கூறும் நீதிநூல்
(10) பொருளுரை—உறுதிப் பொருள் அனைத்தும் உரைப்பது

திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மர்

(1) தருமர் (2) மணக்குடவர் (3) தாமத்தர்
(4) பரிதி (5) திருமலையர் (6) மல்லர்
(7) கவிப்பெருமாள் (8) காளிங்கர் (9) நச்சர்
(10) பரிமேலழகர்

பொருளடக்கம்

அறத்துப்பால்

பாயிரம்

	பக்கம்
கடவுள் வாழ்த்து	1
வான் சிறப்பு	3
நீத்தார் பெருமை	5
அறன்வலி யுறுத்தல்	7

இல்லறவியல்

இல்வாழ்க்கை	9
வாழ்க்கைத் துணைநலம்	11
புதல்வரைப் பெறுதல்	13
அன்புடைமை	15
விருந்தோம்பல்	17
இனியவை கூறல்	19
செய்ந்நன்றி அறிதல்	21
நடுவு நிலைமை	23
அடக்கமுடைமை	25
ஒழுக்கமுடைமை	27
பிறனில் விழையாமை	29
பொறையுடைமை	31
அழுக்காறாமை	33
வெஃகாமை	35
புறங்கூறாமை	37
பயனில சொல்லாமை	39
தீவினையச்சம்	41
ஒப்புரவறிதல்	43
ஈகை	45
புகழ்	47

துறவறவியல்

	பக்கம்
அருளுடைமை	49
புலால் மறுத்தல்	51
தவம்	53
கூடாவொழுக்கம்	55
கள்ளாமை	57
வாய்மை	59
வெகுளாமை	61
இன்னா செய்யாமை	63
கொல்லாமை	65
நிலையாமை	67
துறவு	69
மெய்யுணர்தல்	71
அவாவறுத்தல்	73

ஊழ்

ஊழ்	75

பொருட்பால்

அரசியல்

இறைமாட்சி	77
கல்வி	79
கல்லாமை	81
கேள்வி	83
அறிவுடைமை	85
குற்றங்கடிதல்	87
பெரியாரைத் துணைக்கோடல்	89

	பக்கம்
சிற்றினம் சேராமை	91
தெரிந்து செயல்வகை	93
வலியறிதல்	95
காலம்அறிதல்	97
இடனறிதல்	99
தெரிந்து தெளிதல்	101
தெரிந்து வினையாடல்	103
சுற்றந் தழால்	105
பொச்சாவாமை	107
செங்கோன்மை	109
கொடுங்கோன்மை	111
வெருவந்தசெய்யாமை	113
கண்ணோட்டம்	115
ஒற்றுடல்	117
ஊக்கமுடைமை	119
மடியின்மை	121
ஆள்வினை யுடைமை	123
இடுக்கண் அழியாமை	125

அங்கவியல்

அமைச்சு	127
சொல்வன்மை	129
வினைத் தூய்மை	131
வினைத் திட்பம்	133
வினைசெயல் வகை	135
தூது	137
மன்னரைச்சேர்ந் தொழுகல்	139
குறிப்பறிதல்	141
அவை அறிதல்	143
அவை அஞ்சாமை	145
நாடு	147
அரண்	149
பொருள் செயல்வகை	151
படை மாட்சி	153
படைச் செருக்கு	155
நட்பு	157
நட்பாராய்தல்	159
பழமை	161
தீ நட்பு	163
கூடா நட்பு	165
பேதைமை	167
புல்லறிவாண்மை	169
இகல்	171
பகைமாட்சி	173
பகைத்திறம் தெரிதல்	175
உட்பகை	177
பெரியாரைப் பிழையாமை	179
பெண்வழிச் சேறல்	181
வரைவின் மகளிர்	183
கள்ளுண்ணாமை	185
சூது	187
மருந்து	189

ஒழிபியல்

குடிமை	191
மானம்	193
பெருமை	195
சான்றாண்மை	197

	பக்கம்
புண்புடைமை	199
நன்றியில் செல்வம்	201
நாணுடைமை	203
குடிசெயல் வகை	205
உழவு	207
நல்குரவு	209
இரவு	211
இரவச்சம்	213
கயமை	215

காமத்துப்பால்

களவியல்

தகையணங் குறுத்தல்	217
குறிப்பறிதல்	219
புணர்ச்சி மகிழ்தல்	221
நலம்புனைந்துரைத்தல்	223
காதற் சிறப்புரைத்தல்	225
நாணுத்துறவுரைத்தல்	227
அலரறிவுறுத்தல்	229

	பக்கம்

கற்பியல்

பிரிவாற்றுமை	231
படர்மெலிந்திரங்கல்	233
கண்விதுப்பழிதல்	235
பசப்புறு பருவரல்	237
தனிப்படர் மிகுதி	239
நினைந்தவர் புலம்பல்	241
கனவு நிலையுரைத்தல்	243
பொழுதுகண்டிரங்கல்	245
உறுப்பு நலன் அழிதல	247
நெஞ்சொடு கிளத்தல்	249
நிறையழிதல்	251
அவர்வயின் விதும்பல்	253
குறிப்பறிவுறுத்தல்	255
புணர்ச்சி விதும்பல்	257
நெஞ்சொடு புலத்தல்	259
புலவி	261
புலவி நுணுக்கம்	263
ஊடலுவகை	265

தமிழ் வாழ்க

திருக்குறள் விளக்கவுரை

1 அறத்துப்பால்

—≪≫—

பாயிரம்

1—கடவுள் வாழ்த்து

1 அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி பகவன் முதற்றே உலகு.

எழுத்துக்களெல்லாம் அ என்னும் எழுத்தை முதன்மையாகக் கொண்டு விளங்குகின்றன. அதுபோல, உலகம ஆதிபகவனுகிய கடவுளே முதன்மையாகக் கொண்டு விளங்குகின்றது (1)

2 கற்றதனல் ஆய பயன்என்கொல், வாலறிவன் நற்ருள் தொழாஅர் எனின்?

மெய்யறிவு வடிவாய் விளங்கும் கடவுளின் நல்ல திருவடிகளைத் தொழாமலிருப்பாராஞல், அவர் கற்றுணர்ந்த அறிவினுல் எற்படும் பயன் யாதும் இல்லை. (2)

3 மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ் வார்.

அடியார்களின் நெஞ்சமாகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் கடவுளின் பெருமை பொருந்திய திருவடிகளே இடைவிடாமல் தியானிக்கின்றவர் இன்பவுலகத்தில் என்றும் வாழ்வார் (3)

4 வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல.

விரும்புதலும், வெறுத்தலும் இல்லாதவனுகிய கடவுளின் திருவடிகளே வணங்குபவர்க்கு எக்காலத்திலும் எவ்விதத் துன்பமும் இல்லை. (4)

5 இருள்சேர் இருவினையும் சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இறைவனின் அழகிய புகழைத்துதிப்பவரிடத்தில், அறியாமையால் உண்டாகும் நல்வினை தீவினையாகிய இரண்டும் சேரமாட்டா. (5)

6 பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து பொறிகளின் வழியே பிறக்கும் ஆசைகளை அறுத்தவனுடைய கடவுளின் உண்மை பொருந்திய நல்லொழுக்க வழியில் வாழ்வோர் என்றென்றும் இனிது வாழ்வார். (6)

7 தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு
மனக்கவலை மாற்றல் அரிது. [அல்லால்

தனக்கு நிகரில்லாத கடவுளின் திருவடிகளை அன்போடு வழிபடுவோர் அல்லாத மற்றவர்க்கு மனக்கவலையை நீக்கிக் கொள்ளல் அருமை. (7)

8 அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

அறக் கடலாகிய கடவுளின் திருவடிகளைத் தியானிப்பவர் அல்லாமல் மற்றவர், பாவக் கடலைக் கடத்தல் அரிது. (8)

9 கோளில் பொறியிற் குணமிலவே; எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

உணர்ச்சியில்லாத பொறிகள் பயன்பட மாட்டா. அது போல, எண்குணங்களையுடைய இறைவனின திருவடிகளை வணங்காத தலை முதலிய உறுப்புக்கள் பயனற்றவையாம் (9)

10 பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

இறைவன் திருவடியாகிய மரக்கலத்தைப் பற்றியவர் பிறவியெனும பெருங்கடலைக் கடப்பார். மற்றவர் அக்கடலைக் கடக்கமாட்டார். (10)

2—வான் சிறப்பு

மழையின் சிறப்பைச் சொல்லுதல்.

1 வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

மழை பெய்வதால் உலகம் வாழ்கின்றது; என வே உலகத்தில் வாழும் உயிர்களுக்கு மழையே அமிர்தம் என்று அறியத்தக்கதாகும். (11)

2 துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித், துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

உண்பவருக்குத் தகுதியான உணவுப் பொருள்களை யுண்டாக்கி, அவற்றை உண்ணும்பொழுது (குடிநீர் வடிவில்) உணவாயிருப்பதும் மழையாம். (12)

3 விண்இன்று பொய்ப்பின், விரிநீர் வியனுலத்து
உள்நின்று உடற்றும் பசி.

வேண்டுங் காலத்து மழை பெய்யாமற் போனால், உலகம் கடல் சூழ்ந்து அகன்றிருந்தாலும், அதிலுள்ள உயிர்களை யெல்லாம் பசிப்பிணி வாட்டும். (13)

4 ஏரின் உழாஅர் உழவர்; புயலென்னும்
வாரி வளம்குன்றிக் கால்.

மழை என்னும் வருமானத்தின் வளப்பம் குறைந்து விட்டால், உணவுப் பொருளை உற்பத்தி செய்யும் உழவரும் தம் உழுதொழிலைச் செய்ய மாட்டார். (14)

5 கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் ருங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

பெய்யாமல் வாழ்க்கையைக் கெடுப்பதும் அவ்விதம் கெட்ட வர்க்கு மீண்டும தூணைசெய்து வாழ்வைக் கொடுப்பதும் எல்லாம் மழை. (15)

6 விசும்பின் துளிவீழின் அல்லால்மற் ருங்கே
பசும்புல் தலைகாண் பரிது

ஆகாயத்திலிருந்து மழைத்துளி விழாவிட்டால், இந்த உல கத்தில் பசும்புல்லின நுனியையும் காண்பது அரிதாகி விடும் (16)

7 நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும், தடிந்து எழிலி
தான்நல்கா தாகி விடின்.

தன்னிடத்திலுள்ள நீரை முகந்து, திரும்பவும் தன் இடத்தில், மேகம மழையைப் பொழியா விட்டால், மிகப் பெரிய கடலும் வளப்பத்தால் குறைந்து விடும். (17)

8 சிறப்பொடு பூசனை செல்லாது; வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

மழை பெய்யாவிட்டால், இவ்வுலகத்தில் தேவர்களுக்குச் செய்யப்படும் பூசையும் திருவிழாவும் நடைபெறு. (18)

9 தானம் தவம்இரண்டும் தங்கா; வியன்உலகம்
வானம் வழங்காது எனின்.

மழை பெய்யவில்லையானால், மக்கள் மற்றவர்க்குத் தானம் செய்யார்; தமக்காகத் தவமும் செய்ய மாட்டார். (19)

10 நீர் இன்று அமையாது உலகுஎனின், யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு

நீர் இல்லாமல் எவருக்கும் எந்தக் காரியமும் நடைபெறாது மக்கள் ஒழுக்கம் நிலைபெற மழை வேண்டும். (மாரியல்லது காரியம் இல்லை.) (20)

3—நீத்தார் பெருமை

முற்றத் துறந்த முனிவர் பெருமை.

1 ஒழுக்கத்து நீத்தார் பெருமை, விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு.

"நல்லொழுக்கத்தில் வழுவாமல் நின்று, ஆசையை ஒழித்த வர்களின் பெருமையே சிறந்தது" என்று எந்த நூலும் துணிந்து கூறும். (21)

2 துறந்தார் பெருமை துணைக்கூறின், வையத்து இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

'யான்' 'எனது' என்னும் பற்றுக்களே விட்டொழித்தவரின் பெருமையை அளவிட்டுக் கூறுதல், இவ்வுலகத்தில் இதுவரை பிறந்து இறந்தவரை எண்ணி அறியப் புகுந்தாற் போலும்! (22)

3 இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார் பெருமை பிறங்கிற்று உலகு.

பிறப்பு, வீடு என்பவைகளின் துன்ப-இன்பத் தன்மைகளை ஆராய்ந்தறிந்து, பிறவியை ஒழித்தற்குரிய துறவறத்தை மேற் கொண்டோரின் மேன்மையே உலகத்திற் சிறந்தது. (23)

4 உரன் என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான் வரன் என்னும் வைப்பிற்குஓர் வித்து.

ஐம்பொறிகளாகிய யானைகளை 'அறிவு' என்னும் அங்குசத் தால் அடக்கிக்காக்கின்ற வல்லமையுடையவனே, மோட்சமாகிய நிலத்துக்கு விதை ஆவான். (24)

5 ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான் இந்திரனே சாலும் கரி.

ஐம்புலன்களினால் வரும் ஐந்து ஆசைகளையும் ஒழித்த துறவியின் வலிமைக்கு, விண்ணுலகத்திலுள்ளார்க்கு அரசனாகிய இந்திரனே சாட்சியாவான். (25)

6 செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

மற்றொருவரால் செய்ய முடியாத அருஞ் செயல்களைச் செய்ய வல்லவரே பெரியார், அருஞ் செயல்களைச் செய்ய மாட்டாதவர் சிறியார். (26)

7 சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்கின்ற ஐந்து உணர்ச்சிகளின கூறுபாடுகளை எல்லாம் ஆராய்ந்து அறியும் ஆற்றலுடையவனின் அறிவிலே, உலகம் அடங்குவதாகும். (27)

8 நிறைமொழி மாந்தர் பெருமை, நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

தவறு பலிக்கின்ற சொற்களைச் சொல்லும் முனிவரின் பெருமையை, இந்நிலவுலகத்தில், என்றென்றும் நிலைத்து நிற்கும் அவர்களுடைய அருள்வாக்குகளே காட்டும். (28)

9 குணமென்னும் குன்றுஏறி நின்ருர் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

மெய்யுணர்ச்சி, பற்றின்மை முதலிய நற்பண்புகளாகிய மலையின்மேல் ஏறிநின்ற பெரியோரின் சினம் ஒரு கொடிப் பொழுதே நிற்கும் எனினும், எவராலும் அதைத் தாங்க இயலாது. (29)

10 அந்தணர் என்போர் அறவோர்; மற் றெவ்உயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

எல்லா உயிர்களின் மேலும் செவ்விதான இரக்கத்தைக் கைக்கொண்டு நடத்தலினால், சிறந்த அறத்தின் வழி நிற்கும் அவ் அறவோரே அந்தணர் ஆவர். (30)

———

4 — அறன்வலி யுறுத்தல்

அறமே உறுதியுடையது என்று கூறுதல்

1 சிறப்புஈனும்; செல்வமும் ஈனும்; அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனே உயிர்க்கு?

அறம் சிறப்பைக் கொடுக்கும்; எல்லாச்செல்வங்களையும் கொடுக்கும். ஆகவே, மக்கள் உயிர்க்கு அறத்தைக் காட்டிலும நன்மை வேறு இல்லை. (31)

2 அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.

ஒருவனுக்கு அறத்தைக்காட்டிலும் நன்மையானதும் இல்லை; அந்த அறத்தைப் போற்றாது மறப்பதைக் காட்டிலும் கெடுதலானதும் இல்லை (32)

3 ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

தம்மால் இயன்ற அளவில், இடைவிடாமல், எந்தவகையாலும் அறச்செய்கையைச் செய்வாராக! (33)

4 மனத்துக்கண் மாசுஇலன் ஆதல்; அனைத்துஅறன்;
ஆகுல நீர பிற.

ஒருவன் தன் நெஞ்சிடத்துக் குற்றமில்லாதவன் ஆகக் கடவன்! அறம் என்பது அந்த அளவினதே! உள்ளத் தூய்மையில்லாத சொல்லும் செயலும் வீண் ஆரவாரங்களேயாம்! (34)

5 அழுக்காறு, அவா,வெகுளி, இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

பொறாமை, ஆசை, சினம், தீயசொல்: ஆகிய இவை நான்கையும் அறவே ஒழித்து நடத்தலே அறம் எனப்படும். (35)

6 'அன்று அறிவாம்' என்னாது அறம்செய்க; மற்றது
பொன்றும்கால் பொன்றுத் துணை.

"இப்பொழுது இளமைதானே! பிறகு செய்வோம்" என்று நினைக்காமல், நாள்தோறும் அறத்தைச் செய்யவேண்டும். என்? உடலைவிட்டு உயிர்செல்லும்பொழுது, அறமே அதற்கு அழியாத் துணையாம் (36)

7 அறத்தாறு இதுவென வேண்டா; சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

பல்லக்கைச் சுமப்பவனையும், அதில் ஏறிச்செல்வோனையும் பார்! 'அறத்தின் பயன் இது' என்று சொல்லவும வேண்டுமோ?

8 வீழ்நாள் படாஅமை நன்றுற்றின், அஃதொருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல்.

வீணாக நாளைக் கழிக்காமல் தினந்தோறும் ஒருவன் நல் அறத்தைச் செய்து வருவானானால், அச்செய்கை அவன் வேறோர் பிறவி எடுக்கும வழியை அடைக்கும் கல் போன்றது. (38)

9 அறத்தான் வருவதே இன்பம்; மற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

அறநெறியில் வாழ்வதே இன்பம்; அறநெறி விலகி வாழ்வனவெல்லாம் துன்பமாய் முடியும்; மேலும் புகழ் இல்லாதவையும் ஆம். (39)

10 செயற்பால தோரும் அறனே; ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

ஒருவன் தன் வாழ்நாளில் செய்யத்தக்கது அறம் ஒன்றே! செய்யத் தகாதது பழிச்செயலே! (40)

பாயிரம் முற்றிற்று.

இல்லறவியல்

5. இல் வாழ்க்கை

மனைவியுடன் கூடி வாழ்தலின் சிறப்பு.

1 இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை.

இல்லறத்தில் வாழ்பவனென்று சொல்லப் படுவோன்: அறநெறி தவறாத கல்விகற்பவர், மனைவியுடன் தவம்புரிபவர், சந்நியாசிகளாகிய மூவகையினருக்கும் நல்லொழுக்கத்தில் நிற்கச் செய்யும் துணைவனாவான். (41)

2 துறந்தார்க்கும், துவ்வா தவர்க்கும், இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை.

ஆதரிப்போரின்றிக் கைவிடப் பட்டோர்க்கும், வறுமையுடையோர்க்கும், ஆதரவின்றித் தன்னிடம்வந்து இறந்தோர்க்கும் இல்லறத்தான் என்பவனே துணைவனாவான். (42)

3 தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. [என்றுங்கு

காலஞ்சென்ற முன்னோர், கடவுள், விருந்தினர், உறவினர், தான் என்னும் ஐந்து வகையிலும் தருமநெறியைத் தவறாமற் பேணுதல் இல்வாழ்வானுக்குச் சிறந்த அறமாகும். (43)

4 பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின், வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

பாவத்திற்குப் பயந்து பொருள்தேடிப் பகிர்ந்துண்பவனின் சந்ததி ஒருநாளும் அற்றுப்போவதில்லை (44)

5 அன்பும் அறனும் உடைத்தாயின், இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.

மனைவி மக்களிடம் அன்பும், பிறர்க்குப் பகிர்ந்துண்ணும் அறமும் உடைய ஒருவனுடைய இல்வாழ்க்கையே அழகும் பயனும் உடையதாம் (45)

6 அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின், புறத்தாற்றில் போஒய்ப் பெறுவது எவன்?

ஒருவன் அறவழியில் இல்வாழ்க்கையை நடத்துவானுனால், அவன், துறவு வாழ்கையிற் சென்று அடையத்தக்கது யாதும் இலை (46)

7 இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள் எல்லாம் தலை.

இல்லற வாழ்கையிலே நின்று, அதற்குரிய இயல்போடு வாழ்பவனை, ஐம்புலன்களை அடக்க முயல்வோர் யாவருள்ளும் முதன்மை பெறறவனுவான். (47)

8 ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை யுடைத்து.

பிறரையும் நல்வழியிற் செலுத்தித் தானும் தருமவழியிற் பிசகாதவனுடைய இல்லற வாழ்க்கை, தவஞ் செய்வோருடைய நிலைமையைக் காட்டிலும் வலிமையுடையதாகும் (48)

9 அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும் பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

அறம் என்பது சிறப்பாக இல்லறத்தையே குறிக்கும். மற்றத் துறவறமோ, பிறர் பழிக்கு இடமின்றி யிருந்தால் நன்மை யுடைய தாகும். (49)

10 வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்.

இல்லற வாழ்க்கையில், அறநெறி தவருமல் வாழ்பவன், மண்ணுலகத்தவனே யாயினும், விண்ணுலகத்தில் வாழும் தேவருள் ஒருவனுக மதிக்கப் பெறுவான். (50)

6. வாழ்க்கைத் துணைநலம்

இல்லற வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியின் சிறப்பு.

1 மனைத்தக்க மாண்புடைய ளாகித், தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

வீட்டிற்குகந்த நற்குண நற்செயல்களை யுடையவளாய், தன் கணவனுடைய வருமானத்திற்குத் தகுந்தபடி செலவு செய்பவளே வாழ்க்கைத் துணைவி யாவாள் (51)

2 மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல்.

இல்லறத்திற் கேற்ற நற்குண நற்செயல்கள் ஒருவனுடைய மனைவியினிடத்தில் இல்லையாயின், அந்த இல்வாழ்க்கை, செல்வம் முதலிய மற்றச் சிறப்புக்களை யெல்லாம் பெற்றிருந்தாலும் பயனற்றதாகும். (52)

3 இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென் இல்லவள் மாணாக் கடை?

மனைவி நற்குண நற்செயல்களை யுடையவளானால், வாழ்க்கையில் இல்லாதது இல்லை. அவள் அவையில்லாதவளானால், வாழ்க்கையில் இருப்பது யாதும் இல்லை. (53)

4 பெண்ணிற் பெருந்தக்க யாஉள, கற்பென்னும் திண்மை உண் டாகப் பெறின்?

கற்பென்னும் கலங்காத நிலைமை வாய்க்கப் பெற்றால், அத்தகைய பெண்ணைக் காட்டிலும் உயர்வுடையவை உலகில் இல்லை. (54)

5 தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் 'பெய்' எனப் பெய்யும் மழை.

மற்றொரு தெய்வத்தைத் தொழாமல், தன்கணவனைத் தொழுதவாறே நித்திரைவிட்டெழுந்திருப்பவள், "பெய்" என்று சொன்னால் மழை பெய்யும். (55)

6 தற்காத்துத், தற்கொண்டாற் பேணித், தகைசான்ற
சொற்காத்துச், சோர்விலாள் பெண்.

கற்புநெறி தவறாமல் தன்னைக் காப்பாற்றி, கணவனை உண்டி முதலியவற்றால் உபசரித்து, இருவருக்குமுரிய புகழையும் பாதுகாத்து, இவற்றிலெல்லாம் உறுதிநிலையுடையவளே பெண் ஆவாள் (56)

7 சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை!

பாதுகாப்பில் வைத்துப் பெண்களைக் காப்பதனால் பயன் உண்டாகாது. அவர்கள் தம் கற்பைத் தாமே காத்துக் கொள்கின்ற காவல்தான் சிறப்புடைய தாகும். (57)

8 பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர், பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

கணவனைப் போற்றிக் கடமையைத் தவறாது செய்யும் பெண்கள், மேலுலக வாழ்க்கையிலும், மிகப்பெரிய மேன்மையை அடைவார்கள். (58)

9 புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை, இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

புகழ்காக்கும் விருப்பமுள்ள மனைவியை அடையப் பெறுகவர்க்கு, தம்மை அவமதித்துப் பேசும் பகைவர்முன்னே ஆண் சிங்கம்போல் நடக்கும் கம்பீரநடை இல்லையாம். (59)

10 மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

"இல்வாழ்க்கைக்கு அழகு மனைவியின் நற்குண நற்செயல்களே! அதற்கு நல்ல ஆபரணம் நல்ல மக்களைப் பெறுதலே!" என அறிஞர் கூறுவர். (60)

7. புதல்வரைப் பெறுதல்

நல்ல மக்களைப் பெறுவதின் பெருமை.

1 பெறுமவற்றுள் யாமறிவது இல்லை; அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற.

ஒருவன் பெறத்தகுந்த பேறுகளுள்ளே, அறியவேண்டிய வற்றை அறிந்த நல்ல மக்களைப்பெறுதல் அல்லாத பிறபேறுகளை நாம மதிப்ப தில்லை. (61)

2 எழுபிறப்பும் தீயவை தீண்டா; பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்

ஒருவன் பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய மக்களைப் பெறுவானுனால், எழுவகைப் பிறவிகளிலும் தின்பங்கள் அவனைத் தொடாமாட்டா. (62)

3 தம்பொருள் என்ப தம் மக்கள்; அவர்பொருள் தம்தம் வினையான் வரும்.

தாம்பெற்ற மக்கள் தேடிய பொருள்கள் அவர்கள் செய்யும் நல்வினைப் பயனைத் தம்மை வந்தடையும். ஆதலால் தாம் பெற்ற மக்களே தம்முடைய பொருள்கள் என்று அறிஞர் கூறுவர் (63)

4 அமிழ்தினும் ஆற்ற இனிதே; தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்.

தாம் பெற்ற மக்கள் தம் சிறிய கைகளினுல் அளைந்த சோறுனது, சுவையிருந்த அமிர்தத்தைக் காட்டிலும், பெற்றோர்க்கு மிக்க இனிமையானதாம். (64)

5 மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்றுஅவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

தாம் பெற்ற மக்கள் உடம்பைத் தொடுதல் உடம்புக்கு இன்பமாகும்; அவர்களின் குதலைச் சொற்களைக் கேட்டல் செவிக்கு இன்பமாகும். (65)

6 குழல்இனிது யாழ்இனிது என்ப; தம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

தாம்பெற்ற மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன இன்பத்தை அனுபவிக்காதவரே "குழலின் இசை இனிமையாயிருக்கிறது," "யாழின் இசை இனிமையாயிருக்கிறது" என்று கூறுவர். (66)

7 தந்தை மகற்குஆற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

தகப்பன் தன் மகனுக்குச் செய்யத்தகுந்த நல்லுபகாரம், கற்றவர் சபையில் அவரைக்காட்டிலும் மேம்பட்டிருக்கும்படி அறிவுடையவனாக்குதல். (67)

8 தம்மின்தம் மக்கள் அறிவுடைமை, மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

தாம்பெற்ற மக்கள் அறிவிற் சிறந்து விளங்குதல், தமக்கு இனிமையைத்தருவதைக் காட்டிலும், உலகத்தில் வாழும் எல்லா உயிர்களுக்கும் இனிமையைத் தரும். (68)

9 ஈன்ற பொழுதின், பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

தான்பெற்ற மகனை "அறிவாளி" என்று பிறர் புகழ்வதைக் கேட்ட தாய், அவனைப் பெற்ற காலத்தில் உற்ற மகிழ்ச்சியைக் காட்டிலும் மிகப்பெரு மகிழ்ச்சியை யடைவாள். (69)

10 மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி, 'இவன்தந்தை
என்நோற்றான் கொல்?' என்னும் சொல்.

தன்னை அறிவாளனாக்கிய தந்தைக்கு மகன் செய்யும் பிரதியுபகாரமானது: "இவனைப்பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவஞ் செய்தானோ?" எனப் பிறர் சொல்லும்படி நடத்தலே யாகும். (70)

8. அன்புடைமை

மனிவிமக்கள் முதலியோரிடம் அன்புடையவனுக வாழ்தல்.

1 அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்? ஆர்வலர் புன்கண்நீர் பூசல் தரும்.

அன்பிற்கு அடைத்துவைக்கும் தாழ்ப்பாள் இல்லை. தம்மால் அன்பு செய்யப்பட்டவருடைய துன்பங்கண்ட பொழுது, அவர் சொரிகின்ற கண்ணீரே உள்ளே யிருக்கிற அன்பைப் பலரும் அறிய வெளிப்படுத்தும். (71)

2 அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.

அன்பில்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன் படுத்திக்கொண்டு வாழ்வர். அன்புள்ளவரோ அப் பொருள்கள் மட்டுமன்றித் தம் உடம்பிலுள்ள எலும்பும் பிறர்க்குப் பயன்பட வாழ்வர். (72

3 அன்போடு இயைந்த வழக்கென்ப, ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு.

"பெறுதற்கரிய மனித உயிர்க்கு உடம்போடு பொருந்திய சம்பந்தம், அன்புடன் வாழ்வதற்குக் கிடைத்த வாய்ப்பு" என்று அறிஞர் கூறுவர். (73)

4 அன்பீனும் ஆர்வம் உடைமை; அதுஈனும் நண்பென்னும் நாடாச் சிறப்பு.

பிறரிடம் ஆசை கொள்ளச் செய்வது அன்பு. "யாவரும் கேளிர்" அதாவது "எல்லோரும் நண்பரே!" என்னும் இணையிலா மேன்மையைத் தருவது அந்த அன்பினால் விளையும் ஆசையுடைமையாம். (74)

5 அன்புற்று அமர்ந்த வழக்கென்ப, வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

"இந்த உலகத்தில் இன்பம் பெருகி வாழ்வோரின் பெருமை யெல்லாம், அன்புடன் கூடிவாழ்வதின் பயனே!" என்று அறிஞர் கூறுவர். (75)

6 அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை.

"புண்ணியத்திற்கு மட்டுமே அன்பு துணையாயிருக்கிறது;" என்று அறியாதவர் கூறுவர் பாவம் செய்யாதிருத்தற்கும் அவ் அன்பே துணையா யிருக்கின்றது. (76)

7. என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்.

எலும்பில்லாத உடம்பையுடைய புழுவை வெயில் வருத்து வதுபோல, அன்பற்ற உயிரை அறக் கடவுள் வருத்துவான் (77)

8 அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை, வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று.

உள்ளத்தில் அன்பின்றி வாழ்கின்ற உயிர் வாழ்க்கை, கொடிய பாலைநிலத்திலே, பட்ட மரம் தளிர்த்தாற் போலும்! (ஒருநாளும் தளிர்க்காது) (78)

9 புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும்? யாக்கை
அகத்துறுப்பு அன்பில் அவர்க்கு?

உடம்பிற்கு உள்ளுறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு, வெளியுறுப்புகள் எவையும் பயன் தரமாட்டா (79)

10 அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்புவழியில் வாழ்கின்ற உடம்பே, உயிருடன் கூடிய உடம்பாம். அன்பில்லாத உடம்பு, எலும்பைத் தோலினால் மூடிய வெற்றுடம்பே யாம். (80)

9—விருந்தோம்பல்

விருந்தினரை உபசரித்தல்

1 இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம், விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு.

மனைவிமக்களோடு வீட்டிலிருந்து, பொருளைப் பாதுகாத்து, இல்லறம் நடத்துவ தெல்லாம், விருந்தினரை வரவேற்று உபசரித்து மற்றும் பிறர்க்கு உபகாரங்களைச் செய்வதற்கேயாம்

2 விருந்து புறத்ததாத் தான்உண்டல், சாவா மருந்துஎனினும், வேண்டற்பாற் றன்று.

வீட்டிற்கு வந்த விருந்தாளி வெளியேயிருக்க, தான் தனித் துண்பது, சாவையொழிக்கும் தேவாமிர்தமே யென்றாலும், அது வெறுக்கத் தக்கதாகும் (82)

3 வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று.

தன் வீட்டிற்கு வரும் விருந்தினரை நாள்தோறும் உபசரிக் கின்றவனுடைய இல்வாழ்க்கை வறுமையால் வருந்திக் கேடு அடைதல் இல்லை (83)

4 அகனமர்ந்து செய்யாள் உறையும், முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்.

தக்க விருந்தினரை முகமலர்ந்து உபசரிக்கின்றவனுடைய வீட்டில், இலக்குமி மனமகிழ்ந்து வாழ்வாள். (84)

5 வித்தும் இடவேண்டும் கொல்லோ, விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்.

முதலில் விருந்தினரை உண்பித்துப் பின் எஞ்சியதை உண்பவன் நிலத்திற்கு விதையும் விதைக்க வேண்டுமோ? (விதை நெல்லையும் விருந்தாளிக்கு ஆக்குவான் என்றும் பொருள்) (85)

6 செல்விருந்து ஓம்பி, வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

வந்த விருந்தினரை உபசரித்து, மேலும் 'வரும் விருந்தினரை எதிர்பார்த்து உண்போம்' என்றிருப்பவன், வானுலகத்தில் வாழும் தேவர்க்குரிய அரிய விருந்தினனாவான். (86)

7 இனைத்துணைத்து என்பதொன்று இல்லை, விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

விருந்தினரை உபசரித்தலாகிய வேள்வியின் பயனை இவ்வளவு என்று அளவிட இயலாது; விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவுடையதாகும் (87)

8 பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர், விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

விருந்தினரை உபசரித்து அந்த வேள்வியைக் கைக்கொள்ளாதவர், "செல்வத்தைத் தேடி வருந்திப் பாதுகாத்தும் அது நில்லாமல் போய்விட்டதே" என்று வருந்துவர் (88)

9 உடைமையுள் இன்மை, விருந்தோம்பல் ஓம்பா
மடமை, மடவார்கண் உண்டு.

செல்வத்திலும் வறுமை என்பது, விருந்தினரை உபசரிக்காது வெறுத்தொதுக்கும் பேதைமையே யாம். அப்பேதைமை அறிவில்லாரிடத்திற் காணப்படும். (89)

10 மோப்பக் குழையும் அனிச்சம்; முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

அனிச்சப்பூ மோந்ததும் வாடும்; முகம் மாறுபட்டுப் பார்த்தாலே விருந்தினர் வாடிவிடுவர். (90)

10—இனியவை கூறல்

இனிய சொற்களைச் சொல்லுதல்.

1 இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

அன்புடன் கலந்து வஞ்சனை யில்லாதனவா யிருக்கின்ற சொற்கள், அறத்தை அறிந்த பெரியோர்களின் சொற்களாம்! அவையே இன்சொற்கள்! (91)

2 அகனமர்ந்து ஈதலின் நன்றே; முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

கண்டவுடன் முகமலர்ந்து இன்சொற்களைச் சொல்லுவோனைப் பெற்றால், அது, மனமகிழ்ந்து பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்தலினும் நல்லதாம். (92)

3 முகத்தான் அமர்ந்தினிது நோக்கி, அகத்தானும்
இன்சொ லினதே அறம்.

முகமலர்ச்சியுடன் இனிமையாகப் பார்த்து, மனங்கனிந்து இனிய சொற்களைச் சொல்வதிலேயே அறம் உளதாகும். (93)

4 துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும், யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

எல்லோரிடத்திலும் இன்ப முறத்தக்க இனியசொற்களைச் சொல்பவருக்குத் துன்ப முறத்தகுந்த தரித்திரம் இல்லை (94)

5 பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி; அல்ல மற்றுப் பிற.

வணக்கம் உடையவனுகவும், எல்லோரிடத்தும் இனிய சொல் உடையவனுகவும் ஆதலே ஒருவனுக்கு ஆபரணமாகும். அணிகின்ற ஆபரணங்கள் ஆபரணங்களாகா! (95)

6 அல்லவை தேய அறம்பெருகும், நல்லவை
நாடி இனிய சொலின்.

நன்மையை விரும்பி இனிமையான சொற்களை எவரிடத்தும் சொல்வதனால், பாவங்கள் குறையும்; புண்ணியம் வளரும். (96)

7 நயன்ஈன்று நன்றி பயக்கும், பயன்ஈன்று
பண்பில் தலைப்பிரியாச் சொல்.

நன்மையைக் கொடுத்து, இனிமையும் நீங்காத சொற்கள், ஒருவனுக்கு இன்பத்தையும் நன்மையையும் அளிக்கும். (97)

8 சிறுமையுள் நீங்கிய இன்சொல், மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

பிறர்க்குத் துன்பந் தராத இனிய சொற்கள், ஒருவனுக்கு இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் இன்பத்தையளிக்கும். (98)

9 இன்சொல் இனிதுஈன்றல் காண்பான், எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது?

பிறர் சொல்லும் இனிய சொற்கள் தனக்கு இன்பம் தருவதை அனுபவித் தறிந்தவன், பிறரிடம் கடுஞ்சொற்களை வழங்குவது எதற்காகவோ? (99)

10 இனிய உளவாக இன்னாத கூறல்,
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று.

இனிய சொற்கள் எவ்வளவோ இருக்க, அவற்றைச் சொல்லாமல், ஒருவன் கடுஞ்சொற்களைச் சொல்லுதல், பழங்கள் இருக்க காய்களைப் பறித்துத் தின்னுதல் போலாம். (100)

11.—செய்ந் நன்றி அறிதல்

பிறர் செய்த நன்மையை மறவாமை.

1 செய்யாமல் செய்த உதவிக்கு, வையகமும் வானகமும் ஆற்றல் அரிது.

முன் ஓர் உதவியும் செய்யாதிருக்க, ஒருவன் மற்றொருவனுக்குச் செய்த உபகாரத்திற்கு ஈடாக, மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் சேர்த்துகொடுத்தாலும் ஒப்புஆகாது (101)

2 காலத்தி னுல்செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது.

தகுந்த சமயத்தில் ஒருவன் செய்த உபகாரம் சிறிதே யாஞலும், காலத்தை நோக்க அது நிலவுலகத்தைக் காட்டிலும் மிகப் பெரியதாம். (102)

3 பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலிற் பெரிது.

பிரதி பிரயோசனத்தைக் கருதாமல், ஒருவன் செய்த உபகாரத்தின் நன்மையை ஆராய்ந்தால், அந்த நன்மை கடலைக் காட்டிலும் பெரியதாம். (103)

4 தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரி வார்.

ஒருவன் தமக்குத் தினையளவாகிய உபகாரத்தைச் செய்தாலும், அதன் பயனே ஆராய்ந்துணர்வோர், அதை அவ்வளவினதாக நினையாமல் பனையளவாகக் கருதிப் பாராட்டுவர். (104)

5 உதவி வரைத்தன்று உதவி; உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து.

ஒருவர் மற்றவர்க்குச் செய்யும் உபகாரமானது அவ உபகாரத்தின் எல்லைக்குட்பட்டதன்று. அவ் உபகாரத்தைப் பெற்றுக்கொண்டவரின் தகுதிக்கேற்பப் பெருமையுடையதாகும். (105)

6 மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

துன்பம் வந்தகாலத்தில் உதவி செய்தோரின் சிநேகத்தை விடாதிருப்பாஞக; குற்ற மற்ற பெரியோரின் சிநேகத்தையும் மறவாதிருப்பாஞக! (106)

7 எழுமை எழுபிறப்பும் உள்ளுவர், தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

தம்மிடத்தில் உண்டாகிய துன்பத்தை நீக்கியவரின் சிநேகத்தை, எழுவகையான எந்தப்பிறப்பிலும் மறவாமற் போற்றுவர் நல்லறிவுடையோர்.

8 நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

ஒருவர் செய்த உதவியை மறப்பது அறமாகாது. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது அறமாகும்.

9 கொன்றன்ன இன்ஞ செயினும், அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

தமக்கு முன்பொரு நன்மையைச் செய்தவர், பின்தம்மைக் கொலை செய்தாற் போன்ற தீமைகளைச் செய்தாலும், அவர் முன்செய்த ஒரு நன்மையை நினைக்க, அவையெல்லாம் கெட்டுப் போகும். (109)

10 எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எத்துணைப் பெரிய அறங்களை யழித்தவர்க்கும் அப்பாவத்தினின்று நீங்கும் வழியுண்டாகும், பிறர் செய்த உபகாரத்தை மறந்து அதனையழித்த மனிதனுக்கு அப்பாவத்தினின்று நீங்கும் வழி இல்லை. (110)

12.—நடுவு நிலைமை

அறத்தினின்று வழுவாமல் எவர்க்கும் நடுவாக நிற்றல்

1 தகுதி எனஒன்று நன்றே; பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

பகைவர், நண்பர், அயலார் என்னும் மூவகையினரிடத்திலும் நடுவுநிலைமை தவறாது நடக்கப்பெற்றால், அந்நடுவுநிலைமை என்ற ஒன்றே சிறந்த அறமாம். (111)

2 செப்பம் உடையவன் ஆக்கம், சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

நடுவுநிலைமையை உடையவனது செல்வம், பிறர் செல்வம் போல் அழிதலின்றி, அவன் சந்ததியார்க்கும் அழியாத பயனை அளிக்கும். (112)

3 நன்றே தரினும், நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

நடுவுநிலைமையினின்று தவறுதலால் உண்டாகின்ற செல்வம் நன்மையையே தருமாயினும், அதை அப்பொழுதே விட்டொழிக்க வேண்டும். (113)

4 தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

நடுவுநிலைமையுடையவர், நடுவுநிலைமையில்லாதவர் என்னும் தன்மை, அவரவர் அடைந்த புகழ்ச்சி இகழ்ச்சிகளைக் கொண்டு அறியப்படும். (114)

5 கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

வறுமையும் செல்வமும் வாழ்க்கையில் மாறி மாறி வருவன. ஆதலால், (பொருளின் பொருட்டு) மனம் ஒரு பக்கம் சாயாதிருத்தலே அறிவுடையார்க்கு அழகாம். (115)

6 கெடுவல்யான் என்பது அறிக, தன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்.

தன் மனம் நடுவுநிலைமை நீங்கிப் பாவங்களைச் செய்யத் தூண்டுமேயானால், "நான் கெடுவேன்" என்பதற்கு அது வே அறிகுறியாகும். (116)

7 கெடுவாக வையாது உலகம்; நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

நடுவு நிலைமையுடன் அறநெறியில் நிற்பவன் வ று மை யடைந்தால், அதை, உயர்ந்தோர் வறுமையென்று கருதார் (117)

8 சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொரு
கோடாமை சான்றோர்க்கு அணி. [பால்

முதலில் சமனுக நின்று, பின் தன்னிடம் இட்ட பொருளை நிறுத்துக்காட்டும் தராசு போல, நற்குணங்களால் நிறைந்து ஒரு பக்கம் சாயாதிருத்தலே சான்றோர்க்கு அழகு. (118)

9 சொற்கோட்டம் இல்லது செப்பம்; ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

மனத்திற் கோணுதல் இல்லாதிருத்தலை உறுதியாய்ப் பெற்றிருந்தால், அது சொல்லிலும் கோணுதல் இல்லாததாகிய நடுவுநிலைமை ஆகும். (119)

10 வாணிகம் செய்வார்க்கு வாணிகம்; பேணிப்
பிறவும் தமபோல் செயின்

பிறருடைய பொருளையும் தம்பொருள்போல் பாதுகாத்துச் செய்தலே, வியாபாரஞ் செய்வோருக்குரிய நல்ல வியாபார மாகும். (120)

13.— அடக்கமுடைமை

மனம்மொழி மெய்கள் தீயவழியிற் செல்லாது அடங்கி வாழ்தல்.

1 அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்.

அடக்கமுடைமை தேவருலகத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் அடக்கம் இல்லா திருத்தல் துன்பம் நிறைந்த நரகத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். (121)

2 காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம் அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு.

அடக்கத்தை உறுதிப் பொருளாக எண்ணிப் பாதுகாக்க வேண்டும் ஏனென்றால், உயிர்களுக்கு அடக்கத்தைக் காட்டிலும் சிறந்த செல்வம் வேறில்லை. (122)

3 செறிவறிந்து சீர்மை பயக்கும்; அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்.

அறிய வேண்டியவைகளை நன்கு அறிந்து, அறநெறியிலே ஒருவன் அடக்கமாக வாழ்வானாயின், அவ் வடக்கம் அறிவுடையாரால் மதிக்கப் பெற்றுச் சிறப்பைத் தரும். (123)

4 நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம், மலையினும் மாணப் பெரிது.

இல்வாழ்க்கையாகிய வழியில் பிசகாதுநின்று, அடக்கமாக வாழ்வோனுடைய பெருமை மலையைக்காட்டிலும் மிகப் பெரிதாகும். (124)

5 எல்லார்க்கும் நன்றும் பணிதல்; அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து.

பணிவு உடையவராய் அடங்கி வாழ்வது எவருக்கும் நன்மையாகும். அவர்களில் செல்வமுடையவர்களுக்கோ, அது இன்னொரு சிறந்த செல்வமாக விளங்குவதாகும் (125)

6 ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஒரு பிறப்பின் கண் ஒருவன், ஐந்துறுப்பையும் ஒட்டினுள் அடக்கும் ஆமையைப்போல, ஐம்பொறிகளையும் அடக்க வல்ல வனுகில், எழுவகையான எந்தப்பிறவியிலும் அது அவனுக்குப் பாதுகாப்பாகும். (126)

7 யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு.

காக்கத் தகுந்தவையாகிய எல்லாவற்றையும் காக்கா விட்டாலும், நாகனை மட்டுமேனும் காக்கக் கடவர்; நாக்கைக் காக்கா விட்டால், சொற்குற்றத்திற்கு ஆளாகித் துயரம் அடைவர். (127)

8 ஒன்ருனும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்,
நன்ருகாது ஆகி விடும்.

தீய சொற்களின் பொருளால் பிறர்க்குத் துன்பம் ஒன்றே னும் ஒருவன் செய்வானுனால், அவனுக்குப் பிற அறங்களால் எற்படும் நன்மையும் தீமையாய் முடியும் (128)

9 தீயினுல் சுட்டபுண் உள்ஆறும்; ஆருதே
நாவினுல் சுட்ட வடு.

நெருப்பினுல் சுட்ட புண் (வெளிக்குத் தழும்பாய்க் காணப் பட்டாலும்)உள்ளே ஆறிப்போகும். நாக்கினுல் தீய சொற்களைச் சொல்லி ஏற்படுத்திய புண்ணின் தழும்பு மனத்தில் ஒரு போதும் ஆருது. (129)

10 கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

மனத்தில் கோபம் தோன்ருமல் காத்துக், கல்வியும் அடக்கமும் பேணுவோனிடம் அறக்கடவுள் அவனைச் சேருதற் குரிய சமயத்தை, அவன் வழியே சென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். (130)

14 —ஒழுக்கமுடைமை

நல்லொழுக்கந் தவறுது வாழ்தல்

1 ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

நல்லொழுக்கமே எல்லோருக்கும் சிறப்பைக் கொடுத்தலால், அவ்வொழுக்கத்தை உயிரைக் காட்டிலும் மேலாகக் காப்பாற்ற வேண்டும். (131)

2 பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம்; தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து, மனத்தையடக்கித் தெளிந்து அறிந்தாலும், இம்மைக்கும் மறுமைக்கும் துணையாவது ஒழுக்கமே: ஆதலால், நல்லொழுக்கத்தை எவ்விதத்திலும் அழிவுபடாமற்பேணி வருந்திப் பாதுகாக்க வேண்டும். (132)

3 ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கம் உடையவனுக வாழ்தலே குடிச்சிறப் பாகும் ஒழுக்கத்தினின்று தவறுதல் தாழ்ந்த குலத்தில் பிறந்த தன்மையாகும். (133)

4 மறப்பினும் ஓத்துக் கொளல்ஆகும்; பார்ப்பான்,
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

ஓதியுணர்ந்த வேதத்தை ஒருவன் மறந்து விட்டாலும், அதைத் திரும்ப ஓதி உணர்ந்து கொள்ளலாம். பார்ப்பான் அல்லது உயர்குடிப் பிறந்தோன் ஒழுக்கம் குறைந்தாலோ அவன் பிறந்த குடிச்சிறப்பு அழியும். (134)

5 அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொறாமை யுடையவனிடத்தில் செல்வம் இல்லாமற் போவது போல, ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்ச்சி இல்லாமற் போய்விடும். (135)

6 ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்; இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

ஒழுக்கத்தினின்று தவறுவதால் தமக்குக் குற்றமே உண்டாகுந் தன்மையை யறிந்து, மனவலிமை யுடையவர் நல்ல வொழுக்கத்திற் குறைய மாட்டார். (136)

7 ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

எல்லோரும் ஒழுக்கத்தினாலே மேம்பாட்டை அடைவர். அவ் வொழுக்கத்தினின்று தவறுவதாலே, அடைதற்கு உரிய தல்லாத பழியை அடைவர். (137)

8 நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

நல்லொழுக்கமானது அறத்திற்குக் காரணமாய் நின்று இன்பத்தைக் கொடுக்கும். தீயொழுக்கமோ எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும். (138)

9 ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே, தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

மறந்தும் தீய சொற்களைத் தமது வாயினாற் சொல்லும் தன்மைகள் ஒழுக்கம் உடையவர்களுக்கு உண்டாகமாட்டா. எனென்றால், நல்ல சொற்களையே பேசும் பழக்கம் உள்ளவர் அவர். (139)

10 உலகத்தோடு ஒட்ட ஒழுகல்; பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

உயர்ந்தோர் பலரும் நடக்கும் முறையைக் கல்லாதவர், பல நூல்களைக் கற்றவராயினும், அறிவில்லாதவராவார். (140)

15.—பிறனில் விழையாமை

அயலானது மனைவியை விரும்பாமை.

1 பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை
அறம்பொருள் கண்டார்கண் இல். [ஞாலத்து

அண்ணியனுக்கு உரிமைப்பொருளாகிய அவன் மனைவியை இச்சித்துத் திரியும் அறியாமை, இவ்வுலகத்தில் அறநூலையும் பொருள்நூலையும் ஆராய்ந்தறிந்தவரிடத்தில் இல்லை. (141)

2 அறன்கடை நின்றருள் எல்லாம், பிறன்கடை
நின்றுரிற் பேதையார் இல்.

அறத்தினின்று விலக்கப்பட்ட பாவவழியிற் சென்றூர் எல்லாருள்ளும், அண்ணியனுடைய மனைவியை விரும்பி அவன் வீட்டு வாயிலிற் போய் நிற்பவரைப்போன்ற மூடர் இல்லை. (142)

3 விளிந்தாரின் வேறல்லர்; மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்தொழுகு வார்.

ஐயமின்றித் தம்மிடம் நம்பிக்கை கொண்டவரின் மனைவியை யிச்சித்துக் கொடுமை செய்து திரிபவர், உயிருடைய வராயிருந்தாலும் நிச்சயமாகச் செத்தவரே யாவர். (143)

4 எனைத்துணையர் ஆயினும் என்ஆம்? தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்.

சிறிதேனும் தன் குற்றத்தை நினையாமல் அண்ணியனுடைய மனைவியினிடத்திற் செல்லுதல், எவ்வளவு பெருமையுடைய வர்க்கும் சிறுமையே யாம் (144)

5 எளிதென இல்இறப்பான் எய்தும்; எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

"இவளைச் சேர்தல் எளிது" என்றெண்ணி அண்ணியன் மனைவியிடம் நெறிதவறி நடப்பவன், எந்தக்காலத்திலும் அழியாது நிற்கும் பழியையடைவான். (145)

6 பகை, பாவம், அச்சம், பழியென நான்கும்
இகவாவாம், இல்இறப்பான் கண்.

அன்னியன் மனைவியை யிச்சித்து நெறிதவறி திரிபவனிடத்தில், பகை, பாவம், பயம், பழி என்னும் நான்கு குற்றங்களும் ஒரு பொழுதும் நீங்காவாம். (146)

7 அறன்இயலான் இல்வாழ்வான் என்பான், பிறன்இய
பெண்மை நயவா தவன். [லாள்

''அறநெறியில் இல்வாழ்க்கை நடத்துபவன்'' என்று சொல்லப்படுவோன், அன்னியனுக்கு உரிமை பூண்டொழுகும் அவன் மனைவியின் இன்பத்தை விரும்பாதவனே! (147)

8 பிறன்மனை நோக்காத பேராண்மை, சான்றோர்க்கு
அறன்ஒன்றோ? ஆன்ற ஒழுக்கு!

அன்னியனுடைய மனைவியை யிச்சித்துப் பார்க்காத பெரிய ஆண்தன்மை, அறிவுடைய பெரியோர்க்குத் தருமம் மாத்திரமோ? உயர்ந்த ஒழுக்கமுமாம்! (148)

9 நலக்குரியார் யார்எனின், நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார்.

அச்சந் தரும் கடலாற் சூழ்ந்த இவ்வுலகத்தில், எல்லா நன்மைகளையும் அடைதற்குரியவர் யார் என்றால், அன்னியன் மனைவியின் தோள்களைத் தழுவாதவரேயாம். (149)

10 அறன்வரையான் அல்ல செயினும், பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

ஒருவன் தருமத்தையே விரும்பாமல் பாவங்களையே செய்தாலும், அன்னியனுக்கு உரிய மனைவியின் பெண் தன்மையை யிச்சிக்காதிருத்தலே நல்லது. (150)

16 — பொறையுடைமை

பிறர் செய்யும் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளுதல்

1 அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

தன்னைத் தோண்டுவோரையும் தாங்கி நிற்கும் நிலத்தைப் போலத் தம்மை நிந்திப்பவரையும் பொறுத்துக் கொள்ளுதல் முதன்மையான அறமாம் (151)

2 பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று.

பிறர் செய்த வம்பு கடந்த தீமையை ஒருவன் எப் பொழுதும் பொறுக்கக் கடவன்; அத்தீமையை அப்பொழுதே மறந்து விடுதல் அப்பொறுமையைக் காட்டிலும் சிறப்புடையது

3 இன்மையுள் இன்மை விருந்தொரால்; வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

ஒருவனுக்கு வறுமையுள் வறுமையாவது, விருந்தினரை யேற்றுக்கொள்ளாமல் விலக்குதலாம். அதுபோல், வல்லமையுள் வல்லமையாவது அறியாமையால் தீங்கு செய்தவரைப் பொறுத் தலாம். (153)

4 நிறையுடைமை நீங்காமை வேண்டின், பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

நிரம்பிய பெருங்குணம் தன்னைவிட்டு நீங்காதிருக்க ஒருவன் விரும்பினால், அவன் பொறுமையைப் பொன்போற் போற்றிக் காப்பாற்ற வேண்டும் (154)

5 ஒறுத்தாரை ஒன்றுக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

பிறர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளாமல் துன் புறுத்தினவரை அறிவுடையோர் ஒரு பொருளாகத் தம்மனத்தில் நினைக்க மாட்டார்; அத்தீமையைப் பொறுத்துக் கொண்ட வரையோ பொன்போற் பொதிந்து தம் மனத்தில் வைத்துக் கொள்வார். (155)

6 ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

தமக்குத் தீங்கு செய்தவனைத் தண்டித்தவருக்கு ஒருநாள் இன்பம்! ஆனால், பொறுத்தவர்க்கோ உலகம் உள்ள அளவும் புகழ் உண்டாம்! (156)

7 திறன்அல்ல தற்பிறர் செய்யினும், நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று.

செய்யத்தகாத கொடுந்துன்பங்களைப் பிறர் தனக்குச் செய்தாலும், அதனால் அவருக்கு எற்படுந்துன்பத்திற்கு வருந்தி தான் தருமமல்லாத செயல்களைச் செய்யாதிருத்தலே ஒருவனுக்கு நல்லதாம். (157)

8 மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

மனச் செருக்கினாலே தமக்குத் தீமைகளைச் செய்தவரைத் தாங்கள் தம் பொறுமையால் வெற்றி கொள்ளக் கடவர். (158)

9 துறந்தாரில் தூய்மை உடையர்; இறந்தார்வாய்
இன்னுச்சொல் நோற்கிற் பவர்.

நெறிகடந்தவரின் வாயில் நின்றுண்டாகும் தீயசொற்களைப் பொறுப்பவர், இல்வாழ்க்கையிலிருந்தாலும் துறந்தவரைப்போல பரிசுத்தமானவர். (159)

10 உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்சொல்லும்
இன்னுச்சொல் நோற்பாரின் பின்.

உண்ணா நோன்பு பூண்டு தவஞ் செய்வோர் பெரியோரே! எனினும் அறிவில்லார் சொல்லும் கொடுஞ் சொற்களைப் பொறுத்துக கொள்பவர்க்கு, அவர் பிற்பட்டவரே.

17—அழுக்காருமை

பிறர் செல்வம் முதலிய உயர்வுகளைக்கண்டு பொருமைப் படாதிருத்தல்.

1 ஒழுக்காருக் கொள்க ஒருவன்;தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு.

ஒருவன் தன் மனத்தில் பொருமை இல்லாத தன்மையை, எல்லொழுக்க வழியாகக் கொள்ளக்கடவன். (161)

2 விழுப்பேற்றின் அ∴தொப்பது இல்லை; யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்.

எவரிடத்திலும் பொருமை கொள்ளாதிருத்தலே ஒருவன் பெறுவாஞ்ஞல், அவன் பெறத்தக்க பெரிய பேறுகளுள் அதை யொப்பது வேறு இல்லை (162)

3 அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான், பிறன் ஆக் பேணுது அழுக்கறுப் பான். [கம்

மறுமைக்குரிய அறத்தையும், இம்மைக்குரிய செல்வத் தையும் விரும்பாதவன் எவனே, அவனே, அயலாலுடைய செல்வம் முதலிய உயர்ச்சிகளைக் கண்டபொழுது, அதற்கு மகிழ்ச்சியுறுமல் பொருமைப்படுவான். (163)

4 அழுக்காற்றின் அல்லவை செய்யார்; இழுக்காற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து.

பொருமை என்னும் தீயவழியினால், இம்மையிலும் மறுமை யிலும் துன்பமுண்டாவதை உணர்ந்து, அறிவுடையோர் பொருமை காரணமாகப் பாவங்களைச் செய்யமாட்டார். (164)

5 அழுக்காறு உடையார்க்கு அதுசாலும்; ஒன்னுர் வழுக்கியும் கேடுஈன் பது.

பகைவர் இல்லாதிருந்தாலும், பொருமையொன்றே ஒருவனுக்குக் கேட்டைத்தரும். ஆதலால், பொருமையுடைய வர்க்கு வேறுபகை வேண்டாம்; அது வொன்றே போதும்!(165)

6 கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம், உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்.

ஒருவன் பிறருக்குக் கொடுப்பதைக் குறித்துப் பொறுமைப் படுகிறவனது சுற்றத்தாரும், ஆடையும் உணவும் கிடைக்கப் பெறுமல் அழிவார். (166)

7 அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்.

பொறுமைப் படுகிறவனைச் சீதேவி தானும் காணச் சகிக்காமல், தன் தமகையாகிய மூதேவிக்குக் காட்டிக்கொடுத்து நீங்குவாள். (167)

8 அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும்.

"பொறுமை" என்று சொல்லப்பட்ட ஒப்பற்ற பாவி, ஒருவனுடைய செல்வம் முதலிய சீர்களையெல்லாம் தொலைத்து, மறுமையில், நரகத்திலும் அவனைப் புகுத்தி விடுவான். (168)

9 அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப் படும்.

பொறுமை பொருந்திய மனத்தையுடையவனது செல்வமும், நேர்மையுடையவனது மறுமையும் அறிஞரால் ஆராயத் தக்கவை. (169)

10 அழுக்கற்று அகன்ருரும் இல்லை; அஃ தில்லார் பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.

பொறுமையுற்று உயர்ந்தவரும் இல்லை. பொறுமையற்றவர் செல்வததில் தாழ்ந்தவரும் இல்லை. (170)

18—வெஃகாமை

பிறர் பொருளை அபகரிக்க நினையாமை.

1 நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

அயலாருடைய நல்ல பொருளை நடுவு நிலைமையில்லாமல் ஒருவன் அபகரிக்க நினைத்தால், அது அவன் குடியை அழித்துப் பல குறைகளையும் கொடுக்கும் (171)

2 படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்,
நடுவன்மை நாணு பவர்.

'பிறர் பொருளுக்குத் தாம உரியவ ரல்லர்' என்னும் நடுவு நிலைமை அல்லாமைக்கு அஞ்சுவோர, தமக்கு வரும் பயனை விரும்பிப் பிறபொருளைக் கவர்வதற்குரிய பழிச்செயல்களைச் செய்யார் (172)

3 சிற்றின்பம் வெஃகி, அறனல்ல செய்யாரே;
மற்றின்பம் வேண்டு பவர்.

அறவழியிலே வரும் நிலைத்த இன்பத்தை விரும்புவோர், பிறரிடம் அபகரித்த பொருளினால் அடையும் அற்ப இன்பத்தை விரும்பி, அறமல்லாத செயல்களைச் செய்யமாட்டார். (173)

4 'இலம்'என்று வெஃகுதல் செய்யார்; புலம்வென்ற
புன்மைஇல் காட்சி யவர்.

'யாம் வறுமை யுடையோம்' என்று நினைத்து. ஐம்புலன்களையும் வென்ற குற்றமற்ற அறிவினையுடையோர், தம் வறுமை நீங்கும் பொருட்டுப் பிறபொருளை யிச்சிக்க மாட்டார். (174)

5 அஃகி அகன்ற அறிவுஎன்னும்? யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

பிறர் பொருளை யிச்சித்து எவரிடத்திலும் அறிவேறு பொருந்தாத செயல்களைச் செய்வாராஞல், நுட்பமாகச் சென்று விரிவாகக் இருகிக்கும் பேரறிவு என்ன பயனுடையதாகும்? (175)

6 அருள்வெ∴கி ஆற்றின்கண் நின்றான், பொருள்
பொல்லாத சூழக் கெடும். [வெ∴கிப்

அருளே விரும்பி அறவழியில் வாழ்பவன், பிறர் பொருளை யிச்சித்துத் தீச்செயல்களைச் செய்ய எண்ணினால், கெடுவான்.

7 வேண்டற்க வெ∴கிஆம் ஆக்கம்; வினைவயின்
மாண்டற்கு அரிதாம் பயன்.

பிறர் பொருளையிச்சித்து அதனாலுண்டாகிய செல்வப் பெருக்கை விரும்பாதிருக்கக கடவன் எனின்னால், பின் அதனையனுபவிக்கும்போது வரும் பயன் நன்றாதல் அரிது (177)

8 அ∴காமை செல்வத்திற்கு யாதெனின், வெ∴காமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

குறையும் இயல்புள்ள செல்வம் குறையாதிருத்தற்கு வழி யாதென்றால், பிறரிடம் உள்ள பொருளை யிச்சியாதிருத்தலே யாம். (178)

9 அறனறிந்து வெ∴கா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு.

இஃது அறம் என்று அறிந்து பிறர் பொருளையிச்சியா திருக்கும் அறிவுடையவரிடம், திருமகள் காலமும் இடமும் நோக்கிச் சென்றடைவாள். (179)

10 இறல்ஈனும் என்றுரைவெ∴கின், விறல்ஈனும்
வேண்டாமை என்னும் செருக்கு.

பின் வினையும் தீமையை யினையாமல் பிறர் பொருளை யிச்சித்தால் அது அழிவையே தரும். பிறர் பொருளை விரும்பாமை என்னும் பெருமிதம் வெற்றியைத் தரும். (180)

19.—புறங்கூறாமை

காணுத இடத்துப் பிறரை இகழ்ந்து பேசாமை

1 • அறம்கூ றுன் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூ றுன் என்றல் இனிது.

'அறம்' என்ற சொல்லேயுமே ஒருவன் சொல்லாமல் பாவங்களைச் செய்தாலும், ''காணுத இடத்தில் பிறரையிகழ்ந்து பேசமாட்டான்'' என்று உலகத்தார் சொல்லப்பெறுதல் நல்லது (181)

2 அறனழீஇ அல்லவை செய்தலின், தீதே;
புறனழீஇப் பொய்த்து நகை.

''அறம் என்பதொன்று இல்லை'' என்று அழித்துச் சொல்லிப் பாவங்களைச் செய்வதைப் பார்க்கிலும், ஒருவனைக் காணுத இடத்து இகழ்ந்து பேசிக் கண்டவிடத்துச் சிரிதுதுப் பேசுதல் கொடிது. (182)

3 புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின், சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்.

பிறனைக் காணுதவிடத்தில் இகழ்ந்து பேசிக் கண்டவிடத்தில் புகழ்ந்து பேசி, ஒருவன் பொய்வாழ்வு வாழ்வதைக் காட்டிலும், உயிர் விடுதல், அறநூல் கூறும் நன்மையைக்கொடுக்கும்.

4 கண்நின்று கண்ணறச் சொல்லினும், சொல்லற்க;
முன்னின்று பின்நோக்காச் சொல்.

ஒருவன் எதிரே நின்று தாட்சணியம் இல்லாமற் கடுமையாகச் சொன்னலும், அவன் எதிரேயில்லாமல், குற்றம் உண்டாகும் சொல்லைச் சொல்லாதிருக்கக் கடவன். (184)

5 அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை, புறம்சொல்
புன்மையால் காணப் படும். [லும்

'அறம் நன்று' என்று ஒருவன் வாயினல் சொன்னலும், அவன் அந்த மனப்பூர்வமாகச் சொல்லவில்லை என்பது அவன் பிறரைப் பற்றி இகழ்ந்து பேசுகிற அற்பத்தனத்தினல் எவருக்கும் விளங்கிவிடும். (185)

6 பிறன்பழி கூறுவான், தன்பழி உள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

பிறனுடைய பழியை அவனைக் காணுதவிடத்திற் கூறித் திரிபவன், தன் பழிகளுள்ளே மிகவருந்ததக்கவற்றை அவனுல் தெரிந்து சொல்லப்படுவான் (186)

7 பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்; நகச்சொல்லி
நட்பாடல் தேற்ரு தவர்.

இனிய சொற்களைச் சொல்லிப் பிறருடன் நட்புக்கொள்ளுதலின் பெருமையை யுணராதவர், தம் சுற்றதாரையும் புறத்தேபிகழ்ந்து பேசிப் பிரிந்துபோகச் செய்வர். (187)

8 துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்,
என்னே கொல் ஏதிலார் மாட்டு?

மிக நெருங்கிய உறவினரின் குற்றத்தையும் பலரறியத தூற்றும் இயல்புடையவர், அயலாரைக் குறித்து என்னதான் செய்ய மாட்டார்! (188)

9 அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம், புறன்
பூன்சொல் உரைப்பான் பொறை? [நோக்கிப்

பிறர் இல்லாத சமயம் பார்த்து அவரைப் பழித்துப்பேசுவோனுடைய உடற்சுமையைப் பூமி தன்கடமை என்று நினைத்துச் சுமக்கின்றது போலும். (189)

10 ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?

அயலாருடைய குற்றத்தை ஆராய்தல் போலத் தம்முடைய குற்றத்தையும் தாமே ஆராய்ந்து பார்ப்பாரானுல், அவருடைய நிலைபெற்ற உயிருக்குத் துன்பம் உண்டாகுமோ? (இல்லை) (190)

20—பயனில சொல்லாமை

தமக்கும் பிறர்க்கும் பயன்தராத பேச்சுக்களைப் பேசாதிருத்தல்.

1 பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்,
எல்லாரும் எள்ளப் படும்.

அறிவுடையார் பலரும் கேட்டு வெறுக்கத்தக்க பயனற்ற பேச்சுக்களைப் பேசுவோன் எல்லோராலும் இகழப்படுவான்.

2 பயன்இல பல்லார்முன் சொல்லல், நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது.

அறிவுடையார் பலர் முன்னிலையில் பயனற்ற சொற்களைச் சொல்லுதல், விரும்பத் தகாதவற்றைத் தன் சிநேகிதருக்குச் செய்தலைப் பார்க்கிலும் கொடியது. (192)

3 நயன்இலன் என்பது சொல்லும்; பயன்இல
பாரித்து உரைக்கும் உரை.

பயனற்ற பொருள்களை ஒருவன் விரித்துப் பேசும் பேச்சு, "அவன் நீதியில்லாதவன்" என்பதையே விளக்கிக்காட்டும். (193)

4 நயன்சாரா நன்மையின் நீக்கும்; பயன்சாராப்
பண்பில்சொல் பல்லார் அகத்து.

பயனும் இல்லாமல், பண்பும் இல்லாத சொற்களைப் பலரிடத்தும் சொல்வானுனால், அவை ஒருவனுடைய நேர்மையைக் குலைத்து நற்குணங்களையும் அழித்துவிடும். (194)

5 சீர்மை சிறப்பொடு நீங்கும்; பயன்இல,
நீர்மை உடையார் சொலின்.

நல்லகுணம் உடையவர் பயனற்ற சொற்களைச் சொல்வாரானால், அவருடைய மேன்மையும் மதிப்பும் அழிந்துவிடும். (195)

6 பயனில்சொல் பாராட்டு வானே மகன்எனல்!
மக்கட் பதடி எனல்!

பயனற்ற சொற்களைப் பலதரமும் சொல்கிறவனை 'மனிதன்' என்று சொல்லற்க! 'மனிதருள்ளே பதர்' என்று சொல்லுக! (196)

7 நயன்இல சொல்லினும் சொல்லுக! சான்றோர்
பயன்இல சொல்லாமை நன்று.

அறிவுடையோர் நீதியில்லாத சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம்; பயனற்ற சொற்களைச் சொல்லாதிருத்தல் நல்லது

8 அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்;
பெரும்பயன் இல்லாத சொல்.

அறிவதற்கருமையான பயன்களை ஆராயும் நுண்ணறிவுடையவர், பெரும்பயன் இல்லாத சொற்களைச் சொல்லமாட்டார். (198)

9 பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்; மருள்
மாசறு காட்சி யவர். [தீர்ந்த

மயக்கத்தினின்று நீங்கிய மாசற்ற மெய்யறிவுடையவர், பயனற்ற பேச்சுக்களை மறந்தும் சொல்லமாட்டார் (199)

10 சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயன்இலாச் சொல்.

சொற்களுள்ளே பயனுடைய சொற்களைச் சொல்லக்கடவர்; சொற்களுள்ளே பயனற்ற சொற்களைச் சொல்லாதிருக்கக் கடவர்! (200)

21—தீவினையச்சம்

பாவங்களைச் செய்தற்கு அஞ்சுதல்.

1 தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர்;
தீவினை என்னும் செருக்கு.

தீய செயலாகிய மயக்கத்தைத் தீவினையுடையவர் அஞ்ச மாட்டார்கள்; தீவினையற்ற மேலோர் அஞ்சுவார்கள். (201)

2 தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

'தனகு இன்பத்தைத் தரும்' என்றெண்ணிச் செய்த தீய செயல்கள் துன்பத்தையே தருவதால், அத தீய செயல்கள் நெருப்பைக் காட்டிலும் கொடியவை என்று அஞ்சவேண்டும்.

3 அறிவினுள் எல்லாம் தலையென்ப; தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

தம்மைத் துன்புறுத்துவோருக்கும் கொடிய செயல்களைச் செய்யாதிருப்பதை, அறிவு எல்லாவற்றுள்ளும் முதன்மையான அறிவென்று அறிஞர் கூறுவர். (203)

4 மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்,
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.

மறந்தாயினும் பிறனுக்குக் கேட்டைத்தரும் செய்கையை ஒருவன் நினைக்காதிருப்பானாக; அவ்விதம் நினைப்பானாயின், அவனுக்குக் கேட்டைத்தரும் செய்கையை அறக்கடவுள் எண்ணுவான். (204)

5 இலன்என்று தீயவை செய்யற்க; செய்யின்
இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.

'நான் வறுமையுடையேன்' என்று நினைத்து அவ் வறுமை நீங்குவதற்காகப் பிறனுக்கு ஒருவன் தீச் செயல்களைச் செய்யாதிருப்பானாக; செய்தால் மேலும் அதிக வறுமையுடையவனாவான். (205)

6 தீப்பால தான்பிறர்கண் செய்யற்க! நோய்ப்பால
தன்னே அடல்வேண்டா தான்.

துன்பத்தைக் கொடுப்பவையாகிய பாவங்கள் • தன்னே வருத்தும் தன்மையை விரும்பாத ஒருவன், தானும் பிறருக்குத் தீமையைத் தரும் செய்கைகளேச் செய்யாதிருக்கக் கடவன்! (206)

7 எனேப்பகை உற்ருரும் உய்வர்; வினேப்பகை
வீயாது பின்சென் றடும்.

எத்தகைய கொடிய பகையை உடையவரும் அதனின்று பிழைத்து வாழ்வர்; தீவினேயாகிய பகை ஒருவிதத்தாலும் நீங்காமல் தொடர்ந்து சென்று கொல்லும். (207)

8 தீயவை செய்தார் கெடுதல், நிழல்தன்னே
வீயாது அடிஉறைந் தற்று.

பிறருக்குத் தீமை செய்தவர் கேடு அடைதல், ஒருவனது நிழல் விடாமல் தொடர்ந்து அவனடியில் தங்குவது போலாம்.

9 தன்னேத்தான் காதலன் ஆயின், எனேத்தொன்றும்
துன்னற்க தீவினேப் பால்.

ஒருவன் தன்னேத்தான் விரும்புதலுடையவனுயிருந்தால், தீவினேப்பகுதியில் மிகச் சிறியதொன்றையும் பிறருக்குச் செய்யாதிருப்பானுக! (209)

10 அருங்கேடன் என்பது அறிக; மருங்கோடித்
தீவினே செய்யான் எனின்.

ஒருவன் தீய நெறியிற் சென்று பிறருக்குத் தீமைகளேச் செய்யாதிருப்பானுனுல், அவனே கேடு இல்லாதவன் என்று அறிந்துகொள்ளலாம். (210)

22—ஒப்புரவறிதல்

உலகம் போற்றும் பரோபகாரத்தைச் செய்தல்.

1 கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு?

மழையைப் பெய்து உதவி செய்யும் மேகங்களினிடத்து உயிர்கள் என்ன பிரதியுபகாரத்தைச் செய்கின்றன? ஆதலால், மேகங்களைப் போன்றவர் தாம் செய்யும் உபகாரத்துக்குப் பிரதியுபகாரத்தை விரும்புவதில்லை (211)

2 தாளாற்றித் தந்த பொருள்எல்லாம், தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

முயற்சி செய்து சம்பாதித்த பொருளனைத்தும் சகுதியுடையவர்க்கு உபகாரத்தைச் செய்வதற்கேயாம் (212)

3 புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே;
ஒப்புரவின் நல்ல பிற.

பரோபகாரமாகிய ஒப்புரவைப்போல வேறு நற்செயல்களைத் தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் அடைதல் அரிதாம். (213)

4 ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

உலகம் ஒப்புவதாகிய பரோபகாரத்தை அறிந்து செய்பவன் உயிருடன் கூடி வாழ்பவன் ஆவான். அவ்வித்தமில்லாதவன் செத்தாருள் ஒருவனாக எண்ணப்படுவான். (214)

5 ஊருணி நீர்நிறைந் தற்றே; உலகுஅவாம்
பேரறி வாளன் திரு.

உயர்ந்தோர் பாராட்டும் ஒப்புரவை அறிந்த பேரறிவுடையானது செல்வம், ஊரிலுள்ளோர் நீருண்ணும் குளம் நீர்நிறைந்திருத்தலைப் போன்றது. (215)

6 பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால், செல்வம்
நயன்உடை யான்கண் படின்.

பரோபகாரமுள்ளவனிடத்திற் செல்வம் உண்டானால், அது உண்பதற்குரிய பழமரம் ஊர் நடுவே பழுத்து நின்றாற் போன்றது. (216)

7 மருந்தாகித் தப்பா மரத்தற்றால், செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

ஒப்புரவுடைமையாகிய பெருந்தகைமையுடையவனிடத்தில் செல்வம் இருக்குமானால், அது இலை, காய், பழம், வேர் முதலிய எல்லா உறுப்புக்களும் பிணிகளுக்கு மருந்தாகித் தப்பாத பயனுள்ள மரத்தையொக்கும். (வேப்பமரம்) (217)

8 இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்,
கடன்அறி காட்சி யவர்.

கடமையுணர்ந்த பேரறிவுடையோர், செல்வம் சுருங்கிய காலத்திலும் பிறாகுபகாரஞ் செய்யப் பின் வாங்க மாட்டார்.

9 நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல், செயும்நீர
செய்யாது அமைகலா வாறு.

பரோபகாரஞ் செய்யும் நீதியுடையவன் தரித்திரம் அடைதல், செய்யத்தக்க கடமையாகிய ஒப்புரவுகளைச் செய்யப்பெறாமல் வருந்தும் இயல்பாம். (219)

10 ஒப்புரவி னால்வரும் கேடுஎனின், அஃதுஒருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து.

'பரோபகாரத்தால் ஒருவனுக்குக் கேடுவரும்' என்றாலும் அக்கேட்டை ஒருவன் தன்னை விற்றாயினும் வாங்குந் தகுதியுடையதாம். (220)

23—ஈகை

இரந்தவர்க்கு இல்லையென்னுது கொடுத்தல்.

1 வறியார்க்குஒன்று ஈவதே ஈகை; மற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

ஏழைகளுக்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுத்தலே கொடையாகும். மற்றக் கொடைகளெல்லாம் பிரதிபலனை யெதிர்நோக்கிக் கொடுக்குந் தன்மையுடையனவாம். (221)

2 நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று.

'ஒருவரிடத்து ஒன்றை யாசித்துப் பெறுவது நல்வழி' என்பார் உளராயினும் அது குற்றமேயாம். 'மோட்சம் இல்லை' என்று சொல்வார் உளராயினும் கொடுத்தலே சிறந்தது. (222)

3 'இலன்'என்னும் எவ்வம் உரையாமை, ஈதல்,
குலன்உடையான் கண்ணே உள.

'யான் யாதுமற்ற ஏழை' என்ற இழிவான சொல்லைப் பிறரிடத்தில் ஒருவன் சொல்லாமையும், அப்படிச் சொன்னவர்க்கு 'இல்லை' என்று சொல்லாமல் கொடுத்தலும், நற்குடியிற பிறந்தவனிடத்தில் உண்டாயிருக்கும். (223)

4 இன்னது இரக்கப் படுதல், இரந்தவர்
இன்முகங் காணும் அளவு.

ஒரு பொருளை யாசித்தவர் அப்பொருளை யடைந்ததனால் மகிழ்ச்சியுற்ற முகத்தைப் பார்க்கு மட்டும், யாசிக்கப்படுதலும் தன்மையாம். (224)

5 ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

தவவலிமையுடையவர்க்கு வலிமையாவது: தமக்குற்ற பசியைப் பொறுத்துக்கொள்ளலேயாம்! அந்த வலிமையும், உணவளித்து அப் பசியைப் போக்குவோரின் வலிமைக்குப் பிற்பட்டதேயாம்! (225)

6 அற்றார் அழிபசி தீர்த்தல்! அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

வறியவரின் கொடிய பசியைத் தீர்ப்பாளுக! அதுவே பொருள் பெற்ற ஒருவன் பொருளைப் பத்திரமாக வைக்கும் இடமாம். (226)

7 பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

பகுத்து உண்ணுவதற்குப் பழகியவனைப் பசி என்னும் கொடும்பிணி தொடுவது அரிதாகும். (227)

8 ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்? தாம்
வைத்துஇழக்கும் வன்கண் அவர். [உடைமை

பொருளைப் பிறருக்குக் கொடாமற் பாதுகாத்துப் பிறகு அதை இழக்கின்ற இரக்கமற்றவர், வறியவருக்கு விரும்பியதைக் கொடுத்து அவர் மகிழ்வதைக் கண்டு தாமும் மகிழும் அவ் இன்பத்தை அறியமாட்டார் போலும்! (228)

9 இரத்தலின் இன்னாது மன்ற; நிரப்பிய
தாமே தமியர் உணல்.

பொருளைப் பெருக்குவதற்காக, வறியவர்க்குக் கொடாமல், தாமே தனித்து உண்பது: பிறரிடம் சென்று யாசித்தலைக் காட்டிலும் உறுதியாக ஒருவனுக்குத் துன்பந்தரத்தக்கதாம்.

10 சாதலின் இன்னாதது இல்லை; இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை.

சாதல் போல ஒருவனுக்குத் துன்பந்தருவது இல்லை. அத்தகைய சாவும் வறியவர்க்கு ஒன்றைக் கொடுக்க இயலாத விடத்தில் இன்பந்தருவதாகும். (230)

24—புகழ்

அழியாது நிற்கும் கீர்த்தியின் பெருமை.

1 ஈதல், இசைபட வாழ்தல்! அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

வறியவர்க்குக் கொடுக்கக் கடவர்; கொடுத்தலிஞற் புகழுண்டாக வாழக்கடவர்! அந்தப் புகழே அல்லாமல் மக்கள் உயிர்க்கு இலாபம் வேறொன்றுமில்லை (231)

2 உரைப்பார் உரைப்பவை எல்லாம், இரப்பார்க்கு
ஈவார்மேல் நிற்கும் புகழ். [ஒன்று

உலகத்தில் ஒன்றைக் கூறுவார் கூறுவனவெல்லாம், யாசிப்பவருக்கு ஒரு பொருளைக் கொடுப்பவரிடத்தே அழியாது நிலைத்துநிற்கும் கீர்த்தியேயாம்! (232)

3 ஒன்ரு உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்ரூது நிற்பதொன்று இல்.

தனக்கு ஒப்பாக வேறொன்றில்லையாக ஓங்கிய கீர்த்தியேயல்லாமல், உலகத்தில் அழியாமல் நிலைத்து நிற்பது மற்றொன்றில்லை. (233)

4 நிலவரை நீள்புகழ் ஆற்றின், புலவரைப்
போற்றுது புத்தேள் உலகு.

ஒருவன் இப்பூமியின் எல்லையில் அழியாது நிற்கும் புகழைச் செய்வானுனல், தேவருலகம் அப்புகழாளனைப் போற்றுமல்லது தேவர்களைப் போற்றுது. (234)

5 நத்தம்போல் கேடும், உளதுஆகும் சாக்காடும்,
வித்தகர்க்கு அல்லால் அரிது.

புகழுடம்பு பெருகுவதனுல் பூதவுடம்பு கெடுதலும், அந்தப புகழுடம்பே நிலைபெறுவதற்காகப் பூதவுடம்பு அழிதலும், சிறந்த அறிவுடையார்க்கன்றிப் பிறருக்கு இல்லையாம்.

6 தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றுமை நன்று.

மனிதராகப் பிறந்தால் புகழுக்குரிய குணங்களுடன் பிறக்கக் கடவர்; அக் குணமில்லாமற் பிறத்தலைக் காட்டிலும் பிறவாதிருத்தலே நல்லது. (236)

7 புகழ்பட வாழாதார் தம்நோவார்; தம்மை
இகழ்வாரை நோவது எவன்?

புகழுண்டாக வாழ இயலாதவர், தம்மைத் தாமே நொந்து கொள்ளாதவராய்த் தம்மை யிகழ்பவரைக் குறித்து வருந்துவது என்? (237)

8 வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின்.

'புகழ்' என்கின்ற பெரும்பேற்றை பெறாவிட்டால், உலகத்தார்க்கெல்லாம் அதுவே 'இகழ்ச்சி' என்று அறிவுடையோர் சொல்வார். (238)

9 வசைஇலா வண்பயன் குன்றும்; இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம்.

'புகழ்' இல்லாத உடம்பைச் சுமந்த நிலத்தில், குற்றமற்ற வளப்பத்தையுடைய வீளைபயன் குறையும். (239)

10 வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

பழியுண்டாகாமல் வாழ்பவரே உயிர் வாழ்வோர்; புகழ் உண்டாகாமல் வாழ்பவர் இறந்தோராவர். (240)

இல்லறவியல் முற்றும்.

துறவறவியல்

25—அருளுடைமை

எல்லாவுயிர்களிடத்தும் இரக்கம் உடையவராதல்.

1 அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்; பொருட் பூரியார் கண்ணும் உள. [செல்வம்

பொருளால் வருஞ்செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் இருக்கின்றன; ஆதலால், அருளால் வருஞ்செல்வமே செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்த செல்வமாம். (241)

2 நல்லாற்றுன் நாடி அருள்ஆள்க; பல்ஆற்றுல் தேரினும் அஃதே துணை.

நல்வழியிலே நின்று ஆராய்ந்து அருள் உடையவராகக் கடவர்! பற்பல வழிகளிலே நின்று ஆராய்ந்தாலும், உயிர்க்கு உற்றதுணையாவது அவ் அருளுடைமையே அன்றி வேறில்லை.

3 அருள்சேர்ந்த நெஞ்சினுர்க்கு இல்லை; இருள்சேர்ந்த இன்னு உலகம் புகல்.

அருளைப் பொருந்திய மனத்தையுடையவர்க்கு, இருள் நிறைந்த துன்பவுலகத்திற் போய்ப் புகுதல் இல்லை (243)

4 மன்உயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு, இல்என்ப; தன்உயிர் அஞ்சும் வினை.

நிலைபெற்ற உயிர்களைப் பாதுகாத்து அவ்வுயிர்களிடத்தில் அருளுடையவனு யிருப்பவனுக்கு, தன் உயிர் அஞ்சத்தக்க தீவினைகள் உண்டாகா என்று அறிஞர் கூறுவர். (244)

5 அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை; வளிவழங்கு மல்லல்மா ஞாலம் கரி.

அருளுடையவர்களுக்குத் துன்பம் இல்லை; காற்று இயங்குகின்ற வளப்பம் பொருந்திய இப் பெரிய பூமியிலுள்ளார் அதற்குச் சாட்சியாவர்! (245)

6 பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர்; அருள்நீங்கி அல்லவை செய்துஒழுகு வார்.

உயிர்களிடத்து அருளையொழித்துக் கொடுமைகளைச் செய்து வாழ்வோர், உறுதிப் பொருளையிழந்து தம்மையும் மறந்தோராவர் என்று அறிஞர் கூறுவர். (246)

7 அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில் இவ்வுலகம் இல்லாகி யாங்கு. [லார்க்கு

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்தில் இன்பம் இல்லை போல, அருள் இல்லாதவர்க்கு மறுவுலகத்தில் இன்பமில்லை.

8 பொருள்அற்றூர் பூப்பர் ஒருகால்; அருள்அற்றூர் அற்றூர்; மற்று ஆதல் அரிது.

பொருளில்லாதவர் பின்னொருகாலத்தில் செல்வச் சிறப்புடன் விளங்குவர்; ஆனால், அருளில்லாதவரோ அழிந்தவரேயாவர்; ஒருகாலத்திலும் சிறந்து விளங்கமாட்டார். (248)

9 தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றுல், தேரின் அருளாதான் செய்யும் அறம்.

உயிர்களிடத்திற் கருணையில்லாதவன் செய்கின்ற அறத்தை ஆராய்ந்தால், தெளிந்த அறிவில்லாதவன் ஒருகாலத்தில் உண்மைப் பொருளைத் தெரிந்தாற்போன்று, தானே அழிந்து விடும் தன்மையுடையதாம். (249)

10 வலியார்முன் தன்னை நினைக்க; தான் தன்னின் மெலியார்மேல் செல்லும் இடத்து.

தனக்குக் குறைந்த எளியவரிடத்து ஒருவன் அவரை வருத்துதற்குச் செல்லும்பொழுது, அவன் தனக்கு மேம்பட்ட வலிமையுள்ளவர் தன்னை வருத்த வரும்பொழுது தான் அவருக்கு அஞ்சிநிற்கும் நிலையை நினைத்துப் பார்க்கக்கடவன். (250)

26—புலால் மறுத்தல்

மாமிசம் உண்ணுதலை நீக்கல்.

1 தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்?

தன் உடம்பைப் பருக்கச் செய்வதற்காகத் தான் மற்றொரு பிராணியின் மாமிசத்தைத் தின்னுவோன் எங்ஙனம் அருளைக் காப்பாற்ற வல்லவன் ஆவான்? (251)

2 பொருள்ஆட்சி போற்றுதார்க்கு இல்லை; அருள் ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. [ஆட்சி

பொருளினால் பயன் பெறுதல் அப்பொருளைக் காப்பாற்றுத வர்க்கு இல்லை அதுபோல அருளினால் பயன் பெறுதல் மாமிசம் புசிப்பவர்க்கு இல்லை (252)

3 படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது; உடல்சுவை உண்டார் மனம். [ஒன்றன்

பிறிதோர் பிராணியின் உடலைச் சுவையாயுண்பவரின் மனம், கொலைக் கருவியைக் கையிற் பிடித்தவனுடைய மனத்தைப்போல, நன்மைபொருந்திய அருளை நாடாது. (253)

4 அருள், அல்லது யாதெனில்; கொல்லாமை, கோறல் பொருள்அல்லது அவ்ஊன் தினல்.

'அருள்' என்பது எதுவென்றால், ஓர் உயிரையும் கொலை செய்யாமை; 'அருளல்லாதது' என்பது எதுவென்றால், பிற வுயிரைக் கொலை செய்தல்; ஆதலால், பிறவுயிரைக் கொன்று அதன் மாமிசத்தைத் தின்னுதல் அறமல்லாத பாவமாம். (254)

5 உண்ணுமை உள்ளது உயிர்நிலை; ஊன்உண்ண அண்ணுத்தல் செய்யாது அளறு.

உயிர்கள் உடம்புடன் நிற்றல், மாமிசம் தின்னுமையாகிய அறத்தினால் அமைந்தது. ஒருவன் மாமிசந் தின்பானால், அவனை வீழுங்கிய நரகம், பின் அவனை உமிழ்வதற்காக வாய் திறக்காது. (255)

6 தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின், யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

மாமிசத்தைத் தின்னும் பொருட்டு உலகத்தார் பிராணிகளைக் கொல்லாதிருப்பாராஞல், விலைக்கு மாமிசத்தை விற்போரும் இல்லை. (256)

7 உண்ணுமை வேண்டும் புலாஅல்; பிறிதொன்றின்
புண்; அது உணர்வார்ப் பெறின்.

புலால் என்பது வேறோர் பிராணியின் புண். அத்தகைய புலாலின் அசுத்தத்தன்மையை உணர்வாராஞல், புலாலை உண்ணுதிருக்கக் கடவர் (257)

8 செயிரில் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணுர்
உயிரில் தலைப்பிரிந்த ஊன்.

மயக்கமாகிய குற்றத்தினின்று நீங்கிய அறிவினையுடையோர், உயிர் நீங்கிய உடலாகிய மாமிசத்தைத் தின்ஞர் (258)

9 அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின், ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணுமை நன்று.

நெய் முதலிய அவிகளை நெருப்பில் சொரிந்து ஆயிரம் யாகங்களைச் செய்வதைக் காட்டிலும், பிறிதோர் பிராணியின் உயிரைப் போக்கி அவ்வுடம்பைத் தின்ஞதிருத்தல் நன்மையாம்.

10 கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

ஒரு பிராணியையும் கொல்லாதவனைப் புலாலும் உண்ணுதவனை, எல்லாப் பிராணிகளும் கைகூப்பித் தொழும். (260)

27— தவம்

•பொறிகளையடக்கித் துன்பம் பொறுத்துப் பிறர்க்கு நன்மை செய்தல்.

1 உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற்கு உரு.

தம் உயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தலும், தாம் பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யாமையுமாகிய அவ்வளவினதே தவத்தின் வடிவமாம். (261)

2 தவமும் தவமுடையார்க்கு ஆகும்; அவம்அதனை அஃதிலார் மேற்கொள் வது.

முன்னைத் தவம் உடையவர்க்கே தவம் கைகூடும்; ஆதலால் அம் முன்னைத் தவமில்லாதவர் தவத்தைச் செய்யத் தொடங்குதல் வீண் முயற்சியாகும் (262)

3 துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி, மறந்தார்கொல் மற்றை யவர்கள் தவம்?

இல்லறத்திலிருப்பவர், துறவறத்தை மேற்கொண்டவர்க்கு உணவு, உடை முதலியன கொடுத்து உதவுதலே விரும்பிதாம் தவஞ் செய்தலே மறந்தார் போலும்? (263)

4 ஒன்னுர்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும், எண்ணில், தவத்தான் வரும்.

தவத்திற்குப் பகையாய்க் கேடு செய்தாரை அழித்தலும், மகிழ்ந்து உதவினோரை உயரச் செய்தலும் ஆகிய இரண்டும் அளவற்ற தவத்தின் வலிமையாலே முடியும். (264)

5 வேண்டிய வேண்டியாங்கு எய்தலால், செய்தவம் ஈண்டும் முயலப் படும்.

விரும்பியவற்றையெல்லாம் விரும்பியவாறே பெறலாமாதலால், செய்வதற்குரிய தவத்தை இப்பிறப்பில் முயன்று செய்க. (265)

6 தவம்செய்வார் தம்கருமம் செய்வார்;மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு.

தவத்தைச் செய்கின்றவரே தம் கடமையைச் செய்தவராவர்; தவஞ்செய்வோராகாதவர் மற்றையோர் ஆசைக்கடிமையாகி வீண் காரியம் செய்வோராவர் (266)

7 சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும்; துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

புடத்தில் வைத்துத் தீயினுற் சுடச் சுடப் பொன்னுக்கு மாற்றுயர்ந்து ஒளி மிகுவது போல, தவஞ்செய்வோர்க்குத் துன்பம் வருத்த வருத்த வலிமை பெருகி மெய்யறிவு மிகும்.

8 தன்உயிர் தான்அறப் பெற்றானே, ஏனைய
மன்உயிர் எல்லாம் தொழும்.

தவத்தின் வலிமையினால், 'தான்' என்னும் பற்றொழிந்து தன்னுயிரைத் தனக்கே உரிமையாகப் பெற்றவனை, மற்றைய உயிர்களெல்லாம் வணங்கும். (268)

9 கூற்றம் குதித்தலும் கைகூடும்; நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

தவஞ்செய்வதால் வரும் ஆற்றல் முழுதும் பெற்றோர்க்கு யமனையும் வெல்லுதல் முடியும். (269)

10 இலர்பலர் ஆகிய காரணம், நோற்பார்
சிலர்; பலர் நோலா தவர்.

உலகத்தில் வறியர் பலர்; இதற்குக் காரணம் என்னவென்றால், தவஞ்செய்வோர் சிலர்; தவஞ்செய்யாதவர் பலராயிருத்தலேயாம். (270)

28—கூடாவொழுக்கம்

துறவிகள் சிற்றின்பத்தை விரும்பி ஒழுகுதல்.

1 • வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம், பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்.

வஞ்சகம் பொருந்திய மனத்தையுடையவனது கள்ள வொழுக்கத்தை, அவனுடைய உடம்பிற் கலந்து நிற்கிற பஞ்ச பூதங்கள் கண்டு தம்முள்ளே சிரிக்கும். (271)

2 வானுயர் தோற்றம் எவன்செய்யும்? தன்னெஞ்சம் தானறி குற்றப் படின்.

தான் குற்றமென்றறிந்த செய்கையில் தன் மனம் தங்குமா யின், வானம்போல் உயர்ந்துள்ள அவனுடைய தவக்கோலம் என்ன பயனைக் கொடுக்கும்? (272)

3 வலியில் நிலைமையான் வல்லுருவம், பெற்றம் புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

மனத்தைத் தன்வயப்படுத்தும் வலிமையில்லாதவன், வலிமைவாய்ந்த தவக்கோலத்தைத் தாங்கித் திரிதல், பசு புலியின் தோலைப் போர்த்துக்கொண்டு பயிரை மேய்ந்தாற் போன்றதாம். (273)

4 தவம்மறைந்து அல்லவை செய்தல், புதல்மறைந்து வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

தவக்கோலத்தினுல தன்னை மறைத்துக்கொண்டு தீய செயல்களைச் செய்தல், வேடன் புதரினுள் மறைந்துநின்று பறவைகளைப் பிடித்தாற் போன்றதாம. (274)

5 பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம், எற்றெற் [றென்று ஏதம் பலவும் தரும்.

"ஆசைகளையொழித்துவிட்டோம்" என்று சொல்லுவோ ருடைய கள்ளவொழுக்கமானது, பின், "என்செய்தோம்? என்செய்தோம்?" என்று அவர்களே வருந்தும்படியான துயரங் களைக் கொடுக்கும். (275)

6 நெஞ்சில் துறவார், துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின், வன்கணார் இல்.

மனத்தில் ஆசையை விடாமல், ஆசையை விட்டொழித்த வரைப் போல நடித்து, வஞ்சக வாழ்க்கை நடத்துவோரைப் போலக் கொடியவர் வேறு இல்லை. (276)

7 புறங்குன்றி கண்டனைய ரேனும், அகம்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து.

குன்றிமணியின் மேற்புறத்திற் காணப்படும் செம்மை நிறத்தைப் போலத் தவக்கோலத்தால் செம்மை யுடையவர் போலக் காணப்பட்டாலும், மனம், அக் குன்றிமணியின் மூக்குப்போல இருண்டிருக்கும் பொய்த்துறவிகளே இவ்வுலகம் உடையது. (277)

8 மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

தம் மனதில் அழுக்குள்ளதாகவும், தவக்கோலத்தால் மாட்சிமையுடையவர் போல நீருள் மூழ்கி, வஞ்சகமாக வாழ்கின்ற பொய்த்துறவிகள் இவ்வுலகிலே பலராவர். (278)

9 கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.

அம்பு நேராய்த் தோன்றினாலும் கொடியது. யாழ் வளைவாய்த் தோன்றினாலும் இனியது. இவை போலத் தவஞ்செய்வோராயும், கெட்டவர்—நல்லவர் என்பதைக் கோலத்தாற் காணுமல், அவர்களுடைய செய்கையால் அறியக்கடவர். (279)

10 மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

உலகத்தார் பழித்தற்குறிய தீய வொழுக்கத்தை விட்டாராலும், தவஞ்செய்வோருக்குத் தலையை மொட்டை யடித்துக் கொள்ளலும் சடையாக்கிக் கொள்ளலுமாகிய தவக்கோலங்கள் வேண்டுவனவல்ல. (280)

29—கள்ளாமை

பிறர் பொருளைக் கவர நினையாமை.

1 எள்ளாமை வேண்டுவான் என்பான், எனைத்தொன்
கள்ளாமை காக்க; தன் நெஞ்சு. [றும்

பிறர் தன்னை இகழாதபடி வாழவேண்டும் என்று நினைப்பவன், யாதொரு பொருளையும் பிறரை ஏமாற்றி எடுத்துக் கொள்ள விரும்பாதவிதத்தில் தன மனதைக் காக்கக் கடவன.

2 உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

தீச் செயல்களை மனத்தால் நினைத்தலும் குற்றமாகும் ஆதலால், பிறனுடைய பொருளை, "அவன் அறியாதபடி வஞ்சித்து எடுத்துகொள்வோம்" என்று நினையாதிருக்கக் கடவர். (282)

3 களவினால் ஆகிய ஆக்கம், அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

களவு செய்தலினால் உண்டாகிய பொருளானது, எல்லையில்லாமல் வளர்வது போலத் தோன்றிப் பின் அழியும். (283)

4 களவின்கண் கன்றிய காதல், விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

பிறர் பொருளைக் களவு செய்தலில் ஒருவன் கொளலும் மிகுந்த ஆசையானது, முதலில் இன்பம் போலத் தோன்றினாலும், இறுதியிற் பயனையளிக்கும்பொழுது அழியாத் துன்பத்தையே கொடுக்கும். (284)

5 அருள்கருதி அன்புடைய ராதல், பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

அருளின் பெருமையை யுணர்ந்து அன்புள்ளவராக வாழ்தல், பிறர் பொருளைக் கவரக் கருதி அவர் சோர்ந்திருத்தலை எதிர்பார்த்திருப்போருக்கு இயலாது. (285)

6 அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண் கன்றிய காத லவர்.

களவு செய்வதில் மிகுந்த ஆசையுடையவர், பிற உயிர் களுக்கு அன்புசெய்தலாகிய அருள் நெறியில் நிலையாக நின்று வாழமாட்டார். (286)

7 களவென்னும் காரறி வாண்மை, அளவென்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல்.

களவென்று சொல்லப்படுகின்ற மயக்க அறிவுடைமை பிறவுயிர்களோ நன்குணர்ந்து வாழ்தலாகிய பெருமையுடையவர் களிடம் இல்லையாம். (287)

8 அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும் களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

களவையே பழகித்தேர்ந்தவனின் நெஞ்சில் உண்டாகும் வஞ்சகம், உயிர்களின் அருமை பெருமைகளே அறிந்துணர்ந்த வரின் நெஞ்சில் பிறக்கும் அறத்தைப்போல நிலைத்து நிற்கும்.

9 அளவல்ல செய்தாங்கே வீவர்; களவல்ல மற்றைய தேற்ரு தவர்.

களவு செய்தலேயன்றிப் பிறவற்றை அறியாதவர், உயிர் களுக்குத் தீமைகளே அளவின்றிச் செய்ய நினைத்து அப்போதே கெட்டொழிவார். (289)

10 கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை; கள்ளார்க்குத் தள்ளாது புத்தேள் உலகு.

களவைப் பழகினவர்க்கு, உடம்பு, "இவனைச்சுமந்து இருக்கின்றோமே" என்று அருவருப்பு அடையும். களவு செய்யாதிருப்போரைத் தேவலோகம் வரவேற்கத் தவறுது.

30—வாய்மை

மெய்யின் தன்மை.

1 வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்.

"சத்தியம்" என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவினால், அது மற்றோர் உயிர்க்குத் தீங்கு சிறிதும் தராத சொற்களைச் சொல்லுதலாம். (291)

2 பொய்ம்மையும் வாய்மை இடத்த; புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்.

பொய்யான சொற்களும் குற்றமில்லாத நன்மையைப் பிறர்க்குத் தருமானால், அவை மெய்யான சொற்களேயாம். (292)

3 தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

ஒருவன் தன்மனம் நன்கு அறிந்த (பிறர் அறியாதென்று) பொய் சொல்லாதிருப்பானாக! அவ்வித மபொய்சொல்வானானால், அந்தப் பொய்யை உணர்ந்த அவன் மனமே அவனைத் தின்று தீர்த்தும். (293)

4 உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்.

ஒருவன் தன் மனத்திற்கு ஏற்கப் பொய் பேசாமல் வாழ்ந்தால், அவன் உலகத்திலுள்ளோர் எல்லோருடைய உள்ளங்களிலும் இருப்பான். (294)

5 மனத்தொடு வாய்மை மொழியில், தவத்தொடு தானம் செய் வாரில் தலை.

ஒருவன் தன் மனத்திற்கு ஏற்க உண்மை சொல்வானானால், அவன், தவம்-தானம் இரண்டும் செய்வோரைக் காட்டிலும் சிறந்தவனாவான். (295)

6 பொய்யாமை அன்ன புகழில்லை; எய்யாமை எல்லா அறமும் தரும்.

ஒருவனுக்குப் பொய் பேசாதிருத்தலைப் போன்ற புகழ் வேறில்லை. அப் பொய்யாமை யொன்றே சிறிதும் வருத்தமின்றி அவனுக்கு எல்லா அறங்களையும் கொடுக்கும். (296)

7 பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று.

ஒருவன் பொய் பேசாதிருத்தலாகிய அறம் ஒன்றை உறுதியாக மேற்கொண்டு வாழ வல்லவனானால், அவன் பிற அறங்களைச் செய்யாதிருந்தாலும் நல்லது. (297)

8 புறம்தூய்மை நீரான் அமையும்; அகம்தூய்மை வாய்மையால் காணப் படும்.

ஒருவனுக்கு உடம்பின் பரிசுத்தம் நீரினால் ஏற்படும்; அதுபோல, உள்ளத்தின் பரிசுத்தம் உண்மை பேசுவதாலேயே ஏற்படும் (298)

9 எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு.

புறவிருளைப்போக்கும் விளக்குகளெல்லாம் விளக்குகள் ஆகா அறிவுமிக்க பெரியோர்க்கு, மனவிருளைப் போக்குகின்ற பொய்பேசாமையாகிய விளக்கே விளக்காம் (299)

10 யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை; எனைத்தொன் [றும் வாய்மையின் நல்ல பிற.

நாம் மெய்நூல்களாக அறிந்த நூல்களில், மெய் பேசுவதைக்காட்டிலும் எவ்வகையாலும் சிறந்தனவாகக் கூறப்பட்ட அறங்கள் வேறு இல்லை. (300)

31—வெகுளாமை

கோபம் கொள்ளாதிருத்தல்.

1 செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான்; அல்லி
காக்கின்என்? காவாக்கால் என்? [டத்துக்

தன் கோபம் பலிக்குமிடத்தும் கோபம் எழாமல் காப்பவனே கோபத்தைக் காப்பவனுவான். அது பலிக்காதவிடத்தில் கோபத்தைக் காத்தாலென்ன? காக்காவிட்டால் என்ன?

2 செல்லா இடத்துச் சினம்தீது; செல்இடத்தும்
இல்அதனில் தீய பிற.

தன் கோபமானது பலிக்காத இடத்தில் (தன்னைக்காட்டிலும் வலியவரிடத்தில்) கோபங்கொள்வது தனக்கே தீமையைத் தரும். கோபமானது பலிக்கும் இடத்திலும் (தன்னைக்காட்டிலும் எளியவரிடத்தில்) அக கோபத்தைக் காட்டுவதை விட தீயவை வேறில்லையாம் (302)

3 மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனுல் வரும்.

தன்னைக்காட்டிலும உயர்ந்தவர், தாழ்ந்தவர், தனக்குச சமமானவராகிய எவரிடத்திலும கோபங்கொள்ளாதிருப்பாஞக! ஏனென்றல், தீமைகளெல்லாம் அந்தக் கோபத்தினின்றே பிறக்கும். (303)

4 நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

முகமலர்ச்சியையும் அக மகிழ்ச்சியையும் கொல்லும கோபத்தைக் காட்டிலும ஒருவனுக்குக் கொடிய பகைகள் வேறுண்டோ? இல்லை. (304)

5 தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

துன்பம் யாதொன்றும கோரிடாமல் ஒருவன் தன்னைத் தானே காத்துகொள்ள நினைத்தால், அவன் தன் மனதில் கோபம் வசாமல் காக்கக் கடவன் காக்கா விட்டால், அக் கோபமானது அவனையே அழித்து விடும். (305)

6 சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி, இனமென்
ஏமப் புணையைச் சுடும். [னும்

கோபம் என்னும் சேர்ந்தாரையழிக்கும் தீ, கோபங் கொண்டவனே மட்டுமன்றி, அவனுக்குத் துணையாய் நின்று பாதுகாக்கின்ற மரக்கலம் போன்றவரையும் சுட்டெரிக்கும் (306)

7 சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு,
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

தன் வல்லமையைக் காட்டுவதற்காகக் கோபத்தைத் துணைமாகக் கொண்டவன் கெடுதல், தரையில் அடித்தவனுடைய கை தரையில் படுதல் தவறுதது போலத் தவறமாட்டாது (307)

8 இணரெரி தோய்வன்ன இன்ன செயினும்,
புணரின் வெகுளாமை நன்று.

பலசுடர்களையுடைய கொருப்பு தன் மீது படிந்தாற் போன்ற துன்பந்தருஞ் செயல்களை ஒருவன் செய்தாலுயினும், இயலுமானால், அவன மீது கோபங் கொள்ளாதிருத்தல் நல்லதாம் (308)

9 உள்ளிய எல்லாம் உடனெய்தும்; உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின்.

தன்மனத்தால் கோபத்தையே ஒருபோதும் ஒருவன் நினையானுனால், அவன் நினைத்த நன்மைகளையெல்லாம் ஒருமிக்கப் பெறுவான். (309)

10 இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

அளவுகடந்த கோபமுடையார் செத்தவரை யொப்பர் கோபத்தை விட்டவர் ஆசைகளை விட்டொழித்த பெரியோரை யொப்பர். (310)

32—இன்ன செய்யாமை

பிறவுயிருக்குத் துன்பம் செய்யாதிருத்தல்.

1 சிறப்பீனும் செல்வம் பெறினும், பிறர்க்கின்ன செய்யாமை மாசற்றார் கோள்.

மேன்மையைத் தருகின்ற செல்வம் கிடைப்பதாயிருந்தாலும், பிறருக்குத் துன்பந்தருஞ் செயல்களைச் செய்யாதிருத்தல், மன்றாய்மையுடைய பெரியோர்களின் கொள்கையாம். (311)

2 கறுத்தின்ன செய்தவக் கண்ணும், மறுத்தின்ன செய்யாமை மாசற்றார் கோள்.

தன்மீது வைரங்கொண்டு ஒருவன் துன்பந்தருவனவற்றைச் செய்தாலும், மீண்டும், தாம் அவனுக்குத் துன்பந்தருவனவற்றைச் செய்யாதிருத்தலே குற்றமற்ற பெரியோர்களின் கொள்கையாம். (312)

3 செய்யாமல் செற்றார்க்கும் இன்னுத செய்தபின் உய்யா விழுமம் தரும்.

தான் முன் ஒரு துன்பமும் செய்யாதிருக்கத் தனக்குத் துன்பம் செய்தவருக்கு ஒருவன் துன்பத்தைச் செய்தால் அச்செய்கை கடக்க முடியாத துயரத்தை அவனுக்குக் கொடுக்கும். (313)

4 இன்னுசெய் தாரை ஒறுத்தல், அவர்நாண நன்னயம் செய்து விடல்.

தனக்குத் துன்பம் செய்தவர்களைத் தண்டிக்கும் வழி எது வென்றால், அவர்களே வெட்கமுறும்படி அவருக்கு இனிய நன்மைகளைச் செய்து, அவர் செய்த தீமையை மறந்து விடுதலாம். (314)

5 அறிவினுன் ஆகுவ துண்டோ? பிறிதின்நோய் தம்நோய்போல் போற்றாக் கடை.

வேறோர் உயிர்க்கு வந்த துன்பத்தை தமக்கு வந்த துன்பம் போல நினைத்துக் காப்பாற்றாவிட்டால், தாம் பெற்ற அறிவினால் ஆகும் பயன் உண்டோ? இல்லை. (315)

6 இன்ன எனத்தான் உணர்ந்தவை, துன்னுமை வேண்டும் பிறன்கண் செயல்.

''துன்பந்தருபவை'' என்று தன் மனத்தினால் அறிந்து உணர்ந்தவற்றைப் பிறனொருவனிடத்துச் செய்வதை விட்டுவிட வேண்டும். (316)

7 எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும் மாணசெய் யாமை தலை.

எவ்வளவு சிறிதாயினும், எக் காலத்திலும்; எவரிடத்திலும், தன் மன மறிந்த தீச்செயல்களைச் செய்யாதிருத்தலே முதன்மை யான அறமாகும். (317)

8 தன்னுயிர்க் கின்னுமை தானறிவான், என்கொலோ மன்னுயிர்க் கின்ன செயல்?

பிறர் செய்யும் தீச் செயல்கள், தன் உயிர்க்குத் துன்பந் தருபவை என்று அநுபவித் தறிந்தவன், நிலைபெற்ற பிற உயிர்களுக்குத் துன்பந் தருவனவற்றைச் செய்தல், என்ன காரணம் பற்றியோ? (318)

9 பிறர்க்கின்ன முற்பகல் செய்யின், தமக்கின்ன பிற்பகல் தாமே வரும்.

பிறருக்குத் துன்பம் தருவனவற்றை முற்பகலிற் செய்தால், அன்று பிற்பகலிலேயே, பல துன்பங்கள் தாமாகவே செய்தவருக்கு வந்து சேரும். (319)

10 நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்; நோய் நோயின்மை வேண்டு பவர். [செய்யார்

துன்பங்களெல்லாம் பிறவுயிர்க்குத் துன்பம் செய்தவர்க்கே உண்டாகும். ஆகவே, துன்பமின்றி வாழ விரும்புவோர் பிறவுயிர்க்குத் துன்பஞ் செய்யாதிருக்கக் கடவர். (320)

33—கொல்லாமை

எந்த உயிரையும் கொல்லாதிருத்தல்

1 அறவினை யாதெனில், கொல்லாமை; கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

அறமாகிய செய்கை எதுவென்றால், எந்த உயிரையும் கொல்லாதிருத்தலே யாம். கொல்லுதல் பாவங்களையெல்லாங் கொடுக்கும். (321)

2 பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

கிடைத்தவற்றைப் பகித்தவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தானும் உண்டு உயிர்கள் பலவற்றைப் பாதுகாத்தலே, அறநூலார் தொகுத்துக் கூறிய அறங்கள் அனைத்திலும் முதன்மையான அறமாம். (322)

3 ஒன்றுக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

தனக்கு வேறொன்றும் ஈடு இணையில்லாத கொல்லாமையே முதல் அறமாம். அதற்கு அடுத்தபடியாகச் சிறந்தது பொய்யாமை. (323)

4 நல்லாறு எனப்படுவது யாதெனின்; யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

இம்மைக்கும் மறுமைக்கும் நல்வழி யென்று சொல்லப்படுவது யாதென்றால், எந்த ஒருயிரையும் கொல்லாமையாகிய அறவழி யென்னும் நல்வழியே யாம் (324)

5 நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம், கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

பிறப்பு நிலையை அஞ்சித் துறந்தவர் எல்லாருள்ளும், கொலைப் பாவத்தை யஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தைக் கைக்கொண்டவனே சிறந்தவனாவான். (325)

6 கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்
செல்லாது உயிருண்ணும் கூற்று. [நாள்மேல்

கொல்லாமையாகிய அறத்தை விரதமாகக் கொண்டு வாழ்கின்றவனின் வாழ்நாளின் மீது, எவ்வுயிரையுங்கவரும் யமனும் செல்ல மாட்டான். (326)

7 தன்னுயிர் நீப்பினும் செய்யற்க; தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

தான் வேறொரு பிராணியின் இனிய உயிரை நீக்கும் செய்கையைச் செய்யா விடத்துத் தன் உயிரையே விட நேர்ந்தாலும், அதைச் செய்தலாகாது (327)

8 நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும், சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

கொலையினால் இன்பம் மிகுவதாகிய செல்வம் பெருகும் என்று சொன்னாலும், சான்றோர்க்குக் கொலையினால் அடையும் செல்வம் மிக மிக இழிவுடையதாகும் (328)

9 கொலைவினையர் ஆகிய மாக்கள், புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

கொலைத் தொழிலையுடையவராகிய மக்கள், கொலைத் தொழிலின் இழிவை உணர்ந்தவரின் மனத்தில் புலைத் தொழிலினராகவே தோற்றுவர். (329)

10 உயிருடம்பின் நீக்கியார் என்ப; செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

பொறுக்கமுடியாத நோயோடு கூடிய உடலுடன் வறுமை நிறைந்து இழிதொழில் செய்யும் வாழ்க்கையும் உடையோர், முன்பு பல உயிர்களை அவற்றின் உடலினின்று நீக்குதலாகிய கொலைசெய்தவர் என்று அறிந்தோர் கூறுவர். (330)

34—நிலையாமை

தோற்றமுடைய பொருள்களின் நிலையின்மை.

1 நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

நிலையில்லாது அழியும் பொருள்களை நிலையாக நிற்பவை என்று நினைக்கின்ற சிற்றறிவுடையவராயிருத்தல் இழிவுடைமை யாகும். (331)

2 கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்;
போக்கும் அதுவிளிந் தற்று.

ஒருவனுக்குப் பெரிய செல்வம் சேர்வது கூத்தாடுமிடத்தில் கூட்டம் வந்து சேர்வதை யொக்கும். அச் செல்வம் அவரை விட்டு நீங்குதலும் கூத்து முடிந்தவுடனே கூட்டம் கலைந்து விடுவதை யொக்கும். (332)

3 அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

செல்வமானது நிலையில்லாத தன்மையுடையது அச்செல் வத்தைப் பெற்றால், அப்பொழுதே செய்யத்தகுந்த நிலையான அறங்களைச் செய்யக்கடவன். (333)

4 நாளென ஒன்றுபோல் காட்டி, உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்.

உண்மையை ஆராய்ந்துணர வல்லவர்க்கு, 'நாள்' ஒரு கால அளவைப் போலகாட்டி உயிரை இடைவிடாது அறுக் கின்ற 'வாள்' ஆகும். (334)

5 நாச்செற்று விக்குள்மேல் வாராமுன், நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

பேச வொட்டாமல் நாவை அடக்கி விக்கல் எழுவதற்கு முன்னமே, நல்ல அறச் செய்கைகளை விரைவாகச் செய்ய வேண்டும். (335)

6 நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

நேற்று இருந்த ஒருவன் இன்று மறைந்தான் என்று கூறத்தகுந்த நிலையாமையாகிய பெருமையுடையது இந்த உலகம். (336)

7 ஒருபொழுதும் வாழ்வது அறியார்; கருதுப
கோடியும் அல்ல பல.

அறிவில்லாதவர் ஒரு கணநேரம்கூடத் தம் உயிரும் உடலுங்கூடி இருத்தலை ஆராய்ந்து உணராமாட்டார்; ஆனாலும், ஒரு கோடி அல்ல, அநேக கோடி வீண் எண்ணங்களை எண்ணுவார்கள். (337)

8 குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே;
உடம்போடு உயிரிடை நட்பு.

உடம்புக்கும் உயிருக்குமுள்ள தொடர்பானது: மூட்டையானது தனியே கிடக்க, அதனுள்ளிருந்த பறவை, பருவம் வந்ததும் பறந்தோடிப் போவதைப் போன்றது (338)

9 உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

ஒருவனுக்கு மரணம் வருவது உறக்கம் வருவது போன்றதாம். பின் பிறப்பு வருவது உறங்கிவிழிப்பது போன்றதாம்.

10 புக்கில் அமைந்தின்று கொல்லோ? உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

நோய்களின் உறைவிடமாகிய உடம்பில் ஒதுக்குக்குடியாய் வாழ்ந்த உயிருக்கு, என்றைக்கும் நிலையாயிருக்கக் கூடிய வீடு இதுவரை அகப்படவில்லை போலும்! (340)

35—துறவு

ஆசைகளை அறவே ஒழித்தல்

1 யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

ஒருவன் எந்தப்பொருளிலிருந்து, எந்தப்பொருளிலிருந்தெல்லாம் ஆசையை விட்டொழித்தானோ, அவன் அந்தந்தப் பொருளினால் ஏற்படும் துயரம் அடைவதில்லை. (341)

2 வேண்டின்உண் டாகத் துறக்க; துறந்தபின்
ஈண்டு இயற் பால பல.

இன்ப நிலையை (மோட்சத்தை) விரும்பினால், எல்லாச் செல்வங்களையும் பெற்றிருக்கின்ற பொழுதே, அவைகளைத் துறக்கக் கடவன். அப்படித் துறந்தபின் அவன் இவ்வுலகில் அடையத்தக்க நன்மைகள் பலவாம். (342)

3 அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல்வேண்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. [டும்

வீடு அடைய முயல்வோர் ஓசை முதலிய ஐம்புல ஆசைகளையும் ஒழித்தல் வேண்டும் அந்நிலையை அடைவதற்காகத் தாம் அடைந்த பொருள்களையெல்லாம் ஒருமிக்க விட வேண்டும். (343)

4 இயல்பாகும் நோன்பிற்கு ஒன்று இன்மை; உடை
மயலாகும் மற்றும் பெயர்த்து. [மை

தவஞ்செய்வார்க்குத் தாம் பற்றுவைக்கும் ஒரு பொருளும் இல்லாதிருத்தலே இயல்பாகும். பற்று ஒன்று இருந்தாலும், மீண்டும் மயக்கமடைவதற்கே காரணமாகும் (344)

5 மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்? பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை.

பிறவியை நீக்கும் முயற்சியை மேற்கொண்டவருக்கு உடம்பும் அதிகமாகும். ஆதலால், மேலும் வேறு பொருள்களின் மேல் தொடர்பு கொள்ளுதல் என்னத்துக்கோ? (345)

6 யான், எனது என்னும் செருக்கறுப்பான், வானோர்
உயர்ந்த உலகம் புகும். [க்கு

தானல்லாத உடம்பை "யான்" என்றும், தன்னோடு தொடர்பு இல்லாத பொருளை "எனது" என்றும் நினைக்கும் மயக்கத்தை யொழித்தவன், தேவர்க்கும் மேற்பட்ட சிறந்த உலகத்தை அடைவான். (346)

7 பற்றி விடாஅ இடும்பைகள்; பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

'யான்' 'எனது' என்னும் இருவகைப் பற்றுக்களையும் இறுகப் பற்றிக் கொண்டு விடாதவரைப் பிறவித் துன்பங்களும் பற்றிக்கொண்டு விடாவாம். (347)

8 தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

முற்றத் துறந்தவரே முத்தியை அடைந்தோராவர். துறவாதவர் மதிமருண்டு பிறவி வலையிலகப்பட்டோராவர் (348)

9 பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்; மற்று,
நிலையாமை காணப் படும்.

இருவகைப் பற்றுக்களையும் அற்ற பொழுதே பிறவி வேரறும். பற்று அறாத பொழுதோ, பிறப்பும் இறப்பும் மாறி மாறி வருகிற நிலையாமை ஏற்படும். (349)

10 பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பற்றற்றவனுடைய கடவுள்மேல் அன்பைப் பற்றிக் கொள்க! விடாமல் தொடர்ந்து வருகின்ற பற்றுக்களை யொழிப்பதற்குக் கடவுட் பற்றை இறுகப் பற்றிக் கொள்க! (350)

36—மெய்யுணர்தல்

பிறப்பு, வீடு இவற்றின் உண்மைகளையுணர்தல்

1 பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானும் மாணாப் பிறப்பு.

மெய்யபொருள் அல்லாதவறறை மெய்ப்பொருள்கள் என்று அறிகின்ற மயக்க அறிவின் காரணமாக, பெருமை இல்லாத பிறப்புண்டாகும். (351)

2 இருள்நீங்கி இன்பம் பயக்கும்; மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

அஞ்ஞானத்தினின்றும் நீங்கிக் குற்றமற்ற மெய்யறிவுடையவர்களுக்கு, அம் மெய்யறிவானது பிறப்பை நீக்கச் செய்து பேரின்ப நிலையைத் தரும். (352)

3 ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு, வையத்தின்
வானம் நணியது உடைத்து.

சந்தேகத்தினின்று நீங்கி மெய் உணர்ந்தவர்க்கு, அவர்கள் அடையப் பெற்றுள்ள மண்ணுலகதனைக் காட்டிலும், அடையக் கடவதாகிய மேலுலகம் அருகிலுள்ளதாம். (353)

4 ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே;
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களின் வழிச்செல்லும் ஐவகை உணர்ச்சிகளையும் அடக்கித் தம்வயப் படுத்திய பொழுதும், மெய்யறிவை அடையப் பெறாதவர்க்குப் பயனில்லை. (354)

5 எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

யாதொரு பொருள் யாதோர் இயல்பினதாய்த் தோன்றினாலும், அத்தோற்றத்தில் மயங்கி விடாமல், அப்பொருளின் உண்மையான தன்மையைக் கண்டறிவதே மெய்யுணர்வாம்.

6 கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார், தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

இப் பிறப்பிலேயே கற்க வேண்டியவற்றை யெல்லாம் நன்கு கற்று, உண்மைப் பொருளையுணர்ந்தவர்கள் திரும்பிப் பிறவியினிடத்து வராத வழியை அடைவார்கள். (356)

7 ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

ஒருவனது உள்ளம் உறுதியாக ஆராய்ந்து முதற்பொருளாகிய பரம்பொருளை அறியுமாறால், அவனுக்கு மீண்டும் பிறப்பு உண்டு என்றெண்ண வேண்டியதில்லை (357)

8 பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

பிறவியாகிய துன்பத்திற்குக் காரணமான அறியாமை அழிவதற்கு, பேரின்ப நிலைக்குக் காரணமான பரம்பொருளின் உண்மையைக் கண்டுணர்வதே மெய்யுணர்வாகும். (358)

9 சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின், மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

எல்லாப் பொருளும் வந்து சார்தற் கிடமாகிய பரம் பொருளை உணர்ந்து, இருவகைப் பற்றுக்களும் கெடும்படி நடக்க வல்லவனாயின், முன் சேர்தற்குரியவையாய் எஞ்சிநின்ற துன்பங்களும் வந்தணுகா. (359)

10 காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

விருப்பு, வெறுப்பு, அறியாமை என்ற மூக்குற்றங்களின் பெயரும் அழியுமாறு ஒழுகும் மெய்யறிவுடையவர்க்கு, முன் நிகழ்ந்த துன்பங்களும் மேல்வருந்துன்பங்களும் இல்லை. (360)

37—அவாவறுத்தல்

மெய்யுணர்ந்த பின்னும், பழைய பழக்க வழக்கத்தால் சேரக் கூடிய பற்றினை நீக்கல்

1 அவாவென்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

உயிர்கள் எல்லாவற்றிற்கும், எக்காலத்திலும் இடை விடாது தொடர்கின்ற பிறவித் துன்பத்தை வினாவிக்கும் விதை, "அவா" என்று அறிஞர் கூறுவர். (361)

2 வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது வேண்டாமை வேண்ட வரும்.

ஒருவன் ஒன்றை வேண்டினால், பிறவாதிருத்தலையே வேண்டுவானாக! அப்பிறவாமை, ஆசையை ஒழிக்கத்தானே உண்டாகும (362)

3 வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை யாண்டும் அஃதொப்பது இல்.

ஆசையை ஒழித்தலைப் போன்ற மேலான செல்வம் இவ் வுலகத்தில் இல்லை; வேறு எவ்வுலகத்திலுங்கூட அதைப் போன்ற செல்வம் இல்லை. (363)

4 தூஉய்மை என்பது அவாவின்மை; மற்றது வாஅய்மை வேண்ட வரும்.

"பேரின்பநிலை" என்று சொல்லப்படுவது ஆசையில்லா மையாம். அவ் ஆசையில்லாமை, மெய்ம்மையை விரும்பு வதால், தானே உண்டாம் (364)

5 அற்றவர் என்பார் அவாவற்றார்; மற்றையார் அற்றாக அற்றது இலர்.

'பிறவியற்றவர்' என்று சொல்லப்படுவோர், ஆசையற்ற வரே யாவர் ஆசையறாத மற்றவர் சில துன்பங்களற்றவரன்றிப் பிறவியற்றவர் ஆகார். (365)

6 அஞ்சுவ தோரும் அறனே; ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.

பேரின்ப நிலையை எய்துதற்குரிய ஒருவனைச் சமயம் பார்த்துக் கெடுத்தொழிப்பது ஆசையே! ஆதலால் அவ் வாசையை அச்சத்தோடு காப்பாற்றுவதே துறவறமாம் (366)

7 அவாவினை ஆற்ற அறுப்பின், தவாவினை
தான்வேண்டு மாற்றுன் வரும்.

ஒருவன் ஆசையை அஞ்சி முழுதும் ஒழித்தால், கேடின்றி வாழ்வதற்குரிய வழி அவன் விரும்பியவாறே உண்டாகும் (367)

8 அவாவில்லார்க்கு இல்லாகும் துன்பம்; அ∴துண்
டவாஅது மேன்மேல் வரும். [டேல்

ஆசையில்லாதவர்க்கு வரக்கடவதாகிய துன்பம் ஒன்றும் இல்லையாம். ஆசையுண்டாயின் எல்லாத் துன்பங்களும் மேலும் மேலும் முடிவில்லாமல் உண்டாகும். (368)

9 இன்பம் இடையரு தீண்டும்; அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

ஆசை என்னும் துன்பங்களிலெல்லாம் மிக்க துன்பம் ஒருவனுக்கு ஒழிந்துபோனால், இவ்வுலகத்திலேயே அவனுக்கு இடைவிடாத இன்பம் கிட்டும். (369)

10 ஆரா இயற்கை அவாநீப்பின், அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

ஒருபோதும் நிரம்பாத இயல்பையுடைய அவாவை ஒருவன் ஒழிப்பானானால், அவனுக்கு அப்பொழுதே என்றும் மாறு இன்ப நிலையை அந்த அவாவின்மை கொடுக்கும்.(370)

ஊழியல்

38—ஊழ்

வினைப் பயன்களை அனுபவிக்கும் முறைமை

1 ஆகூழால் தோன்றும் அசைவின்மை, கைப்பொருள் போகூழால் தோன்றும் மடி.

ஒருவனுக்குக் கைப்பொருள் பெருவதற்குக் காரணமான ஊழினால் முயற்சி உண்டாகும்; அப்பொருள் அழிவதற்குக் காரணமான ஊழினால் சோம்பல் உண்டாகும். (371)

2 பேதைப் படுக்கும் இழவூழ்; அறிவகற்றும் ஆகலூழ் உற்றக் கடை.

கைப்பொருள் அழிவதற்குக் காரணமான ஊழ், அறிவைப் பேதைமையாக்கும்; அப்பொருள் பெருகுவதற்குக் காரணமான ஊழ் வந்தவிடத்து, அவ்வறிவைப் பெருகச் செய்யும். (372)

3 நுண்ணிய நூல்பல கற்பினும், மற்றும்தன் உண்மை அறிவே மிகும்.

அறியாமைக்குக் காரணமான ஊழையுடையவன், நுண் பொருள்களையறிவிக்கும் நூல்கள் பலவற்றைக் கற்றாலும், அவ் ஊழினாலாகிய பேதைமையே பெருகும். (373)

4 இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு; தெள்ளியர் ஆதலும் வேறு.

உலகத்தில் ஊழினாலாகிய இயற்கை இரு கூறுகளையுடையது. ஆகவே, செல்வம் உடையவராதலும் வேறு; அறிவுடையவராதலும் வேறாகும். (374)

5 நல்லவை எல்லாம் தீயவாம்; தீயவும் நல்லவாம்; செல்வம் செயற்கு.

செல்வத்தைச் சம்பாதித்தற்கு, ஊழ்வசத்தால் நல்லவையெல்லாம் தீயவையாதலுமுண்டு; தீயவையெல்லாம் நல்லவையாதலுமுண்டு. (375)

6 பரியினும் ஆகாவாம் பாலல்ல; உய்த்துச்
சொரியினும் போகா தம.

ஊழினால் தமக்குரியவை யாகாத பொருள்கள், வருந்திப் பாதுகாத்தாலும் தம்மிடத்தில் நில்லாமற் போய்விடும்; ஊழினால் தமக்குரியவையான பொருள்கள், வலியக்கொண்டுபோய் வெளியே எறிந்தாலும் போகமாட்டா. (376)

7 வகுத்தான் வகுத்த வகையல்லால், கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

கோடிக்கணக்கான செல்வத்தை முயன்று தேடியவர்களாகும்; தெய்வம் வகுத்த வகையாலல்லாமல், அனுபவிக்க இயலாது. (377)

8 துறப்பார்மன் துப்புர வில்லார்; உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

தின்பங்களை அடைவிக்காமல் ஊழ் நீங்குமாயின், அனுபவித்தற்குரிய பொருள்களை இழந்த வறியவர், துறவறத்தை மேற்கொள்வர் (378)

9 நன்றுங்கால் நல்லவாக் காண்பவர், அன்றுங்கால்
அல்லற் படுவது எவன்?

நல்வினைகள் இன்பங்களைத் தரும்பொழுது, அவற்றை நல்லனவென்று கருதி மகிழ்ந்து அனுபவிப்பவர், தீவினையின் பயனான துன்பங்களையும் அப்படிக் கருதி அனுபவியாமல் தினப்படுவது ஏனோ? (379)

10 ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

ஊழைப்போல மிகுந்த வலிமையுடைய பொருள்கள் எவை இருக்கின்றன? ஊழை வீழக்குதற் பொருட்டுப் பலகையாண்டோர் உபாயத்தை ஆராய்ந்தாலும், அங்கும அவ்வூழே முற்பட்டு நிற்கும். (380)

அறத்துப்பால் முற்றும்.

2 பொருட்பால்

39—இறைமாட்சி

அரசின் சிறப்பு

1 படை,குடி, கூழ்,அமைச்சு, நட்புஅரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு.

படை, குடி, பொருள், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறு உறுப்புக்களும் உடையவனே அரசருள் ஆண் சிங்கம் போன்றவனாவான் (381)

2 அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.

அஞ்சாமை, கொடை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இந்த நான்கு குணங்களும் குறைவின்றிப் பெற்றிருத்தல் அரசனுக்கு இயல்பாகும் (382)

3 தூங்காமை, கல்வி, துணிவுடைமை, இம்மூன்றும் நீங்கா நிலன்ஆள் பவற்கு.

காலங்கடத்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை ஆகிய இம்மூன்று குணங்களும் நிலத்தை ஆள்வோனுக்கு என்றென்றும் நீங்கா திருக்க வேண்டியவையாம். (383)

4 அறன்இழுக்காது அல்லவை நீக்கி, மறனிழுக்கா மானம் உடையது அரசு.

அரசனுக்குரிய அறத்தினின்று தவறாமல் நடந்து, அற மல்லாத செயல்களை நாட்டினின்று ஒழித்து, வீரத்திற் சிறிதுங் குறையாத மானத்தையுடையவனே அரசனாவான் (384)

5 இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும், வல்லது அரசு.

பொருள் வருவாய்க்குரிய வழிகளைச் செய்தலும், வந்த பொருளைச் சேர்த்து வைத்தலும், சேர்த்ததைப் பிறர் கவராமற் காத்தலும், காத்தவற்றைத் தக்கவாறு அறநெறிகளிற் செலவு செய்தலிலும் வல்லவனே அரசனாவான். (385)

6 காட்சிக் கெளியன், கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்.

எவர்க்குங் காண்பதற்கு எளியவனும், யாவரிடத்திலும் கடுஞ்சொல் கூறுதவனுமாயிருந்தால், அவ்வரசனது ஆட்சிக்குட் பட்ட நாடு, உலகத்தோராற் புகழப் பெறும். (386)

7 இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொல் தான்கண் டனைத்துஇவ் உலகு. [லால்

இன்சொற் கூறி ஈகை செய்து மக்களைக் காப்பாற்ற வல்ல அரசனுக்கு, இந்த உலகமானது தன் புகழோடு பொருந்தித் தான் நினைத்தபடி விளங்கும். (387)

8 முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப் படும்.

நீதிமுறையாக ஆட்சி செய்து குடிகளைக் காப்பாற்றும் அரசனே "மக்கட்குத் தலைவன்" என்று மதிக்கத்தக்கவனு வான். (388)

9 செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந் தவிகைக்கீழ்த் தங்கும் உலகு. [தன்

குறையை யெடுத்துக் காட்டிப் புத்திபுகட்டும் அறிவுடை யார் சொற்களைச் செவி பொறுத்த அளவிலும், பொறுத்துக் கொள்ளும் நற்குணத்தையுடைய அரசனது குடைநிழலாகிய ஆட்சியிலே, உலகும் நிலைபெற்றின்புறும். (389)

10 கொடை, அளி, செங்கோல், குடிஓம்பல், நான்கும் உடையானும் வேந்தர்க்கு ஒளி.

வேண்டுவார்க்குக் கொடுத்தலும், இன்சொல் சொல்லு தலும், நீதியான ஆட்சியும் தளர்ந்த குடிகளைப் பாதுகாத் தலும் ஆகிய இந்நான்கும் உடையவனே அரசர்க் கெல்லாம் விளக்குப் போன்றவனுவான். (390)

40—கல்வி

கற்றற்குரிய நூல்களைக் கற்றல்

1 கற்றக் கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

ஒருவன் கற்பதற்குத் தகுந்த நூல்களைக் கற்கக் கடவன்; அவ்விதம் கற்றபின், கற்றதற்கு தகுந்தபடி அந்நூல்கள் சொல்கின்ற வழியிலே நிற்கக் கடவன்! (391)

2 எண்ணென்ப; ஏனை எழுத்தென்ப இவ்இரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

அறியாதார் "எண்" என்பார்கள்; "எழுத்து" என்பார்கள்; அறிந்தவரோ, இக் கலைகள் இரண்டும், வாழ்வதற்குரிய மக்களுக்கு "கண்கள்" என்று சொல்வார்கள். (392)

3 கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தார்.

கண்ணுடையவர் என்று உயர்த்திச் சொல்லப்படுபவர் கற்றவரே; கல்லாதவரோ, முகத்தில் இரண்டு புண்களை உடையவரே! (393)

4 உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

எவரும் மகிழும்படி அவருடன் கூடியிருந்து, "இனி இவரை எப்பொழுது காணப்பெறுவோம்?" என்று அவர்கள் நினைத்து வருந்துமாறு பிரிந்து செல்லுதல், கற்றுத் தேர்ந்த புலவர்களின் தொழிலாம். (394)

5 உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்,
கடையரே கல்லா தவர்.

செல்வர் முன்னே வறியவர் நிற்கும் விதம்போல, கற்பிக்கும் ஆசிரியர் முன் பணிந்து நின்று கற்றவரே உயர்ந்தோர். கற்காதவர் இழிந்தோர். (395)

6 தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

மணல் கேணியானது தோண்டியஅளவிற்கு நீர் சுரக்கும். அதுபோல, மக்களுக்குக் கற்ற அளவிற்கு அறிவு சுரக்கும்.

7 யாதானும் நாடாமால்; ஊராமால்; என்ஒருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும் போலவே, மற்றெந்த நாடும் நாடாம்; மற்றெந்த ஊரும் ஊராம் ஆகலே, ஒருவன் தான் சாகும்வரை கல்லாமல் காலங் கழிப்பது என்? (397)

8 ஒருமைக்கண் தான்கற்ற கல்வி; ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஒரு பிறப்பிலே ஒருவன் கற்ற கல்வியானது அவனுக்கு ஏழுவகைப் பிறப்பிலும் தொடர்ந்து சென்று உதவும் பெருமை யுடையதாம். (398)

9 தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

தாம் இன்பம் அடைவதற்குக் காரணமாகிய கல்வியால், உலகமும் இன்பம் அடைவதைக்கண்டு, கற்றுணர்ந்தோர் மேன் மேலும் கற்க விரும்புவார்கள். (399)

10 கேடில் விழுச்செல்வம் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வி ஒன்றே யாம். மற்றைய பொன், மணி முதலியவை செல்வமாகா! (400)

41—கல்லாமை

கல்வி யறிவில்லாதிருத்தலின் இழிவு

1 அரங்கின்றி வட்டாடி யற்றே; நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

அறிவு நிரம்புவதற்கு ஏதுவாகிய நூல்களைக் கற்காமல், ஒருவன் சபையிலே சென்று பேசுதல், 'அரங்கு' (கட்டம்) வரையாமல் சூது ஆடினாற் போலும். (401)

2 கல்லாதான் சொற்கா முறுதல், முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

கல்லாதவன் ஒருவன், சபையினிடத்துச் சென்று ஒன்றைப் பேச விரும்புதல், இயல்பாகவே இரண்டு முலைகளும் இல்லாத ஒருத்தி பெண்தன்மையை விரும்பினாற் போன்றதாம் (402)

3 கல்லா தவரும் நனிநல்லர்; கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

படிக்காதவரும் மிக நல்லவரேயாவர்; கற்றோரது சபையில் ஒன்றையும் சொல்லாமல் இருந்தால் போதும!. (403)

4 கல்லாதான் ஒட்பம் கழியநன் ருயினும்
கொள்ளார் அறிவுடை யார்.

கல்லாதவனுடைய அறிவுக்கூர்மை ஒவ்வொரு சமயத்தில் மிக நன்ருயிருப்பினும், அறிவுடையோர் அதனை அறிவுடைமையாகக் கருதமாட்டார். (404)

5 கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

கல்லாத ஒருவன் "நான் அறிவுடையேன்" என்று தன்னைத்தான் மதித்துக் கொள்ளும் மதிப்பானது, கற்றவருடன் அவன் கூடிப் பேசும் பேச்சினால் கெடும். (405)

6 உளரென்னும் மாத்திரையர் அல்லால், பயவாக்
களரனையர் கல்லா தவர்.

கல்லாதவர் "உயிரோடிருக்கின்றனர்" என்று சிலர் சொல்லும் அளவினரே அல்லாமல், தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையினால் யாதும் விளையாத களர் நிலத்திற்கே ஒப்பாவர் (406)

7 நுண்மாண் நுழைபுலம் இல்லாள் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

நுட்ப முடையதாயும் மாட்சிமையுடையதாயும் பல நூல்களிலும் ஆராய்ந்த அறிவிலாதவனது எழுச்சியான அழகு, மண்ணினால் செய்து சிறப்பாக அலங்கரிக்கப்பெற்ற பாவையைப் போன்றதாகும் (407)

8 நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னதே
கல்லார்கட் பட்ட திரு.

கல்லாதவரிடம் இருக்கும் செல்வமானது கற்றறிந்த நல்லவரிடம் உண்டான வறுமையைக் காட்டிலும் துன்பம் செய்வதாம். (408)

9 மேற்பிறந்தா ராயினும் கல்லாதார்; கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

கல்வியில்லாதவர் உயர்ந்த குடியிற் பிறந்திருந்தும், தாழ்ந்த குடியிற் பிறந்த கற்றாரைப் போன்ற பெருமை இல்லாதவரே யாவர். (409)

10 விலங்கொடு மக்கள் அனையர்; இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

அறிவு விளங்குவதற்குரிய நூல்களைக் கற்றவரோடு, கல்லாதவரை ஒப்பிட, மக்களோடு விலங்குகளுக்குள்ள வேற்றுமையுடையவராவர். (410)

42—கேள்வி

கற்றறிந்தார் கூறக் கேட்டலின் சிறப்பு

1 செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை.

கற்றறிந்தார் சொல்லக் கேட்டறியும் கேள்விச் செல்வம், செல்வங்களில் ஒன்றாகப் போற்றற்குரிய செல்வமாம். மேலும் அக்கேள்விச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலை சிறந்ததாம். (411)

2 செவிக்குஉணவு இல்லாத போழ்து, சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்.

காதுகளுக்கு உணவாகிய 'கேள்வி' இல்லாதபொழுது, உடலைக் காப்பாற்றுவதற்காக வயிற்றுக்கும் சிறிது உணவு கொடுக்கலாகும். (412)

3 செவியுணவிற் கேள்வி யுடையார், அவியுணவின் ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து.

செவியுணவாகிய கேள்வியை உடையவர் இவ்வுலகில் வாழ்பவரெனினும், அவியுணவு கொள்ளும் தேவருக்கு ஒப்பாவார். (413)

4 கற்றிலன் ஆயினும் கேட்க; அஃதொருவற்கு ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

நூல்களைத் தான் கல்லாதவனாயினும், கற்றறிந்தவரிடம் கேட்டறியக் கடவன். அந்தக் கேள்வியானது ஒருவனுக்குத் தளர்ச்சி வந்தவிடத்து ஊன்றுகோல் போலத் தக்க துணையாகும். (414)

5 இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

ஒழுக்கமுள்ள பெரியோரின் வாயிற் பிறக்கும் சொற்கள், வழுக்குதல் பொருந்திய சேற்று நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்று கோலைப் போல, வாழ்க்கையில் உதவும். (415)

6 எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

எவ்வளவு சிறிதாயினும் ஒருவன் நல்ல சொற்களைக் கேட்கக் கடவன்; அவை கேட்ட அந்த அளவிற்கு அவனுக்கு நிறைந்த பெருமையைக் கொடுக்கும். (416)

7 பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்; இழை
நீண்டிய கேள்வி யவர் [த்துணர்ந்து

நுட்பமாய் ஆராய்ந்து, மேலும் நிரம்பிய கேள்வியறிவுடையவர், பொருள்களைத் தாமே தவறாக உணர்ந்திருந்தாலும், பேதைமையானவற்றைக் கூறமாட்டார். (417)

8 கேட்பினும் கேளாத் தகையவே; கேள்வியால்
தோட்கப் படாத செவி.

கேள்வியறிவினால் துளைக்கப்படாத காதுகள், செய்திகளைக் கேட்கும் தன்மையுடையன வெனினும், செவிட்டுத் தன்மையுடையனவே யாம் (418)

9 நுணங்கிய கேள்வியர் அல்லார்; வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

நுட்பமான கேள்வியறிவில்லாதவர், வணக்கமான பேச்சுகளைப் பேசும் வாயுடையவராதல் அரிதாம். (419)

10 செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?

செவியால் அநுபவித்தற்குரிய கேள்விச்சுவையை அறியாமல், வாயால் அனுபவித்தற்குரிய உணவுச் சுவையை அறியும் பேதைகள் இறந்தாலும் வாழ்ந்தாலும் உலகிற்குப் பயன் உண்டோ? இல்லையாம். (420)

43—அறிவுடைமை

கல்வி கேள்வியறிவுடன் உண்மை அறிவும் உடைமை

1 அறிவுஅற்றம் காக்கும் கருவி, செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

அறிவென்பது ஒருவனுக்கு அழிவு வராமற் காக்கும் ஆயுதமாம். அல்லாமலும், எதிர்த்து நிற்கும் பகைவர்க்கும் அழிக்கவியலாத அரணும் ஆகும். (421)

2 சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

மனத்தை அதன் போக்கில் போகவிடாமல், தீமையினின்று, விலக்கி நன்மையைச் செய்வதே அறிவாம். (422)

3 எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

யாதொரு பொருளே யார் யாரிடம் கேட்டாலும், கேட்ட அப்பொருளே ஆராய்ந்து, அதன் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாம். (423)

4 எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்
நுண்பொருள் காண்பது அறிவு. [வாய்

கேட்பவர்க்கு எளிதில் புரியுமாறு மனத்திற் பதியும் வண்ணம் கூறி, பிறர் வாயினின்று வரும் சொற்களின் நுட்பமான பொருளைக் கண்டுணர்வதே அறிவாம். (424)

5 உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.

உயர்ந்தோரை நட்பாக்கிக் கொள்வது ஒளிபொருந்திய அறிவேயாம். அந்நட்பின்கண் மகிழ்ச்சியால் மலர்தலும், துயரத்தால் சுருங்குதலும் இல்லாதது அறிவாம். (425)

6 எவ்வது உறைவ துலகம், உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

உலகமானது எந்த விதத்தில் நடைபெறுகின்றதோ அந்த விதத்தில் உலகத்துடன் பொருந்தி வாழ்வதே அறிவாம்.(426)

7 அறிவுடையார் ஆவது அறிவார்; அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர்.

வரக்கூடியதை முன்னே அறிய வல்லவர் அறிவுடையவர். அவ்விதம் அறிய இயலாதவர் அறிவில்லாதவர் (427)

8 அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

அஞ்சத் தக்கதை அஞ்சாதிருத்தல் அறியாமை. அஞ்சத் தக்கதை அஞ்சுதல் அறிவுடையார் செயல். (428)

9 எதிரதாக் காக்கும் அறிவினூர்க் கில்லை.
அதிர வருவதோர் நோய்.

வரக்கூடிய துன்பத்தை முன்னே அறிந்து காத்துக் கொள்ளும் அறிவுடையவர்க்கு, நடுங்கும்படி வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை. (429)

10 அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

அறிவையுடையவர் வேறொன்றும் இல்லாதவராயிருந்தாலும் எல்லாம் உடையவராவர். அறிவில்லாதவர் எல்லாம் உடைய வராயிருந்தாலும், ஒன்றும் இல்லாதவராவர். (430)

44—குற்றங்கடிதல்

காமம் வெகுளி முதலிய அறுவகைக் குற்றங்களையும் அகற்றுதல்

1 செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

செருக்கு, சினம், காமம், ஆகிய இக்குற்றங்கள் இல்லாத வருடைய பெருவாழ்வு மேண்மைக் குரியதாம். (431)

2 இவறலும், மாண்பிறந்த மானமும், மாணு
உவகையும் ஏதம் இறைக்கு.

உலோபத்தனம், நன்மைக குரியதல்லாத மானம், தகுதி யற்ற மகிழ்ச்சி ஆகிய இவை தலைவனெருவனுக்குக் குற்றங் களாம். (432)

3 தினைத்துணையாங் குற்றம் வரினும், பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

பழிக்கு அஞ்சும் இயல்புடையோர், தினையளவாகிய சிறு குற்றம் தம்மிடத்து நேர்ந்தாலும், அகுற்றத்தைப் பனையளவு பெருங்குற்றமாகக் கருதுவர். (433)

4 குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தருஉம் பகை.

ஒருவனுக்கு அழிவைக் கொடுக்கும் பகை குற்றமேயாம். ஆதலால், அகுற்றம தன்னிடத்து நேராதிருத்தலே குறிக் கோளாகக் கொண்டு காக்கக் கடவன். (434)

5 வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

குற்றம் நேரிடுவதற்கு முன், அக்குற்றம் வராமற் காத் துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன் அகப் பட்ட வைக்கோற்போரைப் போல அழியும். (435)

6 தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு?

தன்னுடைய குற்றத்தை முதலில் நீக்கிக் கொண்டு, பிறகு, பிறருடைய குற்றதனை ஆராய வல்லவனுல், அத்தகைய தலைவனெருவனுக்கு வரும் குற்றமும் உண்டோ? இல்லையாம்.

7 செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.

தனக்குச் செய்து கொள்ளும் நன்மைகளையும் செய்யாமல், உலோபத்தனமுடையவனது செல்வம் பிற்காலத்துக்கு உபயோகமில்லாத வகையில் அழியும். (437)

8 பற்றுள்ளம் என்னும் இவறன்மை, எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று.

பொருளை விடாது பற்றி நிற்கும் உலோபத்தனமாகிய குற்றம், குற்றங்கள் எல்லாவற்றினுள்ளும் ஒன்றுக வைத் தெண்ணத் தகாத மிகப் பெருங்குற்றமாம். (438)

9 வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை.

எக்காலத்திலும் ஒருவன் தன்னை மிக உயர்வாக எண்ணி மதியாதிருக்கக் கடவன். தனக்கு நன்மை தராத செய்கையை ஒருவன் விரும்பாதிருக்கக் கடவன். (439)

10 காதல காதல் அறியாமை; உய்க்கிற்பின்,
ஏதில ஏதிலார் நூல்.

தான் விரும்பிய பொருள்களை, பிறர் தன் விருப்பத்தை யுணர்ந்து கொள்ளாத வகையில், ஒருவன் அனுபவிக்க வல்லவனுல், பகைவர் அவனைக் கெடுத்தற்குச் செய்யும் எத்தகைய சூழ்ச்சிகளும் பலியாவாம். (440)

45—பெரியாரைத் துணைக்கோடல்

பேரறிவுள்ள பெரியோரைத் துணையாகக் கொள்ளுதல்.

1 அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்.

அறத்தின் தன்மையை நன்குணர்ந்து, தன்னிலும் மூத்த அறிவுடையாரது நட்பைத் தகுதியுணர்ந்து ஆராய்ந்தறிந்து கொள்ளக் கடவர். (441)

2 உற்றநோய் நீக்கி உருஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்.

வந்த துனபத்தை நீக்கி, மேலும் துன்பம் வராதபடி முன் காக்க வல்ல தகுதியுடையோரைப் போற்றி நட்புக் கொள்ளக் கடவர். (442)

3 அரியவற்றுள் எல்லாம் அரிதே; பெரியாரைப் பேணித் தமராக் கொளல்.

பெரியோர்கள் மனமுவக்கும்படி நடந்து அவரை நட்புக் குரியவராகக் கொள்ளுதல், அடையத் தக்க அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் அருமையுடையதாம். (443)

4 தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல், வன்மையுள் எல்லாம் தலை.

அறிவு முதலியவற்றால் தம்மைக் காட்டிலும் மிகுந்திருக் கும் பெரியோரைத் தமக்கு உற்றாராகக் கொண்டு அவர் வழி நின்று நடத்தல், வல்லமை யெல்லாவற்றிலும் சிறந்ததாம் (444)

5 சூழ்வார்கண் ணுக ஒழுகலான், மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

தக்க வழிகளை ஆராய்ந்து சொல்லும் அறிஞரைத் துணை யாகக் கொண்டு உலகம் நடைபெறுவதால், அரசர் அத்தகைய ஆராய்ச்சியாளரைத் தேர்ந்தெடுத்து அவருடன் நட்புகொண்டு ஒழுகக் கடவன். (445)

6 தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்.

தகுதிவாய்ந்த பெரியோரின் கூட்டத்திற் சேர்ந்து தானும் ஆராய்ந்து நல்வழி நடக்க வல்ல ஒருவனுக்கு அவனுடைய பகைவர் செய்யத் தக்க துன்பம் யாதும் இல்லையாம். (446)

7 இடிக்கும் துணையாரை ஆள்வாரை, யாரே
கெடுக்கும் தகைமை யவர்?

குற்றம் கண்டவிடத்தில் தினந்து அறிவு புகட்டும் பெரியோரைத் துணையாகக் கொண்டவரைக் கெடுக்கும் தன்மையுடைய பகைவர் இவ்வுலகில் யார்? யாருமில்லை. (447)

8 இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

கண்டித்துப் புத்திமதி கூறக் கூடிய பெரியோரைத் துணையாகப் பெறாத பாதுகாப்பற்ற அரசன் தனக்குப் பகைவரில்லாதிருந்தாலும் அழிந்து போவான். (448)

9 முதல்இலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை.

முதல் இல்லாத வணிகருக்கு இலாபம் இல்லை. அதுபோல, தம்மைத் தாங்கிப் பாதுகாக்கும் பெரியோரின் துணையில்லாதவர்க்கு நிலையான வாழ்வு இல்லை. (449)

10 பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

நல்லோராகிய பெரியோரின தொடர்பைக் கைவிடுதல், பலரோடும் பகைமை கொள்ளுதலைக் காட்டிலும் பன்மடங்கு தீமை உடையதாம். (450)

46—சிற்றினம் சேராமை

அற்பருடைய கூட்டத்தில் சேராதிருத்தல்

1 சிற்றினம் அஞ்சும் பெருமை; சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

பெரியோரின் இயல்பு அற்பர் கூட்டத்திற்கு அஞ்சி விலகும். சிறியோரின் இயல்பு அவ் அற்பரையே உறவாகக் கருதித் தழுவிக் கொள்ளும். (451)

2 நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.

நீரானது தான் சேர்ந்த நிலத்தினது இயல்பினால், தன் தன்மை மாறிச் சேர்ந்த நிலத்தின் தன்மையுடையதாகும். அதுபோல, மனிதர்க்கு அறிவும் தாம் சேர்ந்துள்ள இனத்தின் இயல்பையுடையதாகும். (452)

3 மனத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தானும்
இன்னன் எனப்படும் சொல்.

மனிதர்க்கு இயற்கையறிவு மனத்தின் காரணமாய் ஏற்படும். "இவன் இப்படிப் பட்டவன்" என்று உலகத்தார் சொல்லுஞ்சொல், சேர்ந்துள்ள இனத்தின் காரணமாய் ஏற்படும்.

4 மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு.

ஒருவனுக்கு அறிவானது மனத்தில் உண்டாவதுபோலக் காட்டி, உண்மையாய் நோக்குமிடத்து அவன் சார்ந்துள்ள இனத்தினிடத்தில் உண்டாகும். (454)

5 மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

மனம் பரிசுத்தமாதலும், செயல் பரிசுத்தமாதலும் ஆகிய இவ்விரண்டும் சேர்ந்த இனத்தின் பரிசுத்தத் தன்மையால் ஏற்படும். (455)

6 மனந்தூயார்க்கு எச்சம் நன்றாகும்; இனம்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை.

மனம் பரிசுத்தமானவர்க்கு எஞ்சி நிற்கும் புகழ் நன்றாகும். இனம் பரிசுத்தமானவர்க்கு நன்மையாகாத செயல் இல்லை. (456)

7 மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

நிலைபெற்ற உயிர்களுக்கு மனத்தினது நன்மை செல்வச் சிறப்பைக் கொடுக்கும். இனத்தினது நன்மையோ செல்வச் சிறப்புடன் எல்லாப் புகழையும் கொடுக்கும். (457)

8 மனநலம் நன்குடைய ராயினும், சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து.

சான்றோர் இயற்கையாகவே மனத்தின் நன்மையை உறுதியாகப் பெற்றிருந்தாலும், இனத்திலுளாகிய நன்மை அவர்களுக்குப் பாதுகாவலாய் அமைவதாகும். (458)

9 மனநலத்தின் ஆகும் மறுமை;மற்று அஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து.

மனத்தின் நன்மையால் ஒருவனுக்கு மறுமையின்பம் உண்டாகும். அவ்வின்பம், அவனுக்குரிய இனத்தின் நன்மையால் சிறந்து விளங்குவதாம் (459)

10 நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.

ஒருவனுக்கு நல்ல இனத்தைவிடச் சிறந்த துணையுமில்லை; தீய இனத்தைவிடத் துன்பந் தரும் பகையுமில்லை. (460)

47—தெரிந்து செயல் வகை

செய்யுந் தொழில்களை ஆராய்ந்து செய்தலின் தன்மை

**அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி, வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.**

ஒரு தொழிலைத் தொடங்குமிடத்து, அதனால் ஆகும் செலவையும், அச்செலவினால் வரும் பயனையும், எதிர்காலத்தில் கிடைக்கும் இலாபத்தையும் ஆகியவற்றை ஆராய்ந்து செய்யக் கடவர். (461)

2 **தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்
அரும்பொருள் யாதொன்றும் இல். [க்கு**

ஆராய்ந்து தெளிந்த இனத்தாருடன் தொழிலைக் குறித்து நன்கு ஆலோசித்துப் பின் தாமும் கவனித்துச் செய்பவருக்கு அரிய செயல் யாதொன்றும் இல்லையாம். (462)

3 **ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.**

பின்னொரு காலத்தில் வரவையும் இலாபத்தை எதிர் நோக்கி, கையிலுள்ள முதற்பொருளையும் இழத்தற்கு ஏதுவான தொழிலை அறிவுடையோர் செய்யார். (463)

4 **தெளிவில் அதனைத் தொடங்கார்; இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.**

இழிவு என்னும் குற்றத்திற்கு அஞ்சுவோர், இனத்திடனும் தனித்தும் ஆராய்ந்து தெளிவடையாத தொழிலைத் தொடங்க மாட்டார். (464)

5 **வகையறச் சூழா தெழுதல், பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு.**

செய்யும் வகைகளை யெல்லாம் முழுதும் எண்ணுமல் காரியத்தைத் தொடங்குதல், பகைவரை வளரும் நிலத்தில் நிலை பெறச் செய்தற்குரிய வழியாம். (465)

6 செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

செய்யத் தகாத காரியங்களைச் செய்தால் ஒருவன் கெடுவான்; செய்யத் தக்க காரியங்களைச் செய்யாது விட்டாலும் அவன் கெடுவான். (466)

7 எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

முடிக்கும் உபாயங்களை ஆராய்ந்து காரியத்தைத் தொடங்கக்கடவர்; "தொடங்கியபின் ஆராய்வோம்" என்றிருத்தல் குற்றமாம். (467)

8 ஆற்றின் வருந்தா வருத்தம், பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

முடிக்கத் தக்க உபாயங்களை அறிந்து செய்யாத தொழில், முடிப்பதற்காகப் பலர் நின்று உதவினாலும், குறைவுபட நேரும் (468)

9 நன்குற்றல் உள்ளும் தவறுண்டு; அவரவர்
பண்பறிந்து ஆற்றுக் கடை.

அவரவருடைய இயல்புகளை அறிந்து அவரவர்க்கு ஏற்ற வாறு செய்யாவிட்டால், நன்மைசெய்வதிலும் தவறு உண்டாகும். (469)

10 எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும்; தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

தம் நிலைமையோடு பொருந்தாதவற்றைச் செய்தால் உலகத்தார் ஒப்புக்கொள்ளார்; ஆகவே, உலகத்தார் இகழ்ந்து பேசாத செயல்களை ஆராய்ந்து செய்யக் கடவர். (470)

48—வலியறிதல்

தொழில் செய்தற்குரிய வலிமைகளை அறிதல்

1 வினைவலியும், தன்வலியும், மாற்றான் வலியும், துணைவலியும் தூக்கிச் செயல்.

தான் செய்யக் கருதும தொழிலின் வலிமையும், தன் வலிமையும், பகைவனது வலிமையும், இருவர்க்கும் துணை செய்வோரின் வலிமையும் ஆகியவற்றை ஆராய்ந்து செய்யக் கடவன் (471)

2 ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச் செல்வார்க்குச் செல்லாதது இல்.

தம்மால் செய்யக்கூடிய தொழிலையும், அதற்காக அறிய வேண்டியவற்றையும் அறிந்து, அத்தொழிலினிடத்து மனம் மொழி மெய்களைச் செலுத்தி முயல்வோர்க்கு முடியாதது யாதும் இல்லை (472)

3 உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர்.

தம்முடைய வலிமையின் அளவைத் தெரியாமல், மன வெழுச்சியால் மூண்டு நின்று, காரியத்தை முடிக்க இயலா மல் இடையில் அழிந்தோர் பலராவர். (473)

4 அமைந்தாங்கு ஒழுகான், அளவறியான், தன்னை வியந்தான் விரைந்து கெடும்.

பிறருடன் ஒத்து நடக்காமல், தன்வலிமையின் அளவை உணராமல், தன்னைத்தானே மெச்சிக் கொண்டிருப்பவன் விரைவிலே கெடுவான். (474)

5 பீலிபெய் சாகாடும் அச்சிறும்; அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்.

மயிலிறகை ஏற்றிய வண்டியும், அது சுமக்கும் அளவிற்கு மிக அதிகமாக ஏற்றினால், அச்சு முறியும். (475)

6 நுனிக்கொம்பர் ஏறினூர் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.

ஒரு மரக்கொம்பின் நுனியில் ஏறி நின்றவர், தம் மன வெழுச்சியால் அளவுகடந்து மேலும் ஏற முனைந்தால், அவ் வெழுச்சி அவர் உயிர்க்கு முடிவாகிவிடும். (476)

7 ஆற்றின் அளவறிந்து ஈக; அது,பொருள்
போற்றி வழங்கும் நெறி.

தக்க வழியில், தமக்குள்ள பொருளின் அளவைத் தெரிந்து, பிறருக்குக் கொடுக்கக் கடவர். அவ்வாறு கொடுத் தலே, பொருளைப் போற்றி வழங்கும் வழியாம் (477)

8 ஆகா றளவிட்டிது ஆயினும் கேடில்லை
போகா றகலாக் கடை.

பொருள் வருவாய் சிறிதாயிருந்தாலும் கெடுதல் இல்லை. பொருள் செலவாகும் வழி பெருகாதிருக்க வேண்டும் (478)

9 அளவறிந்து வாழாதான் வாழ்க்கை; உளபோல
இல்லாகித் தோன்றுக் கெடும்.

தன்னிடமுள்ள பொருளின் அளவையுணர்ந்து வாழாத வனுடைய வாழ்க்கை, வளமுடையது போலத் தோன்றிப் பின் இல்லையாய்த் தோன்றுமல் அழியும். (479)

10 உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

தன்னிடமுள்ள பொருளின அளவை ஆராயாமல் மேற் கொள்ளும் கொடையினால், ஒருவனுடைய செல்வத்தின் அளவு விரைவாகக் கெடும். (480)

49—காலம் அறிதல்

காரியத்திற் கேற்ற காலம் இதுவென அறிதல்

1 பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

காக்கையானது தன்னைக்காட்டிலும் வலிமையுடைய கோட்டானைப் பகற்காலத்தில் வெல்லும்; அதுபோல பகையை வெல்லும் அரசர்க்கு அதற்கேற்ற காலம் அவசியமாம். (481)

2 பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

காலத்தோடு பொருந்தக் (காலந்தப்பாமல்) காரியத்தைச் செய்தல், நிலைதது நிற்கும் இயல்பில்லாத செல்வத்தை தன்னிடத்தினின்று நீங்காமற் கட்டுங் கயிறும். (482)

3 அருவினை என்ப உளவோ? கருவியால்
காலம் அறிந்து செயின்.

தொழிலை முடித்தற்கேற்ற கருவிகளின் உதவியால், செய்தற்குரிய காலத்தையும் அறிந்து செய்தால், செய்தற்கரிய செயல்களென்பவையும் உண்டோ? (483)

4 ஞாலம் கருதினும் கைகூடும்; காலம்
கருதி இடத்தால் செயின்.

உலகம் முழுதும் ஆளக்கருதினாலும், அதற்குச் செய்யுந் தொழிலைக் காலதத்தையறிந்து இடததோடு பொருந்தச் செய்வானானால், அது அவனுக்குக் கைகூடும். (484)

5 காலங் கருதி இருப்பர்; கலங்காது
ஞாலங் கருது பவர்.

உலகம் முழுதும் தப்பாமற் கைக்கொள்ளக் கருதுகின்றவர், அதைக் குறித்துக் கலக்கங் கொள்ளாமல், காரிய வெற்றிக்குரிய காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு பொறுத்திருப்பார்கள். (485)

6 ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து.

ஊக்கமுள்ளவன் காலத்தையெதிர்பார்த்து அடங்கியிருத்தல், போர்செய்கிற ஆட்டுக்கடா தன் பகையின்மேற் பாய்வதற்காகப் பின் வாங்குவதைப் போன்றதாம். (486)

7 பொள்ளென ஆங்கே புறம்வேரார்; காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

அறிவுடையோர், பகைவர் தீங்கு செய்த அப்பொழுதே, அவர் அறிய, விரைவாகச் சினத்தை வெளியே காட்டார், தாம் அப்பகைவரை வெல்வதற்கு ஏற்ற காலத்தையறிந்து உள்ளத்திற் சினங் கொண்டிருப்பர் (487)

8 செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை
காணின் கிழக்காம் தலை.

பகைவரை வெல்லக் கருதுவோர், அப்பகைவருக்கு முடிவுக் காலம் வருமளவும், அவரைக் கண்டவிடத்திற் பணியகடவர். பணியவே, அவர்க்கு முடிவு வந்த பொழுது அவருடைய தலை தடையின்றி கீழே விழும். (488)

9 எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

வாய்த்தற்கரிய சமயம் வந்து வாய்க்குமாஞல், அவ்வாய்ப் புள்ள பொழுதே, செய்தற்கரிய செயல்களைச் செய்யக்கடவர்.

10 கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

வாய்ப்பின்றி பொறுத்திருக்க வேண்டிய காலத்தில், கொக்கைப்போல் அமைதியாய் இருக்கக் கடவர்; காலம் வாய்த்த விடத்தில் அதன் குத்தைப்போலத் தப்பாமற் காரியத்தை செய்து முடிக்கக் கடவர். (490)

50—இடனறிதல்

ஏற்ற இடத்தையறிந்து காரியத்தைச் செய்தல்

1 தொடங்கற்க எவ்வினையும்; எள்ளற்க; முற்றும்
இடங்கண்ட பின்அல் லது.

பகைவரை வேரோடு முற்றுமையிடுதற்கு ஏற்ற இடம் வாய்க்கப் பெற்றபின் அல்லாமல், யாதொரு தொழிலையும் பகைவர்மேற் செய்யாதிருக்கக் கடவர்; அப்பகைவரையும் இகழாதிருக்கக் கடவர். (491)

2 முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும், அரண்சேர்ந்
ஆக்கம் பலவும் தரும். [தாம்

மாறுபாட்டுடன் கூடிய வலிமையுடையவர்க்கும், அரணோடு பொருந்தியிருக்கின்ற பெருகுகமானது, பலவகைப் பயனகளையும் கொடுக்கும். (492)

3 ஆற்றாரும் ஆற்றி அடுப; இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

தமக்கு வாய்ப்பான இடத்தை யறிந்து, தம்மைக் காத்துக்கொண்டு, பகைவர்மேற சென்று தம் காரியத்தைச் செய்வாரானால், வலிமையில்லாதவரும வலிமையுடையோராய் வெற்றியுறுவர். (493)

4 எண்ணியார் எண்ணம் இழப்பர்; இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

தகுந்த இடத்தை தெரிந்து, அதிற்பொருந்தியிருந்து கொண்டு, தம் காரியத்தைச் செய்வாரானால், அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர் தம் எண்ணத்தை இழந்து விடுவர்.

5 நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின், அதனைப் பிற.

ஆழமான நீரில் முதலை பிற உயிர்களையெல்லாம் வெல்லும். அந்த நீரினின்று நீங்குமானால் அந்த முதலையைப் பிற உயிர்கள் எல்லாம் வென்றுவிடும். (495)

6 கடலோடா கால்வல் நெடுந்தேர்; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

நிலத்தில் ஓடும் வலிமைபொருந்திய உருளைகளையுடைய பெரிய தேர்கள் கடலில் ஓடமாட்டா. அக்கடலில் ஓடும் மரக் கலங்களும் நிலத்தில் ஓடமாட்டா. (496)

7 அஞ்சாமை அல்லால் துணைவேண்டா; எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின்.

வழி வகைகளையெல்லாம் குறைவின்றி ஆராய்ந்து, தகுந்த இடத்திலே பொருந்தச் செய்வாராஞல், அந்தச் செய்கைக்கு, "அஞ்சாமை" அன்றி வேறு துணை எதுவும் வேண்டுவதில்லை.

8 சிறுபடையான் செல்லிடம் சேரின், உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.

பெருஞ்சேனையுடைய அரசன், சிறிய சேனையுடைய வனது இருப்பிடம் சென்று போர் செய்வானுகில் தன் ஊக்கம் குன்றி அழிந்து விடுவான் (498)

9 சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது

அரணுகிய நன்மையும், பிற பெருமையான ஆற்றலும் இல்லாதவராயினும், பகைவரை அவர் வாழ்கின்ற இடத்திற் சென்று தாக்குதல் இயலாதாம். (499)

10 காலாழ் களரின், நரிஅடும்; கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு.

வேலைத் தாங்கிய வீரரைக் குத்திக் கொல்லுகின்ற கொம்புகளையுடைய அஞ்சாத யானையை, கால் புதைகின்ற சேற்று நிலத்திற் சிக்கிய பொழுது நரியும் கொன்று விடும். (500)

51—தெரிந்து தெளிதல்

தொழிலுக்குத் தகுதியானவரை ஆராய்ந்தெடுத்தல்

1 அறம்,பொருள், இன்பம், உயிரச்சம் நான்கின் திறம்தெரிந்து தேறப் படும்.

அறம், பொருள், இன்பம், உயிருக்காக அஞ்சும் அச்சம், ஆகிய நான்கு திறத்திலுலும் நன்கு ஆராய்ந்து பெற்ற பிறகு, ஒருவன் ஒரு தொழிலுக்குரியவனைத் தேர்ந்து கொள்ளப் படுவான். (501)

2 குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும் நாணுடையான் கட்டே தெளிவு.

நல்ல குடியிற் பிறந்து, குற்றங்களினின்று நீங்கி, 'நமக்குப் பழிவருமோ' என்று அஞ்சுகின்ற நாணமுடையவனே ஒரு தொழிலுக்கு நம்பிக்கையுடையவனைத் தெளியப்படுவான் (502)

3 அரியகற்று ஆசற்றார் கண்ணும், தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு.

அருமையான நூல்களைப் படித்துக் குற்றமற்றவரிடத்திலுங் கூட நுட்பமாக ஆராயுங்கால், அறியாமை இல்லாதிருத்தல் அருமையாம். (503)

4 குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்.

ஒருவனிடத்திலுள்ள குணங்களை ஆராய்ந்து, பிறகு, குற்றங்களையும் ஆராய்ந்து, எவை மிகுதியாயிருக்கின்றன என்பதை அறிந்து, அவனைக் கொள்ளவேண்டும் (504)

5 பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும், தத்தம் கருமமே கட்டளைக் கல்.

மக்களுடைய பெருமையாகிய செய்கைகளை அறிவதற்கும், சிறுமையாகிய செயல்களை அறிவதற்கும், உரைகல்லாவது அவரவர் செய்யும் தொழிலேயாம். (505)

6 அற்ருரைத் தேறுதல் ஓம்புக; மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி.

சுற்றத்தாரில்லாதவரை தேர்ந்தெடுக்கக் கூடாது. எனெனருல், அவர் உலகப்பற்று இல்லாதவராவர்; எனவே, அவர் பழிபாவங்களுக்குப் பயப்பட மாட்டார். (506)

7 காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்.

அன்புடைமை காரணமாக, அறிய வேண்டியவற்றை அறிய மாட்டாதவரை நம்பித தெளிதல், எல்லா அறியாமையையுங் கொடுக்கும். (507)

8 தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

அயலான் ஒருவனைப் பற்றி யாதொன்றும் ஆராயாமல், அவனைத் தன் தொழிலுக்காக நம்பித் தெளிந்தால், அது தனக்கு மட்டுமன்றித் தன் சந்ததியார் எல்லாருக்கும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். (508)

9 தேறற்க யாரையும் தேராது, தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

ஆராயாமல் யாரையும் தொழிலுக்குரியவராகத் தெளியக் கூடாது. ஆராய்ந்து தெளிந்த பிறகு, தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டவர் செய்யுந் தொழில்களை சந்தேகப்படாமல் நம்பக் கடவர். (509)

10 தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

ஆராயாமல் ஒருவனைத் தெளிதலும், ஆராய்ந்து தெளிந்தவனிடம் ஐயங் கொள்ளுதலும், நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். (510)

52—தெரிந்து வினையாடல்

தெளியப்பட்டவரைச் செய்யுந் தொழில் அறிந்து செலுத்தல்

1 நன்மையும் தீமையும் நாடி, நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

ஆவனவும் ஆகாதனவுமாகிய செயல்களை ஆராய்ந்தறிந்து, ஆவனவற்றையே செய்யும் இயல்புடையவன் தொழிலுக்குரிய வனாக ஆளப்படுவான். (511)

2 வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.

பொருள் வரும் வழிகளை அதிகப் படுத்தி செல்வநிலையை வளர்த்து, வந்த இடையூறுகளை நாடோறும் ஆராய்ந்து நீக்க வல்லவனே தொழில் செய்தற்கு உரியவனாவான் (512)

3 அன்பு, அறிவு, தேற்றம், அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

அன்பு, அறிவு, தொழிலிற் கலங்காமை, பொருளினிடத்து ஆசை இல்லாமை ஆகிய இந்நான்கு குணங்களையும் நிலையாக உடையவனிடத்தில் தொழிலை ஒப்புவித்ததலே தெளிவெனப் படும். (513)

4 எனைவகையான் தேறியக் கண்ணும், வினைவகையா
வேருகும் மாந்தர் பலர். [ன்

எல்லா வகையாலும் ஆராய்ந்து தெளிந்து தொழிலை ஒப்புவித்த பின்னும், அத்தொழிலின் இயல்பினாலே வேறுபடும் மனிதர் பலர். (514)

5 அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால், வினைதான்
சிறந்தானென்று ஏவற்பாற் றன்று.

தொழிலைச் செய்யும் உபாயங்களை அறிந்து, அதில் வரும் இடையூறுகளைத் தாங்கி, தொழிலைச் செய்து முடிக்க வல்ல வனையல்லாமல், "இவன் நமக்கு வேண்டியவன்" என்பதற்காக ஒரு தொழிலுக்கு ஒருவனை ஏவுதல் தகாது. (515)

6 செய்வானே நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.

செய்கின்றவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையை ஆராய்ந்து, காலத்தோடு பொருந்த ஆராய்ந்து, பின் அத்தொழிலை அவன் செய்யும்படி விடக்கடவர். (516)

7 இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

இந்த தொழிலை இந்த வகையால் இவன் முடித்து விடுவான் என்று நன்றாக ஆராய்ந்து தெளிந்து, பின் அந்தத் தொழிலை அவனிடம் ஒப்புவிக்கக் கடவர். (517)

8 வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்.

ஒருவனைத் தொழில் செய்வதற்குத் தகுதியுடையவன் என்று ஆராய்ந்து துணிந்த பிறகு, அவனை அத்தொழிலுக்கே உரியவனாகி உயர்த்தக் கடவர். (518)

9 வினைக்கண் வினையுடையான் கேண்மை வேகரு
நினைப்பானை நீங்கும் திரு.

தன் காரியஞ் செய்யுமிடத்து, முயற்சியுடையவன் அவ் உரிமையால் கொண்டாடும் உறவைத் தவறாக நினைப்பானானால், அவனைவிட்டுச் சீதேவி நீங்குவாள். (519)

10 நாடோறும் நாடுக மன்னன்; வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு.

தொழில் செய்பவன் வளர்ந்தால், உலகமும் வாழும்; கோணுது. ஆகவே அரசுபுரிவோன் நாள்தோறும் தொழிலாளர் நலத்தைப் பேணுவானாக. (520)

53—சுற்றந் தழால்

சுற்றத்தாரைத் தழுவிக் கொள்ளுதல்

1 பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

ஒருவன் வறியவன் ஆன காலத்திலும், விடாமல் வந்து, அவனுக்கும் தமக்குமுள்ள பழைய உறவுகளைக் கொண்டாடுந் தன்மைகள் சுற்றத்தாரிடம் உண்டு. (521)

2 விருப்பருச் சுற்றம் இயையின், அருப்பரு
ஆக்கம் பலவும் தரும்.

அன்பு நீங்காத சுற்றமானது ஒருவனுக்குக் கிடைக்குமானால், அது வளர்ச்சி குறையாத செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும். (522)

3 அளவளா இல்லாதான் வாழ்க்கை, குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

சுற்றத்தாருடன் மனங்கலந்து உறவாடுந் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கையானது, குளத்தின் பரப்பு கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போன்றதாம். (523)

4 சுற்றத்தாற் சுற்றம் படஒழுகல், செல்வம்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

சுற்றத்தார் தன்னைச் சூழ அவர்களோடு உறவாடி ஒருவன் வாழ்வது, அவன் செல்வத்தைப் பெற்றதின் பயனாகும். (524)

5 கொடுத்தலும் இன்சொலும், ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

வேண்டியவற்றைக் கொடுத்தலும், இன்சொல் சொல்லுதலும் ஆகிய இரண்டையும் செய்ய வல்லவனுக்கு, ஒருவன் மேன்மேலும் பெருகுகின்ற பல சுற்றத்தாரால் சூழப்பட்டிருப்பான். (525)

6 பெருங்கொடையான் பேணுன் வெகுளி; அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

ஒருவன் மிகுந்த கொடையாளியுமாகி, கோபத்தை விரும்பாதவனுமானால், அவனைப்போலச் சுற்றத்தாரையுடையவர் இப்பரந்தவுலகத்தில் இல்லை (526)

7 காக்கை கரவா கரைந்துண்ணும்; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

காக்கை தனக்குக் கிடைத்த உணவை ஒளிக்காமல் தன் இனத்தையெல்லாம் கூவியழைத்துண்ணும்; அது போன்ற இயல்புடையவர்களுக்கே உயர்ச்சி பலவும் உண்டாம் (527)

8 பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

அரசன் எல்லாரையும் ஒரு தன்மையாக நோக்காமல், அவரவர் தகுதிக்கு ஏற்ப நோக்குவானுனால், அச்சிறப்பு நோக்கி அவனை விடாது வாழும் சுற்றத்தார் பலராவர். (528)

9 தமராகித் தற்றுறந்தார் சுற்றம், அமராமைக்
காரணம் இன்றி வரும்.

முன்னே சுற்றத்தாராயிருந்து, பின் ஒரு காரணத்தால் அன்னைப்பிரிந்து போனவரின் உறவு, அவர் தன்னோடு பொருந்தாமைக்குரிய காரணம் தன்னிடத்தினின்று நீங்கவே, தானே வந்து சேரும். (529)

10 உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானே, வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல்.

தன்னிடத்தினின்று பிரிந்துபோய்ப் பின்பு ஒரு காரணத்தை முன்னிட்டு வந்த சுற்றத்தானை, அரசன், அவன் வந்த காரியத்தை நிறைவேற்றிக் கொடுத்து உறவு கொள்ளக் கடவன். (530)

54—பொச்சாவாமை

செய்கைக்கண் மறதியில்லாதிருத்தல்

1 இறந்த வெகுளியின் தீதே, சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

மிகுதியான உவகையால் மகிழ்ந்திருக்கும்பொழுது ஏற்படும் மறதியானது, அளவுகடந்த கோபத்தைக் காட்டிலும் கொடுமையானது. (531)

2 பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை
நிச்சம் நிரப்புக்கொன் றுங்கு.

நித்திய தரித்திரம் அறிவைக் கெடுப்பதுபோல மறதியானது ஒருவனது புகழைக் கெடுத்துவிடும். (532)

3 பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை; அது உல
எப்பால்நூ லோர்க்கும் துணிவு. [கத்து

மறதியுடையவருக்குப் புகழ் கிடைக்காது. இவ்வுலகத்தில் எந்த நீதிநூலுடையாருக்கும் அதுவே முடிவு. (533)

4 அச்சம் உடையார்க்கு அரணில்லை; ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

உள்ளத்தில் பயமுள்ளவருக்கு, வெளியே பாதுகாவலிருந்தும் பயனில்லை அதுபோல மறதியுடையவர்க்கு என்ன செல்வமிருந்தும் பயனில்லை (534)

5 முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்னூறு இரங்கி விடும்.

வரத்தகுந்த துன்பங்களை முன்னமே அறிந்து காத்துக் கொள்ளமால மறந்திருந்தவன், பின்பு, அத்துன்பங்கள் வந்த பொழுது தன் தவற்றை நினைத்து வருந்துவான். (535)

6 இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின் அஃதொப்பது இல்.

மறவாமைக் குணம் யாவரிடத்திலும் எக்காலத்திலும் தவறுமற் பொருந்தியிருக்குமானால், அதைப் போன்ற நன்மை வேறொன்று இல்லை. (536)

7 அரியவென்று ஆகாத இல்லை; பொச் சாவாக் கருவியாற் போற்றிச் செயின்.

மறவாமை என்னும் கருவியின் உதவியால் எதையும் எண்ணிச் செய்வானானால், அவனுக்கு அரியவையென்று முடிக்க முடியாதது எதுவும் இல்லை (537)

8 புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்; செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

பெரியோர் புகழ்ந்து கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச் செய்யக்கடவர்; அவ்விதம் செய்யாமல் மறந்தவர்க்கு எழு பிறப்பிலும் நன்மை இல்லை. (538)

9 இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக; தாம்தம் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

மகிழ்ச்சியால் செருக்குக் கொண்டு தம் கடமையை மறந் திருக்கும பொழுது, முற்காலத்தில் அவ்வித மறதியினால் கெட்டழிந்தவரை நினைக்க கடவர். (539)

10 உள்ளியது எய்தல் எளிதுமன்; மற்றும்தான் உள்ளியது உள்ளப் பெறின்.

மறதியினறித்தான் நினைத்த பொருளையே விடாமல் நினைக் கக்கூடுமானால், ஒருவன்தான் அடைய நினைத்த பொருள் நினைத்தபடியே அடைதல் எளிதாகும். (540)

55—செங்கோன்மை

நடுவுநிலை தவறுத அரசாட்சியின் பெருமை

1 ஓர்ந்து, கண்ணோடாது, இறைபுரிந்து, யார்மாட்டும் தேர்ந்துசெய் வஃதே முறை.

குற்றத்தை நன்காராய்ந்து, குற்றம் செய்தவர் யாவரா யினும் தாட்சணியமாகிய கண்ணோட்டங் காட்டாமல், நடுவு நிலைமையைப் பொருந்தி, குற்றத்திற்குரிய தண்டனையை நீதி வல்லாருடன் ஆராய்ந்து அளிததலே நீதிமுறையாம். (541)

2 வான்நோக்கி வாழும் உலகெல்லாம், மன்னவன் கோல்நோக்கி வாழும் குடி.

உலகத்து உயிர்களெல்லாம் மழையை நோக்கி வாழ் கின்றன. குடிகளோ, அரசனது செங்கோலை நோக்கி வாழ் கின்றனர். (542)

3 அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்.

அந்தணர்க்குரிய மறையாகிய நூலுக்கும் அந் நூலாற் சொல்லப்பட்ட அறத்திற்கும அடிப்படையாய் நிற்பது அரசனது செங்கோலே! (543)

4 குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன் அடிதழீஇ நிற்கும் உலகு.

குடிகளை அன் புடன் தழுவிக்கொண்டு செங்கோலைச் செலுத்தும் மாநில வேந்தனைப் பின்பற்றி உலகம் நிலைத்து நிற்கும். (544)

5 இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட பெயலும் விளையுளும் தொக்கு.

நீதிமுறையில் செங்கோல் செலுத்தும் அரசனுடைய நாட்டில், பருவமழையும் குறையாத விளைபொருளும் ஒருசேர உண்டு. (545)

6 வேலன்று வென்றி தருவது, மன்னவன்
கோலதூங் கோடாது எனின்.

செங்கோல் கோணுதிருக்குமாஞல், அரசனுக்கு வெற்றியை வீலைப்பது அவனுடைய "வேல்" அன்று; அவனுடைய செங்கோலே! (546)

7 இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

உலகத்தையெல்லாம் அரசன் காப்பாற்றுவான். முட்டுப்பாடு வந்தவிடத்தும் தவருமல் நீதிமுறைப்படி அவன் ஆட்சி செலுத்துவானுலுல், அந்நீதி முறையே அவ்வரசனைக் காப்பாற்றும். (547)

8 எண்பதத்தான், ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தால் தானே கெடும்.

நீதிபெற வந்தவர்க்கு எளிதில் காணக்கூடியவனுய், தக்காரோடு ஆராய்ந்து நீதிமுறை செலுத்தாத அரசன் தாழ்ந்த நிலையுற்றுத்தானே அழிவான். (548)

9 குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

குடிகளைப் பிறர் வருத்தாமற் காப்பாற்றி, தானும் அவர்களை வருத்தாமற் பாதுகாத்து, அவரிடத்துக் குற்றம் உண்டாயின் அதற்காக அவர்களைத் தண்டித்தல் அரசனுக்குத் தொழிலே! அது அவனுக்கு பழியாகாது. (549)

10 கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல், பைங்
கூழைகட் டதனெடு நேர். [கூழ்

கொடியவர்களைக் கொலைத்தண்டனையால் அரசன் தண்டித்தல், பயிரை வளர்க்கக் களையைப் பிடுங்கியெறிதற்கு நிகராகும். (550)

56—கொடுங்கோன்மை

நீதி தவறிய அரசாட்சியின் இழிவு

1 கொலைமேற்கொண் டாரில் கொடிதே; அலைமேற்
அல்லவை செய்தொழுகும் வேந்து. [கொண்டு

பொருளுக்கு ஆசைப்பட்டுக் குடிகளை வருத்தப்படுத்திக் தொழிலைக் கைக்கொண்டு, முறையற்ற செய்கைகளைச் செய்யும் அரசன், கொலைத்தொழில் செய்து வாழ்வோரைக் காட்டிலுங் கொடியவனுவான். (551)

2 வேலொடு நின்ருன் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்ருன் இரவு.

செங்கோலைத் தாங்கி நின்ற அரசன், குடிகளிடம் (வரிப் பொருளைத் தவிர) அதிகப் பொருளை வருத்திக் கேட்டலானது, வேலைக் கையில் ஏந்தி நின்று வழிப்பறி செய்யுங் கள்வன், "கையிலுள்ளதைக் கொடு" என்று அதட்டிப் பறிப் பதைப் போன்றது. (552)

3 நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.

தன் நாட்டில் உண்டாகும் தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து அவற்றை நீக்கி நீதி செலுத்தாத அரசன், நாளுக்கு நாள் தன் நாட்டைச் சிறிது சிறிதாக இழந்துவிடுவான்.

4 கூழும் குடியும் ஒருங்கிழக்கும்; கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.

மேல்வருவதை எண்ணுமல் கொடுங்கோல் ஆட்சி செய்யும் அரசன், முன் தேடிவைத்திருந்த பொருளையும் பின்னும் தேடுவதற்குக் காரணமான குடிகளையும் ஒருங்கே இழப்பான்.

5 அல்லற்பட்டு ஆற்ருது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

அரசனது கொடுங்கோலால் குடிகள் துன்புற்று அழுத கண்ணீர் அல்லவா, அவ்வரசனது செல்வத்தை அறுக்கும் வான்! (555)

6 மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அ∴தின்றேல்
மன்னுவாம் மன்னர்க்கு ஒளி.

அரசர்க்குப் புகழ் நிலைபெறக் காரணம், நீதிதெறியேயாம். அது இல்லையாயின், அரசர்க்குப் புகழ் நிலைபெறாது. (556)

7 துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு.

மழையில்லாமையானது பூமியில் வாழும் உயிர்க்கு எவ்வகைத் துன்பத்தைத் தருமோ, அவ்வகைத் துன்பத்தை, அரசனுடைய அருளற்ற ஆட்சி நாட்டில் வாழும குடிகளுக்குத் தரும். (557)

8 இன்மையின் இன்னாது உடைமை; முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

நீதியில்லாத அரசனுடைய கொடுங்கோலாட்சியின் கீழ் வாழப்பெற்றால், பொருள் இல்லாமையைக் காட்டிலும், பொருளுடைமையே துன்பம் தருவதாம். (558)

9 முறைகோடி மன்னவன் செய்யின், உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

நீதிமுறை தவறி அரசன் ஆட்சி செய்தால், அவனுடைய நாட்டில் பருவமழை தவறி மேகம் மழையைப் பொழியாது.

10 ஆபயன் குன்றும்; அறுதொழிலோர் நூல்மறப்பர்;
காவலன் காவான் எனின்.

அரசன் நாட்டை முறையுடன் காக்காவிட்டால், அந்நாட்டிலே, பசுக்கள் பால் தருவது சுருங்கும்; அந்தணரும் நூல்களை மறப்பார்கள். (560)

57.—வெருவந்த செய்யாமை

அஞ்சத் தக்க செயல்களை அரசன் செய்யாதிருத்தல்

1 தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

குடிகள் செய்த குற்றங்களைத் தக்கவண்ணம் ஆராய்ந்து, பின் அவைகளைச் செய்யாத வகையில், குற்றங்களுக்கேற்பத் தண்டிப்பவனே அரசனுவான். (561)

2 கடிதுஓச்சி மெல்ல எறிக; நெடிதுஆக்கம் நீங்காமை வேண்டு பவர்.

செல்வமானது நெடுங்காலம் தம்மை விட்டு நீங்காதிருக்க விரும்புவோர், குற்றஞ்செய்தோரைத் தண்டிக்குமிடத்து, அளவுகடந்து தண்டிப்பதுபோலத் தொடங்கி அளவு கடவாதபடி தண்டிக்கக் கடவர். (562)

3 வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின் ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

குடிகள் அஞ்சும்படியான தண்டனைகளைச் செய்யும் கொடுங்கோலரசனுக இருந்தால், அவன் உறுதியாக விரைவிலே கெடுவான். (563)

4 இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் உறைகடுகி ஒல்லைக் கெடும். [வேந்தன்

"அரசன் பொல்லாதவன்" என்று குடிகளாற் பழிக்கப் பெறும் கொடுஞ்சொல்லையுடைய அரசன், வாழ்நாள் குறுகி விரைவிலே அழிவான். (564)

5 அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம் பேஎய்கண் டன்னது உடைத்து.

எளிதில் காணமுடியாத நிலைமையும், இனிமையில்லாத முகமும் உடையவனது பெரிய செல்வம், பேயினுற் பாது காக்கப்பட்டது போன்ற தன்மையுடையதாம். (565)

6 கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின், நெடுஞ் நீடின்றி ஆங்கே கெடும். [செல்வம்

கடுஞ்சொல் உடையவனுகிக் கண்ணோட்டமும் இல்லாத வனுனல், அவனுடைய பெரிய செல்வம நீடித்து நிற்காமல் அப்பொழுதே அழியும். (566)

7 கடுமொழியும், கையிகந்த தண்டமும், வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம்.

கொடுஞ்சொல்லும், வரம்புகடந்த தண்டனைகளும், அரச னுடைய பகைவரை வெல்லத் தக்க ஆற்றலாகிய இரும்பைத் தேய்க்கும் அரம் ஆகும். (567)

8 இனத்தாற்றி எண்ணுத வேந்தன், சினத்தாற்றிச் சீறிற் சிறுகும் திரு.

அமைச்சர் முதலானுேரோடு நன்கு ஆராயாத அரசன், சினங்கொண்டு சீறுவானுனல், அவனுடைய செல்வ நிலை சுருங்கிவிடும். (568)

9 செருவந்த போழ்தில்; சிறைசெய்யா வேந்தன் வெருவந்து வெய்து கெடும்.

போர் வருவதற்கு முன் தக்க பாதுகாப்பு ஏற்படுத்திக் கொள்ளாத அரசன், போர்வந்தபொழுது, அஞ்சி விரைவில் அழிவான். (569)

10 கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல்; அதுஅல்லது இல்லை நிலக்குப் பொறை.

கொடுங்கோல் ஆட்சிமுறையானது கல்வியறிவில்லாத வரைத் துணையாகப் பெற்றிருக்கும்; அந்த ஆட்சி "பூமிக்குப் பாரம்" என்று சொல்வதைத் தவிர வேறில்லை. (570)

58—கண்ணோட்டம்

பழகினவரைக் கண்டால் அவர்சொல் தட்டாமை

1 கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டுஇவ் உலகு.

'கண்ணோட்டம்' என்கின்ற மிகச் சிறந்த அழகுடைமை இருக்குங் காரணத்தாலேயே, இந்த உலகம் நிலைபெற்றிருக்கின்றது. (571)

2 கண்ணோட்டத் துள்ளது உலகியல்; அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

உலகியலானது கண்ணோட்டத்திலேலே நடைபெறுகின்றது; எனவே கண்ணோட்டமில்லாதவர் உயிர்வாழ்தல் பூமிக்குப் பாரமேயாம் (572)

3 பண்என்ஆம் பாடற்கு இயைபின்றேல், கண்என்ன
கண்ணோட்டம் இல்லாத கண். [ஆம்

இசையானது பாட்டோடு பொருந்தவில்லையென்றால், என்ன பயனுடையதாகும்? அதுபோல, கண்ணோட்டம் இல்லாவிட்டால் கண் என்ன பயனுடையதாகும்? (573)

4 உளபோல முகத்தெவன் செய்யும், அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்?

தகுந்த அளவிற்குக் கண்ணோட்டம் இல்லாத கண்கள், முகத்தில் உள்ளவை போலத் தோன்றுதல் தவிர வேறு என்ன பயனையுடையன? (574)

5 கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்;
புண்ணென்று உணரப் படும். [அஃதின்றேல்

ஒருவனுடைய கண்ணிற்கு அணிகலமாவது கண்ணோட்டமேயாம். அது இல்லையானால் அக்கண் 'புண்' என்று அறிவுடையோரால் உணரப்பெறும். (575)

6 மண்ணோடு இயைந்த மரத்தனையர்; கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர்.

கண்ணோட்டத்திற்குரிய கண்ணோடு பொருந்தியிருந்தும், கண்ணோட்டம் இல்லாதவர், நிலத்திற் பொருந்தி நிற்கின்ற மரத்துகுச் சமமாவர். (576)

7 கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்; கண்ணுடை
கண்ணோட்டம் இன்மையும் இல். [யார்

கண்ணோட்டம் இல்லாதவர் கண் இல்லாதவரேயாவர். கண் உடையவர் கண்ணோட்டம் இல்லாதிருத்தலும் இல்லை.

8 கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை யுடைத்திவ் வுலகு.

தங்களுடைய கடமை கெடாமல், கண்ணோட்டம் உடையவராக இருக்க வல்லவாக்கு, இவ்வுலகம் உரிமையுடையதாம்.

9 ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணும், கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

தண்டித்தற்குரிய குற்றம் உடையவரிடத்திலும் கண்ணோட்டம் செய்து, அக்குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பே தலைசிறந்ததாம் (579)

10 பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர்; நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

எல்லோராலும் பாராட்டத் தகுந்த கண்ணோட்டமாகிய நாகரிகத்தை விரும்புகின்றவர், தம்மோடு பழகியவர் தமக்கு நஞ்சு இடுவதைப் பார்த்தும் அதை உண்டு, பின்னும் அவருடன் பொருந்தி வாழ்வர். (580)

59—ஒற்றுடல்

ஒற்றரை ஆளும் தன்மை

1 ஒற்றும், உரைசான்ற நூலும், இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.

ஒற்றர், புகழ் நிறைந்த நீதிநூல்; ஆகிய இந்த இரண்டு கருவிகளையும் அரசன் தனக்குரிய இருகண்களாகத் தெளியக் கடவன். (581)

2 எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை; எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

எல்லாரிடத்திலும் நிகழ்கின்றவை எல்லாவற்றையும், நாள் தோறும் ஒற்றரைக் கொண்டு விரைவாக அறிதல் அரசனுக்கு உரிய தொழிலாம். (582)

3 ஒற்றினூன் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல்.

நாட்டுச் செய்திகளை ஒற்றரைக் கொண்டு தெரிந்து அவற் றினால் பகைவர் காரியங்களைத் தெரிந்து கொள்ளாத அரசன் வெற்றி அடைய மாட்டான். (583)

4 வினைசெய்வார், தம்சுற்றம், வேண்டாதார்; என்
அனைவரையும் ஆராய்வது ஒற்று. [ருங்கு

அலுவலாளர்கள், தம்முடைய சுற்றத்தார்கள், பகைவர் கள், என்ற எல்லோரையும் ஆராய்ந்தறிபவனே ஒற்றன். (584)

5 கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

சந்தேகப்படாத உருவத்துடன், சந்தேகப்பட்டுப் பார்த்த வருடைய கண்பார்வைக்கு அஞ்சாமல், எவ்வகை உபாயத்தால் முயன்றாலும் மனத்திலுள்ள எண்ணத்தை வெளிப்படுத்தாமல், இருக்க வல்லவனே ஒற்றன். (585)

6 துறந்தார் படிவத்த ராகி, இறந்தாராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று.

முற்றத்துறந்தவர் வேடத்தையுடையவராய், செல்லுதற்கரிய இடங்களிலும் சென்று ஆராய்ந்து, ஐயுற்றோர் பிடித்து யாதுசெய்தாலும், தன்னைக் காட்டிக் கொள்ளாதவனே ஒற்றன். (586)

7 மறைந்தவை கேட்க வற்றாகி, அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று.

மறைத்து வைக்கப்பட்ட அரிய செய்திகளையும் கேட்டறிய வல்லவனாகி, அங்ஙனம் அறிந்த செய்திகளை ஐயமின்றித் துணியவும் வல்லமையுடையவனே ஒற்றன். (587)

8 ஒற்றிறுற்றித் தந்த பொருளையும், மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

ஓர் ஒற்றன் மறைவாய் அறிந்து வந்து தெரிவித்த செய்தியையும் மற்றுமோர் ஒற்றனைக் கொண்டு அறிந்துவரச் செய்து, இரண்டையும் சரிபார்த்து உண்மை தெரிந்து கொள்ளக் கடவர். (588)

9 ஒற்றிறுற் றுணராமை ஆள்க; உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்.

ஓர் ஒற்றனை மற்றோர் ஒற்றன் உணராதபடி ஆளுதல் வேண்டும். அவ்விதம் ஆளப்பெற்ற மூன்று ஒற்றரின் சொல் ஒத்திருக்குமாயின் அதனை உண்மை என்று துணியக்கடவர்.

10 சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க; செய்யின்
புறப்படுத்தா னாகும் மறை.

ஒற்றனுக்குச் செய்யும் சிறப்புகளைப் பிறர் அறியுமாறு அரசன் செய்யாதிருக்க கடவன். அவ்விதம் செய்தால், இரகசியத்தைத் தானே வெளிப்படுத்தினவனாவான். (590)

60—ஊக்கமுடைமை

மனத்தூளர்ச்சியின்றிச் செய்கையில் கிளர்ச்சியுறுதல்

1 உடையர் எனப்படுவது ஊக்கம்; அஃதில்லார்
உடையது உடையரோ மற்று.

ஒருவரை, ''உடையவர்'' என்று சிறப்பாகச் சொல்லத் தக்கது ஊக்கமுடைமையே. அந்த ஊக்கமில்லாதவர் வேறு எதைப்பெற்றிருந்தாலும உடையவர் ஆவரோ? ஆகார். (591)

2 உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

ஒருவருக்கு ஊக்கமுடைமையே நிலைபெற்ற உடைமை யாம். மற்றப் பொருளுடைமையானது நிலைபெறாமல் நீங்கி விடுவதாம். (592)

3 ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார்; ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்.

ஊக்கமுடைமையை உறுதியான கைப்பொருளாகப் பெற் றவர், தம் செல்வத்தை யெல்லாம் இழந்தபொழுதும், ''செல் வத்தை இழந்து விட்டோமே!'' என்று கலங்கமாட்டார்கள்

4 ஆக்கம் அதர்வினைப்ச் செல்லும்; அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

அசைவில்லாத ஊக்கத்தை உடையவனின் இருப்பிடத்தை ஆக்கமானது தானே வழிகேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

5 வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

நீர்ப்பூக்களின் தாளினது நீளம்; அவை நின்ற நீரின் அளவை உடையதாம். அதுபோல, மக்களின் வாழ்க்கையில் உயர்வும் அவர்களின் ஊக்கத்தின் அளவினதாகும் (595)

6 உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

எண்ணுவதெல்லாம் உயர்வானவற்றையே எண்ணக் கடவர். அது அப்போது கைகூடாமற் போனாலும் எப்போதாவது கைகூடும் தன்மையுடையது. (596)

7 சிதைவிடத்து ஒல்கார் உரவோர்; புதையம்பிற்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு.

உடம்பு முழுதும் அம்புகளினால் புண்பட்டபொழுதும், யானை நின்ற விடத்திலே நிலையாக நின்று தன் பெருமையை நிலைநாட்டும். அதுபோல, ஊக்கமுடையவர் தமக்கு அழிவு வந்தவிடத்திலும், தளர்ச்சியுறமாட்டார். (597)

8 உள்ளம் இலாதவர் எய்தார்; உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.

"இவ்வுலகில் நாம் வள்ளல்தன்மையுடையோம்" என்னும் பெருமிதத்தை, ஊக்கம் இல்லாதவர் பெறமாட்டார்கள். (598)

9 பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

யானை எல்லா மிருகங்களிலும் உருவத்தால் பெரியது; மேலும் கூர்மையான கொம்புகளை உடையது; எனினும் ஊக்கமுள்ளதாகிய புலி தாக்கினால் அது அஞ்சும். (599)

10 உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை; அஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

ஒருவனுக்குத் திண்ணிய வலிமையாவது ஊக்கமிருத்தியே. அந்த ஊக்கம் இல்லாதவர் மரங்களை வடிவத்திலும் மக்களைப் போன்றிருத்தலே தவிர வேறில்லை (600)

61—மடியின்மை

சோம்பல் இல்லாமை

1 குடிஎன்னும் குன்ரு விளக்கம், மடிஎன்னும்
மாசுஊர மாய்ந்து கெடும்.

தான் பிறந்த குடியாகிய மங்காவிளக்கானது, அவனைச் சோம்பல் எனனும் இருள் நெருங்க ஒளி மங்கி அணைந்து விடும். (601)

2 மடியை மடியா ஒழுகல், குடியைக்
குடியாக வேண்டு பவர்.

தாம் பிறந்த குடியை மேன்மேல் உயரும் நற்குடியாகச் செய்ய விரும்புவோர், சோம்பலைச் சோம்பலாகவே கொண்டு முயற்சியுடன் நடக்கக் கடவர். (602)

3 மடிமடிக் கொண்டொழுகும் பேதை, பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து.

அழிக்குந் தன்மையுடைய சோம்பலைக் கைக்கொண்டு வாழ்கின்ற அறிவிலி பிறந்த குடியானது அவனுக்கு முற்கூட்டி அழிந்துவிடும். (603)

4 குடிமடிந்து குற்றம் பெருகும்; மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு.

சோம்பலில் வீழ்ந்து, சிறந்த முயற்சி இல்லாதவருக்கு, குடியின் பெருமையழிந்து குற்றங்களும் பெருகும். (604)

5 நெடுநீர், மறவி, மடி,துயில் நான்கும்,
கெடுநீரார் காமக் கலன்.

காலந்தாழ்த்தல், மறதி, சோம்பல், தூக்கம்: ஆகிய இந்த நான்கு குணங்களும், கெட்டழியுந் தன்மையுடையார் விரும்பி ஏறும் மரக்கலமாம். (605)

6 படியுடையார் பற்றமைந்தக் கண்ணும், மடியுடையார் மாண்பயன் எய்தல் அரிது.

நிலத்தை யாளும் அரசருடைய ஆதரவு வலியத் தமக்குக் கிடைத்திருந்தாலும், சோம்பலுடையவர் மிகுந்த பயனை அடைதல் இயலாது. (606)

7 இடிபுரிந்து எள்ளுஞ்சொற் கேட்பர், மடிபுரிந்து மாண்ட உஞற்றி லவர்.

சோம்பலைக் கைக்கொண்டு, சிறந்த முயற்சியின்றி வாழ் வோர், பிறர் இடித்துப் பேசி, இகழ்கின்ற சொற்களைக் கேட்கும் நிலைமை அடைவர். (607)

8 மடிமை குடிமைக்கண் தங்கின், தன் ஒன்னூர்க்கு அடிமை புகுத்தி விடும்.

நற்குடிப் பிறந்த ஒருவனிடம் சோம்பல் வந்து பொருந் திஞல், அது அவனை, அவனுடைய பகைவருக்கு அடிமைப் படுமாறு செய்துவிடும். (608)

9 குடியாண்மை உள்வந்த குற்றம், ஒருவன் மடியாண்மை மாற்றக் கெடும்.

ஒருவன் சோம்பலை ஆளுந்தன்மையை அடியோடு ஒழித்து விட்டால், அவனுடைய குடியிலும் ஆண்மையிலும் இருந்த குற்றங்கள் நீங்கிவிடும். (609)

10 மடியிலா மன்னவன் எய்தும்; அடியளந்தான் தாஅயது எல்லாம் ஒருங்கு.

தன் அடியால் உலகத்தை அளந்த கடவுள் தாவியளந்த நிலப்பரப்பு முழுமையும், சோம்பல் இல்லாத அரசன் ஒருங்கே அடையப் பெறுவான். (610)

62—ஆள்வினையுடைமை

விடாமுயற்சி

1 அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்;
பெருமை முயற்சி தரும்.

"இது நம்மால் செய்தற்கரியது" என்று சோர்வடையாமல் இருக்கக்கடவர்; அச்செயலை முடித்தற்குரிய பெருமையை முயற்சியே உண்டாக்கும். (611)

2 வினைக்கண் வினைகெடல் ஓம்பல்; வினைக்குறை
தீர்ந்தாரில் தீர்ந்தன்று உலகு.

செய்யவேண்டிய தொழிலைச் செய்யாமல் விட்டவரை உலகம் கைவிட்டு விடும். ஆதலால் தொழில் செய்யாமல் செயலற்றிருத்தலை ஒழியக்கடவர். (612)

3 தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

எல்லோர்க்கும் உதவி செய்தல் என்னும் மேம்பாடு, முயற்சி என்னும் சிறந்த பண்பாட்டிலே நிலைத்திருக்கின்றது.

4 தாளாண்மை இல்லாதான் வேளாண்மை, பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

முயற்சியில்லாதவன் பிறர்க்கு உதவி செய்தல் என்பது, படையைக்கண்டஞ்சும் பேடியொருவன் கையில் வாளேயேந்தி நிற்றல்போல், பயனில்லையாம் (614)

5 இன்பம் விழையான்; வினைவிழைவான்; தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

தனக்கு இன்பத்தை விரும்பாதவனாகித் தொழில் முடித்தலையே விரும்புகிறவன், தன் சுற்றத்தாரின் துன்பங்களை நீக்கி அவர்களைத் தாங்கும் தூண் ஆவான். (615)

6 முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

முயற்சியானது ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சியில்லாதிருத்தல் அவனுக்கு வறுமையை உண்டாக்கும். (616)

7 மடியுளாள் மாமுகடி என்ப; மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்.

கரியமூதேவி ஒருவனுடைய சோம்பலிலே குடியிருப்பாள். திருமகள் சோம்பலில்லாதவனுடைய முயற்சியினிடத்தில வந்து குடியிருப்பாள் என்று அறிந்தோர் கூறுவர். (617)

8 பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி.

நன்மையை விரும்பிக்கும் ஊழ் இல்லாதிருத்தல் யார்க்கும் பழியாகாது. அறியவேண்டியவற்றை யறிந்து முயற்சியில்லாதிருத்தலே பழியாம். (618)

9 தெய்வத்தான் ஆகாது எனினும், முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

ஊழ்வசத்தால் ஒரு செயல் முடியாமற்போனாலும், முயற்சியானது உடம்பு வருத்திய வருத்தத்தின் அளவிற்குக் கூலியைக் கொடுக்கும். (619)

10 ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

சோர்வு இல்லாமல் இடைவிடாது முயல்கின்றவர், ஊழின் வலிமையையும் தோல்வியுறச்செய்வர். (620)

63—இடுக்கண் அழியாமை

துன்பம் வந்தவிடத்து மனங்கலங்காமை

1 இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

துன்பம் வருமிடத்துக் கலங்காமல் மனம் மகிழ்ச்சியுறக் கடவர். அத்துன்பத்தை நெருக்கி எதிர்த்து வெற்றிகொள்ள வல்லது, அம்மகிழ்ச்சி போன்று வேறில்லை. (621)

2 வெள்ளத் தனைய இடும்பை, அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

வெள்ளத்தைப்போல அளவின்றி வருகின்ற துன்பங்கள், அறிவுடையான் தன் உள்ளத்தினுல் நினைக்க, அந்நினைத்த அளவாலே, அவை அழியும். (622)

3 இடும்பைக்கு இடும்பை படுப்பர்; இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

ஒரு காரியத்தைச் செய்யும்பொழுது, நடுவிலே வந்த துன்பத்திற்கு வருந்தாதவர், அத்துன்பத்திற்குத் துன்பத்தை உண்டாக்குவோராவர். (623)

4 மடுத்தவா யெல்லாம் பகடன்னுன் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.

தடைப்பட்ட இடங்களிலெல்லாம், வண்டியை இழுத்துச் செல்லும் எருதைப் போல, தொழிலேமேற்கொண்டு செலுத்த வல்லவனே வந்தடைந்த துன்பமே துன்பப்படும். (624)

5 அடுக்கி வரினும், அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்.

இடைவிடாமல், மேன்மேலும் வந்தனவென்றாலும், கலங்காத மனவலிமையுடையவனை வந்தடைந்த அத்துன்பங்களே துன்பமடையும். (625)

6 அற்றேம்என்று அல்லற் படுபவோ? பெற்றேம்என்று ஓம்புதல் தேற்ற தவர்.

செல்வம் கிடைத்தபொழுது, "இதனைப் பெற்றோம்" என்று எண்ணி, உலோபம் செய்தலே அறியாதவர், வறுமை யுற்ற பொழுதும், "பொருளே இழந்து விட்டோமே" எனத் துயரப்படுவார்களோ? (626)

7 இலக்கம் உடம்பு இடும்பைக்கென்று கலக்கத்தைக் கையாருக் கொள்ளாதாம் மேல்.

மேலோர், "உடம்பு துன்பத்திற்கு இலக்கானது" என்று தெளிந்து, துன்பம் வந்தபோது மனங்கலங்குவதைத் தம் கொள்கையாகக் கொள்ளார். (627)

8 இன்பம் விழையான், இடும்பை இயல்பென்பான் துன்பம் உறுதல் இலன்.

இன்பத்தை விரும்பாதவனும், "துன்பம் அடைதல் இயற்கை" என்று தெளிந்திருப்பவன் துன்பம் வந்தபொழுது துயரமடைய மாட்டான். (628)

9 இன்பத்துள் இன்பம் விழையாதான், துன்பத்துள் துன்பம் உறுதல் இலன்.

இன்பம் வந்த இடத்தில், அந்த இன்பத்தை மனத்தால் விரும்பாதவன், துன்பம் வந்த இடத்திலும், அத்துன்பத்தை அடைய மாட்டான். (629)

10 இன்னுமை இன்பம் எனக்கொளின், ஆகும், தன் ஒன்னுர் விழையும் சிறப்பு.

ஒருவன், துன்பத்தையே இன்பமாக ஏற்றுக் கொள்வா னுனுல், தன்பகைவர் நன்கு மதித்தற்குரிய உயர்வு அவனுக்கு உண்டாகும். (630)

அங்கவியல்

64—அமைச்சு

அமைச்சனது தன்மை

1 கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

தொழில் செய்தற்குரிய கருவியும், அதற்குரிய காலமும் செய்யும் ஆற்றலும், செய்யும் அரிய செய்கையும் ஆகிய இவை யாவும் சிறப்புறச் செய்பவனே அமைச்சன். (631)

2 வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை
ஐந்துடன் மாண்டது அமைச்சு. [யோடு

அஞ்சாமை, குடிப்பிறப்பு, காக்குந்திறமை, கற்றறிந்த நல்லறிவு, முயற்சி ஆகிய இவ் ஐந்தும் சிறப்பாக அமைந்தவனே அமைச்சன். (632)

3 பிரித்தலும், பேணிக் கொளலும், பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு.

பகைவர்க்குத் துணைசெய்வாரைப் பிரித்துவிடுதலும், நமக் குரியவரைப் பிரியாமல் அணைத்துக்கொள்ளுதலும், பிரிந்த வரைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுதலும், ஆகிய செயல்களில் வல்லவனே அமைச்சன். (633)

4 தெரிதலும், தேர்ந்து செயலும், ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.

செய்யத்தக்க செய்கையை ஆராய்தலும், அதற்குரிய வழி களைத் தெரிந்து செய்தலும், 'இதுவே செய்யத்தக்கது' என்று முடிவாகக் கூறுதலும் வல்லவனே அமைச்சன். (634)

5 அறனறிந்து, ஆன்றமைந்த சொல்லான் எஞ்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை. [ஞான்றும்

அறச்செயல்களைத் தெரிந்து, அறிவால் நிரம்பியமைந்த சொற்களையுடையவனாகி, எக்காலத்திலும் செயல் செய்யுந் திறங் களையறிந்தவனே, அரசனுக்கு ஆராய்ந்து கூறத்தக்கதுணைவ னாவான். (635)

6 மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாஉள முன்நிற் பவை?

இயற்கையான நுண்ணறிவைச் செயற்கையான நூலறி வுடன் வாய்க்கப்பெற்ற மந்திரிகளுக்கு, மிக்க நுட்பமான ஆலோசனைகளாய் எதிரே நிற்பவை எவை உள்ளன? எவை யுமில்லை. (636)

7 செயற்கை அறிந்தக் கடைத்தும், உலகத்து இயற்கை அறிந்து செயல்.

நூல்முறைப்படி தொழில் செய்யும் வகைகளை அறிந் திருந்தாலும், உலக இயற்கையை அறிந்து அதனோடு பொருந் துமாறு செய்யக்கடவர். (637)

8 அறிகொன்று அறியான் எனினும், உறுதி உழைஇருந்தான் கூறல் கடன்.

அறிவு கூறுவாரின் அறிவை அழித்துத் தானும் அறியா தவனுக அரசன் இருந்தாலும், அமைச்சன் அவனுக்கு உறுதி யானவற்றை எடுத்துரைத்தல் கடமை. (638)

9 பழுதெண்ணும் மந்திரியின், பக்கத்துள் தெவ்வோர் எழுபது கோடி யுறும்.

தீங்கு செய்ய எண்ணும் அமைச்சன் ஒருவனைக்காட்டிலும், எழுபதுகோடிப் பகைவர் அருகிலிருந்தாலும் கெடுதல் இல்லை.

10 முறைப்படச் சூழ்ந்தும், முடிவிலவே செய்வர்; திறப்பாடு இலாஅ தவர்.

செயல் முடிக்குக் திறமையில்லாதவர், முன்கூட்டி முறை யாகத் திட்டமிட்டிருந்தும், முற்றுப்பெறச் செய்ய மாட்டார்.

65—சொல்வன்மை

திறமையாகச் சொல்லும் ஆற்றல்

1 நாநலம் என்னும் நலனுடைமை; அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் இன்று.

நாவன்மை என்னும் நன்மை ஒரு செல்வமாகும் அந்த நாநலம் மற்றெல்லா நலங்களிலும் அடங்காத தனிச் சிறப்புடையது. (641)

2 ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்,
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

சொல்லினால் ஒருவனுக்கு ஆக்கமும் கேடும் நேரிடுமாகையால், அவன், சொல்லிலே தவறு நேராமல் பாதுகாத்துப் போற்றக்கடவன். (642)

3 கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க், கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

கேட்டவர்களைத் தன்வசப்படுமாறு சொல்லவல்ல தன்மை பொருந்தி, கேளாதவரும் கேட்க விரும்புமாறு சொல்வதே 'சொல்வன்மை' எனப்படும். (643)

4 திறனறிந்து சொல்லுக சொல்லை; அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்.

சொல்வன்மையைப் போன்ற அறமும் பொருளும் இல்லை. ஆதலால், சொல்லின் திறத்தையறிந்து சொற்களை வழங்கக் கடவர். (644)

5 சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

மற்றோர் சொல், அந்தச் சொல்லை வெல்லுஞ்சொல்லாக இல்லாதிருக்கும்படி ஆராய்ந்து, பின், தான் சொல்லத்தகுந் தனைச் சொல்லக்கடவன் (645)

6 வேட்பத்தாம் சொல்லிப், பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.

பிறர் கேட்க விரும்பும் வண்ணம் தாம் சொல்லி, பிறர் சொல்லும சொற்களின் பயனே ஆராய்ந்தேற்றுக் கொளலுதல், குற்றமற்ற சிறப்பையுடைய பெரியோரின் கொள்கையாம் (646)

7 சொலல்வல்லன், சோர்விலன், அஞ்சான், அவனே
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

தன் கருத்தை நன்கு விளக்கிச் சொல்லும் வல்லமையுடையவனாகி, சொல்லும் கருத்துக்களில் மறதியில்லாதவனாகி, அச்சம் இல்லாதவனுமாகிய ஒருவனை மாறுபாட்டினால் வெல்வது எவர்க்கும் அருமையானது. (647)

8 விரைந்து தொழில்கேட்கும் ஞாலம், நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

சொல்லப்படும் சொற்களை வரிசையாகக் கோத்து இனிமையாகச் சொல்லுதலில் வல்லமையுடையவர்களைப் பெற்றால். இவ்வுலகமானது விரைவிலே அவருடைய ஏவலைக கேட்டு நடக்கும். (648)

9 பலசொல்லக் காமுறுவர்; மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

குற்றமில்லாதவையாகிய சுருங்கிய சில சொற்களைச் சொல்ல அறியாதவரே, விரிவாகப் பலசொற்களைப் பேசுவதற்கு விரும்புவார்கள். (649)

10 இணரூழ்த்தும் நாறா மலரனையர்; கற்றது
உணர விரித்துரையா தார்.

தாம் கற்றறிந்த நூற்கருத்துக்களைப் பிறர் புரிந்துகொள்ளும்படி விளக்கிச் சொல்ல முடியாதவர், கொத்தாக மலர்ந்தும் மணங்கமழாத மலர் போன்றவராவர். (650)

66 — வினைத்தூய்மை

செயல்கள் நன்மையுடையன வாதல்

1 தூணைநலம் ஆக்கம் தருஉம்; வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

தூணைவர்களின் நன்மை ஒருவனுக்கு ஆக்கத்தை மட்டும் கொடுக்கும். அவன் செய்யும் செய்கையின் நன்மையோ, அவனுக்கு வேண்டிய எல்லாச் சிறப்புக்களையுங் கொடுக்கும்.

2 என்றும் ஒருவுதல் வேண்டும், புகழொடு
நன்றி பயவா வினை.

இம்மையில் புகழையும், மறுமையில் புண்ணியத்தையும் தராத செயல்களை; எக்காலத்திலும் செய்யாது நீங்கக் கடவன். (652)

3 ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை,
ஆஅதும் என்னும் அவர்.

"மேன்மேலும் உயர்வடைய வேண்டும்" என்னும் விருப்பம் உடையவர், தம் புகழ் கெடுவதற்கும் காரணமான செயலைச் செய்யாமல் நீங்க வேண்டும். (653)

4 இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

கலக்கமில்லாத தெளிந்த அறிவினையுடைய பெரியோர், துன்பத்திற் சிக்கிய காலத்திலும், அத்துன்பந்தீர்வதற்காகக் கூட இழிவான செயல்களைச் செய்ய மாட்டார். (654)

5 எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

"என்ன காரியஞ் செய்தோம்!" என்று தானே பின்பு வருந்தத்தக்க செயல்களைச் செய்யாதிருக்கக் கடவன்; ஒரு சமயம் தவறிச் செய்து விட்டால், திரும்ப அத்தகைய செயல்களைச் செய்யாதிருத்தலே நன்மையாம். (655)

6 ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும், செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை.

தன்னைப் பெற்ற தாய் பசித்திருக்க அதனைக் காணத் தக்க வறுமையுடையவனாயினும், சான்றோர் பழித்தற்குக் காரணமான காரியங்களைச் செய்யாதிருக்கக் கடவன். (656)

7 பழிமலிந்து எய்திய ஆக்கத்தின், சான்றோர் கழிநல் குரவே தலை.

பழியை ஏற்றுக்கொண்டு தேடிய செல்வத்தைக்காட்டிலும், சான்றோர் மிக்க வறுமையோடிருத்தல் சிறந்ததாம். (657)

8 கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு, அவைதாம் முடிந்தாலும் பீழை தரும்.

அறிவுடையோரால் 'ஆகாதவை' யென விலக்கப்பட்ட செயல்களைத் தாமும் விலக்காமல் செய்தவர்க்கு, அவை நிறை வேறினாலும் துன்பத்தையே கொடுக்கும். (658)

9 அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும் பிற்பயக்கும் நற்பா லவை.

பிறர் அழுது வருந்தும்படி அபகரித்த பொருள் முழுதும், தானும் அவ்வாறு அழுது வருந்த, ஒழியும். நல்வழியில் வந்த பொருள் இழந்துபோனாலும பிறகு பயனைக் கொடுக்கும். (659)

10 சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல், பசுமண் கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று.

தீயவழியிற் பொருளைச் சம்பாதித்துப் பத்திரப்படுத்தி வைத்தல், பச்சைமண்ணாலான பாத்திரத்தில் நீரை நிரப்பி வைத்தல் போலாம். (660)

67—வினைத்திட்பம்

தொழிலைச் செய்தற்கேற்ற மனவுறுதி

1 வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் மற்றைய எல்லாம் பிற.

ஒரு தொழிலைச் செய்யுமிடத்துத் ''திண்மை'' என்று சொல்லப்படுவது மனவுறுதியே. மற்றைய வலிமைகளெல்லாம் பிறகுதான். (661)

2 ஊழையுரால்; உற்றபின் ஒல்காமை; இவ்விரண்டின் ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.

இடையூறு வருவதற்கு முன்பே வராமல் தடுத்துக் கொள்ளுதல், இடையூறு வந்துவிட்டால் அதற்குச் சோர்வடையாதிருத்தல்; ஆகிய இவ்விரண்டு மார்க்கமே வினைத்திட்பம் என்பது ஆராய்ச்சியுடையார் கொள்கை. (662)

3 கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை; இடைக்கெற்று விழுமம் தரும். [கொட்கின்

இறுதியிலே வெளிப்படும்படி காரியத்தை மறைத்துச் செய்வதே ஆண்மையாகும் நடுவிலே, வெளிப்பட்டால், தவிர்க்க முடியாத துன்பத்தைக் கொடுக்கும். (663)

4 சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்.

'இந்தத் தொழிலை இவ்விதத்தால செய்து முடிப்போம்' என்று சொல்லிவிடுதல் யாவர்க்கும் எளியன. ஆனால், சொல்லியபடி செய்து முடித்தல் அரியன. (664)

5 வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம், வேந்தன்கண் ஊறெய்தி உள்ளப் படும்.

செய்கைத் திறமையால் பெருமையடைந்து உயர்ந்தோர்களின் வினைத்திட்பமானது, அரசனிடத்திலும் தெரிந்து, மதிக்கப் பெறும். (665)

6 எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

எண்ணியவர் எண்ணிய வண்ணம் செய்து முடிக்கும் திட்பம் உடையவராயிருக்கப் பெற்றால், அவர் தாம் எண்ணிய வைகளே எண்ணிய விதமே அடைவார்கள். (666)

7 உருவுகண்டு எள்ளாமை வேண்டும்; உருள்பெருந்
அச்சாணி அன்னார் உடைத்து. [தேர்க்கு

உருளுகின்ற பெரிய தேர்க்கு, அச்சில் அமைந்து தாங்கும் சிறு ஆணிபோன்ற விவேகத்திட்பம் உடையாரும் உலகத்தில் உள்ளனர். ஆதலால், அச்சாணிபோன்ற அவர்களின் உருவச் சிறுமையைக் கண்டு இகழாதிருக்கக் கடவர் (667)

8 கலங்காது கண்ட வினைக்கண், துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.

மனங்கலங்காமல் செய்வதற்காக, ஆராய்ந்தேற்றுக் கொண்ட தொழிலில், சோம்பல் இல்லாமலும் காலம் தாழ்த்தாமலும் முயன்று முடிக்கக் கடவர். (668)

9 துன்பம் உறவரினும் செய்க; துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

மிகுதியாகத் துன்பம் வந்தாலும், இறுதியிலே இன்பம் கொடுக்கும் செய்கையைத் துணிவுடன் செய்து முடிக்கக் கடவர். (669)

10 எனைத்திட்பம் எய்தியக் கண்ணும், வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.

வேறு எந்த விதமான உறுதிப்பாடு உடையவராயிருந்தாலும், செய்யுந்தொழிலிலே உறுதிப்பாடு இல்லாதவரை, உலகத்தார் விரும்பி ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். (670)

68—வினைசெயல் வகை

தொழிலைச் செய்யும் வகை

1 • சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்; அத்துணிவு தாழ்ச்சியுள் தாங்குதல் தீது.

ஆராய்ச்சியின் முடிவிடம் தொழிலைச் செய்யத் துணிவு கொள்ளுதல், அவ்விதம் துணிவுகொண்ட ஒரு தொழிலைக் காலந் தாழ்த்திச் செய்தல் குற்றமாம். (671)

2 தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க தூங்காது செய்யும் வினை.

தாமதித்துச் செய்யத் தக்க காரியங்களைத் தாமதித்துச் செய்யக் கடவர். தாமதிக்காமல் விரைந்து செய்யத்தக்க காரியங்களை தாமதிக்காது செய்யக்கடவர். (672)

3 ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால் செல்லும்வாய் நோக்கிச் செயல்.

இயன்ற இடங்களிலெல்லாம் காரியத்தை நிறுத்தாமல் செய்தல் நலம். இயலாத இடத்தில், எளிதில் முடிக்கத்தக்க உபாயங்களை உற்று நோக்கிச் செய்தல் நலம். (673)

4 வினைபகை என்றிரண்டின் எச்சம், நினையுங்கால் தீஎச்சம் போலத் தெறும்.

செய்யத் தொடங்கிய தொழிலை அரைகுறையாக விடுதல், அழிக்கத் தொடங்கிய பகைவனை அரைகுறையாக விடுதல், ஆகிய இவ்விரண்டும் ஆராயுமிடத்து, தீயை அரைகுறையாய் அணைக்காமல் விட்டுவைத்தல்போல, வளர்ந்து கேடு விளைக்கும் (674)

5 பொருள், கருவி, காலம், வினை, இடனேடுஐந்தும் இருள்தீர எண்ணிச் செயல்.

தொழிலைச்செய்வதற்கு வேண்டிய பொருள், கருவி, காலம், தொழிசெய்யும் திறமை, இடம் ஆகிய இந்த ஐந்தையும் மயக்கமில்லாமல் ஆலோசித்துச் செய்யக்கடவன். (675)

6 முடிவும், இடையூறும், முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

தொழில் முடிவுறுவதற்கேற்ற முயற்சி, இடையில் வரும் துன்பம் முடிந்தபின் உண்டாகும் பெரிய பயன், ஆகியவற்றை யெல்லாம் ஆராய்ந்து செய்யக்கடவன். (676)

7 செய்வினை செய்வான் செயல்முறை, அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.

ஒரு தொழிலைச் செய்பவன் செய்யும் முறையாவது, அத் தொழில் நுட்பங்களை எல்லாம் நனகறிந்தவனுடைய உள்ளக் கருத்தைத்தான் தெரிந்து கடத்தலாம். (677)

8 வினையான் வினையாக்கிக் கோடல் நனகவுள்
யானையால் யானையாத் தற்று.

ஒரு தொழிலைச் செய்யும் ஒருவன், அதைக்கொண்டு இன்னொரு தொழிலையும் நிறைவேற்றிக் கொள்வது, எப்படி என்றால் மதத்தால் நனைந்த கன்னத்தையுடைய ஓர் யானை யைக்கொண்டு வேறோர் யானையைப் பிடித்தல் போலாம். (678)

9 நட்டார்க்கு நல்ல செயலின், விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்.

நண்பர்களுக்கு உதவிகளைச் செய்வதைக் காட்டிலும், பகைவர்களைத் தமக்கு நட்பாக்கி கொள்ளுதல் விரைந்து செய்யத்தக்கதாம். (679)

10 உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

வலிமை குறைந்தவர், தம்மைச் சேர்ந்தவர் நடுங்குவதற் காகத் தாமும் அஞ்சி, தம்கருத்து நிறைவேறும்வரை, வலிமை மிகுந்தவரைப் பணிந்து ஏற்றுக் கொள்வார்கள். (680)

69—தூது

தூது செல்வோரின் இலக்கணம்

1 அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், வேந்தவாம் பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

அன்புடையவனுதல், தகுதியான குடிப்பிறப்பு, அரசர் விரும்பும் பண்புடைமையாகிய இம்மூன்றும் தூது உரைப்பவனுக்குரிய பொது இலக்கணங்கள். (681)

2 அன்பு,அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை தூதுரை இன்றி யமையாத மூன்று [ப்பார்க்கு

அரசனிடத்து அன்புடைமை, அவனுக்கு ஆவனவற்றை அறியும் அறிவுடைமை, ஆராய்ந்து சொல்லும் சொல்வன்மை; ஆகிய இம்மூன்றும், தூது உரைப்பவர்க்குரிய இன்றியமையாத இலக்கணங்கள். (682)

3 நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள் வென்றி விளையுரைப்பான் பண்பு.

வேலினையுடைய வேற்றரசரிடத்துச் சென்று, தன் அரசனுக்கு வெற்றியைத் தருகின்ற செயலைச் சொல்பவனுக்குரிய சிறந்த இலக்கணமாவது; நூல்களைக் கற்றறிந்த செல்லோரினும் மிக்க நூல்வல்லவனாக விளங்குதலாம். (683)

4 அறிவு,உரு, ஆராய்ந்த கல்வி,இம் மூன்றன் செறிவுடையான் செல்க வினைக்கு.

இயற்கையறிவு, கண்டார் விரும்பத் தகுந்த தோற்றப் பொலிவு, ஆராய்ச்சி பொருந்திய கல்வி ஆகிய இம்மூன்றின் பெருக்கம் உடையவன் தூதுரைக்குந் தொழிலுக்குச் செல்லக் கடவன். (684)

5 தொகச்சொல்லித் தூவாத நீக்கி, நகச்சொல்லி நன்றி பயப்பதாம் தூது.

காரியங்களைத் தொகுத்துச் சொல்லி, அவற்றுள் பயனில்லாதவற்றை நீக்கி, கேட்பவர் மனம் மகிழுமாறு சொல்லித் தன் தலைவனுக்கு நன்மையுண்டாக்க வல்லவனே தூதுவனாவான்.

6 கற்றுக்,கண் அஞ்சான், செலச்சொல்லிக், காலத்
தக்க தறிவதாம் தூது. [தால்

நீதி நூல்களைக் கற்று, பகைவருடைய கொடிய பார்வைக்கு அஞ்சாமல், தான் சென்ற காரியத்தைக் கேட்பவருடைய மனத்திற் பதியும்படி சொல்லி, உரிய காலத்தில் அறியத் தக்கதை அறிய வல்லவனே தூதனாவான் (686)

7 கடனறிந்து, காலம் கருதி, இடனறிந்து,
எண்ணி உரைப்பான் தலை.

தன் கடமையை உணர்ந்து, அதைச் செய்வதற்குரிய காலத்தைத் தெரிந்து, அதற்கேற்ற இடத்தையும் அறிந்து, ஆராய்ந்து கூறுபவனே தூதருள் சிறந்தவனாவான். (687)

8 தூய்மை, துணைமை, துணிவுடைமை, இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

தூய ஒழுக்கம் உடையவனாதலும், தகுந்த துணைவரை உடையவனாதலும், துணிவு உடையவனாதலும் ஆகிய இம் மூனறும் உண்மையாகப் பொருந்தியிருத்தல், தன் அரசன் சொல்லிய முறைப்படி வேற்றரசருக்குத் தூது செல்வோனின் சகுதியாம். (688)

9 விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான், வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

குற்றமான சொற்களே வாய்தவறியும் சொல்லாத திட்பம் உடையவனே, தன் அரசன் சொல்லியனுப்பிய செய்தியை வேற்றரசரிடம் சொல்லுதற்குரியவனாவான். (689)

10 இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது.

தனக்கு அழிவு வருவதாயிருந்தாலும், அதற்காக அஞ்சி விட்டு விடாமல், தன் அரசனுக்கு நன்மையுண்டாகுமாறு செய்கின்றவனே தூதனாவான். (690)

70—மன்னரைச் சேர்ந்தொழுகல்

அரசரிடம் பழகும் விதம்.

1 அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க;
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

மாறுபாடு உடைய மன்னரைச் சார்ந்து வாழ்கின்றவர், அவரை விட்டு நீங்காமலும், மிக நெருங்காமலும், நெருப்பின் அருகிலே குளிர்காய்வோரைப் போலப் பழகக் கடவர். (691)

2 மன்னர் விழைப விழையாமை, மன்னரால்
மன்னிய ஆக்கம் தரும்.

அரசர் விரும்புகின்றவற்றைத் தாமும் விரும்பாதிருத்தல், அரசரால் நிலைபெற்ற பெருமையைக் கொடுக்கும். (692)

3 போற்றின் அரியவை போற்றல், கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது.

அரசரைச் சார்ந்து வாழ்வோர், தம்மைக் காத்துக் கொள்ள விரும்பினால், அரிய பிழைகள் தம்மிடம் நேராமற் காக்கக்கடவர். அரசர் சந்தேகப்பட்டபிறகு அவர்களைத் தெளியச் செய்தல் எவர்க்கும் அருமையானது. (693)

4 செவிச்சொல்லும், சேர்ந்த நகையும், அவித்தொழுகல்
ஆன்ற பெரியார் அகத்து.

மிக்க பெருமையுடையார் முன்னிலையில், மற்றவர் காதருகே சென்று பேசுதலும், மற்றொருவருடன் கூடிச் சிரித்தலும், ஆகிய வற்றை அடியோடொழித்துப் பழகக் கடவர்.

5 எப்பொருளும் ஓரார், தொடரார், மற்றப்
விட்டக்கால் கேட்க மறை. [பொருள்

அரசர் பிறருடன் இரகசியமாகப் பேசும் எந்தச் செய்தியையும் உற்றுக் கேட்காமலும், அவரைத் தொடர்ந்து கேட்காமலும் இருந்து அவ் இரகசியத்தை அவரே தெரிவித்த பொழுது கேட்டலும் வேண்டும். (695)

6 குறிப்பறிந்து காலங் கருதி, வெறுப்பில,
வேண்டுப வேட்பச் சொலல்.

அரசருடைய குறிப்பையறிந்து, காலத்தையும் தெரிந்து, அவர் வெறுக்காத செய்திகளையும், விரும்பத்தக்க செய்திகளையும, அவர் விரும்பும் வகையிலே சொல்லக் கடவர். (696)

7 வேட்பன சொல்லி, வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.

அரசர் விரும்பக்கூடிய வற்றைச் சொல்லி, ஒருபொழுதும் பயன்படாதவற்றை அவரே வலியக்கேட்டாலும் சொல்லாமல் விடக்கடவர். (697)

8 இளையர் இனமுறையர் என்றுஇகழார்; நின்ற
ஒளியோ டொழுகப் படும்.

"இவர் எமக்கு இளையவர்" "இவர் எமக்கு இன்ன முறையுடையவர்" என்று அரசரை இகழாமல், அவருடைய நிலையான பெருமைக்குத் தக்க வண்ணம் நடக்கக் கடவர். (698)

9 கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத
துளக்கற்ற காட்சி யவர். [செய்யார்

நிலைபெற்ற நல்லறிவுடையோர், 'அரசரால் நன்கு மதிக்கப்பட்டோம்' என்று நினைத்து, அவர் விரும்பாதவற்றைச் செய்ய மாட்டார்கள். (699)

10 பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

"அரசனுக்கு நாம் பழக்க முடையவராவோம்" என்றெண்ணிக்கொண்டு, தகுதியற்ற செயல்களைச் செய்யும் உரிமையானது கேட்டைத் தரும். (700)

71—குறிப்பறிதல்

பிறருடைய உள்ளக்கருத்தை அறிதல்

1 கூருமை நோக்கிக் குறிப்பறிவான், எஞ்ஞான்றும்
மாருநீர் வையக்கு அணி.

ஒருவர் வாய்திறந்து சொல்லாமலே, அவர் முகத்தைப் பார்த்தும், அவருடைய மனத்தின் குறிப்பை அறிகின்றவன், வற்றுத கடல் சூழ்ந்த இந்த உலகத்திற்கு ஆபரணம் ஆவான்.

2 ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.

சந்தேகங் கொள்ளாமல் பிறருடைய உள்ளக்குறிப்பை உணர வல்லவனை, தெய்வத்திற்குச் சமமாக மதிக்கக்கடவர்.

3 குறிப்பின் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

முகக்குறிப்பைக் கொண்டு அகக்குறிப்பை அறிய வல்ல வரைத் தம் உறுப்புகளுள் ஒன்றாக எதைக் கொடுத்தாவது சேர்த்துக் கொள்ளக்கடவர் (703)

4 குறித்தது கூருமைக் கொள்வாரோடு ஏனை
உறுப்போ ரனையரால் வேறு.

ஒருவன் உள்ளத்தில் கருதியுள்ளதை அவன் கூறுமலே அறிந்து கொள்வாரோடு, அவ்விதம் அறிந்து கொள்ளாதவர், உடலுறுப்பினால் ஒத்திருந்தாலும் உணர்வினால் ஒத்தவராகார்.

5 குறிப்பின் குறிப்புணரா வாயின், உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

குறிப்பினால் பிறர் மனக்கருத்தை அறிய மாட்டாவாயின், ஒருவனுடைய உறுப்புக்களுள் கண்கள் என்ன பயனுடை யனவாம்? (705)

6 அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

தன்னே அடுத்த பொருளேத் தானே காட்டும் பளிங்கு (கண்ணுடி)போல, ஒருவனுடைய மனத்தில் நிறைந்துள்ளதை அவனுடைய முகமே காட்டும். (706)

7 முகத்தின் முதுக்குறைந்த துண்டோ? உவப்பினும்
காயினும் தன்முந் துறும்.

ஒருவன் மகிழ்ந்தாலும் சினந்தாலும், அவனுடைய முகம் முன் நின்று அதை உணர்த்தி விடும். எனவே, அந்த முகத்தைப்போல அறிவுடையதும் உண்டோ? (707)

8 முகம்நோக்கி நிற்க அமையும்; அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்.

உள்ளக் குறிப்பை அறிந்து உற்றதை உணர வல்லாரைக் காணப்பெற்ருல், அவருடைய முகத்திற்கு எதிரேபோய் நின்ருலே போதும்! (708)

9 பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்
வகைமை உணர்வார்ப் பெறின். [ணின்

கண்ணினது வேறுபாட்டின் தன்மையை அறிய வல்லாரை அடையப் பெற்ருல், ஒருவனுடைய மனத்தில் உள்ள பகைமையையும், நட்பையும் அவனுடைய கண்களே சொல்லிவிடும்.

10 நுண்ணியம் என்பார் அளக்குங்கோல், காணுங்
கண்ணல்லது இல்லை பிற. [கால்

"நாம் நுண்ணறிவுடையோம்" என்று எண்ணிக்கொண்டிருப்பவர், பிறருடைய கருத்தை அளந்தறியுங் கருவி எதுவென்று ஆராயுமிடத்து, அவருடைய கண்ணே அல்லாமல் வேறில்லை.

72—அவை அறிதல்

• சபையின் இயல்பை அறிந்து பேசுதல்

1 அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக; சொல்லின் தொகையறிந்த தூய்மை யவர்.

சொற்களின் ஆற்றலை அறிந்த தூய்மைக்குணமுடையவர் சபையின் தன்மையைத் தெரிந்து ஆராய்ந்து பேசக்கடவர்.

2 இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக; சொல் நடைதெரிந்த நன்மை யவர். [லின்

சொற்களின் போக்கை அறிந்த நன்மையுடையோர் சபையிலுள்ளார் கேட்டற்குரிய சமயத்தை நன்குணர்ந்து சொல்லக்கடவர். (712)

3 அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர், வகையறியார் வல்லதூஉம் இல். [சொல்லின்

சபையினது நிலைமையை அறியாமல் பேசத் தொடங்குவோர், சொல்லின் கூறுபாடுகளையும் அறிய மாட்டார்; அவ்வாறு வல்ல கலையும் அவர்க்கு இல்லையாம். (713)

4 ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்; வெளியார்முன் வான்சுதை வண்ணங் கொளல்.

சிறந்த அறிவுடையார் சபையில் தாமும் தெளிந்த அறிவுடையவராய் விளங்கக் கடவர்; அறிவில்லாதவர் சபையில் தாமும் சுண்ணும்பிற் செய்த பொம்மைபோல அமைந்திருக்கக் கடவர். (714)

5 நன்றெற் றவற்றுள்ளும் நன்றே; முதுவருள் முந்து கிளவாச் செறிவு.

அறிவு மிகுந்த பெரியோர் கூடிய சபையில், முன்கூட்டி எதையும் பேசாதிருக்கும் அடக்கமானது, ஒருவனுக்கு நலங்களெல்லாவற்றுள்ளுஞ் சிறந்த நலத்தைக் கொடுக்கும். (715)

6 ஆற்றின் நிலைதளர்ந் தற்றே; வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு.

வீரிந்து அகன்ற நூற்பொருளை உட்கொண்டு உய்த்துணரவல்லார் கூடிய சபையிலே, ஒருவன் சொல் இழுக்குப்படுதல், ஒழுக்க நெறியினின்று நிலைதவறி வீழ்வதைப் போன்றதாம் (716)

7 கற்றறிந்தார் கல்வி விளங்கும்; கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து.

குற்றமின்றிச் சொற்களை ஆராய வல்லவர் சபையிலே, பல நூல்களையும் கற்றறிந்தாரது கல்வி விளக்கமடையும். (717)

8 உணர்வது உடையார்முன் சொல்லல்; வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந்து அற்று.

தான் சொல்வதை எளிதில் உணரும் தெளிவுடைய பெரியோர் முன் பேசுதல், வளரும் பயிரையுடைய பாத்தியில் நீரைச் சொரிந்தாற்போலச் செழிப்படையும். (718)

9 புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க; நல்லவை
நன்கு செலச்சொல்லு வார். [யுள்

நல்லறிஞர் கூடிய சபையிலே மனத்திற்பதியும்படி நன்றாகப் பேசவல்லவர், அறிவில்லாதவருடைய கூட்டத்திலே மறந்தும் பேசாதிருக்கக் கடவர். (719)

10 அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால்; தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்.

அறிவிலுலே தம் இனத்தவரல்லாதவரது சபையிலே சென்று ஏதேனுமொன்றைப் பேசுதல், சலதாரையிலே சிந்திய அமுதத்துக்கு ஒப்பாகும். (720)

73—அவை அஞ்சாமை

பேசுங்கால் சபைக்கு அஞ்சாதிருத்தல்

1 வகைஅறிந்து வல்லவை வாய்சோரார்; சொல்லின் தொகைஅறிந்த தூய்மை யவர்.

சொற்களின் ஆற்றலையறிந்த தூய்மைக்குணம் உடைய வர், நல்லவை-புல்லவை என்ற அவைகளின் வகைகளை யுணர்ந்து, வல்லோர் கூடிய சபையிலே, மறந்தும் பிழைபடப் பேச மாட்டார். (721)

2 கற்றருள் கற்றார் எனப்படுவர்; கற்றார்முன் கற்ற செலச்சொல்லு வார்.

கற்றவர் கூடிய சபையில், தாம் கற்றவற்றை கேட் பவர் மனத்திற் படுமாறு சொல்ல வல்லவர், "கற்றவர் எல்லா ரினும் நன்குகற்றவர்" என்று உலகத்தாரால் சொல்லப் படுவார்கள். (722)

3 பகையகத்துச் சாவார் எளியர்; அரியர் அவையகத்து அஞ்சா தவர்.

பகைவருடைய போர்க்களத்திற் சென்று உயிர்விடத் துணிந்தவர் உலகத்தில் பலராவர். ஆனால் சபையில் ஏறி அஞ்சாமல் துணிந்து பேசுவோர் சிலரே! (723)

4 கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற மிக்காருள் மிக்க கொளல்.

கற்றுவல்லார் சபையிலே, தாம் கற்றுணர்ந்தவைகளைப் பிறர்க்குப் பதியுமாறு சொல்லி, மிகுதியாகக் கற்றவரிட மிருந்து தாம் மிகுந்த கல்வியை பெற்றுக்கொள்ளக் கடவர்

5 ஆற்றின் அளவறிந்து கற்க; அவையஞ்சா மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

சபையிலே அஞ்சாமல் நின்று ஒருவர் கேட்டகேள்வீக்கு மறுமொழி சொல்வதற்கு ஏற்றவாறு, நூல்களைக் கற்கும் முறையோடு அளவை நூல் (தருக்க நூல்) தெளிவுடன் கற்கக் கடவர். (725)

6 வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு? நுண்ணவை அஞ்சு பவர்க்கு? [நூலொடுஎன்

அச்சமுடையவர்க்கு வாளால் என்ன பயன்? அதுபோல நுண்ணறிவுடையாரது சபைக்கு அஞ்சுவார்க்கு நூலறிவால் என்ன பயன்? (726)

7 பகையகத்துப் பேடிகை ஒள்வாள்; அவையகத்து அஞ்சும் அவன்கற்ற நூல்.

சபையில் பேச அஞ்சுமொருவன் கற்ற நூல், பகைவர்க்கு அஞ்சும் பேடி கையிற் பிடித்த கூரிய வாளே யொக்கும். (727)

8 பல்லவை கற்றும் பயம்இலரே; நல்லவையுள் நன்கு செலச்சொல்லா தார்.

நல்லவர் கூடிய சபையிலே நற்கருத்துக்களே நன்கு பதியும்படி சொல்ல மாட்டாதவர், பற்பல நூல்களைக் கற்றிருந்தும் பயனில்லாதவரே யாவர். (728)

9 கல்லா தவரிற் கடைஎன்ப; கற்றறிந்தும் நல்லார் அவையஞ்சு வார்.

பல நூல்களைக் கற்று அவற்றின் பயனை நன்கு அறிந்திருந்தும், நல்லோர் கூடிய சபைக்கு அஞ்சி அங்கு செல்லாதவரைக் கல்லாதவரினுங் கடையானவர் என்று உலகத்தார் சொல்லுவர். (729)

10 உளரெனினும் இல்லாரொடு ஒப்பர்; களன்அஞ்சிக் கற்ற செலச்சொல்லா தார்.

சபைக்கு அஞ்சித் தாம் கற்றவற்றைச் சபையிலுள்ளோர் மனத்திற் பதியும்படி சொல்லமாட்டாதவர், உயிரோடிருப்பினும் இறந்தவரோடு ஒப்பார். (730)

74—நாடு

நாட்டின் இலக்கணம்

1 தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு.

குறைவில்லாத விளைபொருள்களும், தகுந்த பெரியோர்களும், குறைவற்ற செல்வம் படைத்தோரும் பொருந்தியுள்ள நாடே நாடாகும் (731)

2 பெரும்பொருளால் பெட்டக்க தாகி, அருங்கேட் [டால் ஆற்ற விளைவது நாடு.

அளவிறந்த பொருள்வளம் உடைமையால் அயல் நாட்டவரும் விரும்பத்தக்கதாகி, ஒருபொழுதும் அழிவு இல்லாததாய், மிகுதியும் விளைச்சலுடைய நாடே நாடாகும். (732)

3 பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி, இறையொருங்கு நேர்வது நாடு. [இறைவற்கு

பிற நாட்டினர் வந்து தன்னிடம் குடியேறுவதால்உண்டாகும் பாரத்தை முற்றிலும் தாங்கி, அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரிப் பொருளை முழுவதும் செலுத்தும் வல்லமையுடைய நாடே நாடாகும். (733)

4 உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும் சேராது இயல்வது நாடு.

மிக்க பசியும், நீங்காத நோயும், தாக்கியழிக்கும் பகையும் பொருந்தாமல் விளங்கும் நாடே நாடாகும். (734)

5 பல்குழுவும், பாழ்செய்யும் உட்பகையும், வேந்த [லைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு.

பலவகைத் தீயோர் கூட்டங்களும், கூடவிருந்து கேடு செய்யும் கொடிய பகைவரும், அரசனைத் துன்புறுத்துகின்ற கொலைச் செயலுடைய குறுநில மன்னரும் இல்லாத நாடே நாடாகும். (735)

6 கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்ரு
நாடென்ப நாட்டில் தலை.

பகைவரால் என்றும் கெடுக்கப்படாததாய், எதாவதொரு காரணத்தால் கேடுவந்தாலும் வளங்குறையாத நாடே, நாடுகளிலெல்லாம் சிறந்த நாடாகும். (736)

7 இருபுனலும், வாய்ந்த மலையும், வருபுனலும்,
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.

ஊற்றுநீர்-மழைநீர்: ஆகிய இரண்டு வகையான நீர் வளப்பமும், வளம்பொருந்திய மலைகளும், மலையருவி பெருகிவரும் ஆறுகளும், வலிமையுள்ள மதில்களும் ஒரு நாட்டிற்கு உறுப்புக்களாம். (737)

8 பிணியின்மை, செல்வம், விளைவு,இன்பம், ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் ஐந்து.

நோயில்லாமையும், செல்வமுண்டாமையும், விளைபொருள் வளமும், இன்பவாழ்க்கையும், பாதுகாப்பும் ஆகிய இவ் ஐந்தும் நாட்டிற்கு ஆபரணம் என்று கூறுவர் பெரியோர். (738)

9 நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரு நாடு.

தேடி வருந்தாமற் செழிப்பைத் தரும் நாடுகளே சிறந்த நாடுகள் என்று கூறுவர் பெரியோர். தேடி முயன்று செழிப்பைத தரும் நாடுகள் நாடுகள் அல்ல. (739)

10 ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே;
வேந்தமை வில்லாத நாடு.

நல்ல அரசாட்சியைப் பெறாத நாடு, முற்கூறிய இலக்கணங்களெல்லாம் பெற்றிருந்தாலும், அவற்றால் பயன் இல்லை.

75—அரண்

மதிலின் பெருமை

1 ஆற்று பவர்க்கும் அரண்பொருள்; அஞ்சித்தற் போற்று பவர்க்கும் பொருள்.

பகைவருடன் போர் செய்வோர்க்கும் அரண் சிறந்ததாகும். பகைவருக்குப் பயந்து தன்னிடம் வந்தவருக்கும் அரண் சிறந்த தாகும். (741)

2 மணிநீரும், மண்ணும், மலையும், அணிநிழற் காடும் உடையது அரண்.

தெளிந்த நீரும், வெட்டவெளியான நிலமும், மலையும், அழகிய நிழலமைந்த காடும் ஆகிய இவைநான்கும் உடையது அரண்! (742)

3 உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின் அமைவரண் என்றுரைக்கும் நூல்.

உயரம், அகலம், உறுதி, பகைவரால் அழிக்க இயலாத அருமை: ஆகிய இந்நான்கும் அமைந்ததே அரண் என்று நூலுடையோர் கூறுவர். (743)

4 சிறுகாப்பிற் பேரிடத்த தாகி, உறுபகை ஊக்கம் அழிப்பது அரண்.

அடக்கமான சிறிய பாதுகாப்புக்குள், பெரிய இடத்தை யுடையதாய்த் தன்னைவந்து தாக்கிய பகைவரது உள்ளக் கிளர்ச்சியை ஒழித்து நிற்பது அரணாகும். (744)

5 கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத் நிலைக்கெளிதாம் நீரது அரண். [தார்

பகைவர் கைப்பற்றுவதற்கு இயலாததாய், மிகுதியாய மைந்த உணவுப்பொருள்களுடையதாய், உள்ளிருப்போர் நிலைத்து நிற்பதற்கு எளிதாகிய தன்மையுடையது அரணாகும்.

6 எல்லாப் பொருளும் உடைத்தாய், இடத்துதவும்
நல்லாள் உடையது அரண்.

உள்ளே இருப்பவருக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையுமுடையதாய், தக்க சமயத்திற் போரிட்டு உதவுதற்குரிய வீரர்களையுமுடையதே அரண்! (746)

7 முற்றியும், முற்றாது எறிந்தும், அறைப்படுத்தும்
பற்றற் கரியது அரண்.

பகைவர் முற்றுகையிட்டும், முற்றுகையிடாமல் எதிர்த்துப் போரிட்டும், வஞ்சித்தும், கைப்பற்ற இயலாத அருமையுடையது அரண்! (747)

8 முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வது அரண்

முற்றுகையிட்டுப் பற்றுதற்கு வந்தவரையும் நிலைபெயராமல் நின்று வெல்லுதற்குரியது அரண்! (748)

9 முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்டது அரண்.

போர்முகத்தில் பகைவர் ஒழியும்படி போர்ச் செயல்களின் வகைகளாற் பெருமையுற்றுச் சிறப்புடன் பொருந்தியதே அரண்! (749)

10 எனைமாட்சித் தாகியக் கண்ணும், வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.

முன் சொன்ன எல்லாப் பெருமைகளையும் உடையதாயிருந்தாலும், போர்த்திறமை இல்லாதவரிடத்திலே அரண் பயனில்லாததாம். (750)

76—பொருள் செயல் வகை

செல்வத்தைத் தேடிக் கொள்ளுதலின் சிறப்பு

1 பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும், மதிக்கச் செய்யவைப்பது, பொருளையல்லாமல், இவ்வுலகில் ஒருவனுக்கு வேறு பொருள் இல்லை (751)

2 இல்லாரை எல்லோரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வார்கள்; பொருளுடையவரை எல்லோரும் சிறப்புச் செய்வார்கள்.(752)

3 பொருளென்னும் பொய்யா விளக்கம், இருள
எண்ணிய தேயத்துச் சென்று. [றுக்கும்

பொருள் என்று எல்லோராலும் சிறப்பாகச சொல்லப்படும் அணையா விளக்கானது, அதைச் சேர்த்து வைத்த ஒருவர் நினைத்த தேசத்தில் போய், பகை என்னும் இருளை அழிக்கும். (753)

4 அறன்ஈனும்; இன்பமும் ஈனும்; திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள்.

சேர்க்கும் வகையறிந்து தீமையொன்றும் இல்லாமல் நல்வழியில் சேர்த்த செல்வமானது ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும்; இன்பத்தையும் கொடுக்கும். (754)

5 அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

அருளுடனும், அன்புடனும் பொருந்தாத வழிகளிலே சேர்ந்த செல்வத்தின் ஆக்கத்தைப் பெற்று மகிழாமல் நீக்கி விடக்கடவர். (755)

6 உறுபொருளும், உல்கு பொருளும், தன் ஒன்னுர்த்
தெறுபொருளும், வேந்தன் பொருள்.

உரியவரின்மையால் தானே வந்து சேரும் பூதையற் பொருளும் தீர்வைப் பொருளும், பகைவரை வென்று கைப் பற்றும் திறைப் பொருளும், அரசாங்கத்திற் குரிய பொருள் களாம். (756)

7 அருளென்னும் அன்பீன் குழவி, பொருளென்னும்
செல்வச் செவிலியான் உண்டு.

'அன்பு' என்னும் தாய் பெற்றெடுத்த 'அருள்' என்னும் குழந்தையானது, 'பொருள்' என்னும் செல்வம் நிறைந்த செவிலித்தாயினுல் நன்கு வளரும். (757)

8 குன்றேறி யானைப்போர் கண்டற்றுல், தன்கைத்
உண்டாகச் செய்வான் வினை. [தொன்று

தன் சொந்த முதல் வைத்துக்கொண்டு ஒரு தொழிலைச் செய்பவன், குன்றின் மேல் ஏறி நின்று யானைப் போரைக் கண்டாற் போலாம். (758)

9 செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல்.

எவரும் பொருளைச் சேர்க்கக் கடவர்; பகைவருடைய செருக்கை அழிக்க அதைப்போலக் கூர்மையான ஆயுதம் வேறு இல்லை. (759)

10 ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்ணே
ஏனை இரண்டும் ஒருங்கு. [பொருள்

சிறப்பு மிக்க செல்வத்தை மிகுதியாகச் சேர்த்தவர் களுக்கு, மற்றைய அறம், இன்பம் என்னும் இரண்டும் ஒருங்கே எளிய பொருள்களாய்க் கைகூடும். (760)

77—படைமாட்சி

சேனையின் சிறப்பு

1 உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை.

எல்லா வகையான உறுப்புக்களும் நிரம்பி, போர்க்களத்தில் உண்டாகும் துன்பங்களுக்கு அஞ்சாமல் நின்று வெற்றி கொள்ளும் சேனை, அரசனுக்குரிய செல்வங்களெல்லாம் சிறந்தது. (761)

2 உலைவிடத்து ஊறஞ்சா வன்கண், தொலைவிடத்துத் தொல்படைக் கல்லால் அரிது.

போரில் அழிவு ஏற்பட்டாலும், நிலைகுலைந்து அளவிற் சுருங்கினாலும், வரும் துன்பங்களுக்கு அஞ்சாத வன்கண்ணமை, பழமை வாய்ந்த மூலப்படைக்கே யல்லாமல் மற்றப் படைகட்கு இயலாது. (762)

3 ஒலித்தக்கால் என்னும் உவரி; எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்.

எலிகளாகிய பகை திரண்டு கடல்போல் ஒலித்தாலும் அவைகளால் என்ன செய்ய முடியும்? நாகப்பாம்பு மூச்சு விட்டால், அவையெல்லாம் ஓடிப்போம்! (763)

4 அழிவின்றி அறைபோகா தாகி, வழிவந்த வன்க ணதுவே படை.

போரில் புறங்காட்டாமல், பகைவர் செய்யும் வஞ்சனைக்கு அகப்படாமல், வழிவழி வளர்ந்த அஞ்சாமையுடையதே படையாம். (764)

5 கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும் ஆற்றல் அதுவே படை.

இயமன் கோபித்து எதிர்த்துத் தன்மேல் வந்தாலும், ஒருங்கு திரண்டு முனைந்து நிற்கும் வல்லமையுடையதே படையாம். (765)

6 மறம்,மானம், மாண்ட வழிச்செலவு, தேற்றம், என நான்கே ஏமம் படைக்கு.

வீரம், மானம், சிறப்புமிக்க முன்னோர் வழியைப் பின் பற்றுதல், தலைவர்களால் தெளியப்படுதல் ஆகிய நான்கும் படைக்குரிய பாதுகாப்புக்களாம். (766)

7 தார்தாங்கிச் செல்வது தானை; தலைவந்த போர்தாங்கும் தன்மை அறிந்து.

தன்மேல் எதிர்த்து வந்த படையின்போரைத் தாங்கி வெல்லும் வகையைத் தெரிந்து, அப்பகைவரின் முன்னணியை எதிர்த்துச் செல்லும் வல்லமையுடையதே படையாம். (767)

8 அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை படைத்தகையாற் பாடு பெறும்.

பகைவரைக் கொல்லும் வலிமையும், அவரை எதிர்த்து நிற்கும் ஆற்றலும் இல்லையாயினும், அணிவகுத்து நிற்கும் தோற்றப் பொலிவினால் படை பெருமையடையும். (768)

9 சிறுமையும், செல்லாத் துனியும்; வறுமையும் இல்லாயின் வெல்லும் படை.

தன்னளவிற் குறைவுபடுதலும், தலைவரிடம் நீங்கா வெறுப்பும், வறுமையும் இல்லையானால் படையானது, பகை வரைக்கெடுத்து வெற்றியடையும் (769)

10 நிலைமக்கள் சால உடைத்தெனினும், தானை தலைமக்கள் இல்வழி இல்.

போர்க்களத்தில் நிலைத்து நின்று போராடவல்ல வீரர் களை மிகுதியாகப் பெற்றிருந்தாலும், தகுந்த தலைவர்களில்லாத இடத்தில், படை பெருமையுறாது. (770)

78—படைச்செருக்கு

சேனையின் வீரமிகுதிச் சிறப்பு

1 என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கல்நின்ற வர்.

(என்-ஐ = என் தலைவன்) பகைவர்களே! என் தலைவன் முன் எதிர்த்து நின்று, இறந்து பின்பு வீரக்கல்லில் நின்றவர் பலராவர் ஆகவே என் தலைவன் முன் எதிர்த்து நிற்காதீர்! (771)

2 கான முயல்எய்த அம்பினில், யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

காட்டில் திரியும் முயலின் மீது குறிதவறாமல் எய்த அம்பைக் கையில் தாங்குதலைக் காட்டிலும், காட்டில் திரியும் யானையின் மேல் எறிந்து குறிதவறிய வேலைத் தாங்குதல் இனிதாகும். (772)

3 பேராண்மை என்ப தறுகண்;ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எ∴கு.

பகைவரை எதிர்த்து நிற்கும் அஞ்சாமையைப் பெரிய ஆண்மை என்று கூறுவர்; பகைவர்க்கு ஒரு துன்பம் நேர்ந்த பொழுது உதவி செய்தலை அவ் ஆண்மையின் கூர்மை என்று கூறுவர். (773)

4 கைவேல் களிற்றெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

தன் கையில் ஏந்திய வேலை யானையின்மேல் எறிந்து விட்டு, மேலும் வேறு வேல் வேண்டி நிற்பவன், தன் மார்பிற் பட்டிருந்த வேலைப்பார்த்ததும் அதைக் கையிற் பிடுங்கி வைத்துக் கொண்டு மகிழ்வான். (774)

5 விழித்தகண் வேல்கொண்டு எறிய, அழித்திமைப்
ஓட்டன்றே வன்க ணவர்க்கு. [பின்

பகைவரைக் கோபித்து நோக்கியகண், அவர் வேல் கொண்டு எறிய, அக்கண் மூடித்திறக்குமாயின் அதுவும் வீரர்க்குத் தோல்வியாம். (775)

6 விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளே எடுத்து.

வீரன் தான் வாழ்ந்த நாட்களைக் கணக்கிட்டு, அவற்றில், போருக்குச் சென்று மார்பில் புண்படாத நாட்களை, வீணே கழிந்த நாட்களாக எண்ணி வருந்துவான். (776)

7 சுழலும் இசைவேண்டி, வேண்டா உயிரார்,
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

பரவுகின்ற புகழை விரும்பித் தம் உயிரை விரும்பாத வீரர், காலில் வீரக்கழல் கட்டுதல் அழகு உடையதாம்.(777)

8 உறின்உயிர் அஞ்சா மறவர், இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்.

போர் வந்தால் தம் உயிருக்கு அஞ்சாத வீரர், போர் வேண்டாமென்று அரசன் கோபித்தாலும் தம் வீரத்தைக் குறைத்துக் கொள்ள மாட்டார். (778)

9 இழைத்தது இகவாமைச் சாவாரை, யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர்.

தாம் கூறிய சபதம் தவறுமல், போர்க்களத்துக்குப் போய்ச் சாகும் வீரரை, அவர் கூறிய சூளுரை தவறிய தற்காக இகழ்வார் யார்? (779)

10 புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின், சாக்காடு
இரந்துகோள் தக்க துடைத்து.

தம்மை ஆதரித்த தலைவர்கண்களில் நீர் பெருகும்படி சாகப் பெற்றால், அச்சாவு யாசித்தாயினும் பெற்றுக் கொள்ளும் பெருமையுடையதாம். (780)

79—நட்பு

சிநேகத்தின் சிறப்பு

1 செயற்கரிய யாவுள நட்பின், அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

நட்புப் போலச் செய்து கொள்ளுதற்கு அரியவை எவை உள்ளன? அந்நட்பைப்போல வினைமுடித்தற்குரிய அரிய காவலா யுள்ளவை எவை உள்ளன? (781)

2 நிறைநீர நீரவர் கேண்மை; பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

அறிவுடையார் கொண்ட நட்புக்கள் வளர்பிறைச் சந்திரன் போல வளர்ந்து நிறையுந் தன்மையுடையன. அறிவில்லாதவர் கொண்ட நட்புக்கள் தேய்பிறைச் சந்திரன் போலத் தேய்ந்து அழியுந் தன்மையுடையன. (782)

3 நவில்தொறும் நூல்நயம் போலும்; பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

படிக்குந் தோறும் இன்பம் தரும் நூல்நயத்தினைப் போல, பழகுந்தோறும் நற்குணமுடையவரின் நட்பு இன்பம்தரும்.(783)

4 நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

ஒருவனேடொருவன் நட்புச் செய்வது, சிரித்து மகிழும் பொருட்டன்று; தெறிதவறிச் செல்லும் பொழுது, முன்சென்று அறிவுரை கூறி இடித்தற்பொருட்டேயாம். (784)

5 புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

ஒருவனேடொருவன் நட்பாதற்கு, நெருக்கமும் அடிக்கடி பழக்கமும் வேண்டுவதில்லை. உள்ளத்து ஒத்த உணர்ச்சியே அவ் இருவருக்கும் நட்பாகிய உரிமையைத் தரும். (785)

6 முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

முகம் மாத்திரம் மலரும்படி செய்து நட்புக்கொள்வது நட்பாகாது. உள்ளமும் மலரும்படி அன்புடன் நேசித்தலே நட்பாகும். (786)

7 அழிவின் அவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

கேடுதரும் தீயவழிகளை விலக்கி, நல்வழிகளிற் செலுத்தி, (விலக்க வியலாத வீதிவசத்தால்) நண்பனுக்கு அழிவு வந்த இடத்தில், அத்துன்பத்தைத் தானும் கூடவிருந்தனுபவிப்பதே நட்பாம். (787)

8 உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

இடுப்பில் உடுத்தியிருந்த ஆடை நழுவினவனுடைய கை விரைந்து சென்று அதனைத் தாங்குதல் போல, நண்பனுக்கு நேர்ந்த துன்பத்தை அப்பொழுதே சென்று நீக்குவதே நட்பாம். (788)

9 நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின், கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

சிநேகத்திற்குச் சிறந்த நிலை யாதென்றால், ஒருபொழுதும் வேறுபடாமல் இயன்றபொழுதெல்லாம் உதவிசெய்து தாங்குதலேயாம். (789)

10 இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்என்னும் நட்பு.

"இவர் எமக்கு இத்தகைய தன்மையுடையவர்; நாம் இவருக்கு இத்தன்மையுடையோம்" என்று ஒருவரை யொருவர் புகழ்ந்து சொன்னாலும், அந் நட்பு அற்பமானதாம். (790)

80—நட்பாராய்தல்

சிநேகம் செய்தற்கு உரியவரைத் தெரிந்தெடுத்தல்

1 நாடாது நட்டலிற் கேடில்லை, நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

நட்பைப்பேணி நடக்கும் இயல்புடையவர்க்கு, ஒருவனோடு நட்புச் செய்து கொண்ட பின்பு, அது நீங்க விடுதல் இயலாது. ஆதலால் ஆராயாது நட்புச் செய்தலைப் போலக் கேடு தருவது யாதுமில்லை (791)

2 ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடை
தான்சாம் துயரம் தரும். [முறை

பலவாற்றானும் நன்கு ஆராய்ந்து ஆராய்ந்து நட்புக்கொள்ளாதவனுடைய சிநேகம், முடிவில் அவன் சாவதற்கு ஏதுவாகிய துன்பத்தைக் கொடுத்துவிடும். (792)

3 குணனும் குடிமையும் குற்றமும் குன்று
இனனும் அறிந்தியாக்க நட்பு.

ஒருவனுடைய குணத்தையும், குடிப்பிறப்பையும், குற்றத்தையும, குறைவில்லாத இனத்தாரின் இயல்பையும், நன்றாக ஆராய்ந்தறிந்த பினபே அவனோடு நட்புச் செய்யக்கடவர்.

4 குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

உயர்ந்த குடியிலே பிறந்து தனக்கு வரும் பழிக்காக நாணும் இயல்புடையவனைப் பொருள் கொடுத்தாவது நட்புக் கொள்ளக் கடவர் (794)

5 அழச்சொல்லி, அல்லது இடித்து, வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.

திருந்தாவிட்டால் வருந்தி அழும்படி சொல்லியும், கண்டித்துக் கூறியும், உலக நடையை நன்கராய்ந்தறிந்தவரது சிநேகத்தையே ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளக்கடவர். (795)

6 கேட்டினும் உண்டோர் உறுதி; கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

ஒருவனுக்கு நேரிடும் கேட்டினிடத்தும் ஒருவகை நன்மை யுண்டு. அஃதாவது: அக்கேடு, நண்பர்களை நன்கு அளந்து அறிதற்குரிய அளவுகோல்! (796)

7 ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

ஒருவனுக்கு ஊதியம் (அதாவது இலாபம்) என்று சொல் லப்படுவது யாதென்றால், அறிவிலிகளின் சிநேகிதத்தினின்று நீங்கி விடுதலே பெறுவதேயாம் (797)

8 உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

தம் ஊக்கம் குறைதற்கு காரணமான செய்கைகளை எண்ணுதிருக்கக் கடவர்! அதுபோல, ஆபத்துக் காலத்தில் கைவிடுவோருடைய சிநேகிதத்தைச் செய்யாதிருக்கக்கடவர்!

9 கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை, அடுங்
உள்ளினும் உள்ளம் சுடும். [காலை

தனக்குக் கேடு வந்த காலத்திற் கைவிட்டுப் போனவரு டைய சிநேகத்தை, தானே எமன் வந்து கொல்லுங் காலத் தில் நினைத்தாலும், நினைத்த உள்ளத்தைச் சுடும். (799)

10 மருவுக மாசற்றார் கேண்மை; ஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

குற்றமற்றவருடைய சிநேகத்தையே பொருந்தியிருக்கக் கடவர். ஒத்த குணம் இல்லாதவருடைய சிநேகத்தை அவர் வேண்டிய ஒன்றைக் கொடுத்தாயினும் விட்டுவிடக்கடவர். (800)

81—பழைமை

பழகியவர் செய்த குற்றங்களைப் பொறுத்தல்

1 பழைமை எனப்படுவது யாதெனின், யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

"பழைமை என்பது எது என்றால், தன்னோடு பழகியோர் உரிமையால் ஏதேனும் ஒரு குற்றம் செய்தால் அதனைப் பொறுத்து, கீழ்மைப்படுத்தாத நட்புடைமையாம் (801)

2 நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை; மற்றதற்கு உப்பாதல் சான்றோர் கடன்

சிநேகத்திற்கு உறுப்பு ஆவன: சிநேகர் உரிமைபற்றிச் செய்யும் செயல்கள். ஆதலால், அச்செயல்கள் வெறுக்கத் தக்கவை யெனினும் அவற்றைப் பொறுத்துச் சிநேகத்திற்கு இனியராதல் சான்றோர்க்குக் கடமை. (802)

3 பழகிய நட்பு எவன்செய்யும்? கெழுதகைமை செய்தாங்கு அமையாக் கடை.

சிநேகர் உரிமைபற்றிச் செய்யும் ஒரு காரியத்தை தாம் செய்தாற்போல உடன்படாவிட்டால், அவரோடு பழகிய பழைமையான சிநேகம் என்ன பயனைச் செய்யும்? (803)

4 விழைதகையான் வேண்டி யிருப்பர்; கெழுதகை கேளாது நட்டார் செயின். [யால்

உரிமை காரணமாகத் தம்மைக் கேளாமலே நண்பர ஒரு காரியத்தைச் செய்தால், அறிவுடையோர் அந்த உரிமை யைப் பாராட்டி அக்காரியத்தையும் விரும்பி உடன்பட்டிருப் பார். (804)

5 பேதைமை ஒன்றோ, பெருங்கிழமை என்றுஉணர்க நோதக்க நட்டார் செயின்.

தான் வருந்தத்தக்க செயல்களைத் தன் நண்பர் செய்தால், அறியாமையாற் செய்தார் என்றுவது, மிகுந்த உரிமையாற் செய்தார் என்றுவது கருதிப் பொறுக்கக் கடவர். (805)

6 எல்லிக்கண் நின்ரூர் துறவார்; தொலிவிடத்தும், தொல்லிக்கண் நின்ரூர் தொடர்பு.

நட்புரிமையின் எல்லையில் நின்ரோர், தம் நண்பரால் தமக்கு அழிவு நேர்ந்த விடத்திலும், தொன்றுதொட்டுப் பழகி நின்றவரின தொடர்பைக் கைவிடமாட்டார். (806)

7 அழிவந்த செய்யினும் அன்பரூர்; அன்பின் வழிவந்த கேண்மை யவர்.

தமக்குக் கேடான காரியங்களே நண்பர் செய்தாராயினும், அன்பின் வழியே தொடர்ந்து பழகி வந்த நட்பினையுடையவர் அவர்மேல் வைத்துள்ள அன்பை நீக்கிக் கொள்ளமாட்டார்.

8 கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு நாளிழுக்கம் நட்டார் செயின்.

நண்பர் செய்த பிழையைக் குறித்துப் பிறர் வந்து சொன்னலும் கேளாத நட்புரிமை மிகுந்தவர்க்கு, நண்பர் பிழை செய்த காலே பயனுள்ள நாளாம். (808)

9 கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை விடாஅர் விழையும் உலகு.

உரிமை கெடாமல் தொன்று தொட்டு வந்த நட்புடையவரது நட்பை, அவர் பிழை நோக்கி, விடாதவரை உலகமானது விரும்பி நிற்கும். (809)

10 விழையார் விழையப் படுப; பழையார்கண் பண்பின் தலைப்பிரியா தார்.

பழகிய நண்பரிடத்தில் அவர் தவறு செய்த போதிலும் அவரிடம் தம் உரிமைப் பண்பிலிருந்து மாறுதவர், பகைவராலும் விரும்பப் படுவர். (810)

82—தீ நட்பு

தீயார் நட்பை விட்டொழித்தல்

1 பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை பெருகலிற் குன்றல் இனிது.

(அன்பு மிகுதியால்) அள்ளிக் குடிப்பார் போலத் தோன்றினாலும், நற்பண்பு இல்லாதவருடைய நட்பு வளர்ந்து பெருகுவதைக் காட்டிலும் குறைதலே நன்மையாம். (811)

2 உறின்நட்டு, அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை பெறினும் இழப்பினும் என்?

தமக்கு ஊதியமிருந்தால் நட்புச் செய்து, ஊதியம் இல்லையாயின் விட்டு நீங்கும் தகுதியற்றவருடைய சிநேகத்தைப் பெற்றாலென்ன? இழந்தாலென்ன? (812)

3 உறுவது சீர்தூக்கும் நட்பும், பெறுவது கொள்வாரும், கள்வரும் நேர்.

கிடைக்கும் ஊதியத்தை நிறுத்துப் பார்த்து நட்பு செய்பவரும் பொருளுக்குத் தன்னை விற்கும் வேலைக்காரரும், கள்வரும் ஒரு சமமானவர். (813)

4 அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார் தமரின் தனிமை தலை.

போர்க்களத்தில் வீழ்த்தி விட்டு ஓடும் அறிவில்லாத குதிரை போன்றவரது உறவைக் காட்டிலும், தனித்து வாழ்தல் சிறந்தது. (814)

5 செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை எய்தலின் எய்தாமை நன்று.

நட்புச் செய்தும், சமயத்தில் பாதுகாப்பாயிருந்து உதவாத அற்பரது இழிந்த சிநேகம், ஒருவனுக்குக் கிடைத்தலினும் இல்லாதொழிதலே நன்மையாம். (815)

6 பேதை பெருங்கெழீஇ நட்பின், அறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும்.

அறிவில்லாதவனுடைய மிக நெருங்கிய சிநேகத்தைக் காட்டிலும், அறிவுடையார் பகைமை கோடிமடங்கு சிறப்புத் தரும். (816)

7 நகைவகைய ராகிய நட்பின், பகைவரால்
பத்தடுத்த கோடி யுறும்.

சிரித்தற்கு ஏதுவான வீணருடைய சிநேகத்தால் வரும் இன்பத்தைக் காட்டிலும், பகைவரால் வரும் துன்பம் பத்துக் கோடி மடங்கு இனியதாம். (817)

8 ஒல்லுங் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

தம்மால் இயலும் காரியத்தையும் செய்யாமல் காலங் கடத்தி வருவோரின் நட்பை, அவரறிய யாதும் சொல்லாமல், நழுவவிடுக கடவர். (818)

9 கனவினும் இன்னாது மன்னோ; வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

செய்யுஞ் செயல் ஒன்றாகவும், சொல்லும்சொல் வேறொன்றாகவும் இருக்கப்பட்டவரது சிநேகம் ஒருவனுக்குக் கனவிலும் துன்பமாம்! (819)

10 எனைத்தும் குறுகுதல் ஓம்பல்; மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.

தனியே வீட்டிலிருக்கும் பொழுது மகிழ்ந்து உறவாடி, பலர் கூடிய பொதுவிடத்தில் பழித்துப் பேசுவோரின் சிநேகம் சிறிதும் ஏற்படாமல் நீக்கக் கடவர். (820)

83—கூடா நட்பு

உட்பகை கொண்டு வெளிக்கு நேசிப்போரின் தீமை

**1 சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.**

அகத்திற் பொருந்தாமல், புறத்திற் கூடி வாழ்வோரின் சிநேகம், சமயம் வாய்க்குமவரை தாங்கியிருந்து சமயம வாய்த்ததும் சம்மட்டியால் அடிபடுவதற்கு உதவி செய்யும் பட்டடையாகும். (821)

**2 இனம்போன்று இனமல்லார் கேண்மை, மகளிர்
மனம்போல வேறு படும்.**

இனம்போல நடித்து உண்மையில் இனம் அல்லாதவரின் சிநேகம், பொதுமகளிரின் மனத்தைப் போல, உள்ளொன்று புறமொன்றாக வேறுபடும். (822)

**3 பலநல்ல கற்றக் கடைத்தும், மனம்நல்லர்
ஆகுதல் மாணுர்க்கு அரிது.**

நல்லன வாகிய பலநூல்களைக் கற்றவிடத்தும், அதனல் மனந்திருந்தி நட்பினராகுதல் பகைவர்க்கு இல்லை. (823)

**4 முகத்தின் இனிய நகாஅ, அகத்தின்னு
வஞ்சரை அஞ்சப் படும்.**

முகத்தினல் இனிமையாகச் சிரித்துப்பேசி, அகத்தில் தீமை யெண்ணும் வஞ்சகருடன் சிநேகஞ் செய்தற்கு அஞ்சுதல் வேண்டும். (824)

**5 மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினுல் தேறற்பாற் றன்று.**

மனத்தினுல் தம்மோடு பொருந்தாமற் பழகுகின்றவரை அவர் சொல்கின்ற சொல்லைக் கொண்டு எவ்விதத்திலும் நம்பித் தெளியலாகாது. (825)

6 நட்டார்போல் நல்லவை சொல்லினும், ஒட்டார் ஒல்கூ உணரப் படும். [சொல்

நண்பர் போல நன்மைதருஞ் சொற்களைச் சொன்னாலும், பகைமையுடையவர் சொல்லும் சொற்களின் உண்மைத் தன்மையை விரைவில் அறிந்து கொள்ளலாம் (826)

7 சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க; வில் தீங்கு குறித்தமை யான். [வணக்கம்

வில்லினது வணக்கம் (வளைவு) தீமை செய்தலைக் குறிக் கொண்டது; அதுபோலப் பகைவரிடத்தில் காணப்படும் சொல்லின் வணக்கம் (பணிவு) நன்மையான தென்று ஏற்றுக் கொள்ளத் தக்க தன்று. (827)

8 தொழுதகை யுள்ளும் படையொடுங்கும்; ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து.

பகைவர் வணங்கிக் கும்பிடுகின்ற கையினுள்ளே கொலைக்கருவி மறைந்திருக்கும்; அப்பகைவர் அழுது சொரிகின்ற கண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருக்கும் இடமாம்.

9 மிகச்செய்து தம்எள்ளு வாரை, நகச்செய்து நட்பினுள் சாப்புல்லற் பாற்று.

வெளிக்கு சிநேகத்தன்மையை மிகவும் காட்டி உள்ளே இகழ்ந்து திரியும் பகைவரை, தாமும் அவ்வாறே வெளிக்குச் சிரித்துச் சிநேகத்தை விட்டொழியுமாறு நடந்து கொள்ளக் கடவர். (829)

10 பகைநட்பாங் காலம் வருங்கால், முகம்நட்டு அகநட்பு ஒரீஇ விடல்.

பகைவர் கண்பாராயொழுகுங் காலம் வந்தால், அவரோடு முகத்தால் மாத்திரம் சிநேகம் செய்து, அகத்திற் சிநேகங் கொள்ளாமல் நாளடைவில் அதனை விட்டொழிக்கக் கடவர். (830)

84—பேதைமை

அறியாமை

1 பேதைமை என்பதொன்று; யாதெனின், ஏதங் ஊதியம் போக விடல். [கொண்டு

'பேதைமை, என்பது மிகப் பெரியதொரு குற்றம்; அது என்னவென்றால், கெடுதி தருவனவற்றைக் கைக் கொண்டு, இலாபமான வற்றைக் கைவிடுவதாம். (831)

2 பேதைமையு ளெல்லாம் பேதைமை; காதன்மை கையல்ல தன்கட் செயல்

தன் தகுதிக்குப் பொறுத்தமில்லாத காரியங்களில் ஆசை கொள்ளுதல், பேதைமை எல்லாவற்றிலும் மிகப் பெரிய பேதைமையாகும். (832)

3 நாணுமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும் பேணுமை பேதை தொழில்.

பழிபாவங்களுக்கு நாணுமையும், காரியமானவற்றை விரும்பாமையும், அனபில்லாமையும், நன்மையான செய்கை யாதொன்றையும் தேடாமையும், ஆகியவை பேதையின் தொழில்களாம். (833)

4 ஓதி உணர்ந்தும், பிறர்க்குரைத்தும், தானடங்காப் பேதையிற் பேதையார் இல்.

நூல்களைக் கற்றுணர்ந்தும், பிறர்க்கு எடுத்துச் சொல்லியும், தான் அந்நூல்கள் கூறும் நன்னெறியில் அடங்கி நடவாத பேதை போன்ற வேறு பேதைகள் இல்லை. (834)

5 ஒருமைச் செயலாற்றும் பேதை, எழுமையும் தான்புக் கழுந்தும் அளறு.

எழுவகைப் பிறவிகளிலும் தான் புகுந்து வருந்துவதற்குரிய நரகத்தைப் பேதை இந்த ஒரு பிறப்பிலேயே செய்து கொள்ளும் வலிமையுடையவனாவான். (835)

6 பொய்படும் ஒன்ரே, புனைபூணும்; கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

முறையறிந்து செய்யத் தெரியாத பேதையானவன் ஒரு தொழிலைச் செய்யத் தொடங்கினால், அத்தொழில் கெட்டழி வதோடு, அவனும் கைவிலங்கு பூட்டப்பெறுவான். (836)

7 ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர்; பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

பேதை பெருஞ்செல்வம் அடைந்தபொழுது, அவனோடு தொடர்பில்லாத அயலார் நிறைய உண்டு திரிவர்; நெருங்கிய சுற்றத்தார் பசித்து வருந்துவர். (837)

8 மையல் ஒருவன் களித்தற்ரால்; பேதைதன்
கையொன்று உடைமை பெறின்.

பேதை தன்கையில் ஒரு பொருள் கிடைக்கப் பெற்று விட்டால், பித்துப் பிடித்த ஒருவன் கள்குடித்து மயங்கிய தன்மைபோல் ஆவான். (838)

9 பெரிதினிது பேதையார் கேண்மை; பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல்.

பிரிவு ஏற்படும் பொழுது துன்பம் சிறிதும் தருவதில்லை; எனவே பேதையருடன் கூடிய சிநேகம் இனிமையுடையது

10 கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்ரால்; சான்ரோர்
குழாஅத்துப் பேதை புகல்.

சான்ரோரின் கூட்டத்தில் பேதை புகுதல், அசுத்தமான வற்றை மிதித்துக் கழுவாத காலைப் படுக்கையில் வைத்தற் போலும். (840)

85—புல்லறிவாண்மை

அற்பமான அறிவுடைமை

1 அறிவின்மை இன்மையுள் இன்மை; பிறிதின்மை இன்மையா வையா துலகு.

இல்லாமையாகிய தரித்திரம் பலவற்றுள்ளுங் கொடிய தரித்திரமாவது அறிவின்மையே! மற்றத் தரித்திரங்களைத் தரித்திரமாக இவ்வுலகம் மதிக்காது. (841)

2 அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல், பிறிதுயாதும் இல்லை; பெறுவான் தவம்.

அறிவில்லாதவன் மனமகிழ்ந்து ஒரு பொருளைக் கொடுத்தற்குக் காரணம் வேறொன்றும் இல்லை; அப்பொருளைப் பெற்றுக் கொள்பவன் முன்செய்த தவப் பயனேயாம். (842)

3 அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை, செறுவார்க்கும் செய்தல் அரிது.

புல்லறிவாளர் தாமே தமக்குத் தேடிக்கொள்ளும் துன்பமானது, அவருடைய பகைவருக்கும் செய்ய முடியாததாம்.

4 வெண்மை எனப்படுவது யாதெனின், ஒண்மை உடையம்யாம் என்னும் செருக்கு.

"புல்லறிவாண்மை" என்று சொல்லப்படுவது யாதென்றால், "நாமே நல்லறிவுடையோம்" என்று தம்மைத்தாமே மதித்தலாகிய மயக்கமாகும். (844)

5 கல்லாத மேற்கொண் டொழுகல், கசடற வல்லதூஉம் ஐயம் தரும்.

புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையும் கற்றனவாகப் பெருமை பாராட்டித்திரிதல், குற்றமின்றி அவர்கள் கற்றுத் தேர்ந்த நூலைப்பற்றியும் மற்றவர்க்கு ஐயத்தை விளைவிக்கும்.

6 அற்றம் மறைத்தலோ புல்லறிவு; தம்வயின்
குற்றம் மறையா வழி.

தம்மிடத்துள்ள குற்றத்தை அறிந்து நீக்காதபொழுது, தம் உடம்பில் மறைத்துக் கொள்ளத் தக்க உறுப்பினை ஆடையால் மறைத்தல் புல்லறிவாம் (846)

7 அருமறை சோரும் அறிவிலான், செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

கிடைத்தற்கரிய உபதேசப் பொருளைக் கிடைக்கப் பெற்றும், அதனைப் பாதுகாக்காமல் புறக்கணிக்கும் புல்லறிவாளன், தனக்குத்தானே பெருந்தீமையை விளைத்துக் கொள்வான். (847)

8 ஏவவும் செய்கலான்; தான்தேரும் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

தனக்கு உறுதியானவற்றைப் பிறர் கூறினாலும் செய்ய மாட்டான்; தானாகவும் இவை செய்வன என்று அறியமாட்டான். இத்தகைய புல்லறிவாளனுடைய உயிர் நீங்கு மளவும், அவனுடைய உடம்பு பூமிக்குப் பாரமாம் (848)

9 காணுதாற் காட்டுவான், தான்காணுன்; காணுதான்
கண்டானும் தான்கண்ட வாறு.

பிறர் போதிப்பதை அறியுந்தன்மை யில்லாதவனுக்கு அறிவு கூறுவோன், அவனால் அறிவிலியாகக் கருதப்படுவான். அறிவில்லாதவனோ, தன் விடாப் பிடியால் அறிவுள்ளவனைத் தோன்றுவான். (849)

10 உலகத்தார் உண்டென்பது இல்லென்பான்,
அலகையா வைக்கப் படும். [வையத்து

உயர்ந்தோர் பலரும் "உண்டு" என்று கூறும் ஒரு பொருளை "இல்லை" என்று கூறுகின்ற ஒருவன், இவ்வுலகத்திற் பேயாக மதிக்கப் பெறுவான். (850)

86—இகல்

மாறுபாடு.

1 இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.

எல்லா உயிர்களுக்கும் பிற உயிர்களுடன் உறவாடாமை என்னும் தீயகுணத்தை வளர்க்கும் குற்றமாகிய நோயை மாறுபாடு என்று சொல்வர் அறிஞர். (851)

2 பகல்கருதிப் பற்ரு செயினும், இகல்கருதி
இன்னுசெய் யாமை தலை.

தம்மோடு உறவாடாமையைக் குறியாகக் கொண்டு வெறுக்கத் தக்கவற்றைச் செய்தாலும், மாறுபாடு கருதித் தாம் அவருக்குத் தீமை செய்யாதிருத்தலே மிகச் சிறந்ததாம்

3 இகல்என்னும் எவ்வநோய் நீக்கில், தவலில்லாத்
தாவில் விளக்கம் தரும்.

மாறுபாடு என்னும் துன்பத்தைச் செய்யும் நோயை நீக்கி விட்டால், அஃது ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த புகழைக் கொடுக்கும். (853)

4 இன்பத்துள் இன்பம் பயக்கும்; இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

மாறுபாடு என்னும் துன்பங்களெல்லாவற்றினும் மிகுந்த துன்பம் ஒருவனுக்கு இல்லையாயின், அஃது இன்பங்களெல்லாவற்றினும் மிகுந்த இன்பத்தைக் கொடுக்கும் (854)

5 இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை, யாரே
மிகலூக்கும் தன்மை யவர்?

மனத்தில் மாறுபாடு தோன்றியவிடத்து அதனை ஏற்றுக் கொள்ளாமல் அதை எதிர்த்து நீக்கி நடக்க ஆற்றல் உள்ளவரை வெல்ல நினைப்பவரும் உளரோ? இல்லை (855)

6 இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து.

'மாறுபாடு கொள்வதில் மிகுதல் இனிது' என்றெண்ணு கிறவனுடைய வாழ்வு தவறுவதுடன் அழிந்து போவதும் விரைவில் ஏற்படும். (856)

7 மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார், இகல்மேவல் இன்ன அறிவி னவர்.

மாறுபாட்டோடு பொருந்திய தீய அறிவை வளர்ப்போர், வெற்றி பொருந்துதற்குரிய நீதிநூற்பொருளை உணரமாட்டார்.

8 இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம்; அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு.

மனத்தில் மாறுபாடு தோன்றும்பொழுது அம் மாறுபாட் டிற்கு உடன் படாமல் சாய்ந்து நடத்தல் ஆக்கமாகும்; அதை எதிர்த்து வெல்லக்கருதினால் கேடு அவனையடைய முனைந்து நிற்கும். (858)

9 இகல்காணான் ஆக்கம் வருங்கால்; அதனை
மிகல்காணும் கேடு தரற்கு.

ஆக்கம் வரும் காலத்தில் ஒருவன் மாறுபாட்டை நினைக்க மாட்டான்; கேட்டை உண்டாக்கிக் கொள்ளும்போது அம்மாறுபாட்டை எற்று நடப்பான். (859)

10 இகலானும் இன்னாத எல்லாம்; நகலானும்
நன்னயம் என்னும் செருக்கு.

மாறுபாடு ஒன்றினாலே துன்பங்கள் எல்லாம் உண்டாகும். நட்பு ஒன்றினாலே நல்ல நீதியாகிய பெருமிதம் உண்டாகும். (860)

87—பகைமாட்சி

பகைவரது வலிமையை மிகுத்துக் கொள்ளல்

1 வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக; ஓம்பா
மெலியார்மேல் மேக பகை.

தம்மைக் காட்டிலும் வலியவரோடு மாறுபட்டு எதிர்த்து நிற்றலைக் கைவிடுக! தம்மைக் காட்டிலும் மெலியவரோடு எதிர்த்துப் பகை கொள்வதை ஒழியாமல் விரும்பி மேற்கொள்க. (861)

2 அன்பிலன், ஆன்ற துணையிலன், தான்துவ்வான்,
என்பரியும் ஓதிலான் துப்பு?

அன்பு இல்லாதவனும் பொருந்திய துணைவரும் இல்லாதவனும், தானும் வலிமையில்லாதவனுமிருக்கும் ஒருவன், பகைவனது வலிமையை எவ்வாறு ஒழிக்க வியலும்? (862)

3 அஞ்சும், அறியான் அமைவிலன், ஈகலான்,
தஞ்சம் எளியன் பகைக்கு.

அஞ்சுகின்றவனும், அறிவில்லாதவனும், பிறருடன் பொருந்தி நடக்கும் குணமில்லாதவனும், ஈயாத உலோபியுமாயுள்ள ஒருவன் பகைவர்க்கு மிக்க எளியவனுவான். (863)

4 நீங்கான் வெகுளி, நிறையிலன், எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது.

தீராச் சினமுடையவனும், நெஞ்சை அடக்கி ஆளும் தன்மையில்லாதவனுமாயுள்ள ஒருவன், எக்காலத்திலும், எவ்விடத்திலும், எவர்க்கும் எளியவனுவான். (864)

5 வழிநோக்கான், வாய்ப்பன செய்யான், பழிநோக்
பண்பிலன் பற்றார்க்கு இனிது. [கான்

நீதி நெறியையறியாமலும், பொருத்தமானவற்றைச் செய்யாமல், பழியைப் பார்க்காமல், நல்ல பண்பாடுமில்லாமலிருந்தால், பகைவருக்கு எளியவனுவான். (865)

6 காணுச் சினத்தன், கழிபெருங் காமத்தான், பேணுமை பேணப் படும்.

மிகுந்த கோபமுடையவனும், மேன்மேல் வளரும் காம விச்சையுடையவனுமிருந்தால், ஒருவன், தன் பகைவனுல் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுவான். (866)

7 கொடுத்தும் கொளல்வேண்டும்; மன்ற அடுத் தாணுத செய்வான் பகை. [திருந்து

மிக நெருங்கியிருந்து கொண்டு பொருந்தாத காரியங்களைச் செய்பவனுடைய பகைமையைப் பொருள் கொடுத்தாயினும் உறுதியாய்ப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். (867)

8 குணனிலனுய்க் குற்றம் பலவாயின், மாற்ருர்க்கு இனனிலனும் ஏமாப் புடைத்து.

ஒருவன் குணம் சிறிதுமில்லாதவனுய், குற்றங்கள் பல வற்றையுடையவனுனுல், துணைவர் இல்லாதவனுவான். அப் பொழுது, அவனுடைய பகைவர்க்கு நன்மையாகும். (868)

9 செறுவார்க்குச் சேணிகவா இன்பம்; அறிவிலா அஞ்சும் பகைவர்ப் பெறின்.

அறிவில்லாதவராய், அஞ்சத்தக்க இயல்புமுள்ள பகைவர் கிடைக்கப் பெற்ருல், அவரை எதிர்த்து நிற்கும் பகைவர்க்கு இன்பங்கள் தொலைவிலில்லை; விரைவிலுண்டாகும். (869)

10 கல்லான் வெகுளும் சிறுபொருள், எஞ்ஞான்றும் ஒல்லானே, ஒல்லாது ஒளி.

கல்வியறிவில்லாத ஒருவனேடு கோபித்துப் பகைத்தலால் வரும் சிறு பொருளை அடையாதவனே எக்காலத்தும் புகழ் வந்து சேராது. (870)

88—பகைத்திறம் தெரிதல்

பகைவருடைய வலிமைகளை ஆராய்ந்தறிதல்.

1 பகையென்னும் பண்பி லதனை, ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று.

பகை என்று சொல்லப்பட்ட பண்பற்ற ஒரு தீமையை ஒருவன் விளையாட்டிற்காகவும் விரும்பலாகாது. (871)

2 வில்லே ருழவர் பகைகொளினும், கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

ஒருவன் வில்லை ஏராகக் கொண்ட வீரருடன் பகை கொண்டாலும், சொல்லை ஏராகக்கொண்ட அறிஞருடைய பகையைக் கொள்ளலாகாது. (872)

3 ஏமுற் றவரினும் ஏழை; தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

தான் தனியாக இருந்து கொண்டு பலரோடு பகைத்துக் கொள்ளுபவன் பித்துக் கொண்டவனைக் காட்டிலும் பேதையாகக் கருதப்படுவான். (873)

4 பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு.

பகைவனையும் சிநேகமாக்கிக் கொண்டு காரியத்தை முடிக்கும் குணமுடைய அரசனின் பெருமையின்கண் இவ்வுலகம் தங்கியிருக்கின்றது. (874)

5 தன்துணை இன்றால்; பகைஇரண்டால்; தான்ஒரு
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று. [வன்

தனக்கு உதவி செய்யும் துணையோ இல்லை; தன்னைத் துன்புறுத்தும் பகைவரோ இருவர்; இந்த நிலையில், அவ்விரு வருள் தனக்குப் பொருந்திய ஒருவனை இனிய துணைவனாகச் செய்துகொள்ளக் கடவன். (875)

6 தேறினும் தேரு விடினும், அழிவின்கண்
தேருன் பகாஅன் விடல்.

இதற்கு முன் ஒருவனைப் பற்றி ஆராய்ந்து தெளிந்திருந்தாலும், தெளியாமலிருந்தாலும், தனக்குக் கேடு வந்த காலத்தில், அப் பகைவனைப் பற்றித் தெளிந்து தன்னோடு சேர்த்துக் கொள்ளாமலும், அவன் தன்னைவிட்டு நீங்காமலும், இவ் விரண்டுக்கும் பொதுவாக வைத்துக் கொள்ளவேண்டும். (876)

7 நோவற்க நொந்தது அறியார்க்கு; மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

தான் துன்பப் பட்டிருப்பதைத் தாமாகவே அறியாத நண்பருக்குத் தன் துன்பத்தைச் சொல்லாதிருக்கக் கடவன்; பகைவரிடத்துத் தன எளிய நிலைமையையும காட்டிக் கொள்ளாதிருக்கக் கடவன். (877)

8 வகையறிந்து தற்செய்து தற்காப்ப, மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.

வெல்லும் வகையை அறிந்து, தன்னைப் பலப்படுத்திக கொண்டு, தற்காப்பும் தேடிக் கொண்டால், பகைவர் கொண்ட செருககுத் தானே அழியும். (878)

9 இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

முள்மரத்தை இளம் பருவத்திலேயே வெட்டி விட வேண்டும்; வயிரம் பாயும்படி வளர்ந்து விட்டபின், வெட்டுகின்றவனுடைய கையையே அது புண்படக கிழித்து வருத்தும்.

10 உயிர்ப்ப உளரல்லர் மன்ற; செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

தம்மோடு பகைத்தவருடைய செருக்கை அழிக்க வியலாதவர், மூச்சு விடுமளவிற்கும் திண்ணமாக உயிர்வாழுமாட்டார். (880)

89—உட்பகை

வெளிக்குப் பகையில்லாதவர்போல் நடித்து, உள்ளே பகை கொண்டிருத்தல்.

1 நிழல்நீரும் இன்னுத இன்னு; தமர்நீரும்
இன்னுவாம் இன்னு செயின்.

இன்பத்தைத் தரும் நிழலும், நீரும் நோயைத் தருவன வாயின் தீயவையாம். அதுபோலவே, சுற்றத்தாரின் தன்மையும் துன்பத்தைச் செய்யுமாலுல், தீமையேயாம். (881)

2 வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

வாளைப்போன்று "வெட்டுவோம்" என்று வெளிப்பட்டு எதிர்த்து நிற்கும் பகைவர்க்கு அஞ்சாதிருக்கக் கடவர் ஆலுல், உறவினரைப்போல் இருந்து கொண்டு உட்பகையுடையோரின் தொடர்புக்கு அஞ்சக்கடவர். (882)

3 உட்பகை அஞ்சித்தற் காக்க; உலைவிடத்து.
மட்பகையின் மாணத் தெறும்.

உட்பகையுடையவர்க்கு அஞ்சித் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், தளர்ச்சி வந்த காலத்தில், மண்கலத்தை அறுக்கும் கருவியைப்போல அந்த உட்பகை தவறாமல் அழித்து விடும். (883)

4 மனமாணு உட்பகை தோன்றின், இனமாணு
ஏதம் பலவும் தரும்.

மனத்தின்கண் திருத்தமில்லா உட்பகை ஒருவனுக்கு உண்டாகுமாலுல், அது அவனுக்குச் சுற்றத்தினர் வசமாகாமைக்குக் காரணமான குற்றம் பலவற்றையுந் தரும். (884)

5 உறல்முறையான் உட்பகை தோன்றின், இறல்
ஏதம் பலவும் தரும். [முறையான்

உறவு முறையோடு கூடிய உட்பகை ஒருவனுக்கு ஏற்படுமாலுல், இறக்கும் முறையோடு கூடிய குற்றம் பலவும் விளைக்கும். (885)

6 ஒன்றுமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றுமை ஒன்றல் அரிது.

தனக்கு உற்றாராயுள்ளவரிடையே பகைமை உண்டாகுமானால், அவன் அழியாதிருத்தல் ஒருபொழுதும் இயலாது. (886)

7 செப்பின் புணர்ச்சிபோல் கூடினும், கூடாதே
உட்பகை யுற்ற குடி.

செப்பினது இணைப்பைப்போல வெளிப்படையாக நன்கு சேர்ந்திருந்தாலும், உட்பகையுடைய குடும்பத்தார் மனம் பொருந்தி வாழமாட்டார்கள். (887)

8 அரம்பொருத பொன்போலத் தேயும்; உரம்பொருது
உட்பகை யுற்ற குடி.

உட்பகையுடைய குடும்பம், அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்பைப்போல வலிமை தேய்ந்தழியும். (888)

9 எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்,
உட்பகை உள்ளதாம் கேடு.

எள்ளின் பிளவைப் போன்ற மிகச் சிறிய அளவுடைய தென்றாலும், ஒரு குடியைக் கெடுக்க வல்ல கேடு அந்த உட்பகையினிடத்து உள்ளது. (889)

10 உடம்பாடு இலாதவர் வாழ்க்கை, குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று.

மனத்தில் பொருத்தம் இல்லாதவருடன் கூடி வாழ்கின்ற வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்புடன் கூடி வாழ்வதைப் போன்றது. (890)

90—பெரியாரைப் பிழையாமை

பெரியோர்களை அவமதித்து நடவாதிருத்தல்

1 ஆற்றுவார் ஆற்றல் இகழாமை; போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை.

எடுத்த காரியங்களை நன்கு முடிக்க வல்ல பெரியோரின் வலிமையை இகழாதிருத்தல், தமக்குத் தீங்கு வராமற் காப்பவர் செய்யும் காவல்களெல்லாவற்றினும் சிறந்ததாம். (891)

2 பெரியாரைப் பேணாது ஒழுகின், பெரியாரால் பேரா இடும்பை தரும்.

ஆற்றல்மிக்க பெரியோரை மதிக்காமல் நடந்தால், அது அப்பெரியோரால் ஒரு நாளும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும். (892)

3 கெடல்வேண்டிற் கேளாது செய்க; அடல்வேண்டின் ஆற்று பவர்கண் இழுக்கு.

அழிக்க விரும்புவானாகில் அவ்வாறே செய்து முடிக்கக் கூடிய வல்லமையுடையவனிடத்தே, ஒருவன் தான் அழிய விரும்பினால், தவறு செய்தலை வரமபு கடந்து அவரிடம் செய்யக் கடவர். (893)

4 கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்; ஆற்று ஆற்றுதார் இன்ன செயல். [வார்க்கு

ஆற்றல் பெரிதுடையவர்க்கு யாதொரு வலிமையுமில்லா தவர் தீமை செய்தல், தானே வரக்கூடிய யமனைக் கைநீட்டி "வா" என்றழைப்பது போலாம். (894)

5 யாண்டுச்சென்று யாண்டும் உளராகார்; வெந்துப் வேந்து செறப்பட் டவர். [பின்

வலிமையுடைய அரசனுற் கோபிக்கப் பட்டோர், அவனை விட்டு எங்குபோனாலும் எங்கும் வாழ இயலாதவராவர். (895)

6 எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

தீயாற் சுடப்பட்டாலும் தப்பிப் பிழைத்து வாழக்கூடும்; ஆனால், வலிமை மிக்க பெரியோர்க்குத் தீமைசெய்தால் தப்பிப் பிழைக்க மாட்டார் (896)

7 வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்
தகைமாண்ட தக்கார் செறின். [ஆம்?

தகுதிகளால் மேன்மையுற்ற பெரியோர், ஒருவனைக் கோபிப்பாராயின், அவனுடைய பலவகைச் சிறப்பு வாய்ந்த வாழ்வும், பெரும் பொருளும் என்னகதியை அடையும்?(897)

8 குன்றன்னார் குன்ற மதிப்பின், குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

மலைபோன்ற பெரியோர், 'கெடுக' என்று நினைப்பாராயின், அப்பொழுதே, இந்நிலவுலகத்தில் நிலைபெற்றார் போன்ற செல்வரும் தம்குடியோடு அழிவர். (898)

9 ஏந்திய கொள்கையார் சீறின், இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

மிகச் சிறந்த கொள்கையையுடைய பெரியோர் கோபிப்பாராயின், அரசன் ஆளும் அரசையிழந்து இடைநடுவில் அழிந்து போவான். (899)

10 இறந்தமைந்த சார்புடைய ராயினும், உய்யார்;
சிறந்தமைந்த சீரார் செறின்.

மிகப் பெரிய சிறப்பு வாய்ந்த பெரியோர் கோபிப்பாராயின், அளவு கடந்த துணைகளெல்லாம் பெற்றவராயினும் தப்பிப் பிழைக்க இயலாது. (900)

91—பெண்வழிச் சேறல்

மனைவியின் சொல்வழி தான் நடத்தல்.

1 மனைவிழைவா மாண்பயன் எய்தார்; வினைவிழைவார் வேண்டாப் பொருளும் அது.

இன்பம் காரணமாக தம் மனையாள்மேல் ஆசைகொண்டு அவள் சொற்படி நடப்பவர் சிறந்த பயனை அடையமாட்டார்; கடமையைச் செய்ய விரும்புவோர் வேண்டாத செய்கையும் அதுவே! (901)

2 பேணுது பெண்விழைவான் ஆக்கம், பெரியதோர் நாணுக நாணுத் தரும்.

தன் ஆண்மையை விரும்பாமல், மனைவியின் பெண்மைக்கு ஆசைப்பட்டிருப்பவனுடைய செல்வம், யாவர்க்கும் மிகப் பெரிய நாணமாவதுடன், வெட்கத்தையும் விளைவிக்கும் (902)

3 இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை, எஞ்ஞான்றும் நல்லாருள் நாணுத் தரும்.

மனையாளுக்குப் பணிந்து நடக்கும் இழிந்த தன்மை, ஒருவனுக்கு எப்பொழுதும் பெரியோர் முன்னிலையில் வெட்கத்தைக் கொடுக்கும். (903)

4 மனையாளை அஞ்சும் மறுமையி லாளன் வினையாண்மை வீறெய்த லின்று.

மனைவிக்கு அஞ்சி நடக்கும் மறுமைப் பயனையிழந்த ஒருவனின் செயலாற்றல் தன்மை பெருமையடையவதில்லை. (904)

5 இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும் நல்லார்க்கு நல்ல செயல்.

மனைவிக்கு அஞ்சி நடப்பவன் எப்போதும் நல்லவர்க்கு நன்மையான செயல்களை செய்வதற்கு அஞ்சுவான். (905)

6 இமையாரின் வாழினும் பாடிலரே; இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர்.

மனைவியினுடைய மூங்கில்போலுந் தோள்களுக்கு அஞ்சி வாழ்வோர், இவ்வுலகில் தேவரைப்போலச் சிறப்பாக வாழ்ந்தாலும், பெருமையில்லாதவரே யாவர்! (906)

7 பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின்
பெண்ணே பெருமை யுடைத்து. [நாணுடைப்

மனைவியின் ஏவலுக்கு அடங்கி நடக்கின்றவனுடைய ஆண்மையைக் காட்டிலும், நாணத்தைத் தன் இயல்பாகக் கொண்டுள்ள பெண்ணின் பெண்மையே பெருமையுடையது.

8 நட்டார் குறைமுடியார் நன்ருற்ருர்; நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர்.

மனைவியின் சொற்படி நடப்பவர், தம் நண்பர்க்கு வந்த துன்பத்தைத் தீர்க்க மாட்டார்; நல்ல காரியமும் செய்ய மாட்டார். (908)

9 அறவினையும், ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல்.

அறச் செயலும், அதுசெய்தற்குரிய பொருள் முயற்சியும், இன்பமனுபவித்தலும், மனைவி ஏவிய சொல்வழி நடப்போரிடத்தில் இல்லையாம். (909)

10 எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். [ஞான்றும்

மேற்கொண்ட காரியத்தை ஆராய்ந்து செய்து முடிக்கும் திடத்துடன் தகுந்த நிலைமையும் உடையவர்களுக்கு, மனைவியின் ஏவற்படி நடக்கும் அறிவின்மை இல்லையாம். (910)

92—வரைவின் மகளிர்

இன்பத்தை விலைக்கு விற்கும் வேசையர் இயல்பு

1 அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடி
இன்சொல் இழுக்குத் தரும். [யார்

அன்பிஞல் விரு ப் ப ங் கொள்ளாமல், பொருளுக்காக விரும்புகின்ற வேசையரின இனிய சொற்கள் ஒருவனுகுக் கேடு விளைவிக்கும். (911)

2 பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

கிடைக்கக் கூடிய பொருளை அளவிட்டு அதற்கேற்ற வாறு இன் சொற் பேசுகின்ற தீயகுணமுள்ள வேசையரின் இன்பத்தை ஆராய்ந்து பார்த்து, அவருடன் பொருந்தாது நீங்கக் கடவர். (912)

3 பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம், இருட்ட
ஏதில் பிணந்தழீஇ யற்று. [டறையில்

பொருளிலேயே குறியாயிருக்கும் பொதுமகளிரின் பொய் யான சேர்க்கை, இருட்டறையில் அயலானுடைய பிணத்தைத் தழுவினுற் போன்றதாம். (913)

4 பொருட்பொருளார் புன்னலம் தோயார்; அருட்
ஆயும் அறிவி னவர். [பொருள்

பொருளையே குறியாகக் கொண்ட பொதுமகளிரின் அற்ப இன்பத்தை, அருளாகிய சிறந்த பொருளை ஆராயும் நல்லறி வுடையோர் பொருந்த மாட்டார். (914)

5 பொதுநலத்தார் புன்னலம் தோயார்; மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.

இயற்கையறிவின் நன்மையாற் சிறப்புற்ற பேரறிவுடை யோர், பொ ரு ள் கொடுப்போரெல்லார்க்கும் இன்பத்தைத் தரும் பொதுமகளிரின் அற்ப சுகத்தைப் பொருந்த மாட்டார்.

6 தந்நலம் பாரிப்பார் தோயார்; தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

ஆடல் பாடல் முதலிய கருதிகளாற் செருக்குக் கொண்டு அற்ப சுகத்தினை விலைக்கு விற்கும் பொதுமகளிரது தோளை, அறிவொழுக்கங்களால் உலகப் புகழ் பரப்பும் உயர்ந்தோர் தொடமாட்டார். (916)

7 நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வார்; பிறநெஞ்சிற்
பேணிப் புணர்ப்பவர் தோள்.

நெஞ்சிலே பொருள் முதலிய மற்றையவற்றிற்கு ஆசை கொண்டு, அவற்றைக் கொடுப்பவரைச் சேர்கின்ற பொது மகளிரின் தோளை, நிறையுடன் கூடிய மனமில்லாதவரே பொருந்துவர். (917)

8 ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப;
மாய மகளிர் முயக்கு.

அழகு, சொல், செயல், ஆகியவற்றால் ஆடவரை மயக்கும் பொதுமகளிரின் சேர்க்கை, அவ்வஞ்சகத்தை ஆராய்ந்தறிய முடியாத மூடர்களுக்கு உயிரைவாங்கக்கூடிய ஒரு பெண் தெய்வத்தை பெற்றதுபோலாம் என்று அறிந்தோர் கூறுவர்.

9 வரைவிலா மாண்இழையார் மென்தோள், புரை
பூரியர்கள் ஆழும் அளறு. [யிலாப்

பொருள் கொடுப்போரை யெல்லாம் சேரும் பொதுமகளிரின் மெல்லிய தோள்கள், அறிவற்ற கீழ்மக்கள் புகுந்து அழுந்தும் நரகமாம். (919)

10 இருமனப் பெண்டிரும், கள்ளும், கவறும்,
திருநீக்கப் பட்டார் தொடர்பு,

இரண்டுபட்ட மனத்தையுடைய பொதுமகளிர், கள், சூது என்ற இம் மூன்றும் திருமகளால் வெறுக்கப்பட்டோருக்கு தொடர்புகளாம். (920)

93—கள்ளுண்ணாமை

அறிவைக் கெடுக்கும் கள்ளைக் குடியாதிருத்தல்

1 உட்கப் படாஅர்; ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்; கட்காதல் கொண்டொழுகு வார்.

கள்ளின்மேல் ஆசைகொண்டு நடப்பவர், எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்பட மாட்டார்; தமக்குரிய புகழையும் இழந்து விடுவர். (921)

2 உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரால் எண்ணப் படவேண்டா தார்.

கள்ளை உண்ணாதிருக்கக் கடவர்! பெரியோரால் மதிக்கப் படுதலை விரும்பாதவர், வேண்டுமாலால் கள்ளை உண்ணக் கடவர்! (922)

3 ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்! என்மற்றுச் சான்றோர் முகத்துக் களி?

கன் உண்டு களித்தல் பெற்றதாயின் முன்னிலையிலும் துயரந் தருவது! அப்படியானால், சான்றோர் முன்னிலையில் அது எப்படியிருக்கும்? (923)

4 நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும்; கள் பேணுப் பெருங்குற்றத் தார்க்கு. [என்னும்

'கள்' என்று சொல்லப்படும் எவரும் விரும்பாத பெருங் குற்றத்தையுடையோரின் முன்னிலையில், 'நாணம்' என்னும் நங்கை நிற்க முடியாமற் போய்விடுவாள். (924)

5 கையறி யாமை யுடைத்தே; பொருள்கொடுத்து மெய்யறி யாமை கொளல்.

அரிய பொருளை விலைகொடுத்துக் கள்ளைக் குடித்து மெய் மறந்து திரிதல், செய்வதறியாத அறியாமையாகும்.(925)

6 துஞ்சினுர் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்உண் பவர்.

உறங்கினவரும் செத்தவரும் வேறுபாடில்லாதவர்! அவ் வாறே, கள் உண்பவர் அறிவை இழத்தலால் நஞ்சுண்டவரே யாவர்! (926)

7 உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்;
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

மறைந்திருந்து கள்ளைக் குடித்து அறிவு கலங்கப் பெறு வோர், உள்ளூர் மக்களாலே இகழியங்களும் அறியப்பெற்று, எப்பொழுதும் பரிகசிக்கப் படுவார்கள். (927)

8 களித்தறியேன் என்பது கைவிடுக; நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

மறைவிலே கட்குடிப்போர், "நான் கள்ளுண்டறியேன்" என்று மதிப்பாகப் பேசுவதைக் கைவிடக்கடவர்! கள்ளுண்ட பொழுதே, இவர் மனத்தில மறைத்து வைத்ததெல்லாம் வெளிப்பட்டு விடும். (928)

9 களித்தானைக் காரணம் காட்டுதல், கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

கள்ளுண்டு களித்த ஒருவனை, "இஃது ஆகாது" என்று மற்றொருவன் காரணங் காட்டித் தெளிவித்தல், நீரினடியில் மூழ்கிய ஒருவனை மற்றொருவன் தீப்பந்தம் கொண்டு தேடிஞற் போலாம். (929)

10 கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு? [கால்,

ஒருவன் தான் கள்ளுண்ணுத சமயத்திலே, கள்ளுண்ட வனொருவனைக் காண்கிறனல்லவா? தானுண்டபொழுது ஏற் படும் நிலை குலைவை அவன் நினைக்க மாட்டானோ? (930)

94—சூது

சூதாட்டத்தின் தீமை.

1 வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

தான் வெற்றியே பெறுவதாயினும், சூதாட்டத்தை ஒருவன் விரும்பாதிருக்கக் கடவன! அந்த வெற்றி, தூண்டிலிலுள்ள இரும்பை இரையென்றெண்ணி மீன விழுங்கிய தன்மையைப் போன்றதாம். (931)

2 ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு. [கொல்

முதலில் ஒரு பொருளைப் பெற்றுப் பின் நூறு பொருள்களை இழுக்கின்ற சூதாடிகளுக்கு, நன்மையுறறு வாழும் ஒரு வழி யுண்டாகுமோ? (932)

3 உருளாயம் ஓவாது கூறின், பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

ஒருவன் உருள்கின்ற சூதாடுகருவியாற் கிடைத்த ஆதாயத்தை இடைவிடாமற் சொலலிச் சூதாடினால், அவனுடைய செல்வக் களஞ்சியம் முழுதும் நீங்கிப் பகைவனரிடம போய்ச் சேரும். (933)

4 சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில்.

துன்பங்கள் பலவற்றையுங் கொடுத்து, உள்ள சிறப்பையும் ஒழிக்கின்ற சூதாட்டத்தைப் போல, ஒருவனுக்கு வறுமையைத் தாவல்லது வேறொன்றில்லை (934)

5 கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.

சூதாடுகருவியும், சூதாடுமிடமும், சூதாடும் கைத்திறமையும் ஆகியவற்றை மதித்துப் பொழுதுபோக்கியவரே, எல்லாச் செல்வமும் உடையவராயிருந்தும் இல்லாதவரா யழிவர்! (935)

6 அகடாரார்; அல்லல் உழப்பர்;சூ தென்னும்
முகடியால் மூடப்பட் டார்.

சூதாட்டம் என் னும் மூதேவியினால் விழுங்கப்பட்டவர், வயிறு நிரம்ப உண்ணவுமாட்டார்; பல துன்பங்களையும் அடையப் பெறுவார். (936)

7 பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

சூதாடுமிடத்திலேயே பொழுது போக்கிக் கொண்டிருந்தால், அது முன்னோரால் தேடி வைக்கப் பெற்ற செல்வத்தையும இயற்கையாய் அமைந்த நற்குணத்தையும் கெடுத்து விடும். (937)

8 பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்
அல்லல் உழப்பிக்குஞ் சூது. [கெடுத்து

உள்ள செல்வத்தையும் அழித்து, பொய்யை மேற் கொள்ளச் செய்து, அருளையும் கெடுத்துப் பலவகையாலும் துன்பமுறச் செய்வது சூதாட்டம். (938)

9 உடை,செல்வம், ஊண்,ஒளி, கல்விஎன் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

சூதாடுவதைப் பொழுது போக்காகக் கொண்டால் ஒருவனுக்குப் புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தும கிடைக்காமற் போம். (939)

10 இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல், துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்.

சூதாடுவதால் பொருளை இழக்க இழக்க அச்சூதாட்டத்தின் மேல் காதல் அதிகரிக்கும் சூதாடியைப்போல, காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூவகைத் துன்பங்களால் உடல் வருந்த வருந்த அதன் மீது உயிரும் அதிக ஆசை கொள்கிறது. (940)

95—மருந்து

உடலுக்கு ஏற்படும் நோயைத் தீர்க்கும் மருந்து

1 மிகினும் குறையினும் நோய்செய்யும்; நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று.

மருத்துவ நூலோர், வாதம் பித்தம் சிலேட்டுமம் என் றெண்ணிய மூன்றும், ஒருவன் தன் செயலிலும் உணவிலும் அளவுக்கு மீறினாலும் குறைந்தாலும், துன்பத்தைக் கொடுக்கும்.

2 மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு; அருந்தி அற்றது போற்றி உணின். [யது

ஒருவன் முன் உண்ட உணவு செரித்து விட்ட தன் மையை நன்கறிந்து போற்றி, தக்க அளவு பின் உண் பானாயின், அவன உடம்பிற்கு மருந்து என்று ஒன்று வேண் டியதில்லை. (942)

3 அற்றல் அளவறிந்து உண்க; அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

முன் உண்ட உணவு நன்கு செரித்து விட்டால, பின் னுல் செரிக்குமளவையறிந்து மிதமாக உண்ணக் கடவன்! பெறுதற்கரிய மானிடவுடம்பைப் பெற்ற ஒருவன், நெடுங் காலம் அதைக் கொண்டு செலுத்தும் வழியாம். (943)

4 அற்றது அறிந்து கடைப்பிடித்து, மாறல்ல துய்க்க துவரப் பசித்து.

முதலிலுண்ட உணவு முழுதும் செரித்ததை நன்குணர்ந்து, உடம்புக்கு மாறுபாடில்லாத உணவுகளே உறுதியாய்த் தெரிந்து, நன்றாய் பசித்த பின்பே உண்ணக் கடவர்! (944)

5 மாறுபா டில்லாத உண்டி மறத்துண்ணின் ஊறுபா டில்லை உயிர்க்கு.

வாத பித்த சிலேட்டுமங்களுக்கு மாறுபாடில்லாத உணவை, அளவுக்கு மிஞ்சாமல் வாயைக் கட்டுப்படுத்தி உண்பானுயின் அவனுடைய உயிர்க்கு நோய் இல்லை. (945)

6 இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும் கழிபே ரிரையான்கண் நோய்.

குறைத்து உண்பதால் வரும் சுகத்தையறிந்து, அங்ஙனம் உண்பவனிடத்தில் இன்பம் நிலைத்து நிற்பதைப்போல, மிகப் பெருந்தீனி தின்பவனிடத்தில் துன்பம் நிலைத்து நிற்கும் (946)

7 தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின் நோயள வின்றிப் படும்.

பசித்தீயின் அளவைத் தெரிந்து கொள்ளாமல் அதிகமாக உண்டால், நோய்கள் அளவில்லாமல் ஏற்படும். (947)

8 நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்.

நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோய் வந்ததற்குரிய காரணத்தையும் ஆராய்ந்து, அந்நோய் நீங்குதற்குரிய வழியையும் ஆராய்ந்து, முறை தவறாமல் மருத்துவஞ் செய்யக்கடவர்.

9 உற்றான் அளவும், பிணியளவும், காலமும், கற்றான் கருதிச் செயல்.

மருத்துவநூல் கற்றறிந்தவன், நோயாளியின் வயதையும், நோயின் நிலைமையையும், மருத்துவஞ் செய்தற்கேற்ற காலத்தையும் நூல்முறைப்படி ஆராய்ந்து செய்யக் கடவன்! (949)

10 உற்றவன், தீர்ப்பான், மருந்து,உழைச் செல்வான் அப்பால்நாற் கூற்றே மருந்து. [என்று

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, அருகிருந்து உதவி செய்பவன்; என்ற நான்கு பகுதிகளையுடையது மருத்துவ முறை. (950)

3. ஒழிபியல்

96—குடிமை

உயர்குடிப் பிறப்பின் தன்மை

1 இற்பிறந்தார் கண்அல்லது இல்லை; இயல்பாகச் செப்பமும் நாணும் ஒருங்கு.

நடுவு நிலைமையும், நாணமும், உயர்குடியிற் பிறந்தவரிடத்தில் அல்லாமல், பிறரிடம், ஒரு சேர இயற்கையாய் அமைவதில்லை. (951)

2 ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும் இழுக்கார் குடிப்பிறந் தார்.

உயர்குடிப் பிறந்தோர் ஒழுக்கம், வாய்மை, நாணம் ஆகிய இம்மூன்றினின்றும் தவறி விடாமல் நடந்து கொள்வர்.

3 நகை,ஈகை, இன்சொல், இகழாமை, நான்கும் வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

உயர்ந்த குடியிற் பிறந்தவருக்கு, முகமலர்ச்சி, ஈகை, இன்சொல், எவரையும் இகழ்ந்து பேசாமை; ஆகிய நான்கு நற்பண்புகளும் பொருந்தியிருக்கும் என்பர் அறிஞர். (953)

4 அடுக்கிய கோடி பெறினும், குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர்.

கோடிக்கணக்கான பொருளைப் பெறுவதாயிருந்தாலும், உயர்குடிப் பிறந்தோர் தம் குடிப்பெருமை குறைதற்குரிய காரியங்களைச் செய்ய மாட்டார். (954)

5 வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி பண்பில் தலைப்பிரிதல் இன்று.

பழமையான நற்குடியிற் பிறந்தவர், வறுமையிற் குறைந்து போனாலும், தம் பண்பாடுகளிலிருந்து நீங்க மாட்டார். (955)

6 சலம்பற்றிச் சால்பில செய்யார்;மா சற்ற
குலம்பற்றி வாழ்த்தும்என் பார்.

"குற்றமில்லாத குடிப்பண்புடன் வாழ்வோம்" என்று கருதி வாழ்பவர், வஞ்சகத்தை மனதிற்கொண்டு சக்தியற்ற காரியங்களைச் செய்ய மாட்டார். (956)

7 குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம்; விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

வானத்திலுள்ள சந்திரனிடங் காணப்படும் களங்கத்தைப் போன்று, உயர்குடியிற் பிறந்தோரிடத்துண்டாகும குற்றமானது பலரும் அறியப் பளிச்சென்று காணப்படும் (957)

8 நலத்தின்கண் நாரின்மை தோன்றின், அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

ஒருவனுடைய நல்ல பண்பாட்டிற்கிடையில், அன்பில்லாமையும் காணப்படுமானால், உலகம் அவனுடைய குடிப் பிறப்பைக் குறித்து சந்தேகம் கொள்ள நேரும (958)

9 நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

நிலத்தின் வளப்பத்தைப் பயிரானது காட்டுகிறது அதுபோல, உயர் குடியிற் பிறந்தவர் என்ற தன்மையை அவருடைய வாய்ச்சொல் காட்டுகின்றது. (959)

10 நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்; குலம்
வேண்டுக யார்க்கும் பணிவு. [வேண்டின்

ஒருவன் தனக்கு நன்மையை விரும்புவானானால், நாணம் உடையவனாக நடக்கக் கடவன். மேலும், குடிப் பெருமையைப் பேண விரும்புவானானால், எவரிடத்திலும் பணிவுடையவனாக நடந்து கொள்ளக் கடவன். (960)

97—மானம்

நிலையில் தாழாமையும், தாழ்வு வந்தால் வாழாமையும் ஆகிய பண்பாடு

1 இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.

இன்றியமையாத சிறப்பைத்தரும் காரியங்களாயிருந் தாலும், குடிப்பிறப்புக்குக் குறைவு நேரிடும் காரியங்களைக் கைவிடக் கடவர். (961)

2 சீரினும் சீரல்ல செய்யாரே; சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

புகழுடன் பேராண்மையை நிலைநிறுத்த விரும்புவோர், புகழைத்தேடும் காரியங்களிலும், தம் குடிப்பிறப்புக்குத் தகுதி யில்லாத காரியத்தைச் செய்ய மாட்டார். (962)

3 பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

நிறைந்த செல்வமுள்ள காலத்தில் ஒருவன் பணிந்து நடக்கக் கடவன்! குறைந்து வறுமையுற்ற நிலைமையில் வணங் காமல் நிமிர்ந்து நடக்கக் கடவன்! (963)

4 தலையின் இழிந்த மயிரனையர்; மாந்தர்
நிலையின் இழிந்த கடை.

தம் நிலைமையினின்று தாழ்ந்து விட்டால், மக்கள், தலை யிலிருந்து விழுந்து தாழ்ச்சியுற்ற மயிரைப் போன்றவராவர்.

5 குன்றின் அனையாரும் குன்றுவர்; குன்றுவ
குன்றி அனைய செயின்.

மலைபோன்ற மதிப்புடையவராலும், தரத்திற்குத் தகாத செய்கைகளைக் குன்றிமணியளவிற் செய்வாராயின், தாழ்ச்சியுறுவர். (965)

6 புகழின்ருல்; புத்தேள்நாட் டுய்யாதால்; என்மற்று!
இகழ்வார்பின் சென்று நிலே.

தன்னே அவமதித்துப் பேசுவார் பின்னே சென்று வணங்கி நிற்கும் நிலேமை, இம்மையில் புகழைத் தாராது; மறுமையில் தேவருலகத்திற்கும் செலுத்தாது. ஆகவே, அவன் என்ன பயனே அடைவான்! (966)

7 ஒட்டார்பின் சென்ருருவன் வாழ்தலின், அந்-
கெட்டான் எனப்படுதல் நன்று. [நிலேயே

தன்னே இகழ்பவர் பின்சென்று ஒருவன் உயிர் வாழ்வதைக் காட்டிலும், 'மதிப்புக் கெடாத நிலேயில் நின்றே அழிந்து போனுன்' என்று சொல்லப்படுதல் நல்லதாம். (967)

8 மருந்தோமற்று ஊனேம்பும் வாழ்க்கை! பெருந்
தீடழிய வந்த இடத்து. [தகைமை

பெருந்தன்மையின் சிறப்பு அழிந்து போகும் நிலேமை நேர்ந்த பொழுது, உடம்பை பாதுகாத்து வாழ்தல் சாகாமலிருத்தற்கு மருந்தாகுமோ? (968)

9 மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்.

ஒரே ஒரு மயிர் நீங்கினுலும் உயிர் வாழாத கவரிமானே ஒப்பானவர், மானங்கெடும் நிலேமை நேர்ந்தால் தம் உயிரைவிட்டு விடுவர். (969)

10 இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு.

தமக்கு ஏதேனும் ஓர் இழிவு ஏற்பட்டால் உயிர் வாழாத மானமுடையவரின் புகழை உலகத்தோர் வணங்கி வாழ்த்துவர். (970)

98—பெருமை

பெரியோரின் தன்மை

1 ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை; இளிஒருவற்கு அஃதிறந்து வாழ்தும் எனல்.

'செய்தற்கரிய செயல்களைச் செய்வேன்' என்னும் ஊக்க மிகுதியே ஒருவனுக்கு ஒளி எனப்படும். 'அந்த ஊக்க மிகுதி யின்றி உயிர் வாழலாம்' என்று எண்ணுதல் இழிவு எனப் படும். (971)

2 பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்.

உலகில் எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே! ஆயினும், அந்த உயிர்கள் செய்யும் தொழில்களின் வேறு பாட்டு வகையால் சிறப்பு ஒத்திராமல், பெருமை-சிறுமை யடையும். (972)

3 மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும் கீழல்லார் கீழல் லவர்.

மேலான இடத்தில் இருந்தாலும், மேன்மையான செயல் களில்லாதவர் மேலானவர் ஆகார். கீழான இடத்திலிருந் தாலும் நல்ல செயலே செய்பவர் கீழானவர் ஆகார். (973)

4 ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னேத்தான் கொண்டொழுகின் உண்டு.

மாறாத மனத்தையுடைய கற்புடைய மகளிர்போல, பெரு மையும் தன்னேத்தானே பாதுகாத்துக் கொள்ளும் திடமுடை யவனிடத்தில் உளதாகும். (974)

5 பெருமை உடையவர் ஆற்றுவார்; ஆற்றின் அருமை யுடைய செயல்.

செய்வதற் கருமையான செயல்களைத் தாம் வறியவரான நிலைமையிலும் செய்து முடிப்பவரே பெருமையுடையவராவர்.

6 சிறியார் உணர்ச்சியுள் இல்லை; பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

'பெரியோரைப் பேணி, அவர் இயல்புகளை நாமும் கைக்கொள்வோம்' என்னும் நோக்கம், அவருடைய அருமை யறியாத சிறியோருடைய உணர்ச்சியிற் படுவதில்லை. (976)

7 இறப்பே புரிந்த தொழிற்றும்; சிறப்புந்தான்
சீரல்ல வர்கட் படின்.

சிறப்பு நிலையானது தகுதியற்ற சிறியோர்களுக்கு வாய்க் குமானால், அது வரம்பு கடந்த சிறப்பற்ற செயல்களைச் செய்யும். (977)

8 பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

பெருமையுடையோர் சிறப்புள்ள காலத்திலும் பணிந்து வாழ்வர். சிறுமையுடையோர் சிறப்பில்லாத காலத்திலும் தம்மைத் தாமே மெச்சிக கொண்டு திரிவர் (978)

9 பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

செருக்கே இல்லாதிருத்தல் பெருமைத் தன்மையாம். செருக்கு மிகுந்து அதன் எல்லையில நிற்றல் சிறுமைத் தன்மையாம். (979)

10 அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

பெருமையுடையோர் பிறருடைய குறைபாடுகளை மறைத்து விடுவர். சிறுமையுடையோர் அக் குறைபாட்டையே பேசிப் பொழுது போக்குவர். (980)

99—சான்றாண்மை

நற்குணங்களால் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை

1 கடனென்ப நல்லவை எல்லாம்; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

சான்றாண்மையை மேற்கொண்டு நடப்பது நம் கடமை என்று அறிந்த பெரியோர்கள், நல்ல காரியங்களையெல்லாம் செய்வது தம் கடமை என்று மேற்கொள்ளுவார்கள். (981)

2 குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று.

சான்றோர்க்குக் குணநலமே நலம் என்று கூறப்படும். எனைய உடல் நலம் முதலிய நலங்களெல்லாம், எந்த நலத்தினுஞ் சேர்ந்ததாகாது. (982)

3 அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை
ஐந்துசால்பு ஊன்றிய தூண் [யோடு

அன்பு, நாணம், உபகாரம் செய்தல், கண்ணோட்டம், வாய்மை: ஆகிய ஐந்தும், 'சால்பு' என்பதைத் தாங்கி நிற்கும் தூண்களாம். (983)

4 கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

'தவம்' என்பது எவ்வுயிரையுங் கொல்லாமையை அடிப்படையாகக் கொண்டது! 'சால்பு' என்பது பிறருடைய குற்றத்தை எடுத்துக் கூறுமையாகிய நற்குணத்தை அடிப்படையாகக் கொண்டதாம்! (984)

5 ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அதுசான்றோர்
மாற்றுரை மாற்றும் படை.

ஒரு காரியத்தைச் செய்து முடிப்போர்க்கு வலிமையாவது பணிவுடைமை. சான்றோர் தம்பகைவரைப் பகைமையொழியச் செய்வதற்கு உபயோகிக்கும் கருவியும் அதுவேயாம்.

6 சால்பிற்குக் கட்டளை யாதெனில், தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்.

சால்பு என்னும் பொன்னை மாற்றுரைத்துப் பார்க்கும் உரைகல் எதுவென்றால், தம்முடைக்கு ஒவ்வாத தாழ்ந்தோரிடத்திலும் தோல்வியை ஏற்றுக் கொள்ளுதலேயாம். (986)

7 இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

துன்பம் தருஞ் செயல்களைச் செய்தவருக்கும் இன்பம் தருவனவற்றைச் செய்யாவிட்டால், சான்றோர்க்குரிய 'சால்பு' என்ன பயனுடையதாகும்? (987)

8 இன்மை ஒருவற்கு இளிவன்று; சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

சால்பு என்னும் வலிமை ஒருவனுக்கு வாய்க்கப் பெற்று விட்டால், வறுமை அவனுக்கு இழிவாகாது (988)

9 ஊழி பெயரினும் தாம்பெயரார்; சான்றுண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

'சால்பு என்னும் பெருந்தன்மைக்கு ஒரு கடல்' என்று புகழப்படுவோர், பிரளயமே ஏற்பட்டாலும் சால்பாகிய பெருங் குணத்தினின்று நீங்காதவரேயாவர். (989)

10 சான்றவர் சான்றுண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னே பொறை.

சான்றோர் தம் சான்றுண்மைக் குணத்தினின்று குன்றுவாராயின், இந்தப் பெரிய பூமிதேவி தன் பாரத்தைத் தாங்க முடியாமற் போகும். (990)

100—பண்புடைமை

எல்லோருடைய இயல்பையும் அறிந்து அவரவர்க்குத் தக்கபடி நடந்து கொள்ளுதல்

1 எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்;
பண்புடைமை என்னும் வழக்கு.

எவரிடத்திலும் எளிய தன்மையுடையராய் நடந்து கொள்வதனால், 'பண்புடைமை' என்னும் நன்னெறி அடைவது எளிது என்று அறிஞர் கூறுவர். (991)

2 அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

அன்புடையவனாயிருத்தல், உயர் குடியிற் பிறந்த தன்மை யமைந்திருத்தல்: ஆகிய இவ்விரண்டும் பண்புடைமை என்று உலகத்தோர் சொல்வதற் குரிய நல்வழிகளாம். (992)

3 உறுப்பொத்தல் மக்கள்ஒப்பு அன்ருல்; வெறுத்
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. [தக்க

உடம்பினால ஒத்திருத்தல் மக்களோடு ஒத்திருத்தலாகாது; பொருந்துவதறகுத் தகுந்த பண்பினால் ஒத்திருத்தலே ஒப்பு மையாம். (993)

4 நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

நீதியையும் அறத்தையும் விரும்புவதால், தமக்கும் பிறர்க்கும் பயனுண்டாகும்படி வாழும் பெரியோரின் பண் புடைமையை உலகத்தோர் புகழ்ந்து போற்றுவர். (994)

5 நகையுள்ளும் இன்னது இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

வினோயாட்டுக்காகவும் ஒருவனை இகழ்ந்து பேசுதல் துன் பத்தைத் தரும், பிறருடைய பெருமையையறிந்து நடந்து கொள்வோரிடம், பகைவரிடத்திலும் இனியராகும் பண்பாடு கள் காணப்படும். (995)

6 பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

பண்புடையவரைப் பொருந்தி யிருப்பதால் உலகம் நிலைத் திருக்கின்றது. அது இல்லையாயின், அவ்வுலகம் மண் ணிற் புகுந்து அழிந்து போகும். (996)

7 அரம்போலும் கூர்மைய ரேனும், மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

அரத்தைப் போன்ற கூர்மையான அறிவுடையவராயிருந் தாலும், மக்களுக்குரிய பண்பாடு இல்லாதவராயின், மரத் தைப் போன்றவராவர். (997)

8 நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை.

நட்புக் கொள்ள இயலாதவராகித் தீமைகளையே செய் கின்றவரிடத்திலும் பண்புடையவராய் நடந்து கொள்ள இய லாமை இழிவுடையதாம். (998)

9 நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்.

பிறருடன் கலந்து பழகி மகிழ்ச்சியடைய மாட்டாத வருக்கு மிகப்பெரிய இந்தப் பூமி பகற்காலத்திலும் இருள டைந்ததாகத் தோன்றும். (999)

10 பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம், நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

நற்குணமில்லாதவன் முன்னைத் தவப் பயனாற் பெற்ற பெரிய செல்வமானது, நல்ல பசுவின்பால் அதனை வைத்த பாத்திரத்தின் குற்றத்தால் கெட்டுப்போவது போல, ஒருவருக் கும் பயன்படாமற் போகும். (1000)

101—நன்றியில் செல்வம்

தன்னைத் தேடியவனுக்கும் பிறருக்கும் நன்மை தராத செல்வத்தின் இயல்பு.

1 வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்
செத்தான் செயக்கிடந்தது இல். [ணுன்

ஒருவன் நிறைந்த பெருஞ் செல்வத்தைத் தேடி வைத்தும், தன் உலோபத்தனத்தினால் அனுபவிக்காதிருந்தான், அவன் செத்தவனே யாவான்; அந்தச் செலவதனால் அவன் செய்யக் கூடிய தொன்று மில்லை. (1001)

2 பொருளானும் எல்லாம்என்று ஈயாது இவறும்
மருளானும் மாணாப் பிறப்பு.

'பொருளினால்தான் எல்லாம் உண்டாகும்' என் றெண்ணி, தேடிய பொருளைப் பிறர்க்குச் சிறிதும் ஈயாமல், இறுகப் பற்றிக் கொண்டிருக்கும் மயக்கங் காரணமாக, சிறப் பில்லாத பிறவி உண்டாகும் (1002)

3 ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

சேர்த்து வைப்பதிலேயே ஆசைகொண்டு, உலோபம் செய்து, புகழைச் சிறிதும் விரும்பாத மக்களின் தோற்றம் பூமிக்குப் பாரமேயாம். (1003)

4 எச்சம்என்று என்எண்ணுங் கொல்லோ? ஒருவ
நச்சப் படாஅ தவன். [ரான்

பிறருக்கு யாதொன்றும் கொடாமையால், ஒருவராலும் விரும்பப் படாத ஒருவன், தான் இறந்த பின் எஞ்சிநிற்பதாக எதைத்தான் நினைத்து ஆறுதல் அடைவானோ? (1004)

5 கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு,
கோடிஉண் டாயினும் இல். [அடுக்கிய

பிறருக்குக் கொடுப்பதும், தாம் உண்பதும் ஆகிய இரண்டும் இல்லாதவருக்குப் பலகோடி செல்வம் இருந்தாலும் பயனில்லை. (1005)

6 ஏதம் பெருஞ்செல்வம்; தான்துவ்வான் தக்கார்க்கு
ஈதல் இயல்பிலா தான். [ஒன்று

தானும் அனுபவிக்காமல், தகுதியுடையோருக்கு அவர் விரும்பியதொன்றைக் கொடுக்கும் இயல்பும் இல்லாமல் வாழ்பவன், தான்தேடிய செல்வத்திற்கு ஒரு நோய் ஆவான். (1006)

7 அற்றார்க்குஒன்று ஆற்றுதான் செல்வம், மிகநலம்
பெற்றுள் தமியள்மூத் தற்று.

வறியவருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவாதவனிடமுள்ள செல்வமானது, மிக்க அழகு வாய்ந்த பெண் ஒருத்தி தனிமையாய் வாழ்ந்து முதுமை அடைந்தது போலாம். (1007)

8 நச்சப் படாதவன் செல்வம், நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

பிறருக்கு யாதொன்றும் கொடாமையால், ஒருவராலும் விரும்பப்படாதவனுடைய செல்வமானது, ஊர்நடுவில் நச்சு மரம் பழுத்திருத்தலைப் போலாகும். (1008)

9 அன்பொரீஇத் தற்செற்று அறம்நோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

பிறரிடம் அனுபகாட்டாமலும் தான் அனுபவிக்காமலும் அறத்தைச் சிறிதும நினைக்காமல் சேர்த்து வைத்த பெருஞ் செல்வத்தை பிறர் அனுபவிப்பர். (1009)

10 சீருடைச் செல்வர் சிறுதுனி, மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து.

புகழ் பொருந்திய செல்வமுடையோர் அடையும் சிறிய வறுமையானது, மாரிது மழை வழங்கும் மேகம் ஒரு சமயம் மழை பெய்யாது நின்ற தன்மை போலாம். (1010)

102—நாணுடைமை

தமக்கு ஒவ்வாத செயலுக்கு நாணும்தன்மை

1 கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

தகாத செயலுக்கு நாணுதலே நாணம் ஆகும். அழகிய நெற்றியையுடைய பெண்களுக்கு இயற்கையாயுண்டாகும் நாணம வேறொருவகை நாணமாம் (1011)

2 ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல;
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

உணவு, உடை, இன்னும் மற்றைய தேவைகளும் எல்லா உயிர்க்கும் பொதுவேயாம். மக்களுகுச் சிறப்பு நாணுடைமையே! (1012)

3 ஊனைக் குறித்த உயிரெல்லாம்; நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு.

எல்லா உயிர்களும் ஊனுடம்பை இருப்பிடமாகக் கொண்டவை 'சால்பு' என்னும் சிறந்த பண்பு, நாணத்தை இருப்பிடமாகக் கொண்டது. (1013)

4 அணியன்றே நாணுடைமை சான்றோர்க்கு; அஃ
பிணியன்றே பீடு நடை. [தின்றேல்

சான்றோர்க்கு நாணம் உடைமையே அணிகலம். அந்த அணிகலம் இல்லையாதலால், அவர்களுடைய பெருமித நடை ஒரு பிணியல்லவா? (1014)

5 பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.

பிறருக்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியையும் சமமாக மதித்து நாணங் கொள்வோரை, 'நாணத்தின் உறைவிடம்' என்று உலகத்தோர் கூறுவர். (1015)

6 நாண்வேலி கொள்ளாது மன்னோ? வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

நாணம் என்கின்ற வேலியைத் தமக்குப் பாதுகாப்பாகக் கொள்ளாமல், பெரிய பூமியில் வாழும வாழ்க்கையை மேற் கொள்ளமாட்டார் பெரியோர்! (1016)

7 நாணுல் உயிரைத் துறப்பர்; உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்.

நாணத்தைக் கைகொணடொழுகுவோர் நாணத்திற்காகத் தம் உயிரையும விடுவா; உயிருகாகத் தம் நாணத்தைக் கை விடாா. (1017)

8 பிறர்நாணத் தக்கது தான்நாணுன் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

பிறா நாணத் தகுந்த பழிச்செயலைத் தான் நாணமின்றிச் செய்வானுனுல், அறமும் நாணி அவனை விட்டு நீங்குந் தன்மையுடையதாம். (1018)

9 குலம்சுடும் கொள்கை பிழைப்பின், நலம்சுடும்
நாணின்மை நின்றக் கடை.

ஒருவன் கொளகை தவறினுல், அது அவனுடைய குடிப் பிறப்பைச் கெடுக்கும. நாணமில்லாமை ஒருவனிடத்தே நிற்குமானுல், அது அவனுடைய நன்மை எல்லா வற்றையும் கெடுக்கும. (1019)

10 நாணகத் தில்லார் இயக்கம், மரப்பாவை
நாணுல் உயிர்மருட்டி யற்று.

மனததில் நாணமில்லாத மககள் இயங்குகின்ற இயக்கமானது, மரத்தாற் செய்த பாவை எந்திரக் கயிற்றினுதவியால் ஆடி உயிருள்ளது போல மயக்குந் தன்மையாம. (1020)

103—குடிசெயல்வகை

தான் பிறந்த குடியை முன்னேறச் செய்தல்

1 கரும்ம செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடையது இல்.

'என் குடி உயர்வதற்குரிய செயலைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன்' என்கிற முயற்சிப் பெருமையைப் போன்ற பெருமை வேறில்லை (1021)

2 ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

முயற்சி, நிறைந்த அறிவு: என்னும் இரண்டுடன் கூடிய இடையறா உழைப்பினால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும் (1022)

3 குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்

'என் குடியை உயரச் செய்வேன்' என்ற உறுதியுடன் உழைக்கும் ஒருவனுக்குத் தெய்வம் ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு தானே முன்வந்து துணை செய்யும். (1023)

4 சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியைத்
தாழாமல் உஞற்று பவர்க்கு.

தம்குடி உயர்வதற்காகிய செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு ஆலோசிக்க வேண்டாமலே அவர் செயல் தானாகவே நிறைவேறும். (1024)

5 குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

குற்றமானவற்றைச் செய்யாமல் தன்குடி உயர்வதற்கான வற்றைச் செய்து வாழ்பவனை, உலகத்தார் தாமே வலியச் சென்று சுற்றமாய்ச் சூழ்ந்திருப்பர். (1025)

6 நல்லாண்மை என்பது ஒருவற்கு தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

ஒருவனுக்கு நல்ல ஆண்மையென்று சொல்லப்படுவது, தான் பிறந்த குடியைச் சிறப்புறும்படி ஆளும ஆண்மையை தான் உண்டாக்கிக் கொள்ளுவதாகும். (1026)

7 அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

போர்க்களத்திலே பலருள்ளும் பொறுப்பையேற்று நிற்கும் அஞ்சாத வீரர் மேன்மையடைதல் போல, ஒருகுடியிற் பிறந்த பலருள்ளும் குடியைத் தாங்க வல்லவர் மேலேயே பொறுப்பு உளதாகும். (1027)

8 குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

குடி உயர்தற்குரிய செயலைச் செய்பவருக்கு ஏற்ற காலம் ஒன்றில்லை. சோம்பலை மேற்கொண்டு மானத்தையும் கருதிக் கொண்டிருப்பாராயுல் குடிகெடும். (1028)

9 இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ?
குற்றம் மறைப்பான் உடம்பு. [குடும்பத்தைக்

தன் குடிக்கு நேரும் குற்றங்களை நீக்க முயல்கின்ற ஒருவனுடைய உடம்பு துன்பத்திற்கே உறைவிடமோ? (1029)

10 இடுக்கண்கால் கொன்றிட வீழும்; அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி.

துன்பம் வந்தபொழுது தாங்குதற் கேற்ற தகுதியுடைய நல்ல ஆண்மையுள்ளவன் இல்லாத குடியானது, துன்பம் என்னும் கோடரியால் அடியோடு வெட்டுண்டு அழியும்.

104—உழவு

உழுதல் தொழிலின் உயர்வு

1 சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை.

பல தொழில்களைச் செய்து திரிந்தாலும், உலகம் ஏர்த் தொழிலுடையார் பின் நிற்கின்றது. ஆகவே, எவ்வளவு துன்பமுற்றாலும் உழவுத் தொழிலே தலைசிறந்ததாம். (1031)

2 உழுவார் உலகத்தார்க்கு ஆணி; அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

பிற தொழில்களைச் செய்வோர் எல்லாரையும் தாங்குவதால், உழவு செய்பவரை உலகத்தாருக்கெல்லாம் அச்சாணி போன்றவராவர். (1032)

3 உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

உழுதொழில் செய்து அதிற்கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையுடன் வாழ்வோர் ஆவர்; மற்றையோரெல்லாரும் பிறரைத் தொழுது அதனால் தாம் உண்டு அவர்பின் செல்வோரே யாவர். (1033)

4 பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்;
அலகுடை நீழ லவர்.

நெல்வளம் பொருந்தி தண்ணளியுமுடைய உழவர், அரசருடைய குடை நிழல்களையும் தம் குடையின் கீழ் தங்கியிருக்கக் காண்பர். (1034)

5 இரவார்; இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது;
கைசெய்தூண் மாலை யவர்.

உழுதல் தொழிலைச் செய்து உண்ணும் இயல்புடைய உழவர், பிறரிடஞ் சென்று இரக்கமாட்டார்; தம்மிடம் வந்து இரந்தவர்க்கு வேண்டிய ஒன்றை ஒளிக்காமற் கொடுப்பர்.

6 உழவினுர் கைம்மடங்கின் இல்லை; விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கு நிலை.

உழவருடைய கைகள் உழுதல் செய்யாமல் சும்மா இருக்குமானால், 'எல்லோரும் விரும்பக் கூடிய உணவையும் விட்டு விட்டோம்' என்று கூறும் துறவிகளுக்கும் வாழ்வு இல்லை

7 தொடிப்புழுதி கஃசா உணக்கின், பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

ஒரு பலம் புழுதி கால் பலம் புழுதி ஆகும்படி உழுது உலரும்படி விட்டால், ஒரு பிடி எருவும் தேவையின்றி, அதிற் செய்த பயிர் செழித்து விளையும். (1037)

8 ஏரினும் நன்ருல் எருவிடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

ஏரினால் உழுவதைக் காட்டிலும் எரு இடுதல் நல்லது; இவ் இரண்டும் செய்து பயிரிட்டுக் களையெடுத்த பிறகு, நீர் பாய்ச்சுதலைக் காட்டிலும் பயிர் அழிந்து போகாமற் பாதுகாத்தல் நல்லது. (1038)

9 செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

நிலத்திற்கு உரியவன் நான்தோறும் நிலத்திற்குச் சென்று பார்வையிட்டு வேண்டியவற்றைச் செய்யாமற் சோம்பியிருப்பானுனால், அந்நிலம் மனைவியைப் போலத் தன்னுள் வெறுத்துப் பிணங்கிவிடும். (1039)

10 இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்.

'பொருள் இல்லையே' என்று சொல்லிக் கொண்டு சோம்பி இருப்பவரைக் கண்டால், உழுபவர்க்குப் பலனைத் தரும் நிலமகள், அவனுடைய அறியாமைக்காகத் தன்னுள்ளே சிரிப்பாள். (1040)

105—நல்குரவு

வறுமையின் கொடுமை

1 இன்மையின் இன்னாதது யாதெனின், இன்மையின் இன்மையே இன்னா தது.

வறுமையைப் போலத் துன்பமானது எதுவென்று கேட்டால், வறுமையைப்போலத் துன்பமானது வறுமையே ஆகும்.

2 இன்மை எனஒரு பாவி மறுமையும் இம்மையும் இன்றி வரும்.

'வறுமை' என்கின்ற ஒரு பாவி, ஒருவனிடத்து வரும் போது, அவனுக்கு மறுமையின்பமும் இம்மையின்பமும் இல்லாமற்போக வந்து சேரும். (1042)

3 தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக; நல்குர வென்னும் நசை.

வறுமை என்று சொல்லப்படும் ஆசைநிலை ஒருவனைப் பற்றினால் அவனுடைய பழமையான குடிப்பண்பையும் புகழையும் ஒருசேரக் கெடுக்கும். (1043)

4 இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

வறுமையென்பது நற்குடிப் பிறந்தவரிடத்திலும் இழிவான சொற்கள் தோன்றுதற்குரிய சோர்வைக் கொடுக்கும். (1044)

5 நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத் துன்பங்கள் சென்று படும்.

வறுமை என்னும் துன்ப நிலைமையில், பலவகையான துயரங்களும் வந்து சேரும். (1045)

6 நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்
சொற்பொருள் சோர்வு படும். [தார்

உயர்ந்த நூற்பொருள்களே நன்கறிந்து சொன்னாலும், வறுமையுடையாருடைய சொல்லின் பொருள் பயன்படாமற் போகும் (1046)

7 அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

அறத்துடன் பொருந்தாத வறுமையுடையவன், தன்னைப் பெற்ற தாயினாலும் அயலான்போலப் புறக்கணித்து நோக்கப் படுவான். (1047)

8 இன்றும் வருவது கொல்லோ? நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.

நேற்று என்னைக் கொலைசெய்தாற் போலத் துன்புறுத்திய வறுமையானது தொடர்ந்து இன்றைக்கும் வருமோ? யாது செய்வேன்? (என நாள்தோறும் வறியன் கலங்கி வருந்துவான்.)

9 நெருப்பினுள் துஞ்சலு மாகும்; நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது.

ஒருவன் நெருப்பினுள்ளிருந்தும் தூங்குதல் இயலும் ஆனால், வறுமையுள்ள நிலையில் எவ்விதத்திலும் தூங்க இயலாது. (1049)

10 துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்புக்கும் காடிக்கும் கூற்று.

உண்ணுதற்கு இல்லாத வறியவர் முற்றிலும் துறக்காது திரிதல், பிறர் வீட்டிலுள்ள உப்பிற்கும் கூழிற்கும் யமனாகும்.

106—இரவு

யாசித்தலின் இழிவு

1 இரக்க இரத்தக்கார்க் காணின்; கரப்பின் அவர்பழி தம்பழி யன்று.

இரந்து கேட்பதற்குத் தகுதியுடையவரைக் கண்டால், அவரிடம் இரக்கக் கடவா. அவர் 'இல்லை' என்றுகூறி ஒளிப்பாராஞல், அவருக்கே பழியாகும்! இரந்து நின்ற இவருக்குப் பழியாகாது! (1051)

2 இன்பம் ஒருவற்கு இரத்தல்; இரந்தவை துன்பம் உருஅ வரின்.

இரந்து கேட்கப்பட்ட பொருள்கள் துன்பப்படாமற் கிடைக்குமாஞல், அவ்வாறு இரத்தலும் ஒருவனுக்கு இன்பமே யாகும். (1052)

3 கரப்பில்லா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து.

உள்ளதை ஒளிக்காமற் கொடுக்கும் மனத்தையுடைய கடமையறிந்தவர் முன்னிலையில் நின்றுகொண்டு இரந்து கேட்பதும் ஓர் அழகேயாகும். (1053)

4 இரத்தலும் ஈதலே போலும்; கரத்தல் கனவிலும் தேற்றுதார் மாட்டு.

உள்ளதை ஒளிக்கும் தன்மையைக் கனவிலும் அறியாதவரிடத்திலே சென்று யாசித்தல், ஈதல்போலச் சிறப்புடையதாம்.

5 கரப்பிலார் வையகத்து உண்மையால் கண்ணின்று இரப்பவர் மேற்கொள் வது.

உள்ளதை ஒளிக்காமற் கொடுப்பவர் உலகத்தில் இருப்பதால், ஒருவர் கண்எதிரே நின்று யாசிப்போர், அந்த யாசித்தலைக் கைக்கொண்டிருக்கின்றனர். (1055)

6 கரப்பிடும்பை இல்லாரைக் காணின், நிரப்பிடும்பை எல்லாம் ஒருங்கு கெடும்.

தமக்கு உள்ளதை ஒளிப்பதாகிய நோய் இல்லாத நன் மக்களைக் காணப்பெற்றால், வறுமைத் துயரம் முற்றிலும் அடியோடு ஒழியும். (1056)

7 இகழ்ந்தெள்ளாது ஈவாரைக் காணின், மகிழ்ந் துள்ளுள் உவப்பது உடைத்து. [துள்ளம்

அவமதித்து இழிவுபேசாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், அவ் இரப்பவரின் மனம் மகிழ்ச்சியடைந்து உள் ளத்தினுள்ளே உவகையடைவதாகும். (1057)

8 இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம் மரப்பாவை சென்றுவந் தற்று.

இரப்பவர் இல்லையானால், குளிர்ந்த இடத்தையுடைய பெரிய இந்தப் பூமியின் இயக்கம், மரத்தாற் செய்த பாவை யைற்றால் ஆட்டப் பெற்றுச் சென்று வந்தாற்போலும். (1058)

9 ஈவார்கண் என்உண்டாம்? தோற்றம் இரந்துகோள் மேவார் இலாஅக் கடை.

கொடுப்பவரைத் தேடிச் சென்று ஒரு பொருளை இரந்து பெற்றுக் கொள்ளுவோர் இல்லாத பொழுது, கொடுப் போருக்கும் புகழுண்டாகுமோ? (1059)

10 இரப்பான் வெகுளாமை வேண்டும்; நிரப்பிடும்பை தானேயும் சாலும் கரி.

யாசிப்பவன் எவரிடத்தும் சினங்கொள்ளாதிருக்க வேண்டும். அவனடைந்துள்ள வறுமைத் துயரமே அவனுக் குப் புத்தி புகட்டுவதற்குரிய சான்றாக அமையும். (1060)

107—இரவச்சம்

யாசித்தற்கு அஞ்சுதல்

1 கரவாது உவந்தீயும் கண்ணன்னர் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

தம்மிடம் உள்ளதை ஒளிக்காமல் மனமகிழ்ந்து கொடுக்கும் கண்போற் சிறந்தவரிடத்திலும் யாசிக்காமலிருத்தல், கோடி மடங்கு நல்லது. (1061)

2 இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக உலகியற்றி யான்.

உலகிற் சிலர் யாசித்தாவது உயிர்வாழ்தல் வேண்டுமென்று விதித்திருந்தால், அவ்வாறு விதித்து உலகைப் படைத்தவன், யாசிப்பவரைப் போல் எங்கும் அலைந்து திரிந்து கெடுவானுக! (1062)

3 இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

'வறுமைத் துயரத்தை யாசித்துத் தீர்த்துக் கொள்வோம்' என்றெண்ணும் வன்மைபோன்ற வன்மையுடையது வேறில்லை.

4 இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே; இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு.

வாழ வழியின்றி வறுமையுற்ற காலத்திலும், பிறரிடத்துச் சென்று யாசித்தற்கு உடன்படாத பெருந்தன்மையானது உலகம் முழுதும் அடங்காத பெருமையுடையதாம். (1064)

5 தெண்ணீர் அடுபுற்கை ஆயினும், தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினியது இல்.

தன் முயற்சியாற் கிடைத்தது தெளிந்த நீர் போன்ற சமைத்த கூழேயானாலும், அதை உண்பதைவிட இனிமையானது வேறில்லை. (1065)

6 ஆவிற்கு நீர்என்று இரப்பினும், நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

'பசுவிற்கு நீர் தருக' என்று யாசித்தாலும், அந்த யாசகத்தைப்போல நாவிற்கு இழிவானது வேறில்லை. (1066)

7 இரப்பன் இரப்பாரை யெல்லாம்; இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

'யாசிக்க வேண்டுமானால், உள்ளதை ஒளிப்பவரிடத்திலே சென்று யாசிக்க வேண்டாம்' என்று யாசிப்பவர் எல்லோரையும் யான் யாசிக்கின்றேன். (1067)

8 இரவென்னும் ஏமாப்பில் தோணி, கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

'யாசகம்' என்கின்ற பாதுகாப்பில்லாத படகு 'உள்ளதை ஒளித்தல்' என்னும் பாறையால் தாக்குண்டு உடையும். (1068)

9 இரவுள்ள உள்ளம் உருகும்; கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

யாசித்தலே நினைத்தால் மனம் உருகிவிடும்! உள்ளதை ஒளித்தலே நினைத்தால், உருகுவதற்கும் மனமில்லாமல் ஒழிந்து விடும். (1069)

10 கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ? இரப்
சொல்லாடப் போஒம் உயிர். [பவர்

'இல்லை' என்ற சொல்லைக் கேட்ட அளவிலே யாசிப்பவர்க்கு உயிர் ஒழிந்து போகின்றதே! உள்ளதை ஒளிப்பவருக்கு, அதே உயிர் அச்சமயத்தில் எங்குபோய் ஒளிந்து கொள்கிறதோ? (1070)

108—கயமை

கீழ்மக்களின் இயல்பு

1 மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல்.

கீழ்மக்கள் மக்கள் போலவே இருப்பர்! அவர்கள் மக்களே ஒத்திருத்தல் போன்ற சரியான ஒப்புமையை வேறெந்த இரு பொருள்களுள்ளும் நாம் கண்டது இல்லை. (1071)

2 நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்;
நெஞ்சத்து அவலம் இலர்.

நன்மையை நன்கறிந்த நன்மக்களைக் காட்டிலும் அவற்றை யறியாத கீழ்மக்கள் நல்லவர்கள்! எனென்றால், கீழ்மக்கள் நெஞ்சில் எதைப் பற்றியுங் கவலை இல்லாதவராவர்! (1072)

3 தேவர் அனையர் கயவர்; அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

கீழ்மக்கள், தேவர் போன்றவர்! எனென்றால், அவர் தேவர்போல் தாம் விரும்பியவற்றை மனம்போன போக்கில் செய்கின்றதால். (1073)

4 அகப்பட்டி யாவாரைக் காணின், அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.

கீழ்மக்கள், தம்மினுங் குறைந்த தீச்செயலுடைய பட்டிகளாகிய கீழ்மக்களைக் காணுமிடத்து, "இவரினும் நாமே பெரியோம்" என்று இறுமாப்புக கொள்வர். (1074)

5 அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது.

கீழ்மக்கள் ஆசாரம் உடையராய் நடத்தற்குக் காரணம் அச்சமே யாம்! தாம் விரும்பிய பொருள் மிடைதலாலும், அக் கீழ்மக்களிடம் சிறிது நல்லொழுக்கம் காணப்படும். (1075)

6 அறைபறை அன்னர் கயவர்; தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.

கீழ்மக்கள் தாம் அறிந்த இரகசியங்களைப் பிறரிடம் வலியச் சென்று சொல்லுதலால், அவர், அடிக்கப்படும் பறை போன்றவர் ஆவர். (1076)

7 ஈர்ங்கை விதிரார் கயவர்; கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு.

கன்னத்தில் இடித்து பல்லை உடைக்கின்ற வளைந்த கையுடைய கொள்ளைக்காரர்களுக்கு அன்றி மற்றவர்களுக்கு கீழ் மக்கள் தாம் உண்ட எச்சிற்கையையும் உதறமாட்டார். (1077)

8 சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

மேன் மக்கள் தம்மிடம் எளியவர் வந்து இரந்து கேட்டவுடனே உதவி செய்வர்; கீழ்மக்களோ, கரும்பைச் செக்கிலிட்டு ஆட்டிப் பிளிவதுபோலத் துன்புறுத்திஞலன்றிப் பயன் படார். (1078)

9 உடுப்பதூஉம் உண்பதூஉம் காணில், பிறர்மேல்
வடுக்காண வற்ருகும் கீழ்.

பிறர் தன்ஞய் உடுத்து உண்டு இருப்பதைக் காணும் கீழ் மகன், அவரிடத்திற் குற்றங்கூறிக் குறைகாண வல்லவனுவான் (1079)

10 எற்றிற் குரியர் கயவர்;ஒன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து

துன்பம் ஒன்று வந்தபொழுது, கீழ்மக்கள் தம்மையே பிறரிடம் விரைவாக விலையாக விற்பதற்கு உரியவராவர்? அவர்கள் வேறு எதற்குத்தான் உரியவராகமுடியும்? (1080)

3. காமத்துப்பால்

1 களவியல்

109—தகையணங்குறுத்தல்

தலைமகன், தலைவியின் அழகு தன்னை வருத்துதலைக் கூறுதல்.

1 அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ? கனங் குழை
மாதர்கொல்? மாலும்என் நெஞ்சு.

தெய்வப் பெண்ணே? அழகிய மயிலோ? கனத்த குழை களோ (காது அணிகளோ) அணிந்த மானிடப் பெண்தானே? இன்னுளென்று அறியக்கூடாமல் என்மனம் மயங்குகின்றதே! (1081)

2 நோக்கினுள் நோக்கெதிர் நோக்குதல், தாக்கணங்
தானைக்கொண் டன்னது உடைத்து.

அழகுடைய இவள் எனது பார்வைக்கு எதிராக தன் பார்வையைச் செலுத்துதல், தாக்கி வருத்தும் ஒரு தெய்வப்பெண் தாக்குதற்கு படையையும் கொண்டு வந்ததுபோலிருக்கிறதே!

3 பண்டறியேன் கூற்றென் பதனை; இனிஅறிந்தேன்
பெண்தகையால் பேரமர்க் கட்டு.

எமன் என்று சொல்வதை முன்பு நான் நேராகக் கண்டறியேன். இப்பொழுதுதான் கண்முன் கண்டேன். அது, பெண்தன்மையுடனே, போர்புரியும் பெரிய கண்களையும் உடையது. (1083)

4 கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால், பெண்
பேதைக்கு அமர்த்தன கண்.

பெண்தன்மையுடைய இந்தப் பேதைக்குக் கண்கள், கண்டவருடைய உயிரையுண்ணும் தோற்றத்துடன் கூடி, மாறுபட்டிருக்கின்றன. (1084)

5 கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.

இந்த இளம் பெண்ணின் பார்வை என்னை வருத்துதலால் எமனோ? என்மேல் அன்பு செய்தலால் கண்ணோ? அஞ்சுதலால் பெண்மானோ? இம்மூன்றின் தன்மையும் ஒருங்கே உடையதாயிருக்கின்றது! (1085)

6 கொடும்புருவம் கோடா மறைப்பின்; நடுங்குஞர் செய்யல மன்இவள் கண்.

வளைந்த புருவங்கள் நேராக நின்று மறைக்குமானால், இவளுடைய கண்கள் யான் நடுங்கும் படியான துன்பத்தைச் செய்ய மாட்டா! (1086)

7 கடாஅக் களிற்றின்மேற் கட்படாம்; மாதர் படாஅ முலைமேல் துகில்.

இப்பெண்ணினுடைய சாயாத முலை மேல் அணிந்த ஆடையானது, மதம்பிடித்த ஆண் யானையின் முகத்தில் இட்ட முக படாத்தைப் போன்றது. (1087)

8 ஒண்ணுதற்கு ஓஒ உடைந்ததே; ஞாட்பினுள் நண்ணுரும் உட்கும்என் பீடு.

போர்க்களத்திலே பகைவரை நடுங்கவைக்கும் என்னுடைய வலிமை, ஒளி பொருந்திய இவள் நெற்றியின் அழகுக்கு தோற்று அழிந்து விட்டதே! (1088)

9 பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு அணிஎவனே ஏதில தந்து.

பெண் மானைப் போன்ற இனிமையான பார்வையும், நாணமும் ஆகிய அணிகளே இவளுக்கு போதுமானவையாயிருக்க, வேறு அணிகளை அணிவது எதனை? (1089)

10 உண்டார்கண் அல்லது அடுநருக் காமம்போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று.

காய்ச்சப்பட்ட மதுவானது தன்னை உண்டவரிடத்து மகிழ்ச்சியைச் செய்வதல்லாமல் காமத்தைப் போலக் கண்ட அளவிலே மகிழ்ச்சியைச் செய்வதில்லையே! (1090)

110—குறிப்பறிதல்

தலைவன் தலைவியின் குறிப்பையும் தோழியின் குறிப்பையும் அறிதலும் தோழி தலைவன் குறிப்பையும் தலைவி குறிப்பையும் அறிதலும்.

1 இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து!

இவளுடைய மைதீட்டிய கண்களில் உள்ளது இருவகையான பார்வை! ஒன்று எனக்கு நோயுண்டாக்கும் பார்வை; மற்றொன்று அந்நோய்க்கு மருந்தாகும் பார்வையாகும். (1091)

2 கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில், செம்பாகம் அன்று பெரிது.

என்னைப்பார்க்கின்ற இவளுடைய கண்களின் கள்ளத்தனமான சிறு பார்வையானது, காமத்திலே சரிபாதியளவுள்ளதன்று; அதனினும் பெரும்பகுதியாகும். (1092)

3 நோக்கினுள் நோக்கி இறைஞ்சினுள் அஃதவள் யாப்பினுள் அட்டிய நீர்.

நான் பாராத பொழுது என்னை அன்போடு பார்த்தாள்; நான் பார்த்தவுடனே தலை குனிந்தாள். அக்குறிப்பு, அவள் வளர்க்கும் அன்பு என்ற பயிருக்குப் பாய்ச்சிய தண்ணீராகும்.

4 யான்நோக்குங் காலை நிலன்நோக்கும்; நோக்காக் தான்நோக்கி மெல்ல நகும். [கால்

நான் அவளை நோக்கும் பொழுது அவள் நிலத்தை நோக்குவான். நான் நோக்காத பொழுது அவள் என்னை நோக்கி மெல்லத் தனக்குள்ளே சிரிப்பாள். (1094)

5 குறிக்கொண்டு நோக்காமை அல்லால், ஒருகண் சிறக்கணித்தாள் போல நகும்.

என்னை நேராகக் குறியாய்ப் பாராமல், அவ்வளவிலும் நிற்காமல், ஒருகண்ணை சுருக்கிப் பார்ப்பவள் போல என்னைப் பார்த்துப்பின் தனக்குள்ளே சிரிப்பாள். (1095)

6 உருஅ தவர்போல் சொலினும், செருஅர்சொல் ஒல்லை உணரப் படும்.

வெளிக்கு அருமையைப் போலக் கடுஞ்சொற்களைச் சொன்னாலும், உள்ளத்திற் பகையில்லாதவருடைய சொல்லின் தன்மை விரைவிலே அறியப்படும். (1096)

7 செருஅச் சிறுசொல்லும், செற்றார்போல் நோக்கும், உருஅர்போன்று உற்றார் குறிப்பு.

பகைமையில்லாத கடுஞ்சொல்லும், பகைவர்போற் பார்க்கின்ற பார்வையும், வெளிக்கு அன்னியர்போல் நடித்து உள்ளத்தில் அன்பு கொண்டவரின் குறிப்புகளாம். (1097)

8 அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்; யான்நோக்கு பசையினள் பைய நகும். [கப்

நான் அவளை நோக்கியபொழுது, அவள் அதனை விரும்பி மெல்லச் சிரிப்பாள். அசைகின்ற அழகிய இயல்புடைய அவளுக்கு அப்பொழுது தனி அழகு தோற்றுகிறது! (1098)

9 ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் காதலார் கண்ணே உள.

வெளிக்கு அன்னியர்போல, ஒருவரையொருவர் பொது நோக்காகப் பார்த்தல், காதல் கொண்டோரிடம் காணப்படும் இயல்பாகும். (1099)

10 கண்ணிணை கண்ணினை நோக்கொக்கின், வாய்ச் என்ன பயனும் இல. [சொற்கள்

காதலர் ஒருவர்க்கொருவர் கண்ணிணை கண்பார்வை ஒத்துப் போய்விடுமானால், அவர்கள் வாயினால் பேசும் சொற்கள் தேவை இல்லை. (1100)

111—புணர்ச்சி மகிழ்தல்

குறிப்பறிந்து கூடிய தலைமகன், தான்பெற்ற இன்பத்தைப் பாராட்டுதல்.

1 கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புல
ஒண்டொடி கண்ணே உள. [னும்

கண்ணுற்கண்டும், காதால்கேட்டும், வாயால்உண்டும், மூக்கால் மோந்தும், மெய்யால் தழுவியும், அனுபவிக்கும் ஐம் புல இன்பங்கள் எல்லாம், வளையல்களையணிந்த இவளிடத்தில் ஒருங்கே அமைந்துள்ளன! (1101)

2 பிணிக்கு மருந்து பிறமன்; அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து.

நோய்கள் எல்லாவற்றிற்கும் மருந்துகள் வெவ்வேறாய் அமைந்துள்ளன. ஆனால், ஆபரணங்களை அணியப்பெற்ற இவ ளால் வந்த காமநோய்க்கு, இவளே மருந்தாளன்! (1102)

3 தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

தாம் விரும்பும் காதலியினுடைய மெல்லிய தோள் களில் துயிலும் இனிமை, தாமரைக் கண்ணனுடைய உலகத் திலும் உண்டோ? (1103)

4 நீங்கில் தெறூஉம்; குறுகுங்கால் தண்ணென்னும்;
தீயாண்டுப் பெற்றாள் இவள்?

நீங்கினால் சுடும்; நெருங்கினால் குளிர்ந்திருக்கும். இப்படி ஒரு புதுமையான நெருப்பை இவள் எங்கிருந்து பெற்றாளோ?

5 வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்!

பூக்கள் சூடிய கூந்தலையுடைய இவள் தோள்கள் விரும் பமான பொருள்களை நினைத்தவுடன் அவ்வப் பொருள்கள் தாமே வலியவந்து இன்பஞ் செய்தலைப் போல, இன்பஞ் செய்கின்றன. (1105)

6 உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்!

தழுவும் பொழுதெல்லாம், உயிர் தளிர்க்கும் வண்ணம் பொருந்துதலால் இவளுடைய தோள்கள் அமிர்தத்தால் ஆக்கப் பட்டன போலும். (1106)

7 தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

அழகிய இப்பெண்ணைக்கூடி அனுபவித்த இன்பமானது, தன்னுடைய வீட்டில் இருந்து கொண்டு, தான்தேடிய பொருளை பலருக்கும் பகுந்து கொடுத்து, தானும் உண்டு மகிழும் இன்பத் தைப் போன்றது. (1107)

8 வீழும் இருவர்க்கு இனிதே; வளியிடைப்
போழப் படாஅ முயக்கு.

காற்றும் இடையே நுழைய இயலாதபடிக் கூடித் தழுவி யிருத்தல், ஒருவரை யொருவர் விரும்பும் காதலர் இருவருக்கும் இனியதாகும். (1108)

9 ஊடல், உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

ஊடுதலும், அளவறிந்து ஊடல் நீங்குதலும், பின் கூடு தலும் ஆகிய இவை, காமவின்பத்தைக் கைகூடப் பெற்றவர் அடையும் பயன்களாம். (1109)

10 அறிதோறு அறியாமை கண்டற்றால்; காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

ஆபரணங்களை அணிந்த இவளிடம் கூடுந்தோறும் தோன் றும் இன்பம், நூற்கருத்துக்களை அறியுந்தோறும் "முன் இதை அறிந்தோ மில்லையே!" என்று பழைய அறியாமையை உணர்ந்தாற் போல், இருக்கின்றது. (1110)

112—நலம் புனைந்துரைத்தல்

தலைவன் தலைவியின் நலங்களைப் பாராட்டிக்கூறுதல்

1 நன்னீரை வாழி அனிச்சமே! நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

அனிச்ச மலரே! வாழ்வாயாக! நீ அழகிய மென்மைத் தன்மை பெற்றிருக்கிறாய் ஆனால், யான் விரும்பும் தலைவி உன்னைக்காட்டிலும் மென்மை உடையவள். (1111)

2 மலர்காணின் மையாத்தி நெஞ்சே! இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.

மனமே! பலரும் காண்கின்ற தாமரை, குவளை, நீலம் முதலிய மலர்களைக் கண்டால், இவள் கண்களை அவை ஒத் திருக்கின்றன என்று மயங்குகிறாயே! என்ன அறிவீனம்! (1112)

3 முறிமேனி; முத்தம் முறுவல்; வெறிகாற்றம்;
வேல்உண்கண் வேய்த்தோள் அவட்கு.

மூங்கில் போன்ற தோளையுடைய இவளுக்கு, தளிரே உடம்பு; முத்துக்களே பற்கள்; இயற்கையான மணமே மணம்; வேற்படையே ஒத்தீட்டிய கண்கள்! (1113)

4 காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று.

குவளைமலர் காணும் தன்மையைப் பெற்றிருந்தால், "மாட்சிமை பொருந்திய ஆபரணங்களை யணிந்த இவள்கண்களுக்குநாம் ஒப்பாகோம்" என்று தலைகவிழ்ந்து தரையைப்பார்க்கும் (1114)

5 அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

இவள் தன் மென்மையை நினையாமல் அனிச்சமலரைக் காம்புகளையாது சூடிக்கொண்டாள். இவன் இடை பாரம் தாங்காமல் முறியும்; இனி நல்ல பறை முழங்காது; சாவுப் பறையன்றே முழங்கும்! (1115)

6 மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்.

வீண்மீன்களாகிய நட்சத்திரங்கள், சந்திரனுக்கும் இவள் முகத்திற்கும் வேற்றுமை காணமாட்டாமல், நிலையினின்று கலங்கித் திரிகின்றன. (1116)

7 அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

குறைவுபட்ட இடம் கொஞ்சங் கொஞ்சமாக நிறையப் பெற்று விளங்குகின்ற சந்திரனிடத்திலுள்ள களங்கத்தைப் போல இவளுடைய முகத்திலே களங்கம் உண்டோ? இல்லையன்றே? (1117)

8 மாதர் முகம்போல் ஒளிவிட வல்லியேல்
காதலி வாழி மதி.

சந்திரனே! வாழ்வாயாக! இந்த மாதராளின் முகம்போல ஒளிவீச முடியுமானால், நீயும் இவளைப்போல என் காதலைப் பெறுவாய். (1118)

9 மலரன்ன கண்ணுள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி!

சந்திரனே! மலர்போன்ற கண்களையுடைய இவளது முகத்தை ஒத்திருக்க நீ விரும்புவாயானால், பலரும் காணும் படியாக நீ தோன்றுதே! (1119)

10 அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

அனிச்ச மலரும், அன்னப் பறவையின் இறகும், இம் மாதராள் பாதத்திற்கு நெருஞ்சிப்பழத்தைப் போல உறுத்துமே!

113—காதற் சிறப்புரைத்தல்

காதலர் காதல்மிகுதியைக் கூறுதல்

1 பாலொடு தேன்கலந் தற்றே; பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.

மெல்லிய சொல்லினையுடைய இவளுடைய தூயபற்களில் ஊறுகின்ற நீர், பாலுடன் தேனைக் கலக்தாற் போலும். (1121)

2 உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

உடம்பினிடத்து உயிரானது எப்படி நட்புடன் சேர்ந் திருக்கிறதோ, அப்படியே, இப்பெண்ணினிடத்தும் என்னிடத் தும் உள்ளனவாகிய நட்பும் சேர்ந்திருக்கின்றது. (1122)

3 கருமணியிற் பாவாய்! நீ போதாய்; யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம்.

என் கண்ணின் கருமணியிலுள்ள பாவையே! நீ போய் விடு, நீ போகாது இருப்பாயாஞல் எம்மால் விரும்பப்பெற்ற அழகிய நெற்றியையுடையாளை என் கண்ணில் வைக்க இட மில்லை. 1123

4 வாழ்தல் உயிர்க்கன்னள்; ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து.

ஆபரணங்களை அணிந்த இவள் கூடியிருக்கும் பொழுது என் உயிருக்கு வாழ்வாகயிருக்கிருள். என்னைவிட்டு நீங்கும் பொழுது என் உயிர்க்குச் சாவாக இருக்கிருள். (1124)

5 உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்;
ஒள்ளமர்க் கண்ணுள் குணம்.

ஒளி பொருந்திய போர்செய்யும் கண்களையுடையாளது குணங்களை நான் மறந்தாலல்லவோ நினைப்பேன். மறந்து அறி யேன். ஆதலால் நினைத்தும் அறியேன். (1125)

6 கண்ணுள்ளிற் போகார்; இமைப்பிற் பருவரார்;
நுண்ணியரெம் காத லவர்.

ஏ தோழி! எம் காதலர் எம், கண்ணைவிட்டுப் போக மாட்டார்; மூடி இமைத்தாலும் துன்ப மடையமாட்டார். அவர் அவ்வளவு நுட்பமானவர்! (1126)

7 கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து.

எம் காதலர் எம் கண்ணினுள் இருக்கிறார்; ஆதலால், மைதீட்டினால் அவர் மறைவாரே என்றுணர்ந்து, கண்ணுக்கு மைதீட்ட மாட்டோம். (1127)

8 நெஞ்சத்தார் காத லவராக, வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.

எம் காதலர் எப்போதும் என் நெஞ்சினுள்ளேயிருக் கிறார், அவரைச்சுடுமே என்று அஞ்சி சூடான பொருள்களை உண்ணமாட்டோம்! (1128)

9 இமைப்பின் கரப்பாக்கு அறிவல்; அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் ஊர்.

என் கண் இமைத்தால் உள்ளேயிருக்கிற காதலர் மறைந்து விடுவார்; ஆதலால் இமைக்கவும் மாட்டேன். அவ்வளவிற்கே இவ் ஊரார் அவரை அன்பில்லாதவர் என்கின்றனர். (1129)

10 உவந்துறைவர் உள்ளத்துள் என்றும்; இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் ஊர்.

காதலர் என் உள்ளத்தினுள்ளே மகிழ்ச்சியோடு வாழ் கின்றார். அதனை யறியாமல், இவ்வூரார் "பிரிந்துவாழ்கின்றார்", "அன்பில்லாதவர்" என்று இகழ்ந்து கூறுகின்றனர். (1130)

114—நாணுத்துற வுரைத்தல்

காமமிகுதியால் நாணமிழந்ததைக் கூறுதல்.

1 காமம் உழந்து வருந்தினுர்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி.

காமத்தை அனுபவித்து பின் அதுபெறமுடியாமல் துன்ப மடைந்த ஆடவருக்கு "மடல்ஊர்தல்" அல்லாமல் வலிமை வாய்ந்த துணை வேறில்லை. (1131)

2 நோனு உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து.

காதலியை பிரிந்ததால் வந்த வருத்தத்தைப் பொறுக்காத உடம்பும் உயிரும், நாணத்தை ஒழித்துவிட்டு 'மடல்மா' ஏற துணிகின்றன. (1132)

3 நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்; இன்-
காமுற்றூர் ஏறும் மடல். [றுடையேன்

நாணத்தையும் நல்ல ஆண்மைமையையும் யான் முன்பு பெற்றிருந்தேன். அவை காதலியை பிரிந்த காரணத்தால் இப்போது நீங்கிவிட்டன. காமமிக்கவர் ஏறும் மடலையே இன்று உடையவனு யிருக்கின்றேன். (1133)

4 காமக் கடும்புனல் உய்க்குமே; நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.

நாணமும் நல்லாண்மையு மாகிய புணைகளைக் காமம் என்னும் கடுமையான வெள்ளம் என்னிடத்திலிருந்து அடித்துக் கொண்டு போய் விட்டது. (1134)

5 தொடலைக் குறுந்தொடி தந்தாள்; மடலொடு
மாலை உழக்கும் துயர்.

மடலேறுதலையும் மாலைக் காலத்தில் அனுபவிக்கும் துன்பத்தையும், வரிசையாக சிறுவளையல்களை அணிந்த காதலி எனக்குத் தந்துவிட்டாள். (1135)

6 மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன்; மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்,

காதலியின் பிரிவின் காரணமாக என் கண்கள் உறங்காமலிருக்கின்றன. மடலூர்தலைப் பற்றியே நள்ளிரவிலும் நினைத்துக் கொண்டிருக்கின்றேன். (1136)

7 கடலன்ன காமம் உழந்தும்; மடலேறும்
பெண்ணிற் பெருந்தக்கது இல்.

கடல் போன்ற காமநோயால் வருந்தியும், மடலூர்தலைச் செய்யாமல், தன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கும பெண் பிறவியைப்போலப் பெருமையுடைய பிறவி வேறில்லை. (1137)

8 நிறையரியர் மன்னளியர் என்னாது, காமம்
மறையிறந்து மன்று படும்.

''இவர் நிறை மிக்கவர்; மிகவும் இரங்குவதற்குரியவர்'' என்று சிறிதும் கருதாமல், காமமானது மறைந்திருத்தலைக் கடந்து, பலருமறியச் சபையில் வெளிப்படுகிறதே! (1138)

9 அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு.

''எல்லோரும் என்னை அறியவில்லையே'' என்றெண்ணிய என் காமமானது, தெருவெல்லாம் பரவி மயங்கிச் சுழன்று கொண்டிருகின்றது. (1139)

10 யாம்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

யாம் கண்ணால் நேரே காணும் விதமாக, ''இவள் காமத்தால் வருந்துகிறாள்'' என்று அறிவில்லாதவர் எம்மைப்பார்த்துக் கூறிச் சிரிக்கின்றனர், யாம் பட்ட துன்பங்களை அவர்கள் அடையவில்லையாதலால். (1140)

115 அலரறிவுறுத்தல்

பலரும் தூற்றும் பழி தனக்கு நன்மையே எனத் தலைவன் தோழிக்குக் கூறுதல்.

1 அலரெழ ஆருயிர் நிற்கும்; அதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

எம்முடைய காதலைப்பற்றி ஊரில் வசை உண்டாவதால், அவளைப் பெறுதிருந்தும் என் அருமையான உயிர் நிலைத்திருக்கின்றது. எம் நல்வினைப் பயனால் அந்த உண்மையைப் பலரும் அறியவில்லை. (1141)

2 மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக்கு ஈந்ததிவ் ஊர்.

குவளைமலரைப் போன்ற கண்களையுடைய இவளது அருமையை அறியாமல், இவ் ஊரார் வசைகூறி எமக்கு பேருதவியளித்தனர். (1142)

3 உருஅதோ ஊரறிந்த கௌவை; அதனைப்
பெருஅது பெற்றன்ன நீர்த்து.

ஊர் முழுதும் அறிந்த இந்த வசையானது நமக்குப் பொருந்தாதோ? பொருந்தும். அவளது சேர்க்கையைப் பெறுமலிருந்தும் பெற்றுப் போன்ற இன்பத்தை அடையச் செய்கின்றது அது. (1143)

4 கவ்வையால் கவ்விது காமம்; அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து.

ஊரார் தூற்றும் வசையினால் எம் காமம் வளர்கின்றது! அந்த அலர் இல்லையாயின் அது தன் இயல்பை இழந்து சுருங்கிவிடும். (1144)

5 களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால்; காமம்
வெளிப்படுந் தோறும் இனிது.

கள்ளுண்டு மயங்குந்தோறும் கள்ளுண்பவர்க்குக் கட்குடித்தல் இனிதாயிருத்தல்போல, பலர் தூற்றும் வசையால் காமம் வெளிப்படுந்தோறும், எனக்கு இனிதாயிருக்கின்றது. (1145)

6 கண்டது மன்னும் ஒருநாள்! அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

நான் என் காதலரை கண்டது ஒரே ஒரு நாள்! ஆனால், அதனால் உண்டான அலரோ, சந்திரனைப் பாம்பு பற்றிய செய்திபோல, எங்கும் பரவிவிட்டது! (1146)

7 ஊரவர் கௌவை எருவாக, அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்.

இக் காம நோயாகிய பயிர், ஊர்ப்பெண்கள் தூற்றும் அலரே எருவாக, தாய் கூறும் கடுஞ்சொல்லே நீராகப்பெற்றுச் செழித்து வளர்கின்றது! (1147)

8 நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்ருல்; கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்.

'அலர் தூற்றுவதால் காமத்தை அடக்குவோம்' எனமுயற்சி செய்தல், 'நெய்யால் நெருப்பை அவிப்போம்' என முயற்சி செய்வதைப் போலும்! (1148)

9 அலர்நாண ஒல்வதோ அஞ்சல்ஓம்பு என்ருர்
பலர்நாண நீத்தக் கடை.

'அஞ்சாதே!' விரைவில் மணப்பேன் என்று உறுதிகூறினர் தலைவர். இன்று, பலரும் நாணும்படி நம்மைப் பிரிந்தார். ஆதலால், ஊரார் தூற்றும் அலருக்கு நாம நாணலாகுமோ? (1149)

10 தாம்வேண்டின் கல்குவர் காதலர்; யாம்வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் ஊர்.

நாம் விரும்புகின்ற வசையை இவ்வூரார் எடுத்துச் சொல்கிறார்கள். ஆகவே, இனிக்காதலர் விரும்பினால் விரும்பியவாறு நம்மை இன்புறச் செய்வர். (1150)

2. கற்பியல்

116—பிரிவாற்றுமை

தலைவன் பிரிவிற்குச் சகியாமை

1 செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்கு உரை.

என்னைப் பிரிந்து செல்லாமை யுண்டாயின், அதனை எனக்குச் சொல்லுக. "பிரிந்து சென்று விரைவில் வருவேன்" என்பதை, அப்பொழுது உயிர்வாழ்வோருக்குச் சொல்லுக. (1151)

2 இன்கண் உடைத்தவர் பார்வல்; பிரிவஞ்சும் புன்கண் உடைத்தால் புணர்வு.

முன்பெல்லாம் அவருடைய பார்வை இன்பம் உடையதாயிருந்தது. இப்பொழுது, அவர் கூடியிருத்தல் "பிரிவாரே" என்ற அச்சத்தை உடையதாயிருக்கின்றது. (1152)

3 அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும் பிரிவோ ரிடத்துண்மை யான்.

அறிவினையுடைய தலைவரிடத்தும் ஒரு காலத்தில் பிரிவு என்பது உள்ளபடியால், அவர், "பிரியேன்" என்று கூறும் உறுதிமொழி நம்புதற்கு அரிதாயிருக்கிறது. (1153)

4 அளித்து அஞ்சல் என்றவர்நீப்பில் தெளித்தசொல் தேறியார்க்கு உண்டோ தவறு?

நம்மீது அன்பு செய்து "அஞ்சவேண்டாம்" என்று தேற்றிய தலைவர், பின் நமமைப் பிரிந்து செல்வாராயின், அவர் கூறிய உறுதிமொழியை நமபித் தெளிந்தவர்மேல் குற்றம் உண்டோ?

5 ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல்; மற்றவர் நீங்கின் அரிதால் புணர்வு.

தோழீ! என் உயிர் போகாமல் காப்பாற்றுவதானால், தலைவரது பிரிவு நேரிடாமற் காக்கவேண்டும். அவர் பிரிந்து சென்றால், என்உயிர் போய்விடுமாதலால், நான் அவரைப் பின்பு தழுவுதல் அரிதாம். (1155)

6 பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின், அரிதவர் நல்குவர் என்னும் நசை.

தலைவர் நம் முன் நின்று, ''பிரிவேன்'' என்று சொல்லத் துணியும் கல் நெஞ்சுடையவராஞல், அத்தகையவர், மீண்டும் வந்து அன்பு புரிவார் என்பது அரிதாம். (1156)

7 துறைவன் துறந்தமை தூற்றுகொல்? முன்கை இறைஇறவா நின்ற வளை.

தலைவர் பிரிந்து செல்வார் என்று தாமே அறிந்து மெலிவடையும் முன் கைகளின் எல்லையை கடந்து கழறுகின்ற என் கைவளையல்கள், அவர்பிரிந்து சென்ற செய்தியை பலரும் அறிய தூற்றுமலிருக்குமோ! (1157)

8 இன்னது இனன்இல்லூர் வாழ்தல்; அதனினும் இன்னது இனியார்ப் பிரிவு.

தம் குறிப்பையும் தோழியரில்லாத ஊரிலே வாழ்தல் மகளிர்க்குத் துன்பமாம். இனிய காதலரைப் பிரிந்து வாழ்தல் அதைக்காட்டிலும் பெருந்துன்பமாம். (1158)

9 தொடில்சுடின் அல்லது காமநோய் போல விடில்சுடல் ஆற்றுமோ தீ.

நெருப்பு தன்னைத் தொட்டால் சுடுமே யல்லாமல், காம நோயைப்போலத் தன்னைவிட்டு நீங்கினால் சுடும் தன்மையுடைய தாகுமோ? (1159)

10 அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப் பின்இருந்து வாழ்வார் பலர்.

பிரிவைப்பற்றித் தெரிவித்த பொழுது அதற்குச் சம்மதித்து, பிரியும்போது ஏற்படும் கலக்க நோயையும் தவிர்த்துப், பிரிந்தபின் பொறுத்திருந்து உயிரைத்தாங்கி வாழும் மகளிரும் உலகிலே பலராவர். (1160)

117—படர்மெலிந்திரங்கல்

பிரிவின் நினைவால் மெலிந்து இரங்குதல்

1 மறைப்பேன்மன் யான்;இ:தோ நோயை இறைப்ப ஊற்றுநீர் போல மிகும். [வர்க்கு

இக் காமநோயைப் பிறர் அறியாதபடி மிக மறைத்துத் தான் பார்க்கிறேன் ஆனால், இக்காமநோய் இறைப்பவருக்கு ஊற்றுநீர் பெருகுகின்ற விதத்தைப் போலப் பெருகிக் கொண்டிருக்கின்றதே! (1161)

2 கரத்தலும் ஆற்றேன்இந் நோயை;நோய் செய்-உரைத்தலும் நாணுத் தரும். [தார்க்கு

இக் காமநோயைப் பிறர் அறியாதபடி மறைக்கவும் இயலவில்லை! இந்நோயைத் தந்த காதலருக்கு அதைப்பற்றிச் சொல்லவும் நாணமாயிருக்கிறது! (1162)

3 காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்;என் நோஞ உடம்பின் அகத்து.

காமநோயும், அதனைத்தந்த காதலருக்கு அதனைச்சொல்ல இயலாத நாணமும், தன்பந்தாங்க மாட்டாத என்உடலிலுள்ள உயிரையே காவடித்தண்டாகக்கொண்டு, இருபக்கமும் தொங்குகின்றன. (1163)

4 காமக் கடல்மன்னும் உண்டே; அதுநீந்தும் ஏமப் புணைமன்னும் இல்.

காமமாகிய கடல் என்னிடத்தில் இருக்கின்றது. ஆனால் அதை நீந்திக் கரையேறுதற்கேற்ற தோணி என்னிடம் இல்லையே! என்செய்வேன். (1164)

5 துப்பின் எவன்ஆவர் மற்கொல்? துயர்வரவு நட்பினுள் ஆற்று பவர்.

இன்பந்தருதற்குரிய நட்பிலே துயரத்தை வரச் செய்யவல்ல காதலர், துன்பஞ் செய்தற்குரிய பகைமையை, வெல்ல வலிமை வேண்டும்போது என்னதான் செய்வாரோ! (1165)

6 இன்பம் கடல்மற்றுக் காமம்; அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது.

காமமானது இன்பஞ் செய்யும் பொழுது கடல்போலப் பெரிதாயிருக்கிறது. பிரிவு துன்புறுந்காலத்தில் துன்பம் அதைவிட பெரிதாய் இருக்கிறது (1166)

7 காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

காமமாகிய கடலை நீந்திக் கரைகண்டேனல்லேன். நடு ராத்திரியிலும் துணையின்றி தனியேயிருக்கின்றேன். (1167)

8 மன்னுயி ரெல்லாம் துயிற்றி, அளித்திரா
என்னல்ல தில்லை துணை.

அந்த இராப்பொழுதானது, இவ்வுலகிலே நிலைபெற்ற எல்லா உயிர்களையும் அங்கச்செய்துவிட்டு அது என்னையல்லா மல் வேறொரு துணையுமின்றியிருக்கின்றது. என்ன கொடுமை! (1168)

9 கொடியார் கொடுமையில் தாம்கொடிய; இந்நாள்
நெடிய கழியும் இரா.

காதலனுடு இன்புற்றிருந்த நாட்களில் குறுகிய அளவு டையதாய் தோன்றிய இரவுகள், காதலனைப் பிரிந்து துன் புறுகின்ற இந்த நாளிலே நெடியவையாய் நீண்டுகழியும் இராப் பொழுதுகள் அக்கொடியவரின் கொடுமையைக் காட்டிலும் கொடியவையா யிருக்கின்றன. (1169)

10 உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தலே மன்னுமென் கண்.

என் காதலர் உள்ள இடத்திற்கு என்மனம் விரைந்து செல்வது போலச் செல்ல முடியுமானால், என் கண்கள் கண்ணீர் வெள்ளத்தில் நீந்த மாட்டா. (1170)

118—கண் விதுப்பழிதல்

கண்கள் தலைவனைக் காண்பதற்கு விரைந்து வருந்தல்.

1 கண்தாம் கலுழ்வது எவன்கொலோ? தண்டாநோய் தாம்காட்ட யாம்கண் டது.

தீராத இந்தக் காம நோயை யாம் அடைந்தது இக் கண்கள் அக்காதலரைக் காட்டியதனால்தானே! இப்பொழுது அக்கண்களே கலங்கி அழுவது என்? (1171)

2 தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப் பைதல் உழப்பது என்?

மேல் விளைவதை ஆராய்ந்தறியாமல், அன்று காதலரை நோக்கிநின்ற மையுண்டகண்கள், 'இது நம்மால் வந்ததுதானே பொறுத்துக்கொள்ளுதல் வேண்டுமே' என்பதை உணராமல், இன்று துயரம் அடைவது என்? (1172)

3 கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும் இதுநகத் தக்க துடைத்து.

அன்று இக்கண்கள் காதலரைத் தாமே விரைந்து நோக்கி, இன்றும் தாமேயிருந்து அழுகின்ற இவ்வறியாமைச் செயல், நம்மால் சிரிக்கத்தக்க இயல்பினையுடையது! (1173)

4 பெயலாற்ரு நீருலந்த உண்கண்; உயலாற்ரு உய்வில்நோய் என்கண் இறுத்து.

தப்பிப்பிழைக்க முடியாத தீராத காமநோயை என்னிடத் திலே உண்டாகி நிறுத்திவிட்டு, மையுண்ட கண்கள், தாமும் அழமாட்டாமற் கண்ணீர் வற்றிவிட்டன! (1174)

5 படலாற்ரு பைதல் உழக்கும்; கடலாற்ருக் காமநோய் செய்தனன் கண்.

அன்று எனக்குக் கடலினும் பெரிய காமநோயை உண் டாக்கிய என் கண்கள், இன்று உறங்குதற்கு முடியாமல் துன்பத்தையுறுகின்றன. (1175)

6 ஓஒ இனிதே எமக்குஇந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது.

எமக்கு இக் காமநோயினைச் செய்த கண்கள், தாமும் இத்தகைய துனபத்தில்பட்டு வருந்துவது மிக்க இனிதே! (1176)

7 உழந்துழந்து உண்ணீர் அறுக! விழைந்திழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண்.

விரும்பி விரும்பி, விடாமல் அவரைப் பார்த்துக்கொண் டிருந்த இக் கண்கள், துன்பத்தை அனுபவித்து அனுபவித்துக் கண்ணீர் வற்றிப்போவன வாக! (1177)

8 பேணுது பெட்டார் உளர்மன்னே? மற்றவர்க்
காணுது அமைவில கண்.

மனத்தால் விரும்பாதிருந்தும் சொல் மாத்திரத்தால் பழகிய அவர் ஒருவர் இருக்கிறார்! அவரைக்காணுமல் கண்கள் அமைவ தில்லை. (1178)

9 வாராக்கால் துஞ்சா; வரில்துஞ்சா; ஆயிடை
ஆரஞர் உற்றன கண்.

காதலர் வராத நாட்களில் வருகையை எதிர்நோக்கித் தூங்கா மாட்டா. வந்து விட்டால், பிரிவாரோ? என்றஞ்சித் தூங்க மாட்டா. ஆகவே, அக்கண்கள் இவற்றிற்கிடையில் துன்பம் அடைகின்றன. (1179)

10 மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றுல்; எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து.

அறையப்படும் பறையைப் போலத் துன்பத்தை வெளிப் படுத்தும் கண்களையுடைய எம்போன்றவரிடத்தினின்று இரகசி யத்தை அறிந்து கொள்ளுதல் இவ்வூரார்க்கு அரியது அன்று. (1180)

119—பசப்புறு பருவரல்

தலைவன் பிரிவால் தலைவிக்கு நிறவேறுபாடு நிகழ, அவள் அதற்கு வருந்துதல்.

1 நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்; பசந்தஎன் பண்பியார்க்கு உரைக்கோ பிற.

என்னை விரும்பி ஏற்ற தலைவருக்குப் பிரிந்து செல்ல, அன்று உடன்பட்டேன். இனறு அப்பிரிவைப் பெறாமல் பசலை நிறம் அடைந்த என் இயல்பை யாரிடம் சொல்லி முறையிடுவேன்! (1181)

2 அவர்தந்தார் என்னும் தகையால், இவர்தந்தென் மேனிமேல் ஊரும் பசப்பு.

அத் தலைவர் தன்னை யுண்டாக்கினர் என்னும் செருக்கினால் இப் பசலை என் மேனி மேல் ஏறி ஊர்ந்து கொண்டிருக்கிறது. (1182)

3 சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறு நோயும் பசலையும் தந்து.

காமநோயையும் பசலை நிறத்தையும் எனக்கு கொடுத்து விட்டு அதற்கு கைம்மாறாக என் அழகையும் நாணத்தையும் கொண்டுபோய்விட்டார் என் தலைவர். (1183)

4 உள்ளுவன் மன்யான்; உரைப்பது அவர்திறமால்; கள்ளம் பிறவோ பசப்பு.

நான் அவரையே நினைக்கின்றேன்; அவருடைய திறத்தையே வாய்விட்டுப் பேசுகின்றேன். இப்படியிருக்க, பசலைநிறம் வந்ததே! இது என்ன வஞ்சகம்? (1184)

5 உவக்காண்எம் காதலர் செல்வார்; இவக்காண்என் மேனி பசப்புஊர் வது.

எம்முடைய காதலர் அதோ பிரிந்து செல்கிறார்! இதோ இந்தப் பசலைநிறம் என்மேனியின்மேல் படரத் தொடங்கி விட்டது! (1185)

6 விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல், கொண்கன் முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

விளக்கு நீங்கும் சமயத்தை எதிர்பார்த்திருக்கும் இருட்டைப் போல, காதலன் என்னை தழுவுதலின் சோர்வை எதிர்பார்த்திருக்கிறது இந்தப் பசலைநிறம். (1186)

7 புல்லிக் கிடந்தேன்; புடைபெயர்ந்தேன்; அவ்வளவில் அள்ளிக்கொள் வற்றே பசப்பு.

காதலனைத் தழுவிக் கிடந்தேன்; சற்று விலகினேன் அவ்வளவுதான்! அதற்குள் அள்ளிகொள்ளும் அளவுக்குப பசலைநிறம என் உடமபில் பரவிவிட்டதே! (1187)

8 பசந்தாள் இவள்என்பது அல்லால், இவளைத் துறந்தார் அவரென்பார் இல்

"பிரிவுக்கு ஆற்றாமல் இவள் பசலைநிறம அடைந்தாள்" என்று எல்லோரும் சொல்கின்றாரே அல்லாமல், "அவர் இவளைப் பிரிந்து சென்றாரே!" என்று பழி கூறுவார் ஒருவருமே இல்லையே! (1188)

9 பசக்கமற் பட்டாங்கென் மேனி; நயப்பித்தார் நன்னிலையர் ஆவர் எனின்.

தாம் பிரிந்து செல்வதற்கு என்னைச் சம்மதிக்கச் செய்த எம் தலைவர் நல்லவர் என்றால என் உடம்பு எப்படிக் கெட்டாலும சரி; பசலைநிறமும் வருவதாக! (1189)

10 பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே; நயப்பித்தார் நல்காமை தூற்றுர் எனின்.

இன்சொற் கூறி என்னைச் சம்மதிக்கச் செய்து பிரிந்து சென்ற என் காதலரின், அருளற்ற செய்கையைப்பிறர் தூற்றாதிருப்பாராஞல், யான் பசலையுற்றேன் எனப் பெயரெடுத்தல நல்லதே! (1190)

120—தனிப்படர்மிகுதி

தலைவி தன் துயரம் மிகுதியைச் சொல்லுதல்

1 தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றூரே
காமத்துக் காழில் கனி.

தாம் விரும்பும் காதலர், தம்மை விரும்புகின்ற பேறு பெற்றவர், காமவினபம் என்கின்ற விதையில்லாத பழத்தைப் பெற்றவராவர். (1191)

2 வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி

தம்மை விரும்பும் காதலியருக்கு, அவருடைய காதலர் அளிக்கும் அன்பு, தனை எதிர்நோக்கி வாழும் உயிர்களுக்கு மேகம் தக்கபருவத்தில மழைபொழிந்தாற் போன்றது. (1192)

3 வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே;
வாழுகம் என்னும் செருக்கு.

தாம் விரும்பும் காதலரால் தாமும் விரும்பப்படும் மகளிருக்கு, "காதலர் பிரிந்தாலென்ன? விரைவில் வருவார்; மீண்டும் கூடிவாழுவோம்" என்று செருக்கியிருத்தல் தகுதியே! (1193)

4 வீழப் படுவார் கெழீஇயிலர்; தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.

உலகத்தோரால், போற்றப்படும் குலமகளிராயினும், தாம் விரும்பும் காதலரால் விரும்பப்படாதவராஞல், நல்வினை பொருந்தியவராகார். (1194)

5 நாம்காதல் கொண்டார், நமக்கு எவன்செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை.

நம்மால் காதல் செய்யப்பட்டவர், அவ்வாறே தாமும் நம்மிடத்துக் காதல் செய்யாத பொழுது, நமக்கு அவர் என்ன இன்பத்தைச் செய்வார்? (1195)

6 ஒருதலையான் இன்னாது காமம்;காப் போல
இருதலை யானும் இனிது.

தலைவன் தலைவி இவரிடத்தும் உண்டாவதாகிய காமம் ஒருவரிடத்து மட்டும் உண்டானால் துன்பமாகும். காவடித் தண்டின் பாரம் போல இரண்டு பக்கத்தும் சமமாக எற்பட்டால் மாத்திரமே அக்காமம் இன்பமாகும். (1196)

7 பருவரலும் பைதலும் காணுன்கொல்? காமன்
ஒருவர்கண் நின்றெழுகு வான்.

மன்மதன் ஆண் பெண் என்னும் இருவரிடத்தும் சமமாக நிற்காமல், ஒருவரிடத்தில் மட்டும் நின்று போர் செய்கின்றானே! அவன் என் காமநோயையும் அதன் துயரத்தையும் அறிய மாட்டான் போலும்! (1197)

8 வீழ்வாரின் இன்சொற் பெறுஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணர் இல்.

தம்மால் விரும்பப்படுங் காதலரிடத்திலிருந்து யாதேனும் ஓர் இனிய சொல்லைப் பெறுமல், அவர் பிரிவைப் பொறுத்திருந்து உயிருடன் வாழ்கின்ற மாதரைப்போலத் துணிவு உடையோர் உலகத்தில் வேறில்லை (1198)

9 நசைஇயார் நல்கார் எனினும், அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு.

என்னால் விரும்பப்பட்ட காதலர் என்னிடத்து அன்பில்லாராலும், அவரிடத்திலிருந்து வரும் எவ்விதச் சொல்லும் என் செவிகளுக்கு இனியது! (1199)

10 உருஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செருஅய் வாழிய நெஞ்சு!

நெஞ்சே! வாழ்வாயாக! உன்னோடு வந்து பொருந்தாத காதலர்க்கு நீ உற்ற நோயையெல்லாம் சொல்; அல்லது இந்தக் காமநோயைப் பெருகச்செய்யும் கடலைத் தூர்த்துவிடு! (1200)

121—நினைந்தவர் புலம்பல்

முன் கூடியிருந்த காலத்தில் அடைந்த இன்பத்தை நினைத்துப் புலம்புதல்

1 உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினும் காமம் இனிது.

தழுவிய காலத்தில் அநுபவித்த காமஇன்பத்தை, பிரிந்த காலத்தில் நினைத்தாலும் தெவிட்டாத பெரிய மகிழ்ச்சியைச் செய்தலால், உண்டபொழுது மட்டும் மகிழ்ச்சியைத்தரும் கள்ளைக் காட்டிலும் நினைத்தாலே இன்பம் தரும் காமவின்பமே இனியதாம். (1201)

2 எனைத்தொன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன்று இல்.

தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவினிடத்து நினைத்தால், அவ்விதம் நினைத்தவர்க்கு அப்பிரிவால் வருவதொரு துன்பம் இல்லை. எனவே, காமம எவ்வளவாயினும் இன்பந் தருவதே யாம். (1202)

3 நினைப்பவர் போன்று நினையார்கொல்; தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

எனக்குத் தும்மல் எழுவதுபோலத் தோன்றிக் கெடுகின்றதே! காதலர் என்னை நினைப்பவர் போலிருந்து நினைக்க மாட்டார் போலும்! (1203)

4 யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து; எம்
ஓஒ உளரே அவர். [நெஞ்சத்து

எம்முடைய நெஞ்சில் காதலராகிய அவர் இருக்கின்றாரே! அதுபோல, அவருடைய நெஞ்சத்தில் யாமும் இருக்கின்றோமா? (1204)

5 தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணுர்
எம்நெஞ்சத்து ஓவா வரல். [கொல்

தம்முடைய நெஞ்சில் எம்மை வரவிடாமல் காவல் செய்து கொண்ட எம்காதலர், எம்முடைய நெஞ்சில் ஓயாமல் வருவதற்கு நாணம் கொள்ள மாட்டாரோ? (1205)

6 மற்றியான் என்னுளேன் மன்னோ? அவரொடுயான் உற்றநாள் உள்ள உளேன்.

காதலராகிய அவருடன் யான் கூடியிருந்த இன்ப நாட்களை நினைத்துக் கொள்வதாலேயே உயிரோடிருக்கிறேன். வேறு எவ்வகையாலும் உயிர்வாழ்கின்றேன் அல்லேன்? (1206)

7 மறப்பின் எவன்ஆவன் மன்கொல்? மறப்பறியேன் உள்ளினும் உள்ளம் சுடும்.

காதலரை மறக்காமல் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே, பிரிவு என் உள்ளத்தைச் சுடுகின்றது. அங்ஙனம் நினைக்காமல் மறந்துவிட்டால் என்கதி யாதாகும்? (1207)

8 எனைத்து நினைப்பினும் காயார்; அனைத்தன்றே காதலர் செய்யும் சிறப்பு.

காதலராகிய அவரை யான் எவ்வளவு நினைத்தாலும், அவர் என்மேல் சினம் கொள்ளார்! காதலர் எனக்குச் செய்யும் சிறப்பு அவ்வளவு அல்லவா? (1208)

9 விளியும்என் இன்உயிர் வேறல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து.

முன்பெல்லாம், 'நாம் இருவரும் வேறல்லோம்' என்று அடிக்கடி சொல்லும் அவர், இப்பொழுது அன்பில்லாதிருக்கின்றாரே! இதை மிகவும் நினைத்து என் இனிய உயிர் அழிகின்றதே! (1209)

10 விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப் படாஅதி வாழி மதி!

சந்திரனே! பிரியாமலிருந்து பின் பிரிந்து சென்ற என் காதலரை என் கண்ணால் தேடிக் காணும் வண்ணம், நீ மறையாமலிருப்பாயாக. (1210)

122—கனவு நிலையுரைத்தல்

தலைவி தான் கண்ட கனவின் தன்மையைத் தோழிக்குக் கூறல்

1 காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து.

யான் வருந்துவதை யறிந்து, காதலரிடமிருந்து தூதினைக் கொண்டு வந்த அந்தக் கனவுக்கு யான் விருந்தாக என்ன செய்வேன்? (1211)

2 கயலுண்கண் யான்இரப்பத் துஞ்சில் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன்,

மீனைப்போன்ற மையுண்ட என் கண்கள் யான் வேண்டுவது போல் உறங்குமானால், கனவிலே காணும் என்காதலருக்கு, பிரிவுத்துன்பத்திற்கு நான் தப்பிப் பிழைத்திருக்குந் தன்மையை எடுத்துக் கூறுவேன். (1212)

3 நனவினுல் நல்கா தவரைக் கனவினுல்
காண்டலின் உண்டுஎன் உயிர்.

நனவிலே வந்து கருணை காட்டாத காதலரைக் கனவிலாயினும் காண்பதனாலேயே என் உயிர் நீங்காமல் நிலைத்திருக்கின்றது. (1213)

4 கனவினுன் உண்டாகும் காமம்: நனவினுல்
நல்காரை நாடித் தரற்கு.

நனவிலே வந்து அன்பு காட்டாத காதலரைத் தேடி அழைத்துக் கொண்டு வந்து தருதலால், அக் கனவினிடத்தில் எனக்கு இன்பம் எற்படுகிறது. (1214)

5 நனவினுல் கண்டதூஉம் ஆங்கே; கனவும்தான்
கண்ட பொழுதே இனிது.

முன்னே நனவில் அக் காதலரைக் கண்டு அனுபவித்த இன்பம் அப்பொழுதைக்கு இனிதாயிற்று. இப்பொழுது காணும் கனவும் இப்பொழுதைக்கு இனிதாயிருக்கிறது. எனவே, எனக்குக் கனவும் நனவும் ஒன்றே. (1215)

6 நனவென ஒன்றில்லை யாயின் கனவினுல்
காதலர் நீங்கலர் மன்.

நனவு என்று சொல்லப்படுகின்ற ஒன்று இல்லாதிருக்கு மானுல், கனவில் வந்த என் காதலர் என்னைவிட்டு நீங்காமலே யிருப்பர். (1216)

7 நனவினுல் நல்காக் கொடியார் கனவினுல்
ஏன்எம்மைப் பீழிப் பது.

நனவில் வந்து எமக்கு அன்பு செய்யாத கொடுமையுடைய அக்காதலர், கனவில் மட்டும் வந்து எம்மை வருத்துவது என்ன காரணத்தால்? (1217)

8 துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி, விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து.

காதலர்; யான் தூங்கும் போது கனவில் வந்து என் தோள்மேல் உள்ளவராகிப் பின் விழிக்கும் பொழுது விரைந்து என் நெஞ்சில் உள்ளவராகின்றார். (1218)

9 நனவினுல் நல்காரை நோவர்; கனவினுல்
காதலர்க் காணு தவர்.

கனவிலே காதலர் வருதலைக் காணுத மகளிர்தான் விழித்திருக்கும் போது அவர் வந்து அன்பு செய்யவில்லையே என்று அக் காதலரைப் பழித்துப் பேசுவார். (1219)

10 நனவினுல் நம்நீத்தார் என்பர்; கனவினுல்
காணுர்கொல் இவ்வூ ரவர்.

இவ் ஊரிலுள்ள பெண்கள் நனவினிடத்திலே நம்மை விட்டு நீங்கினர் என்று நம் காதலரைப் பழித்துப் பேசுகின்றனரே! கனவினிடத்தில் அவர் வருவதைக் கண்டறியாரோ? (1220)

123—பொழுது கண்டிரங்கல்

மாலைப் பொழுது வந்ததும், தலைவி காமத்தால் வருந்துதல்.

1 மாலையோ அல்லை; மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது!

பொழுதே! நீ மாலைக்காலமாயில்லை. காதலரைக் கூடி யிருந்து பின் அவரைப் பிரிந்து வாழும் பெண்டிரின் உயிரை உண்ணும் முடிவுக காலமா யிருக்கின்றாய். (1221)

2 புன்கண்ணை வாழி மருள்மாலை; எம்கேள்போல்
வன்கண்ணை தோநின் துணை.

மயங்கிய மாலைப் பொழுதே! நீயும் எம்மைப்போலத் துன்பப் படுகின்றாய். எம் துணைவரைப்போல உன் துணைவரும் இரக்கம் அற்ற கொடியவரோ? (1222)

3 பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை, துனியரும்பித்
துன்பம் வளர வரும்.

பனியுடன் தோன்றிப் பசந்தநிறம் பொருந்தித் தலைவர் என்னோடு கூடியிருந்த காலத்தில் வந்து கொண்டிருந்த மாலைப் பொழுது, இப்பிரிவுக் காலத்தில் எனக்கு வருத்தந்தோன்றித் துன்பம் மேன்மேலும் பெருகும்படி வருகின்றது. (1223)

4 காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்.

காதலர் இல்லாத இப்பொழுது, கொலை செய்யுமிடத்தி லே தோன்றும் கொலைஞரைப் போல, மாலைக்காலம் என் உயிரைக் கவர வருகின்றது. (1224)

5 காலைக்குச் செய்தநன்று என்கொல்? எவன்
மாலைக்குச் செய்த பகை? [கொல்யான்

காலைப் பொழுதிற்கு நான் செய்த நன்மை என்ன? என்னைத் துன்புறுத்துகின்ற இந்த மாலைப் பொழுதிற்கு நான் செய்த தீமை என்ன? (1225)

6 மாலைநோய் செய்தல், மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன்.

மாலைப்பொழுது இவ்விதம் துன்பஞ் செய்யும் என்பதை என் காதலர் என்னைவிட்டகலா திருந்த அந்தக் காலத்தில் அறிந்தேனில்லை. (அறிந்தால், பிரிவிற்கு உடன்பட்டிரேன்.)

7 காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்.

இந்தக் காமநோய், காலைப் பொழுதில் அரும்பாய்த் தோன்றி, பகற் பொழுதெல்லாம் பேரரும்பாய் வளர்ந்து, மாலைப்பொழுதில் மலர்ந்து விடுகிறது. (1227)

8 அழல்போலும் மாலைக்குத் தூதாகி, ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.

முன்பெல்லாம் இன்பம் செய்த ஆயனது புல்லாங் குழலின் இசை, இப்பொழுது நெருப்புப்போற் சுடுகின்றன. மாலைப் பொழுதிற்குத் தூதாகவும், அது என்னைக் கொல்லுதற்கு உதவும் ஆயுதமாகவும் விளங்குகின்றது. (1228)

9 பதிமருண்டு பைதல் உழக்கும்; மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

கண்டவருடைய அறிவு கலங்குமாறு மாலைக்காலம் எங்கும் பரவும் பொழுது, இந்த ஊரும் கலக்க முற்று என்னைப் போலத் துயரமடையும். (1229)

10 பொருள்மாலை யாளரை உள்ளி, மருள்மாலை
மாயும்என் மாயா உயிர்.

பிரிவுத்துயரத்தைப் பொறுத்துக்கொண்டு சாகாமலிருந்த என்னுடைய உயிரானது, பொருள் தேடுதலையே பெரிதாக எண்ணி, இன்னும் திரும்பி வராமலிருந்த காதலரை நினைத்து, மயங்குகின்ற இம்மாலைப் பொழுதில் மாய்கின்றது உயிர்! (1230)

124—உறுப்பு நலன் அழிதல்

தலைவியின் கண், தோள், நெற்றி முதலிய உறுப்புக்கள் அழகு அழிதல்.

1 சிறுமை நமக்கொழியச் சேண்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்.

பிரிவுத்துன்பத்தை நமக்கு விட்டுவிட்டுத் தொலைவிலுள்ள நாட்டிற்குச் சென்ற காதலரை நினைத்து, என் கண்கள் ஒளி யிழந்து நறுமலருக்கு நாணின. (1231)

2 நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்;
பசந்து பனிவாரும் கண்.

பசலைநிறம் பெற்று நீரைச் சொரிகின்ற கண்கள், நம்மால் விரும்பப்பட்ட காதலர் நமக்கு அன்பு செய்யாத தன்மையைப் பிறருக்குச் சொல்லுவனபோல் உள்ளன. (1232)

3 தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

காதலர் கூடிவாழ்ந்த காலத்தில் இன்பமிகுதியால் பூரித்த தோள்கள், இப்பொழுது அவர் பிரிந்து சென்றமையை நன்று அறிவிப்பவை போன்று மெலிந்து விட்டன. (1233)

4 பணைநீங்கிப் பைந்தொடி சோரும்; துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

துணைவராகிய காதலர் பிரிந்து சென்றமையால் பழைய இயற்கையழகை இழந்த இத்தோள்கள், இன்று பருமனை இழந்து வளையல்கள் கழலும்படி மெலிந்தன. (1234)

5 கொடியார் கொடுமை உரைக்கும்; தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

வளையல்கள் கழன்று இயற்கையழகை யிழந்து மெலிந்த இந்தத் தோள்கள், காதலர் பிரிந்து சென்ற கொடுமையைத் தாமே பிறரறிய எடுத்துரைக்கின்றன. (1235)

6 தொடியொடு தோள்நெகிழ நோவல், அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து.

வளையல்கள் கழலும்படி தோள்கள் மெலிவுற்றதனால், காதலரைக் கொடியவர் என்று கண்டோர் கூறக்கேட்டு வருந்தித் துயர முறுகிறேன். (1236)

7 பாடு பெறுதியோ, நெஞ்சே! கொடியார்க்கென்
வாடுதோள் பூசல் உரைத்து.

நெஞ்சே! கொடியவர் என்று குறைகூறப் படுகிற அந்தக் காதலருக்கு, என் மெலிகின்ற தோள்களால் ஏற்படும் ஆரவாரத்தை எடுத்துரைத்துப் பெருமையுறுவாயோ? (1237)

8 முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

இறுகத் தழுவிய கைகளைக் கொஞ்சம் தளர்த்திய பொழுது, அதைக்கூடப் பொறுக்க முடியாமல், பைந்தொடிகளையணிந்த காதலியின் நெற்றி பசலை நிறத்தை யடைந்தது! (1238)

9 முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

இறுகத் தழுவியிருக்கையிலுக்கிடையே, மெல்லிய குளிர்ந்த காற்று ஊடுருவிச்செல்ல, இவ்வளவு சிறிய நெகிழ்ச்சிகளும் பொறுக்காமல் காதலியின் மழைபோன்ற கண்களை பசலைநிறம் அடைந்தன. (1239)

10 கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே;
ஒண்ணுதல் செய்தது கண்டு.

காதலியின் ஒளிபொருந்திய நெற்றி பசலைநிறம் அடைந்ததைப் பார்த்ததும், அவளுடைய கண்களும் பசலைநிறமுற்றுத் துயரமும் அடைந்தன. (1240)

125—நெஞ்சொடு கிளத்தல்

தலைவனது பிரிவாற்றுமையால் தலைவி தன் நெஞ்சுக்குக் கூறுதல்

1 நினைத்தொன்று சொல்லாயோ? நெஞ்சே! எனைத்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து. [தொன்றும்

ஏ நெஞ்சமே! ஒருவிதத்திலும் தீராத இந்தக் காம நோயைத் தீர்க்கும் மருந்தொன்றை நீ நினைத்துப் பார்த்து எனக்குச் சொல்ல மாட்டாயா? (1241)

2 காதல் அவர்இல ராக,நீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு.

என் மனமே! வாழ்வாயாக! அவர் நம்மிடம் காதலுடைய வராயில்லை; அப்படியிருந்தும் நீ மட்டும் அவரை நினைத்து வருந்துவது அறியாமையாகும். (1242)

3 இருந்துள்ளி என்பரிதல்? நெஞ்சே! பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல்.

நெஞ்சே! என்னுடன் இருந்து அவரை நினைத்து வருந்துவது என்? இந்தத் துன்பநோயை உண்டாக்கியவரிடம், இவ்விதம் அன்புசெய்து நினைக்கும் தன்மை இல்லையே! (1243)

4 கண்ணும் கொளச்சேறி; நெஞ்சே! இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று.

நெஞ்சே! அவரிடம் நீ செல்லும்பொழுது இந்த என் கண்களையும் உடனழைத்துச் செல்வாயாக! அவரைக் காண வேண்டுமென்று இவை என்னைப் பிடுங்கித்தின்கின்றன (1244)

5 செற்றார் எனக்கை விடல்உண்டோ? நெஞ்சே!
உற்றுழி உறுஅ துவர். [யாம்

நெஞ்சே! நாம் அவரை விரும்ப, நம்மை விரும்பாத அக் காதலரை, "அவர் நம்மை வெறுத்தாரே!" என்று பிணங்கிக் கைவிட்டிருக்கும் வலிமை நமக்கில்லையே! (1245)

6 கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால், புலந்துண
பொய்க்காய்வு காய்தி;என் நெஞ்சு! [ராய்

என் நெஞ்சே! நான் தம்மோடு ஊடிஞால், அவ்ஊடலைக் கூடலால் நீக்கும் அக் காதலரைக் கண்டதும், பொய்யாக வேனும் பிணங்கிப் பின் கூட மாட்டாய். அது கூட முடியாத நீ, அவரைக் 'கொடியவர்' என்று பொய்க்கோபங் கொள்கின்றாய். (1246)

7 காமம் விடுஒன்றே; நாண்விடு; நன்னெஞ்சே!
யாஞை பொறேன்இவ் இரண்டு.

நல நெஞ்சே! ஒன்று காமத்தைக் கைவிடு; அல்லது நாணத்தைக் கைவிடு; இந்த இரண்டையும் ஒருங்கே எனஞல் பொறுக்க முடியாது. (1247)

8 பரிந்தவர் நல்கார்என்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதை!என் நெஞ்சு!

என் நெஞ்சே! நீ ஒரு பேதை! 'பிரிவாற்றுமையை அறிந்தும் அவர் அன்புடன் வந்து அருள் செய்யவில்லையே!' என்று ஏங்கியும், பிரிந்துசென்ற அக் காதலர் பின் செல்கின்றாய். (1248)

9 உள்ளத்தார் காத லவராக, உள்ளிநீ
யாருழைச் சேறி;என் நெஞ்சு!

என் நெஞ்சே! காதலர் உன் அகத்தில் தானே இருக்கிறார். இதை நீ நன்கறிந்தும் நீ இப்பொழுது புறத்திலே தேடிக் கொண்டு யாரிடம் செல்கின்றாய். (1249)

10 துன்னித் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
இன்னும் இழத்தும் கவின்.

நம்முடன் பொருந்தியிருக்காமல் பிரிந்துசென்ற காதலரை, நம் நெஞ்சில் வைத்திருக்கும் போதும், இன்னும் மெலிந்து அழகை இழந்து வருகின்றோம். (1250)

126—நிறையழிதல்

தலைவி தன் ஆசைமிகுதியை வாய்விட்டுச் சொல்லுதல்.

1 காமக் கணிச்சி உடைக்கும்; நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

நாணம் என்னும் தாழ்ப்பாளைக் கோத்த நிறை என்கின்ற கதவைக் காமம் ஆகிய கோடாரி முறிக்கின்றது. (1251)

2 காமம் எனஒன்றே கண்இன்று;என் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்.

காமம் என் நெஞ்சை நடுசாத்திரியிலும் எவல் கொண்டு ஆள்கிறது, எனவே, அந்தக் காமம் என்று சொல்லப்பட்ட ஒன்று கண்ணோட்டம் இல்லாததாயிருக்கிறது. (1252)

3 மறைப்பேன்மன் காமத்தை யானோ! குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்.

இக் காமத்தை நான் என் உள்ளே மறைக்க நினைப்பேன். ஆனால், அது என் குறிப்பின்படி நில்லாமல் தும்மல்போன்று வெளிப்பட்டே விடுகின்றது. (1253)

4 நிறையுடையேன் என்பேன்மன் யானோ! காமம்
மறையிறந்து மன்று படும்.

இதுவரையிலும் யான் என்னை நிறையுடனிருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால், என் காமம் என்னுள் மறைந்து நிற்காமல் எல்லை கடந்து மன்றத்தில் வெளிப் படுகின்றது. (1254)

5 செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை, காமநோய்
உற்றார் அறிவதுஒன் றன்று.

தம்மை விட்டு நீங்கிப் போனவர் பின் செல்லாமல் நிற் கின்ற நிறையுடைமையானது, காமநோயை அடைந்தவர் அறியுந் தன்மையுடையதன்று. (1255)

6 செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றுஎன்னை உற்ற துயர்.

என்னை நீங்கிச் சென்றவர் பின்னே நான் செல்லுதலை வேண்டுதலால், என்னை அடைந்த இந்தக் காமத்துயர் எத் தன்மையுடையது? (முறையற்றதேயாம்) (1256)

7 நாணென ஒன்றே அறியலம்; காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.

நாம் விரும்பிய அந்தக் காதலர் வந்து, காமத்தால் நமக்கு விருப்பமானவற்றை யெல்லாம் செய்யும் சமயத்தில், நாணம் என்ற ஒன்றை அறியமாட்டாதிருந்தோம். (1257)

8 பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றே,நம்
பெண்மை உடைக்கும் படை?

பல வகையான மாயங்களில் வல்ல கள்வனை காதலனுடைய பணிவுமிக்க சொற்களல்லவா, நம்முடைய பெண்மை யாகிய அரணை அழிக்கும் ஆயுதம்? (1258)

9 புலப்பல் எனச்சென்றேன்; புல்லினேன்; நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு.

"ஊடுவேன்" எனவுறுதி கொண்டு, அவர் வரும்பொழுது வேறோரிடத்துக்குச் சென்றேன். என் நெஞ்சமோ, அவரோடு கூடத் தொடங்குவதைக்கண்டு, நான் அவரைத் தழுவிக் கொண்டேன். (1259)

10 நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்.

நெருப்பிலே கொழுப்பை யிட்டாற்போல இளகிய நெஞ்சுடைய மகளிருக்கு, "அவர் வந்தால் ஊடுவோம்" என்று முன் நினைத்தபடி ஊடும் தன்மை உண்டோ. இல்லை? (1260)

127—அவர்வயின் விதும்பல்

தலைவனும் தலைவியும் பிரிவின்கண் ஒருவரை யொருவர் காணுதற்கு விரைதல்

1 வாளற்றுப் புற்கென்ற கண்ணும்; அவர்சென்ற நாளொற்றித் தேய்ந்த விரல்.

காதலர் வரும்வழியைப் பார்த்துப் பார்த்துக் கண்கள் ஒளிகுன்றி அழகிழந்தன. அவர் பிரிந்துபோன நாள்களைச் சுவரில் எழுதி, அக்குறிகளைத் தொட்டுத்தொட்டு எண்ணி விரல்களும் தேய்ந்தன. (1261)

2 இலங்கிழாய்! இன்று மறப்பின்என் தோள்மேல் கலங்கழியும் காரிகை நீத்து.

மின்னுகின்ற ஆபரணங்களை யணிந்த தோழீ! இறந்து படுகின்ற இன்றைத்தினத்தில், யான் என் காதலரை மறப்பேனுனால், மறுபிறப்பிலும் என் அழகு நீங்குவதுடன், தோள்வளை முதலிய அணிகளும் கழல நேரிடும். (1262)

3 உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் வரல்நசைஇ இன்னும் உளேன்.

வெற்றியின்மேல் விருப்பங் கொண்டு, ஊக்கமே துணையாகப் போர்மேற் சென்ற என் காதலவர் திரும்பிவருதலைக் காணுதற்காகவே யான் உயிர்தாங்கி வாழ்கின்றேன். (1263)

4 கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக் கோடுகோடு ஏறும்என் நெஞ்சு.

முன்பு கூடிவாழ்ந்த காமவின்பத்தைக் கைவிட்டுப் பிரிந்து சென்ற அந்தக் காதலர் வருகையை எண்ணி என் நெஞ்சு மேன்மேலும் பொங்கித்ததும்புகிறது. (1264)

5 காண்கமன் கொண்கனைக் கண்ணுரக் கண்டபின் நீங்கும்என் மென்றோட் பசப்பு.

என் காதலனைக் கண்ணுரக் காணக் கடவேன்! அவ்வாறு கண்டபின் என் மெல்லிய தோள்கள் அடைந்த பசலைநிறம் தானே நீங்கிவிடும். (1265)

6 வருகமன் கொண்கன் ஒருநாட் பருகுவன்
பைதல்நோ யெல்லாம் கெட.

என் கணவர் ஒரு நாள் வரட்டும்! இந்தத் துன்ப நோ யெல்லாம் நீங்கும்படி, யான் அவர் தரும் இன்ப அமுதத்தைப் பருகுவேன்! (1266)

7 புலப்பேன்கொல்? புல்லுவேன்கொல்லோ? கலப்பேன்
கண்அன்ன கேளிர் வரின். [கொல்

என் கண் போன்ற அந்தக் காதலர் வந்தால், நான் அவருடன் ஊடுவேனா? அல்லது அவரைத் தழுவுவேனா? அல்லது அவருடன் கலந்தின்புறுவேனா? (1267)

8 வினைகலந்து வென்றீக வேந்தன்; மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து.

அரசன் தன்செய்கையில் முனைந்து நின்று வெற்றி பெறக் கடவன்! நாமும் அதன்பின் மனைவியுடன் கூடியிருந்து, அன்று வருகிற மாலைப் பொழுதிற்கு மகிழ்வுடன் விருந் தளிப்போம்! (1268)

9 ஒருநாள் எழுநாள்போற் செல்லும்;சேட் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு.

வெளிநாட்டிற்குச் சென்ற காதலர் திரும்பி வருகிற நாளைக் குறியாக வைத்து ஏங்கிக் கொண்டிருக்கும் மகளிர்க்கு ஒருநாள் பலநாளாகத் தோற்றும். (1269)

10 பெறின்என்னும்? பெற்றக்கால் என்னும்? உறின்
உள்ளம் உடைந்துக்கக் கால் [என்னும்?

நம் காதலி பிரிவாற்றாது மனமுடைந்து இறந்துவிட்டால், நம்மைத் திரும்பப் பெறுவதாலால் என்ன பயன்? பெற்றால் தான் என்ன பயன்? பெற்றுத் தழுவினாலும் என்ன பயன்? (1270)

128—குறிப்பறிவுறுத்தல்

தலைவன், தலைவி, தோழியாகிய மூவரும் ஒருவர் குறிப்பை ஒருவருக்கு அறிவித்தல்

1 கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண் உரைக்கல் உறுவதொன்று உண்டு.

நீ சொல்லாமல் மறைத்தாலும், அதிலடங்காமல் உன்னையும் மீறி உன் மைதீட்டிய கண்கள் எனக்குச் சொல்லக் கூடிய செய்தியொன்று இருக்கின்றது. (1271)

2 கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப் பெண்நிறைந்த நீர்மை பெரிது.

கண் நிறைந்த அழகும் மூங்கில் போன்ற தோளும் உடைய என் காதலிக்குப் பெண்மைத்தன்மை நிறைந்த இயல்பு மிகுதியாய் அமைந்திருக்கிறது. (1272)

3 மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை அணியில் திகழ்வதொன்று உண்டு.

பளிங்கு மணியினுள்ளே கோர்க்கப்பட்டு வெளியே விளங்கித் தோன்றும் நூலைப்போல, என் காதலியின் அழகினுள்ளே தோன்றும் அரிய குறிப்பு ஒன்று இருக்கின்றது. (1273)

4 முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல், பேதை நகைமொக்குள் உள்ளதொன்று உண்டு.

அரும்பினது இதழுக்குள் அடங்கியிருக்கும் வாசனையைப் போல, என் காதலியின் புன்முறுவலின் தோற்றத்தினுள்ளே அடங்கியிருக்கும் குறிப்பு ஒன்று உண்டு. (1274)

5 செறிதொடி செய்திறத்த கள்ளம் உறுதுயர் தீர்க்கும் மருந்தொன்று உடைத்து.

நெருங்கிய வளையல்களை யணிந்த என்தலைவி என்னை நோக்கிச் செய்த கள்ளத்தனமான குறிப்பில், என்னுடைய பெருந்துயரத்தைத் தீர்க்கக் கூடிய மருந்து ஒன்று பொருந்தியிருக்கிறது. (1275)

6 பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல், அரிதாற்றி அன்பின்மை சூழ்வது உடைத்து.

இக் காதலர் தம்பிரிவினாலாகிய துன்பத்தை நீக்கி, நாம் பெரிதும் விரும்புமாறு கூடிக் கலந்திருத்தல், அரிதாகிய பிரிவை யுண்டாக்கிப் பிறகு அவரது அன்பில்லாமையை நாம் நினைக்குமாறு செய்யுந் தன்மையுடையது. (1276)

7 தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும் முன்னம் உணர்ந்த வளை.

குளிர்ந்த நீர்த்துறைகளையுடைய மருதநிலத் தலைவனாகிய நம் காதலன் பிரிந்து சென்றதை நம்மைவிட முன்னமேயே நம்முடைய வளையல்கள் தெரிந்து கொண்டு கழன்று விட்டனவே! (1277)

8 நெருநற்றுச் சென்றார்எம் காதலர்; யாமும் எழுநாளேம் மேனி பசந்து.

எம்முடைய காதலர் நேற்றுத்தானே பிரிந்து சென்றார். நம் உடம்பு பசலைநிறம் அடைந்து எழுநாட்களாய் விட்டன! (1278)

9 தொடிநோக்கி, மென்தோளும் நோக்கி, அடிநோக்கி அஃதுஆண்டு அவள்செய் தது!

தலைவ! உன் பிரிவைத் தலைவிக்கு உணர்த்த, அவள் தன் வளையல்களை நோக்கினாள்; மெல்லிய தோள்களை நோக்கினாள்; பின் தன் அடிகளை நோக்கினாள். அவள் செய்த குறிப்பு, உன்னோடு உடன்வருதலை யறிவிப்பது! (1279)

10 பெண்ணினுள் பெண்மை உடைத்தென்ப; கண்ணி காமநோய் சொல்லி இரவு. [னுள்

கண்குறிப்பினுள் காமநோயின் கொடுமையைத் தெரிவித்தது தலைவரிடம் பிரியாதிருக்குமாறு இரந்துநிற்றல், "பெண்மையி லும் மிக்க பெண்தன்மையாம்" என்று அறிஞர் கூறுவர் (1280)

129—புணர்ச்சி விதும்பல்

தலைவனும் தலைவியும் புணர்ச்சிக்கு விரைதல்

1 உள்ளக் களித்தலும், காண மகிழ்தலும், கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு.

நினைத்த மாத்திரத்தில் களிப்படைதலும், கண்ட உடனே மகிழ்ச்சியடைதலும் ஆகிய இருவகை தன்மையும் கள்ளுண்டவர்க்கு இல்லை. காமம் உடையவர்க்கு உண்டு. (1281)

2 தினைத்துணையும் ஊடாமை வேண்டும்; பனைத் காமம் நிறைய வரின். [துணையும்

காமம் பனையளவாக நிறைய வரும்போது, தினையளவு கூடத் தம் காதலருடன் ஊடாமல் கூடி மகிழ்தல் வேண்டும். (1282)

3 பேணாது பெட்பவே செய்யினும், கொண்கனைக் காணாது அமையல கண்.

நமது விருப்பத்தை மதியாமல் விட்டு பிரிந்து போனவர் என்றாலும் கணவனைக் காணவில்லையானால் என் கண்கள் அமைதி பெற மாட்டேன் என்கின்றன (1283)

4 ஊடற்கண் சென்றேன்மன் தோழி! அதுமறந்து கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு.

தோழீ! நான் அவருடன் ஊட வேண்டுமென்று போனேன். ஆனால் என்மனம் அவரைக்கண்டவுடன் என் நோக்கத்தை மறந்து கூடுதலிலே சென்றது. (1284)

5 எழுதும்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண் பழிகாணேன் கண்ட இடத்து. [கன்

மைதீட்டும் சமயத்தில் தீட்டுகோலைக் காணமாட்டாத கண்ணேபோல, காதலனைக் கண்ட சமயத்தில் அவனது குற்றத்தைக் காண இயலாதவளானேன். (1285)

6 காணுங்காற் காணேன் தவறுய; காணுக்கால்
காணேன் தவறல் லவை.

பிரிந்து சென்று திரும்பி வந்த தலைவனை நான் காணும் பொழுது அவன முன் செய்த குற்றங்களில் ஒன்றேனும் எனக்குத் தோன்றவில்லை; ஆனல், அவனைக்காணுத பொழுதோ, அவன் செய்த குற்றங்களேத்தவிர வேறென்றும் தோன்ற விலலை. (1286)

7 உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்துஎன் புலந்து?

ஓடும் ஆற்று வெள்ளத்தில் குதித்தால் இழுத்துக்கொண்டு போய்விடும் என அறிந்திருந்தும், அவ் வெள்ளத்தில் பாய்ந்து வீழ்பவரைப்போல, தலைவனேடு ஊடினல் அவ்வூடல் நிலைக்கா தென்பதறிந்தும், ஊடுவதினல் என்ன பயன்? பயனில்லை.

8 இளித்தக்க இன்ன செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வ! நின் மார்பு.

ஏ கள்வனே! அவமானம் அடையத்தக்க துன்பங்களைச் செய்தாலும் கள்குடியர்க்கு மேன்மேலும் ஆசையையுண்டாக்குங் கள்ளைப் போன்றது உன் மார்பு. (1288)

9 மலரினும் மெல்லிது காமம்; சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

காமவின்பமானது மலரைப் போன்று மென்மையுடையது. அதன் நுண்ணிய தன்மையை யறிந்து அக் காமவின்பத்தின் நற்பயனை அனுபவிப்போர் இவ்வுலகில் மிகச் சிலரே யாவர்.! (1289)

10 கண்ணின் துனித்தே கலங்கினுள்; புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று.

காதலியாகிய தலைவி கண்பார்வையினல் ஊடல் செய்து, என்னைப் பார்க்கிலும் தான் விரைந்து தழுவுதலே விரும்பி, கலங்கி விட்டாள். (1290)

130—நெஞ்சொடு புலத்தல்

புணர்ச்சிக்கு விரைகின்ற நெஞ்சுடனே, தலைமகன் பிணங்குதலும்; தலைமகள் பிணங்குதலும்

1 அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும், எவன்
நீ எமக்கு ஆகா தது? [நெஞ்சே!

என் நெஞ்சே! தலைவருடைய மனம் அவர் வசப்பட்டு நம்மை நினையா திருப்பதை நீ பார்த்திருந்தும், நீ என் வசப்பட்டு நில்லாமல் அவரை நினைத்து நிற்பது ஏன்! (1291)

2 உருஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செருஅரெனச் சேறிஎன் நெஞ்சு?

என் நெஞ்சே! நம்மிடத்து அவர் அன்புடையரல்லர் என்பதை நீ உணர்ந்த பின்பும், அவர் வெறுக்க மாட்டார் என்று நினைத்து, நீ அவரிடம் செல்கின்றாய். இது பேதைமை யன்றோ? (1292)

3 கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சே!நீ
பெட்டாங்கு அவர்பின் செலல்.

என் நெஞ்சே! என்னிடத்து நில்லாமல் நீ விரும்பிய படியே அவரிடத்துச் செல்லுவதற்குக் காரணம், கெட்டவர்க்கு நண்பர் இல்லை என்னும் நினைவோ? அல்லது உன் இயல்பு தானோ? (1293)

4 இனிஅன்ன நின்னெடு சூழ்வார்யார்? நெஞ்சே!
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

மனமே! நீ அவருடன் ஊடலைச் செய்து பின் அதன் பயனை நுகராமாட்டாய். ஆதலால், அவற்றைப்பற்றி உன்னோடு கலந்து ஆலோசிப்பவர் யார்? (1294)

5 பெருஅமை அஞ்சும்; பெறின்பிரிவு அஞ்சும்;
அருஅ இடும்பைத்துஎன் நெஞ்சு.

காதலரை அடையப் பெறுத பொழுது அதை எண்ணி என் மனம் அஞ்சுகின்றது; அவரை அடையப் பெற்ற பொழுதோ, "பிரிந்து போய் விடுவாரே" என்று அஞ்சுகின்றது. இவ்வாறாக என் மனம் நீங்காத் துன்பத்தை உடையதா யிருக்கின்றது. (1295)

6 தனியே யிருந்து நினைந்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு.

காதலரைப் பிரிந்து தனியேயிருந்து அவர் செய்த கொடுமைகளை நினைத்தவிடத்தில், என் மனம் என்னைத் தின்பது போலத் துன்புறுத்துவதாயிருந்தது. (1296)

7 நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு.

தன்னை மறந்த காதலரைத் தான் மறக்க மாட்டாத என் பேதை மனத்துடனே சேர்ந்து, நானும் என் நாணத்தை மறந்து விட்டேன். (1297)

8 எள்ளின் இளிவாம்என் றெண்ணி, அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.

உயிரின் மீது காதல் மிகுதியுங் கொண்ட என் மனம், "நம்மை இகழ்ந்து சென்றார் எனது நாமும் இகழ்வோமாஞல் நமக்கே அவமானம்" என்றெண்ணி, எப்பொழுதும் அவருடைய பெருமைகளை எண்ணிக் கொண்டிருக்கின்றது. (1298)

9 துன்பத்திற்கு யாரே துணையாவார்; தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி?

ஒருவருக்குத் துன்பம் வந்த பொழுது அத்துன்பத்தை நீக்குதற்கு உரிமையுடைய அவரது மனமே துணையாயிராவிட்டால் வேறயாரே துணையாயிருப்பார்? (1299)

10 தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி.

தம்முடைய நெஞ்சமே, தமக்கு உறவர்காத போது, அயலார் உறவினராகாதிருத்தல் எளிதேயாம். (1300)

131—புலவி

தலைவனும் தலைவியும் ஒருவரோ டொருவர் ஊடுதல்.

1 புல்லாது இராஅப் புலத்தை; அவருறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது.

ஊடுதலால் அவரடையும் துன்பநோயைச் சிறிது காண் போம்! ஆகவே, அவரைத் தழுவாமலிருந்து இன்று இரவு பிணங்கு வாயாக! (1301)

2 உப்பமைந் தற்றால் புலவி; அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.

உணவில் அளவோடு அமைந்திருக்கும் உப்புப் போன்றது ஊடல். அந்த ஊடலை அளவு கடந்து நீடிக்கச் செய்தல், உணவிலே உப்பு சிறிதளவு கூடியிருப்பதைப் போன்றது. (1302)

3 அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

தம்முடன் ஊடல் கொண்டவரை ஊடல் நீக்கித் தழுவா மல் விட்டு விடுதல், முன்னரே துன்பமுற்று வருந்தியவரை மேலும் துன்பமடையச் செய்தாற் போன்றது. (1303)

4 ஊடி யவரை உணராமை, வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

ஊடல் கொண்டவரை ஊடல் நீக்கிச் சேரா திருத்தல், முன்னரே நீர் பெறாமல் வாடிய வள்ளிக் கொடியை அடியோடு அறுத்தெறிந்தாற் போன்றது. (1304)

5 நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூவன்ன கண்ணார் அகத்து.

நற்குணங்களால் நிறைந்த ஆடவருக்கு அழகாவது; தம் மூடைய மலர் போலுங் கண்களையுடைய தலைவியாரின் ஊட லாற் விளையும் சிறப்பேயாம். (1305)

6 துனியும் புலவியும் இல்லாயின், காமம்
கனியும் கருக்காயும் அற்று.

பெரும் பிணக்கும் சிறு பிணக்கும் இல்லையானால் காமமானது மிக அதிகமாகப் பழுத்த பழமும் இளங்காயும் போல் சுவையற்றதாகும். (1306)

7 ஊடலின் உண்டாங்கோர் துன்பம்; புணர்வது
நீடுவது அன்றுகொல் என்று.

கூடிக் கலந்திருக்கும் இன்பம் இனிமேல் நீடிக்குமோ, நீட்டியாதோ என்று எங்கச் செய்வதால் ஊடலின் கண்ணும் ஒரு துன்பம் உண்டு. (1307)

8 நோதல் எவன்மற்று நொந்தார்என்று அஃதறியும்
காதலர் இல்லா வழி.

"இவர் நம்மால் வருந்தினரே!" என்று காம நோயின் கடுமையை அறியாத காதலர் இல்லாத வீடத்து, ஒருவர் நோவதால் பயன் என்ன? (1308)

9 நீரும் நிழலது இனிதே; புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.

நீரும் நிழலில் இருக்குமானால் இன்பமாம். அதுபோல, ஊடலும், அன்புடன் கூடுவோரிடத்தே இன்பமாம். (1309)

10 ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்
கூடுவேம் என்பது அவா.

ஊடல் கொண்டால் அதனை நீக்கி மகிழ்வீக்காமல் ஊடலினால் வாடும்படி விடுகின்றவரோடு, "அவரோடு கூடி மகிழ்வோம்" என்றெண்ணி என் நெஞ்சம் முயற்சி செய்கின்றதே! இது என்ன? அதன் ஆசையேயன்றி வேறில்லை! (1310)

132—புலவிநுணுக்கம்

தலைவனும் தலைவியும் கூடியிருந்த பொழுது, காதல் மிகுதியால் தலைவி தலைவன்மீது காரணங் கற்பித்துப் பிணங்குதல்

1 பெண்ணியலார் எல்லாரும் கண்ணில் பொது
நண்ணேன் பரத்த!நின் மார்பு. [உண்பர்

பரத்தையர்பால் விரும்பிச் செல்பவனே! பெண் தன்மை யுடையோ ரெல்லாரும் பொதுவுடைமையாகக் கருதித் தம் கண்களால் நுகர்வதனால் உன்மார்பைப் பொருந்தேன். (1311)

2 ஊடி இருந்தேமாத் தும்மினார்; யாம்தம்மை
நீடுவாழ்க என்பாக்கு அறிந்து.

காதலருடன் ஊடல்கொண்டு உரையாடாமல் இருந்தோம். தம்மை "நீடு வாழ்க!" என்று வாய் திறந்து வாழ்த்துவோம் என்பதை நினைத்து அவர் தும்மினார். (1312)

3 கோட்டுப்பூச் சூடினும் காயும்; ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.

மலர்ந்த பூமாலையை அவளுக்குச் சூட்டினாலும், அவன், "உம்மால் விரும்பப்பட்ட வேறு ஒருத்திக்கு இவ்வலங்காரத்தைக் காட்ட வேண்டுமென்று இப்படிச் செய்தீர்" என்று சினங் கொள்ளுவாள். (1313)

4 யாரினும் காதலம் என்றேனா, ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

"நாம் வேறுயாரையும்விட மிகவும் காதல் கொண்டிருக் கிறோம்" என்றுசொன்னேனாக, உடனே அவள், "யாரைவிட?" "யாரைவிட" என்று கேட்டு ஊடல் கொண்டாள். (1314)

5 இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண்ட னள்.

காதல் மிகுதியால், "இத்தப்பிறப்பில் உன்னைப் பிரியவே மாட்டேன்" என்று சொன்னேனாக, அவள், "மறுபிறப்பிற் பிரிந்து போய் விடுவேன்" என்று சொன்னதாகப் பொருள் கொண்டு கண் நிறைய நீரைப் பெருக்கிவிட்டாள். (1315)

6 உள்ளினேன் என்றேன் மற்று என்மறந்தீர்
புல்லாள் புலத்தக்க னள். [என்றென்னைப்

''உன்னை நினைத்துக் கொண்டிருந்தேன்'' என்று கூறினேன். அவளோ ''நினைப்புக்கு முன் மறப்புத்தானே! என்னை என் மறந்தீர்?'' என்று கூறி என்னைத் தழுவாமல் ஊடி நின்றாள். (1316)

7 வழுத்தினுள் தும்மினே னாக; அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.

நான் தும்மினேன். உடனே அவள், ''நூறாண்டு'' என்று கூறி வாழ்த்தினாள். ஆனால் அவள், திரும்ப ''யாரோ உம்மை நினைத்ததால் நீர் தும்மினீர்! அவள் யார்?'' என்று கேட்டு அழுதாள். (1317)

8 தும்முச் செறுப்ப அழுதாள்; நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

அவள் ஊடுகின்றாளே என்று அஞ்சித் தும்மலை நான் அடக்கினேன்; ''உம்மால் விரும்பப்பட்ட மாதர் உம்மை நினைப்பதை எமக்குத் தெரியாதிருக்க இப்படி மறைக்கிறீரோ?'' என்று சொல்லிக்கொண்டு அழுதாள். (1318)

9 தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இன்னீரர் ஆகுதிர் என்று.

தலைவிக்குப் பலவாறு சமாதானம் கூறி ஊடலை நீக்கி மகிழ்வித்தாலும், அவள், ''நீர் இப்படித்தானே மற்ற மகளிரையும் மகிழ்விப்பீர்!'' என்று சொல்லி சினம் கொள்கின்றாள். (1319)

10 நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று.

நான் யாதொன்றுஞ் சொல்லாமலும் செய்யாமலும் அவளுடைய அழகையே நினைத்து அமைதியாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், ''நீர் யாரை நினைத்துக் கொண்டு அவளை எனுடன் ஒப்பு நோக்கிப் பார்க்கின்றீர்?'' என்று கோபிக்கின்றாள். (1320)

133—ஊடலுவகை

ஊடலின்பத்தால் மகிழ்ச்சி மிகுதலைத் தலைவனும் தலைவியும் உணர்ந்து கூறுதல்.

1 இல்லை தவறவர்க்கு ஆயினும், ஊடுதல்
வல்லது அவரளிக்கு மாறு.

அவரிடத்தில் யாதொரு பிழையும் இல்லையென்றாலும், அவருட்ன் ஊடுதல், அவர் நம்மேல் மிகுதியாக அன்பைச் செலுத்துதற்கு வல்லமையுடையதாயிருக்கின்றது! (1321)

2 ஊடலில் தோன்றும் சிறுதுனி, நல்லளி
வாடினும் பாடு பெறும்.

ஊடுதலின் காரணமாயேற்படும் சிறிய துன்பம் தலைவர் செய்கின்ற நல்ல அன்பை வாடச் செய்யுமாலும், பின்பு மிகவும் பெருமையை அளிக்கும். (1322)

3 புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ, நிலத்தொடு
நீர்இயைந் தன்னார் அகத்து.

நிலத்தின் தன்மையோடு நீர்பொருந்தி கலந்து கொள்வது போல, அன்புடைய காதலருடன் பிணங்கி வாழ்தலைக் காட்டிலும் இன்பத்தைத் தருகின்ற தேவருலகம் வேறு இருக்கின்றதோ! (இல்லை) (1323)

4 புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்
உள்ளம் உடைக்கும் படை.

காதலரைத் தழுவிக்கொண்டு பின் விடா திருத்தற்குக் காரணமாகிய அந்த ஊடலினிடத்தே, என் உள்ளத்தை உடைக்க வல்ல ஆயுதம் ஒன்று தோன்றுகின்றது. (1324)

5 தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்குஒன்று உடைத்து.

தம்மேல் தவறு ஒன்றும் இல்லாதிருந்தும், ஊடலுக்கு ஆளாகித் தம்மால் விரும்பப்பட்ட காதலியரின் மெல்லிய தோள்களைத் தழுவ இயலாமல் அகன்றிருக்கும் சமயத்தில், ஆடவர்க்கும் ஒரு சிறந்த இன்பம் உள்ளது. (1325)

6 உணலினும் உண்டது அறல்இனிது; காமம்
புணர்தலின் ஊடல் இனிது.

உண்ணுவதைக் காட்டிலும், முன் உண்ட உணவு செரித்தலால் உண்டாகும் இன்பம் பெரிது. அதுபோல, காமத்தின் கண், புணர்ச்சியின்பத்தைக் காட்டிலும் ஊடுதல் இன்பமே சிறந்தது. (1326)

7 ஊடலில் தோற்றவர் வென்றூர்; அதுமன்னும்
கூடலில் காணப் படும்.

ஊடலில் தோற்றவரே வென்றவராவர். அந்த உண்மை அப்பொழுது அறியக்கூடாதாயினும், பின் புணர்ச்சியின்கண் அவரால் அறியப்படும். (1327)

8 ஊடிப் பெறுகுவம் கொல்லோ, நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.

நெற்றி வியர்க்கும்படியாகக் கூடியிருப்பதில் உண்டாகும் இனிமையை, இன்னும் ஒருதடவை அவளுடன் ஊடியிருந்து பின் ஊடல் நீங்குவதால் பெற மாட்டோமா? (1328)

9 ஊடுக மன்னே ஒளியிழை; யாம்இரப்ப
நீடுக மன்னே இரா.

ஒளிபொருந்திய அணிகலையுடைய என் காதலி இன்னும் ஊடுவாளாக! அந்த ஊடல் தணிய அவளை நாம் இரந்து நிற்குமாறு இரவும் நீட்டிப்பதாக! (1329)

10 ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

காமத்திற்கு இன்பம் தருவது ஊடுதலேயாம். ஊடல் தணிந்து கூடிமகிழப் பெற்றால் அது ஊடலுக்கு இன்பமாம். (1330)

திருக்குறள் விளக்கவுரை
முற்றும்.

திருக்குறள் முதற்குறிப்பகராதி

குறள்	பக்கம்
அ	
அஃகாமை	36
அஃகி அகன்ற	35
அகடாரார்	188
அகப்பட்டி	215
அகரமுதல	1
அகலாது	139
அகழ்வாரைத்	31
அகனமர்ந்தீதலி	19
அகனமர்ந்து	17
அங்கணத்துள்	144
அசையியற்கு	220
அச்சம்உடையார்க்கு	107
அச்சமே	215
அஞ்சாமைஅல்லால்	100
அஞ்சாமைஈகை	77
அஞ்சும்அறியான்	173
அஞ்சுவதுஅஞ்சாமை	86
அஞ்சுவதோரும்	74
அடக்கம்	25
அடல்வேண்டும்	69
அடற்றகையும்	154
அடுக்கிய	191
அடுக்கிவரினும்	125
அடுத்தது	142
அணங்குகொல்	217
அணியன்றே	203
அந்தணரென்போர்	6
அந்தணர்நூற்கும்	109
அமரகத்துஆற்றறுக்	163
அமரகத்துவன்கண்	206
அமிழ்தினும்	13
அமைந்தாங்கு	95
அரங்கின்றி	81
அரம்பொருத	178
அரம்போலும்	200
அரிதரோதேற்றம்	231
அரிதாற்றி	232
அரியகற்று	101
அரியவற்றுள்	89
அரியவென்று	108
அருங்கேடன்	42
அருஞ்செவ்வி	113
அருட்செல்வம்	49
அருமறை	170
அருமைஉடைத்தெ	123
அரும்பயன்	40
அருவினைஎன்ப	97
அருள்அல்லது	51
அருளில்லார்க்கு	50
அருளென்னும்	152
அருளொடும்	151
அருள்கருதி	57
அருள்சேர்ந்த	49
அருள்வெஃகி	36
அலந்தாரை	261
அலரெழ	229

குறள்	பக்கம்
அலர்காண	230
அல்லல்அருள்ஆள்	49
அல்லவை	20
அல்லற்பட்டு	111
அவர்தந்தார்என்னும்	237
அவர்நெஞ்	259
அவாவில்லார்க்கு	74
அவாவினை	74
அவாவென்ப	73
அவிசொரிந்து	52
அவையறிந்து	143
அவையறியார்	143
அவ்வித்து	34
அவ்விய	34
அழக்கொண்ட	132
அழச்சொல்லி	159
அழல்போலும்	246
அழிவதூஉம்	93
அழிவந்த	162
அழிவின்அவை	158
அழிவின்றுஅறை	153
அழுக்கற்று	34
அழுக்காறுஅவா	7
அழுக்காறுஉடையார்க்	33
அழுக்காறுஉடையான்	27
அழுக்காறுஎன	34
அழுக்காற்றின்	33
அளவல்ல	58
அளவளா	105
அளவறிந்தார்	58
அளவறிந்து	96
அளவின்கண்	58
அளித்துஅஞ்சல்	231
அறம்கூறும்	37
அறம்சாரா	210
அறம்சொல்லும்	37
அறத்தாறுஇது	8
அறத்தாற்றின்	10
அறத்தான்	8
அறத்திற்கே	16
அறத்தினூஉங்	7
அறம்பொருள்	101
அறவாழி	2
அறவினையா	65
அறவினையும்	182
அறனழீஇ	37
அறனறிந்துஆன்	127
அறனறிந்துமூத்த	89
அறனறிந்துவெ	36
அறன்ஆக்கம்	33
அறன்இயலான்	30
அறன்இழுக்காது	77
அறன்ஈனும்	151
அறனெனப்	10
அறன்நோக்கி	38
அறன்கடை	29
அறன்வரையான்	30
அறிகிலார்	228
அறிகொன்று	128
அறிதோறு	222
அறிந்தாற்றிச்	103
அறிவுஅற்றம்காக்கும்	85

குறள்	பக்கம்
அறிவிலார்	169
அறிவிலான்நெஞ்	169
அறிவினுள்	41
அறிவினுன்	63
அறிவின்மை	169
அறிவுடையார் ஆவது	86
அறிவுஉடையார்எல்லா	86
அறிவுஉரு	137
அறுவாய்	224
அறைபறை	216
அற்கா	67
அற்றது அறிந்து	189
அற்றம்மறைக்கும்	196
அற்றம்மறைத்தலோ	170
அற்றவர்	73
அற்றூர் அழிபசி	46
அற்றூரைத்	102
அற்றூர்க்குஒன்	202
அற்றூல் அளவறிந்து	189
அற்றேம்என்று	126
அனிச்சப்பூக்	223
அனிச்சமும்	224
அன்பகத்	16
அன்புஅறிவுஆ	137
அன்புஅறிவு	103
அன்பிலன்	173
அன்பிலார்	15
அன்பிற்கும்	15
அன்பின்வழியது	16
அன்பின்விழை	183
அன்பீனு	15
அன்புடைமை-ல்வேக்	137
அன்புடைமை-இவ்வி	199
அன்புஈண்	197
அன்பும்	10
அன்புறுஅமர்த்த	16
அன்பொரீஇத்	202
அன்போ	15
அன்றுஅறிவாம்	8

ஆ

குறள்	பக்கம்
ஆகாறளவிட்டிது	96
ஆகூழால்	75
ஆக்கம்கருதி	93
ஆக்கம்அதர்வி	119
ஆக்கம்இழந்	119
ஆக்கமும்	129
ஆங்கமை	148
ஆபயன்	112
ஆயும்அறிவினர்	184
ஆய்ந்தாய்ந்து	159
ஆரா	74
ஆவிற்கு	214
ஆள்வினையும்	205
ஆற்றுரும்	99
ஆற்றின்அளவறிந்துக	96
ஆற்றின்வருந்தா	94
ஆற்றின்நிலை	144
ஆற்றின்ஒழுக்கி	10
ஆற்றுபவர்க்கும்	149
ஆற்றுவார்-இகழாமை	179

குறள்	பக்கம்
ஆற்றுவார்-பசியாற்	45
ஆற்றுவார்-பணிதல்	197
ஆற்றின் அளவறிந்து	145
இ	
இகலாணும்	172
இகலிற்(கு)	172
இகலின்	172
இகலெதிர்	171
இகலென்ப	171
இகல்என்னும்	171
இகல்காணன்	172
இகழ்ச்சியின்	108
இகழ்ந்தெள்ளாது	212
இடம்எல்லாம்	213
இடன்இல்	44
இடிக்கும்	90
இடிபுரிந்து	122
இடிப்பாரை	90
இடுக்கட்படினும்	131
இடுக்கண்கால்	206
இடுக்கண்வருங்	125
இடும்பைக்கு(இ)	125
இடும்பைக்கே	206
இடைதெரிந்து	143
இணைசூழ்த்தும்	130
இணைரெரி	62
இதனை இதனால்	104
இமைப்பின்	226
இமைபாரின்	182
இம்மைப்	263
இயல்பாகும்	69
இயல்பிலா	10
இயல்புளிக்	109
இயற்றலும்	77
இரக்கஇரத்	211
இரத்தலின்	46
இரத்தலும்	211
இரந்தும்	213
இரப்பன்இரப்	214
இரப்பாரை	212
இரப்பான்	212
இரவார்	207
இரவுள்ள	214
இரவென்னும்	214
இருள்நீங்கி	71
இருகோக்கு	219
இருந்துள்ளி	249
இருந்தோம்பி	17
இருபுனலும்	148
இருமனப்	184
இருமை	5
இருவேறு	75
இருள்சேர்	2
இலக்கம்	126
இலங்கிழாய்	253
இலம்என்று அசைஇ	208
இலம்என்றுவெம்மை	35
இலர்பலர்	54
இலன்என்று	41
இலன்என்னும்	45

குறள்	பக்கம்
இல்வாழ்வான்	9
இல்லதின்	11
இல்லாரை	151
இல்லாளே	181
இல்லாள்கண்	181
இல்லிலதவற	265
இவறலும்	87
இழந்தாறாடம்	188
இழிவறிந்து	190
இழுக்கல்உடை	83
இழுக்காமை	108
இழைத்தது	156
இளித்தக்க	258
இளிவரின்	194
இளிதாக	176
இளையர்	140
இறந்தமைந்த	180
இறந்தவெகுளி	107
இறந்தார்	62
இறப்பே	196
இறல்ஈனும்	36
இறுதி	138
இறைகடியன்	113
இறைகாக்கும்	110
இற்பிற-கண் அல்லது	191
இற்பிற-கண்ணே	209
இனத்தாற்றி	114
இனம்போன்று	165
இனியஉளவாக	20
இனிஅன்ன	259
இனைத்துணைத்	18
இனையர்	158
இன்கண்	231
இன்சொலால்ஈத்	78
இன்சொலால்ஈரம்	19
இன்சொல் இனி	20
இன்பம்கடல்	234
இன்பத்துள்-பயக்கும்	171
இன்பத்துள்-விழை	126
இன்பம்இடை	74
இன்பம்ஒரு	211
இன்பம்விழை	126
இன்பம்விழையான்	123
இன்மைஇடும்பை	213
இன்மை-இன்னாது	209
இன்மை-இன்னாது	112
இன்மையுள்	31
இன்மைஎன	209
இன்மைஒருவற்	198
இன்றி	193
இன்றும்	210
இன்னாசெய்தாரை	63
இன்னாசெய்தார்க்கு	198
இன்னாதுஇரக்கப்	45
இன்னாதுஇன	232
இன்னாமை	126
இன்னாஎனத்தான்	64

ஈ

ஈட்டம்	201
ஈதல் இசைபட	47

குறள்	பக்கம்
ஈத்துவக்கும்	46
ஈர்ங்கை	216
ஈவார்கண்	212
ஈன்ற	14
ஈன்றாள்முகத்	185
ஈன்றாள்பசி	132
உ	
உடம்பாடு	178
உடம்பொ	225
உடுக்கை	158
உடுப்பதூஉம்	216
உடைசெல்வம்	188
உடைத்தம்	95
உடைமையுள்	18
உடையர்எனப்	119
உடையார்முன்	79
உட்கப்	185
உட்பகை	177
உணர்வது	144
உணலினும்	266
உண்டார்க	218
உண்ணற்க	185
உண்ணாது	32
உண்ணாமையுள்ளது	51
உண்ணாமைவேண்டும்	52
உதவி	21
உப்பமைந்	261
உயர்வகலம்	149
உயிருடம்பின்	66
உயிர்ப்ப	176
உய்த்தல்	258
உரம்ஒருவற்	120
உரன்நசைஇ	253
உரன்என்னும்	5
உருவுகண்டு	134
உருளாயம்	187
உரைப்பார்	47
உலகத்தார்	170
உலகத்தோடு	28
உலகம்தழீஇய	85
உலறிடத்து	153
உவக்காண்டம்	237
உவந்துறைவர்	226
உவப்பத்	79
உழந்து	236
உழவினார்	208
உழுதுண்டு	207
உழுவார்	207
உழைப்பிரிந்து	106
உளபோல	115
உளரெனினு	146
உளரென்னும்	82
உளவரை	96
உள்ளக்	257
உள்ளத்தார்	250
உள்ளத்தால்உள்	57
உள்ளத்தால்பொய்	59
உள்ளம்இலா	120
உள்ளம்உடைமை	119
உள்ளம்போன்	234

குறள்	பக்கம்
உள்ளழுக்க	160
உள்ளியதுஎய்தல்	108
உள்ளியஎல்லா	62
உள்ளினும்	241
உள்ளினேன்	264
உள்ளுவதெல்	120
உள்ளுவன்	237
உள்ளுவன்-ன்மறப்பி	225
உள்ளொற்றி	186
உறங்குவது	68
உறல்முறையான்	177
உரு அதவர்க்	259
உரு அதவர்போல்	220
உரு அதோ	229
உரு அர்க்	240
உறின்நட்டு	163
உறின்உயிர்	156
உறுதோறு	222
உறுபசியும்	147
உறுபொருளும்	152
உறுப்பமைந்	153
உறுப்பொத்தல்	199
உறுவது	163
உறைசிறியார்	136
உற்றநோய்நீக்கி	89
உற்றநோய்நோன்	53
உற்றவன்	190
உற்றான்	190

ஊ

குறள்	பக்கம்
ஊக்கீம்உடையான்	98
ஊடலில்தோற்	266
ஊடலில்தோன்	265
ஊடலின்உண்	262
ஊடல்உணங்க	262
ஊடல்உணர்தல்	222
ஊடற்கண்	257
ஊடிப்	266
ஊடியவரை	261
ஊடிஇருந்	263
ஊடுக	266
ஊடுதல்	266
ஊணுடை	203
ஊதியம்என்பது	160
ஊரவர்	230
ஊருணி	43
ஊழிபெயரினும்	198
ஊழிற்	76
ஊழையும்	124
ஊறொராஅல்	133
ஊனைக்	203

எ

குறள்	பக்கம்
எச்சம்என்	201
எட்பக	178
எண்சேர்ந்த	182
எண்ணித்துணிக	94
எண்ணியார்	99
எண்ணிய	134
எண்ணெண்ப	79
எண்பதத்தால்எய்தல்	199

குறள்	பக்கம்
எண்பதத்தான்ஓரா	110
எண்பொருள	85
எதிரதாக்	86
எந்நன்றி	22
எப்பொருளும்	139
எப்பொருள்எத்	71
எப்பொருள்	85
எய்தற்க	98
எரியாற்	180
எல்லாப்பொருளும்	150
எல்லார்க்கும்நன்	25
எல்லார்க்கும்எல்	117
எல்லாவிளக்கும்	60
எல்லைக்கண்	162
எவ்வ	83
எழுதும்கால்	257
எழுபிறப்பும்	13
எழுமை	22
எளிதென	29
எள்ளாத	94
எள்ளாமை	57
எள்ளின்	260
எற்றிற்	216
எற்றென்று	131
எனைத்தானும்நல்	84
எனைத்தானும்எஞ்	64
எனைத்திட்பம்	134
எனைத்தும்	164
எனைத்துணையர்	29
எனைத்துநி	242
எனைத்தொன்	241
எனைப்பகை	42
எனைமாட்சித்தா	150
எனைவகையான்	103
என்பில்அதனை	16
என்றும்	131
என்னைமுன்	155

ஏ

ஏதம்	202
ஏதிலார்ஆரத்	168
ஏதிலார்குற்றம்	38
ஏதிலார்போலப்	220
ஏந்திய	180
ஏமுற்	175
ஏரினும்நன்றூர்	208
ஏரின்உழாஅர்	3
ஏவவும்	170

ஐ

ஐந்தவித்தான்	5
ஐம்பத்தின்	71
ஐயப்	141
ஐயுணர்	71

ஒ

ஒட்டார்பின்	194
ஒண்ணுதற்	218
ஒண்பொருள்	152

குறள்	பக்கம்
ஒத்தது	43
ஒப்புரவினால்	44
ஒருதலையா	240
ஒருநாள்	254
ஒருபொழுதும்	68
ஒருமைக்கண்	80
ஒருமைச்	167
ஒருமைமகளிரே	195
ஒருமையுள்	26
ஒலித்தக்கால்	153
ஒல்லுங்கருமம்	164
ஒல்லும்வகையான்	7
ஒல்லும்வாய்	135
ஒல்வது	95
ஒழுக்கத்தின்எய்	28
ஒழுக்கத்தின்ஒல்கார்	28
ஒழுக்கத்து	5
ஒழுக்கம்உடைமை	27
ஒழுக்கம்உடைய	28
ஒழுக்கமும்	191
ஒழுக்கம்விழுப்பம்	27
ஒழுக்காறுக்	33
ஒளியார்முன்	143
ஒளிஒருவற்	195
ஒறுத்தாரை	31
ஒறுத்தார்க்	32
ஒறுத்தாற்றும்	116
ஒற்றினும்	117
ஒற்றும்உரை	117
ஒற்றொற்றித்	118
ஒற்றொற்று	118

குறள்	பக்கம்
ஒன்றுகல்லது	65
ஒன்றுமை	178
ஒன்றுஉலகத்து	47
ஒன்றும்	26
ஒன்றெய்தி	187
ஒன்னார்த்	53

ஓ

ஓஒதல்	131
ஓஒஇனிதே	236
ஓதிஉணர்ந்தும்	167
ஓம்பின்	231
ஓர்த்துள்ளம்	72
ஓர்ந்துகண்	109

க

கடலன்ன	228
கடலோடா	100
கடனறிந்து	138
கடனென்ப	197
கடாஅக்களிற்	218
கடாஅஉரு	117
கடிதுஓச்சி	113
கடிந்த	132
கடுஞ்சொல்லன்	114
கடுமொழியும்	114
கடைக்கொட்கச்	133
கணைகொடிது	56
கண்களவு	219

குறள்	பக்கம்
கண்டது	230
கண்தாம்	235
கண்டார்உயி	217
கண்டுகேட்ட	221
கண்ணிறைத்த	255
கண்ணிற்கு அணி	115
கண்ணின்துனி	258
கண்ணின்பசப்போ	248
கண்நின்று	37
கண்ணும்	249
கண்ணுடையர்	79
கண்ணுள்ளார்	226
கண்ணுள்ளிற்	226
கண்ணெறு	220
கண்ணேட்டத்து	115
கண்ணேட்டம்இல்	116
கண்ணேட்டம்என்	115
கதம்காத்துக்	26
கதுமெனத்	235
கயலுண்கண்	243
கரத்தலும்	233
கரப்பவர்க்	214
கரப்பிடும்பை	212
கரப்பிலாநெஞ்	211
கரப்பிலார்	211
கரப்பினும்	255
கரவா	213
கருமம்சிதை	116
கருமம்செய	205
கருமணியிற்	225
கருமத்தால்	203

குறள்	பக்கம்
கருவியும்	127
கலங்காது	134
கலந்துணர்த்தும்	250
கல்லாதமேற்	169
கல்லாதவரிற்	146
கல்லாதவரும்	81
கல்லாதான்ஒட்பம்	81
கல்லாதான்சொற்கா	81
கல்லார்ப்	114
கல்லாஒருவன்	81
கல்லான்	174
கவறும்	187
கவ்வையால்	229
கழாஅக்கால்	168
களவினால்	57
களவின்கண்	57
களவென்னும்	58
களித்தறியேன்	186
களித்தாஅனக்	186
களித்தொறும்	229
கள்வார்க்குத்	58
கள்ளுண்ணுப்	186
கறுத்தின்னு	63
கற்கக்	79
கற்றதனால்ஆய	1
கற்றறிந்தார்	144
கற்றூருள்	145
கற்றூர்முன்	145
கற்றிலன்	83
கற்றீண்டு	72
கற்றுக்கண்	138

குறள்	பக்கம்
கனவிஞன்	243
கனவினும்	164
கா	
காக்க	25
காக்கை	106
காட்சிக்	78
காணைச்	174
காணைதாற்	170
காணிற்	223
காணுங்காற்	258
காண்கமன்	253
காதல்அவர்இல	249
காதலகாதல்	88
காதலர்இல்	245
காதலர்தூ	243
காதன்மை	102
காமக்கடல்	233
காமக்கடும்புனல்உ	227
காமக்கடும்புனல்நீ	234
காமக்கணிச்சி	251
காமமும்நாணும்	233
காமம்உழந்து	227
காமம்என	251
காமம்விடு	250
காமம்வெகுளி	72
காலங்கருதி	97
காலத்தி	21
காலாழ்களரின்	100
காலைக்குச்	245

குறள்	பக்கம்
காலைஅரும்பிப்	246
கானமுயல்	155
கு	
குடம்பை	68
குடிசெய்வல்	205
குடிசெய்வார்க்	206
குடிதழீஇக்	109
குடிபுறங்	110
குடிப்பிறந்தார்	192
குடிப்பிறந்துகு	101
குடிப்பிறந்துதன்கண்	159
குடிமடிந்து	121
குடியாண்மை	122
குடிஎன்னும்	121
குணகலம்	197
குணம்நாடிக்	101
குணமென்னும்	6
குணனிலஞ்க்	174
குணனும்	159
குலம்சுடும்	204
குழல்இனிது	14
குறிக்கொண்டு	219
குறித்தது	141
குறிப்பறிந்து	140
குறிப்பின்குறிப்புணரா	141
குறிப்பின்குறிப்புணர்	141
குற்றம்இலஞ்க்	205
குற்றமே	87
குன்றன்ஞர்	180

குறள்	பக்கம்
குன்றின்	193
குன்றேறி	152
கூ	
கூடிய	253
கூத்தாட்ட	67
கூழும்	111
கூறுமை	141
கூற்றம்குதி	54
கூற்றத்தைக்	179
கூற்றமோ	217
கூற்றுடன்று	153
கெ	
கெடல்வேண்டி	179
கெடா அவழி	162
கெடுங்காலைக்	160
கெடுப்பதூஉம்	4
கெடுவல்யான்	24
கெடுவாக	24
கெட்டார்க்கு	259
கே	
கேடறியாக்	148
கேடில்	80
கேடும்	23
கேட்டார்ப்	129
கேட்டிலும்	160
கேட்பினும்	84
கேளிழுக்கம்	162
கை	
கைம்மாறு	43
கையறி	185
கைவேல்	155
கொ	
கொக்கொக்க	98
கொடியார்-யில்தா	234
கொடியார்-உரைக்கும்	247
கொடுத்தலும்	105
கொடுத்தும்	174
கொடுப்பதூஅழுக்	34
கொடுப்பதூஉம்	201
கொடும்புருவம்	218
கொடை அளி	78
கொலைமேற்கொண்	111
கொலையிற்	110
கொலைவினையர்	66
கொல்லாநலத்	197
கொல்லாமை	66
கொல்லான்	52
கொளப்பட்டேம்	140
கொளற்கரிதாய்க்	149
கொன்றன்ன	22
கோ	
கோட்டுப்பூச்	263
கோளில்	2

குறள்	பக்கம்
ச	
சமன்செய்து	24
சலத்தால்	132
சலம்பற்றிச்	192
சா	
சாதலின்	46
சாயலும்	237
சார்புணர்ந்து	72
சால்பிற்குக்	198
சான்றவர்	198
சி	
சிதைவிடத்து	120
சிறப்பறிய	118
சிறப்பு-செல்-ஈனும்	7
சிறப்பீ-செல்-பெறினும்	63
சிறப்பொடு	4
சிறியார்	196
சிறுகாப்பிற்	149
சிறுபடையான்	100
சிறுமைகூமக்கொழிய	247
சிறுமைபல	187
சிறுமையும்	154
சிறுமையுள்	20
சிறைகாக்கும்	12
சிறைநலனும்	100
சிற்றினம்	91
சிற்றின்பம்	35
சினத்தைப்	62
சினமென்னும்	62
சீ	
சீரிடம்	165
சீரினும்	193
சீருடைச்	202
சீர்மை	39
சு	
சுடச்சுடரும்	54
சுவைஒளி	6
சுழலும்	156
சுழன்றும்ஏர்ப்	207
சுற்றத்தார்	105
சூ	
சூழாமல்	205
சூழ்ச்சி	135
சூழ்வார்	89
செ	
செப்பம்	23
செப்பின்	178
செயற்கரியசெய்	6
செயற்கரியயா	157
செயற்கை	128
செயற்பாலசெய்	88

குறள்	பக்கம்
செயற்பாலதோரு	8
செயிரில்	52
செய்கபொருளைச்	152
செய்தக்க	94
செய்தேமம்	163
செய்யாமல்செய்த	21
செய்யாமல்செற்றார்க்குல்	63
செய்வானை	104
செய்வினை	136
செருக்கும்	87
செருவந்த	114
செல்லாமை	231
செல்லாஇடத்	61
செல்லான்	208
செல்லிடத்துக்	61
செல்வத்துட்	83
செல்விருந்து	18
செவிகைப்பச்	78
செவிக்குஉணவு	83
செவிச்சொல்லும்	139
செவியிற்	84
செவியுணவிற்	83
செறுஅச்	220
செறிதொடி	255
செறிவறிந்து	25
செறுநரைக்	98
செறுவார்க்குச்	174
செற்றவர்	252
செற்றார்எனக்	249
செற்றார்பின்	251
சென்ற	85

குறள்	பக்கம்
சொ	
சொல்வல்லன்	130
சொல்லுகசொல்லிற்	40
சொல்லுகசொல்லைப்	129
சொல்லுதல்	133
சொல்லப்	216
சொல்வணக்கம்	166
சொற்கோட்ட	24
ஞா	
ஞாலம்	97
த	
தகுதி	23
தக்காங்கு	113
தக்கார்இனத்	90
தக்கார்	23
தஞ்சம்	260
தணந்தமை	247
தண்ணந்	256
தந்தை	14
தந்நலம்	184
தம்நெஞ்சத்	241
தமராகித்	106
தம்பொருள்	13
தம்மில்இருந்து	222
தம்மிற்பெரியார்	89
தம்மின்தம்	14
தலைப்பட்டார்	70

குறள்	பக்கம்
தணையின்	193
தவம்செய்வார்	54
தவம்மறைந்து	55
தவமும்தவ	53
தவறிலர்	265
தள்ளா	147
தற்காத்துத்	12
தனக்குவமை	2
தனியே	260
தன்குற்றம்	88
தன்துணை	175
தன்னுயிர்க்கின்னு	64
தன்உயிர்தா	54
தன்னுயிர்நீப்பினும்	66
தன்ஊன்	51
தன்நெஞ்சு	59
தன்னைத்தான்காக்	61
தன்னைத்தான்காதலன்	42
தன்னைஉணர்த்	264

தா

தாமின்பு	80
தாம்வீழ்வார்-தம்	239
தாம்வீழ்வார்-மென்	221
தாம்வேண்டின்	230
தார்தாங்கிச்	154
தாளாண்மைஇல்லா	123
தாளாண்மைஎன்னும்	123
தாளாற்றித்	43
தானம்தவம்இரண்டும்	4

குறள்	பக்கம்
தி	
திறன்அல்ல	32
திறனறிந்து	129
தினற்பொரு	52
தினைத்துணைநன்றி	21
தினைத்துணையாங்	87
தினைத்துணையும்	257
தீ	
தீப்பால	42
தீயவைசெய்தார்	42
தீயவைதீய	41
தீயளவ	190
தீயிலுல்	26
தீவினையார்	41
து	
துஞ்சினார்	186
துஞ்சுங்கால்	244
துணைநலம்	131
துப்பார்க்குத்	3
துப்பின்	233
துப்புர	210
தும்முச்	264
துளியின்மை	112
துறந்தார்க்குத்	53
துறந்தார்க்கும்	9
துறந்தார்படி	118
துறந்தார்பெருமை	5

குறள்	பக்கம்
துறந்தாரில்	32
துறப்பார்மன்	76
துறைவன்	232
துனியும்	262
துன்பத்திற்கு	260
துன்பம்உற	134
துன்புறூஉம்	19
துன்னுத்	250
துன்னியார்	38

தூ

தூங்காமை	77
தூங்குக	135
தூய்மைதுணைமை	138
தூஉய்மைஎன்ப	73

தெ

தெண்ணீர்	213
தெய்வத்தான்	124
தெய்வம்	11
தெரிதலும்	127
தெரிந்த	93
தெரிந்துணரா	235
தெருளாதான்	50
தெளிவில்	93
தென்புலத்தார்	9

தே

தேரான்பிறனைத்	102
தேரான்தெளிவும்	102
தேவர்அனையர்	215
தேறற்க	102
தேறினும்	176

தொ

தொகச்சொல்லித்	137
தொடங்கற்க	99
தொடலைக்	227
தொடிநோக்கி	256
தொடிப்புழுதி	208
தொடியொடு	248
தொடில்சுடின்	232
தொட்டனைத்	80
தொல்வரவும்	209
தொழுதகை	166

தோ

தோன்றின்	48

ந

நகல்வல்லர்	200
நகுதற்	157
நகைஈகை	191
நகையும்உவகையும்	61
நகையுள்ளும்	199
நகைவகையர்	164
நசைஇயார்	240
நச்சப்படாதது	202

குறள்	பக்கம்
நடுவின்றி	35
நட்டார்குறை	182
நட்டார்க்கு	136
நட்டார்போல்	166
நட்பிற்குவீற்	158
நட்பிற்குஉறுப்	161
நண்பாற்று	200
நத்தம்போல்	47
நயந்தவர்க்கு	237
நயந்தவர்கல்காமை	247
நயன்இலசொல்	40
நயன்இலன்என்பது	39
நயன்ஈன்று	20
நயன்உடையான்	44
நயனெடு	199
நயன்சாரா	39
நலக்குரியார்	30
நலத்தகை	261
நலத்தின்கண்	192
நலம்வேண்டின்	192
நல்குர	209
நல்லவை	75
நல்லாண்மை	206
நல்லார்கட்	82
நல்லாறுஎனப்	65
நல்லாறுஎனினும்	45
நல்லாற்றான்	49
நல்லினத்தின்	92
நவில்தொறும்	157
நற்பொருள்	210
நனவினல்கண்	243
நனவினல்நல்காத	243
நனவினல்நல்காக்கொ	244
நனவினல்நம்வீத்தர	244
நனவினல்நல்காரை	244
நனவென	244
நன்மையும்	103
நன்றறி	215
நன்றாகும்	66
நன்றாங்கால்	76
நன்றூற்றல்	94
நன்றிக்கு	28
நன்றிமறப்பது	22
நன்றெற்	143
நன்றே	23
நன்னீரை	223

நா

நாம்காதல்	239
நாச்செற்று	67
நாடாது	159
நாடென்ப	148
நாடொறும்நாடி	111
நாடோறும்நாடுக	104
நாணகத்	204
நாணுமை	167
நாணுல்உயிரை	204
நாணு	260
நாணென	252
நாணென்னும்	185
நாணெடு	227
நாண்வேலி	204

குறள்	பக்கம்
காதலம்	129
காளென	67
நி	
நிணம்தீயில்	252
நிலத்தியல்பால்	91
நிலத்திற்	192
நிலவரை	47
நிலைமக்கள்	154
நிலையஞ்சி	65
நிலையில்	25
நில்லாதவற்றை	67
நிழல்நீரும்	177
நிறைநீர	157
நிறைநெஞ்சம்	184
நிறைமொழி	6
நிறையரியர்	228
நிறையுடைமை	31
நிறையுடையே	251
நினைத்திருந்து	264
நினைத்தொன்று	249
நினைப்பவர்	241
நீ	
நீங்கான்	173
நீங்கில்	221
நீர்இன்று அமையா	4
நீரும்	262
நு	
நுணங்கிய	84
நுண்ணிய நூல்	75
நுண்ணியம்	142
நுண்மாண்	82
நுனிக்கொம்பர்	96
நூ	
நூலாருள்	137
நெ	
நெஞ்சத்தார்	226
நெஞ்சில்	56
நெடுங்கடலும்	4
நெடுநீர்	121
நெடும்புனலுள்	99
நெய்யால்	230
நெருப்பினுள்	210
நெருநல்உள	68
நெருநற்றுச்	256
நே	
நோக்கி-நோக்கி	219
நோக்கி-நோக்கெதிர்	217
நோதல்	262
நோயெல்லாம்	64
நோய்நாடி	190
நோவற்க	176
நோன	227
ப	
பகச்சொல்லிக்	38
பகல்கருதிப்	171
பகல்வெல்லும்	97

குறள்	பக்கம்
பகுத்துண்டு	65
பகைநட்பாக்	175
பகைநட்பாங்	166
பகைபாவம்	30
பகைமையும்	142
பகையகத்துச்	145
பகையகத்துப்	146
பகையென்னும்	175
பசக்கமற்	238
பசந்தாள்	238
பசப்பெனப்	238
படலாற்ற	235
படியுடை	122
படுபயன்	35
படைகுடி	77
படைகொண்	51
பணியுமாம்	196
பணிவுடையன்	19
பணைநீங்கிப்	247
பண்டறியேன்	217
பண்ணென்ஆம்	115
பண்பிலான்	200
பண்புடையார்	200
பதிமருண்டு	246
பயன்இலபல்லார்	39
பயனில்சொல்	40
பயன்மரம்	44
பயன்தூக்கார்	21
பயன்தூக்கிப்	183
பரிந்தவர்	250
பரிந்தோம்பிக்	27
பரிந்தோம்பிப்	18
பரியது	120
பரியினும்	76
பருகுவார்	163
பருவத்தோடு	97
பருவரலும்	240
பலகுடை	207
பலசொல்லக்	130
பலநல்ல	165
பல்குழுவும்	147
பல்லவை	146
பல்லார்பகை	90
பல்லார்முனியப்	39
பழகியசெல்	188
பழகியநட்பு	161
பழிமலைந்	132
பழியஞ்சிப்	9
பழுதெண்ணும்	128
பழைமை	161
பழையம்	140
பற்றற்றகண்ணே	70
பற்றற்றகண்ணும்	105
பற்றற்றேம்	55
பற்றிவிடா அ	70
பற்றுக	70
பற்றுள்ளம்	88
பனிஅரும்பிப்	245
பன்மாய்க்	252

பா

பாடு	248

குறள்	பக்கம்
பாத்தூண்	46
பாலொடு	225
பி	
பிணிக்கு	221
பிணியின்மை	148
பிணையேர்	218
பிரித்தலும்	127
பிரிவுரைக்கும்	232
பிழைத்துணர்	84
பிறப்பென்னும்	72
பிறப்பொக்கும்	195
பிறர்க்கின்னு	64
பிறர்நாணத்	204
பிறர்பழியும்	203
பிறவிப்பெருங்கடல்	2
பிறன்பழி	38
பிறன்பொரு	29
பிறன்மனை	30
பீ	
பீலிபெய்	95
பு	
புகழின்றூல்	194
புகழ்ந்தவை	108
புகழ்படா	48
புகழ்புரிந்	12
புக்கில்	68
புணர்ச்சி	157
புத்தேள்	43
புரந்தார்கண்	156
புலத்தலின்	264
புலப்பல்	252
புலப்பேன்கொல்	254
புல்லவையுள்	144
புல்லாது	261
புல்லிக்கிடந்	238
புல்லிவிடாஅப்	265
புறங்குன்றி	56
புறங்கூறிப்	37
புறத்துறுப்	16
புறம்தூய்மை	60
புன்கண்ணீ	245
பெ	
பெண்ணியலார்	263
பெண்ணிற்	11
பெண்ணினுல்	256
பெண்ணேவல்	182
பெயக்கண்டும்	116
பெயலாற்று	235
பெரிதாற்றிப்	256
பெரிதினிது	168
பெரியாரைப்	179
பெருக்கத்து	193
பெருங்கொடை	106
பெருமைக்கும்	101
பெருமைபெருமித	196
பெருமைஉடை	195
பெரும்பொருளால்	147
பெரு அமை	259

குறள்	பக்கம்
பெறின்என்னும்	254
பெற்றமவுற்றுள்	13
பெற்றூற்	12
பே	
பேணுதுபெண்	181
பேணுதுபெட்டா	236
பேணுதுபெட்ப	257
பேதைபெருங்	164
பேதைப்படுக்கும்	75
பேதைமையுளை	167
பேதைமைஎன்பதொ	167
பேதைமைஒன்றே	161
பேராண்மை	155
பொ	
பொச்சாப்பார்க்கு	107
பொச்சாப்புக்	107
பொதுநலத்தார்	183
பொதுநோக்கான்	106
பொய்படும்	168
பொய்ம்மையும்	59
பொய்யாமைபொய்	60
பொய்யாமைஅன்ன	60
பொருள்தீர்த்த	40
பொருட்பெண்டிர்	183
பொருட்பொருளார்	183
பொருள்நீங்கிப்	50
பொருள்மாலை	246
பொருள்கருவி	135
பொருள்கெடுத்	188
பொருளல்லவற்	71
பொருளல்லவரை	151
பொருள்அற்றூர்	50
பொருள்ஆட்சி	51
பொருளாணும்	201
பொருளென்னும்	151
பொள்ளென	98
பொறியின்மை	124
பொறிவாயில்	2
பொறுத்தல்	31
பொறையொருங்கு	147
போ	
போற்றின்	139
ம	
மகன்தந்தைக்கு	14
மக்கள்மெய்	13
மக்களே	215
மங்கலம்என்ப	12
மடஒூர்தல்	228
மடிமடிக்	121
மடிமை	122
மடியிலா	122
மடியுளாள்	124
மடியை	121
மடுத்தவா	125
மணிநீரும்	149
மணியில்	255
மன்னுடு	116
மதிதுட்பம்	128
மதியும்	224
மயிர்நீப்பின்	194

குறள்	பக்கம்
மருந்தாகித்	44
மருந்தென	189
மருந்தோமற்	194
மருவுக	160
மலரன்னகண்-அரு	229
மலரன்னகண்-முக	224
மலரினும்	258
மலர்மிசை	1
மலர்காணின்	223
மழித்தலும்	56
மறத்தல்வெ	61
மறந்தும்	41
மறப்பினும்	27
மறப்பின்எவ	242
மறம்மானம்	154
மறவற்க	22
மனநலந்தலை	118
மறைபெறல்	236
மறைப்பேன்மன்	251
மறைப்பேன்மன்யா	233
மற்றியான்	242
மற்றும்	69
மனத்தது	56
மனத்தானும்	91
மனத்தின்	165
மனத்துக்கண்	7
மனத்துளது	91
மனத்தொடு	59
மனநலத்தின்	92
மனநலம்நன்	92
மனநலம்மன்	92
மனந்தூயார்க்கு	92

குறள்	பக்கம்
மனந்தூய்மை	91
மனமாணு	177
மனைத்தக்க	11
மனைமாட்சி	11
மனையாளை	181
மனைவிழைவா	181
மன்னர்க்கு	112
மன்னர்விழைப்	139
மன்னுயிரெல்	234
மன்உயிர்ஓம்பி	49

மா

மாதர்	224
மாலேநோய்	246
மாலையோ	245
மாறுபா	189

மி

மிகச்செய்து	166
மிகல்மேவல்	172
மிகினும்	189
மிகுதியால்	32

மு

முகத்தான்	19
முகத்தின்இனிய	165
முகத்தின்முதுக்	142
முகநக	158
முகம்நோக்கி	142
முகைமொக்குள்	255
முடிவும்	136
முதல்இலார்க்கு	90

குறள்	பக்கம்
முயக்கிடைத்	248
முயங்கிய	248
முயற்சி	124
முரண்சேர்ந்த	99
முறிமேனி	223
முறைகோடி	112
முறைசெய்து	78
முறைப்படச்	128
முற்றுற்றி	150
முற்றியும்	150
முனைமுகத்து	150
முன்னுறக்	107
மே	
மேலிருந்தும்	195
மேற்பிறந்தா	82
மை	
மையல்	168
மோ	
மோப்பக்	18
யா	
யாகாவா	26
யாம்கண்ணிற்	228
யாண்டுச்சென்று	179
யாதனின்	69
யாதானும்	80
யாமும்	241
யாம்மெய்யாக்	60
யாரினும்	263
யான்எனது	70
யான்நோக்குங்	219
வ	
வகுத்தான்	76
வகைமாண்ட	180
வகையறச்	93
வகையறிந்துதற்	176
வகைஅறிந்து	145
வசைஇலா	48
வசைஎன்ப	48
வசைஒழிய	48
வஞ்சமனத்தான்	55
வருகமன்கொ	254
வருமுன்னர்க்	87
வருவிருந்து	17
வரைவிலா	184
வலியார்க்கு	173
வலியார்முன்	50
வலியில்கிலே	55
வழங்குவது	191
வழிநோக்கான்	173
வழுத்திஞள்	264
வறியார்க்கு	45
வன்கண்	127
வா	
வாணிகம்	24
வாய்மை	59
வாராக்கால்	236
வாரிபெருக்கி	103
வாழ்த	225
வாழ்வார்க்கு	289
வாளற்றுப்	253

குறள்	பக்கம்
வாளொடுஎன்	146
வாள்போல்	177
வான்றின்றுஉலகம்	3
வானுயர்	55
வான்நோக்கி	109
வி	
விசும்பின்துளி	4
விடாஅது	242
விடுமாற்றம்	138
விண்இன்று	3
வித்தும்	17
வியவற்க	88
விருந்து	17
விருப்பறுச்	105
விரைந்து	130
விலங்கொடு	82
வில்லே	175
விழித்தகண்	155
விழுப்புண்	156
விழுப்பேற்றின்	33
விழைதகையான்	161
விழையார்	162
விளக்கற்றம்	238
விளித்தாரின்	29
வினியும்என்	242
வினைகலந்து	254
வினைக்கண்வினை	123
வினைக்கண்வினையு	104
வினைக்குரிமை	104
வினைசெய்வார்	117
வினைத்திட்பம்	133

குறள்	பக்கம்
வினைபகை	135
வினையான்	136
வினைவலியும்	95
வீ	
வீழப்	239
வீழுநற்	239
வீழும்இருவர்க்	222
வீழ்நாள்படாஅமை	8
வீழ்வார்மின்	240
வீறெய்தி	133
வெ	
வெண்மை	169
வெருவந்த	113
வெள்ளத்தனையது	119
வெள்ளத்தனையஇ	125
வே	
வேட்ட	221
வேட்பத்தாம்	130
வேட்பன	140
வேண்டற்கவெஃ	36
வேண்டற்கவென்	187
வேண்டாமை	73
வேண்டிய	53
வேண்டின்உண்	69
வேண்டுங்கால்	73
வேண்டுதல்	1
வேலன்று	110
வேலொடு	111
வை	
வைத்தான்வாய்	201
வையத்துள்	10


சதாசுந்தா அச்சகம்
சிறந்த
அச்சு
வேலைகள்
விருதுநகர்